ஈடு—உண்ணுஞ்சோறு - பசித்தவஸ்தையிலே ஸ்ரீபராசரபட்டராக உண்ணப்படுமதான ஓதநம், பருகுநீர்- த்ருஷ்ணையில் அவஸ்தையிலே த்ருஷ்ணாசாந்தியைப் பண்ணுமதான போஷகமாகப்பருகப்படுமதான பாநீயம், பருகுகை- பானம் பண்ணுகை. தின்னும்வெற்றிலையும் போக்யமாகத் தின்னப்படுமதான வெற்றிலையும், எல்லாம் - இப்படி ஸாரகபோஷக பருகப்படும், போக்யங்களானவையெல்லாம், எம்பெருமான் கண்ணன் - ஸர்வேஶ்வரனான க்ருஷ்ணன், எல்லாமாகிக்கொண்டு ஸாரகபோஷகாதிகளான வாஸுதேவஸ்ஸர்வமென்கிறபடியே க்ருஷ்ணனுக்கு ஸாரகபோஷகாதிகளெல்லாமாயிருக்கிறானென்றபடி, சோறுந்தண்ணீரும் வெற்றிலையுமே சொல்லுகைக்கு? இவற்றில் ப்ரதிக்ஞைக்குச்சொல்லுகிற விசேஷணங்களாலுங்கொள்ளில்? ஸாரகபோஷகாதிகளான ஸ்ரீவைஷ்ணவர்களிலே ஸந்நிதிக்குந்தாயிருக்கையாலே க்ருஷ்ணன் ஸம்ருத்தியிலே ஸந்நிஹிதமாயிருக்கும் - ஸாரகபோஷகாதிகளான அவஸ்தையிலே தானுபடியிருக்கும் அப்படியேயிருக்கு மெம்பெருமானிவளுக்கு என்றதாயிற்று. என்றென்றே - இப்படியே பின்னையும் பின்னையுஞ்சொல்லி, கண்கள் நீர்கள் மல்கி - அவனைக்காணாமையாலே கண்களிலே ஜலங்கள் ப்ரவஹித்து, இது ஸ்வைஸமாதுர்யத்தைகண்களிலே ஜலப்ரவஹித்திராநின்றவளான என்றபடி. "கிருஷ்ண கோக ஊஷ்மா வ்யாகுலா" என்கிறவிடத்திலே ஊஷ்மாவென்றது ஊஷ்மாவர்த்தகம் என்றும் ஸாவஷ்டமாநாப்போலே பின்னும் நீர்கள்மல்கி என்றது நீர்கள் மல்கிநின்றவளான என்றபடிக்குக்குறைவில்லையிறே; என் - என்னுடையவளான, இது ஸாபிப்ராய விசேஷணம். என்னுடைய பெண்ணாகையாலே அவனையறிந்தருளியிருக்கிற திருக்கோளூர்க்கே போவளென்றபிப்ராயம். ஸ்ரீவைஷ்ணவகுலத்தில் பிறந்தவர்கள் அவர்களைப்போலே யிருப்பார்களிறே. இளமான் - பால்யாவஸ்தையிலே யுள்ளவள், மான்போன்ற பெண்ணானவள் என்றபடி. இதுக்குப்புகுமூர் என்கிறதோடே ஸம்பந்தம். மண்ணினுள் - ப்ருதிவியிலே, அவன்சீர் - அவனுடைய கல்யாணகுணங்களுடைய, வளம் - ஸம்ருத்தியானது, மிக்கமிகுந்திருந்த, கல்யாணகுணங்கள் மிகவும் ப்ரகாசிதங்களாயிருந்தவென்றபடி. அவனூர் - அவனுடையவூரை, அவனுக் கத்யாஸக்தமான திருக்கோளூரை, வினவி - ப்ரஸ்னம்பண்ணி, அவ்வூரிலாஸக்தியாயத்தாலே அவ்வூரெத்தனைதூரமுண்டென்று எதிரேவருகிற ஜனங்களையெல்லாம் கேட்டு என்றபடி. புகுமூர்- போய்ப்ப்ரவேசிக்கத்தக்கவூர், திருக்கோளூரே - ஸவ்யங். ஸர்வாபரணத்தாலேயிருந்த ஊரன்றென்று தோற்றுகிறது. திண்ணம் - இது நிஸ்சிதம், என்னுடையபெண்ணுகையாலே அவனூரல்லது புகாமையாலும் ஸாமஹாரிணிபோலே ஸக்தையாகையாலே வேறேரிடத்திலே உடனப்போகமாட்டாமையாலும் திருக்கோளூரிலேயே போவள், இதில் ஸந்தேஹமில்லையென்று பதார்த்தம். * *

மூ— ஊருநாடுமுலகமுந்தன்னைப்போலவனுடைய* பேருந்தார்களுமேபிதற்றக்கற்புவானிடறிச்* சேருநல்வளஞ்சேர்பழனத்திருக்கோளூர்க்கே* போருங்கொலுரையீர்கொடியேன்கொடிப்பூவைகளே* ॥உ॥

ஆ— வினவிவினவி தனக்கதுவே யாத்ரையாகக்கொண்டு திருக்கோளூரிலேபோய்ப்புகும், இதிலொருஸந்தேஹமில்லை. அங்ஙனே கண்கள்நீர்மல்க விருந்தவிருப்பையாகிலும் கண்டிருக்கப்பெறுகிறிலேன், இழந்தேனென்றலற்றுகிறாள். ॥௨॥

(ஊருநாடும்) அவனுடையகல்யாணகுணங்களையும் திவ்யசேஷ்டிதங்களையும் நிரந்தரமான வார்த்தையாகக் கூப்பிடுகிற தன்னுடைய வ்யவஸாயத்தைக்கேட்டு ஊருநாடுமுலகமுந்தன்னைப்போலே க்ருஷ்ணவ்யஸனிகளாய்க்கொண்டு அத்திருநாமங்களையும் திவ்யசேஷ்டிதங்களையுமே சொல்லிக்கூப்பிடும்படியாகக் கூப்பிடுகிறவள்.

இ— தாத்பர்யமருளிச்செய்கிறார் (இதில் வ்யாக்யாநயால்) பாட்டுக்குப் ப்ரமேயதாத்பர்யமருளிச்செய்கிறார் (அங்ஙனே யிவ்யாக்யானயால்) "ஸ்ரீஸாகஸ்ரீதமநேத்ராம்பாபூர்வே ஜநீக்ருதமஹாத்ருமாநு ! ஸர்வபராக்ஷணாவிலேயஜந்மா த்ருஷ்டவ்யஸநம்" என்கிறபடியே யாவம்விலேபான விவளைக்கண்டுகொண்டிருக்கை நமக்குப்ராப்தமென்று ஸங்கல்பித்தேயென்னுகருத்து. ॥௩॥

* இரண்டாம்பாட்டு. *

ப்ரவேசவாக்யத்தை வ்யாக்யாநமருளிச்செய்கிறார் (அவனுடையவித்யாதியால்) அதிலவனுடைய குணங்களையென்றது - பேர்கள்குணங்களுக்கு வாசகங்களாகையாலே இங்கு பேருமென்றது கல்யாணகுணங்களையென்கிறகருத்தாலே. ஆகையாலிறே மேல் அந்தகுணங்களையுமென்று சொல்லவேண்டாவிடத்திலே அத்திருநாமங்களையுமென்றுசொல்லிற்று. பிதற்றவென்கிறவிடத்தில் ஸம்ப்ரதாயார்த்தத்தை யருளிச்செய்கிறார் (க்ருஷ்ணவ்யஸனிகளாய்க்கொண்டென்று) தார்களுமேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திவ்யசேஷ்டிதாதியால்) விஷயம் ஸம்வந்த்தவகரமாகவாம். பிதற்றவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சொல்லிக்கூப்பிடுகிறபால்) கற்புவானிடறி என்கிறவிடத்தில், ஸம்ப்ரதாயார்த்தத்தையருளிச்செய்கிறார்

பா— ஊரும் - தானிருந்தபூர்வமும், நாடும் - அத்தோடே சேர்ந்த தேசமும், உலகமும் - அந்தவேசத்தோடே சேர்ந்த லோகமும், இப்படிவர்கள் தன்னோடொக்கமாகப்போலே த்ருஷ்டிஜநவ்யஸநங்கள் அந்தந்தவிடங்களிலுள்ள ஜனங்களுக்கு ஊரும் நாடுமுலகமென்று நிர்தேசம். இதுக்குப்பிதற்றவென்கிறதோடே அந்வயம், தன்னைப்போல் - தன்னுடைய வ்யவஸாயத்தாலே ஸமானமாக மலற்றுகிற தன்னைப்போலே, அவனுடைய பேரும் - அவனுடையதிருநாமங்களையும், தார்களுமே - மாலைகளையுமே, இது ஸம்வந்தங்களுக்கு உபலக்ஷணம். பிதற்ற - வ்யவஸாயத்தாலே க்ருஷ்ணமாகச்சொல்லும்படி, தேவதேவபிரானென்றும் ஸங்கரபுஷ்கரனென்றும் அழாமென்றும்தான்பிதற்றுகிறப்போலேயெல்லாரும்பிதற்றும்படியிருக்கிறவளானவென்றபடி. அதாவது ஸர்வரும் அப்படியே கூப்பிட்டுக்கொண்டிருக்கிறவளானவென்கை. இதுபெண்ணுக்கு விசேஷணம். வான் - உயர்த்தான, வான் ஸப்தம் உயர்த்துக்குவாசகம், ஸர்வருக்கும் உயர்ந்ததாமான என்றபடி. கற்பு - தன்னுடைய ஸ்த்ரீத்வமரியாதை, கற்பு - மர்யாதை, இடறி - த்ருணீகரித்து. இதுக்குசேருமென்கிறதோடே அந்வயம். நல்வளம் - நல்லஸம்பத்துக்களானவை, சேர் - சேர்ந்திருக்கிற, இது ஊருக்கு விசேஷணம். பழனத்திருக்கோளூர்க்கே - நல்ல கழனிகளை யுடைத்தான திருக்கோளூரிலே, பழனம் - கழனி, ஸாகவாரத்திர்த்வநஸதாஸ. அக்கரைக்கே இக்கரைக்கே என்னுமாப்போலே திருக்கோளூர்க்கே என்று ஸப்தம், சேரும் - போய்ச்சேராநின்றவளான, கொடியேன் கொடி - க்ரூரமானவ்யவஸாயத்தை யுடையவளானவென்னுடையகொடியானவள், கொடிபோலே ஸுகுமாரமாயானபெண்ணானவளென்றபடி. கொடிது - க்ரூரம், அத்தையுடையவள் கொடியாள். இப்படியத்தாலே தன்னைச்சொல்லிக்கொளும்போது கொடியேனென்றவமாயிருக்கும். பெண்ணைப்பிரிந்த ஸாஹஸத்தாலே கொடியேனென்று தன்னைவெறுக்கிறாள்போருங்கொல் - திரும்பிவருவளோபோருகை - வருகை. பூவைகளே - அவளுடையபூவைகள், பூவை - ஸாரிகை. உரையீர் - சொல்லுங்கோள், அவள்தன்போக்குவரத்தெனக்கென்றே சொல்லலாகாது?உங்களுக்கெல்லாம்சொல்லிப்போவளே?ஆதலாலவள்வருவாள் வாராளென்கிறத்தை நீங்களெனக்குச்சொல்லவேணுமென்று கருத்து. பாவியானநானிருக்கையாலே வராதொழியவும் ஸம்பாவிதம்? நீங்களிருக்கையாலே வரவும் ஸம்பாவிதம்? அதிலவள்சொல்லிப்போனத்தைச் சொல்லுங்கோளென்றபடி. ॥௨॥

மூ — பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம்புட்டில்கள்* யாவையும் திருமால் திருநாமங்களே கூவியெழுமென்* பாவை
போயினித்தண்பழனத்திருக்கோளூர்க்கே* கோவைவாய் துடிப்பமழைக்கண்ணொடென்செய்யுங்கொலோ! ௩

ஆ — அந்தஃபுரஸம்பெருக்கமாட்டாதேயாதிலே ஊர்ஜிதமான தன்னுடைய ஸ்வத்தை த்யஜவநந்ரமெநயாய்க்கொண்டு போகட்டுச்செல்வளஞ்சேர்பழனத் திருக்கோளூருக்கே போய்ப்புக்கும் ஸாஹஸிமெநயான வென்னுடைய பெண்பிள்ளை புக்காளங்கொத்தாகிலு பொருக்கால்வருமேயென்று என்றவளுடைய பூவைகளைக்கேட்கிறாள். ௩

(பூவை) ஸாரஸ்யமாகக்கொண்டுவந்த ஸாகஸாரிகாதி லீலோபகரணங்களைக்கண்டால் வரும்ஸுகமும் தனக்குப்பிராட்டியோடே ஸந்தேனைகுன வெம்பெருமானைக்காணுமதுவேயாகையால் அவனினைத்துக்காணப்பெறுமைபாலே அவன் திருநாமங்களைச்சொல்லிக்கூப்பிட்டு அச்சொல்லினுடைய ஸாமாப்யத்தாலும் குளிர்த்தியாலும் உஜ்ஜீவித்திருக்கிற வென்பெண்பிள்ளை திருக்கோளூரிலேபோய்ப்புக்கு இனிதன்னுடைய

இ — (அந்தஃபுரமித்யாதியால்) மாட்டாதைபாலேயென்கிறதற்கு த்யஜவநந்ரமெநயாய்க்கொண்டென்கிறத்தோடே ஸம்பம். வாளென்கிறவதற்குக் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஊர்ஜிதமானவென்று) கற்பென்கிறதையுரைக்கிறார் (ஸ்வத்தையென்று) இடறியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (த்யஜவமித்யாதியால்) சேருமென்கிறத்தையுரைக்கிறார் (போய்ப்புகுமென்று) புகுமென்றது க்ரியாபதமன்று. புகுமவளானவென்றபடி. இது பெண்பிள்ளைக்கு விசேஷணம். கொடியேன்கொடியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாஹஸீத்யாதியால்) பொருங்கொல்லென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உங்களையித்யாதியால்) வருமேயென்றது - வருமோவென்றபடி. அவளுடைய பூவைகளை இத்யாதியாலே இப்பாட்டுக்கு ஸங்கதியுமிதென. திருக்கோளூருக்குப்போனளென்று கீழ்ப்பாட்டிலேநிஸ்சயித்தாள்; திரும்பிவருவளோ! வென்றிப்பாட்டிலே பூவைகளைக்கேட்கிறாளென்று ஸங்கதி. ௩

✳ மூன்றாம்பாட்டு. ✳

யாவையும் திருமாலித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாரஸ்யமாகவித்யாதியால்) திருநாமங்களேகூவியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனினைத்தித்யாதியால்) எழுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாமாப்யத்தாலுமித்யாதியால்) என்பாவையென்கிறதையுரைக்கிறார் (என்பெண்பிள்ளையென்று) என்செய்யுங்கொலோவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இனிதன்னுடையவித்யாதியால்) (அந்திபெஉத்யாதி) அவனிவளுக்கெதிரேவந்து ஸமாதானங்களைப்பண்ணி [illegible]

ப — பூவை - ஸாரஸ்யமானஸாரிகைகள், பைம் - பச்சைவர்ணங்களான, கிளிகள் - ஸுகங்கள், பந்து - கந்துகம், தூதை - உருவிளையாட்டுபகரணங்கள். பூம்புட்டில்கள் - புஷ்பபெட்டிகைகள், யாவையும் - இந்த லீலோபகரணங்களெல்லாம், திருமால் - ஸ்ரீயப்பதியே, இவளுக்கிதுஸம்ஹவ? இந்த லீலோபகரணங்களைக் கண்டால் இவளுக்கு ஸஹ்யமாயிவைபெல்லாத்தாலும்வரும் ஸுகமெல்லாம் ஸ்ரீயப்பதியைக்கண்டநுபவிக்கையென்று உன்மாதமாயிருக்குமிவளுக்கென்றபடி. திருநாமங்களேகூவி - அவனுடைய திருநாமங்களையே கூப்பிட்டு, தனக்குலவஸ்யஸாதநமாயிருந்தவனைக்காணக்கிடையாவிட்டவாறேயவனுடைய திருநாமங்களையேயலற்றியென்றபடி. எழும் - அத்தாலே ஸத்தையாநம்பண்ணி உஜ்ஜீவித்திராநிற்கும், வேறொரு லீலோபகரணங்களைக் கொண்டு போதுபோக்கவேண்டும்படியான வெறுமையின்றியும் அவன் திருநாமங்களையே கொண்டுஜீவியாநிற்கும், இதென்ன ஆஸ்சர்யமோ வென்றபடி. என்பாவை - என்னுடைய பெண்ணானவள், பாவை - பெண். தண்பழன - ஜலஸம்ருத்தியாலே ஸீதளங்களான கழனிகளையுடைத்தான, பழனம் - கழனி, திருக்கோளூருக்கே - ஸத்ருஸம் ஸ்தம், போய் - இத்திருநாமோச்சாரணவிருக்கவித்தை விட்டுப்போய், இங்கிருந்த நாள் மற்றொன்றுபாரமாய் அங்கேபோயவளுலேயாசிக்கப்போனளோவென்று கருத்து. இனி - அவ்வூரிலே புக்கபின்பு, கோவைவாய் - பிம்பபலம்போலேசிவந்திருக்கிற தன்னுடையவதரமானது, துடிப்ப - ஊவஸ்வேகத்தால் துடியாநிற்க, மழைக்கண்ணொடு - வர்ஷம்போலே பாஷ்பமானகண்களோடே, என்செய்யுங்கொலோ - என்னசெய்வளோ, அவனைக்கண்டு ஸஞ்ஞாஷிப்பளோ? அன்றிக்கே பவஹாநியாலையாலே பின்னையும் ஊஷியாநிற்பாளோ வென்றபடி. ௩

௮—கொல்லையென்பர்கொலோ குணமிக்கனளென்பர்கொலோ * சில்லைவாய்ப்பெண்டிர் அயற்சேரியுள்ளாரும் எல்லே* செல்வமல்கியவன்கிடந்த திருக்கோளூர்க்கே* மெல்லிடை நுடங்க இளமான் செல்லமேவினளே*

மேவி நைந்து நைந்து விளையாடலுறாளென் சிறுத்* தேவிபோய் இனித்தன் திருமால் திருக்கோளூரில்* பூவியல்

ஆ—ஊரிலுள்ளாரெல்லாம் வசைசொல்லும்படியாயிருக்குமோ? அன்றியே தன்னுடைய கல்யாணகுணத்தை யெடுத்துப்பேசுமோ வென்கிறாள். ௫௭

(கொல்லை) ஐச்வர்யத்தால் ஸம்ருத்தியையுடையவன் வந்து கிடக்கிற திருக்கோளூர்க்கே இளமானானவள் மெல்லிடை நுடங்கப்போனாள், பெண்பிள்ளை வயக்கடந்தவள் என்று அயலாருக்கு கொம்மைகச்சொல்லுவரோ? அன்றியே திருக்கோளூரிலே போய்ச்சேர்ந்தாள் பக்தியுடையவளாயிருக்கும்படி யென்? என்று குணமானவளாகச்சொல்வரோ? அங்ஙனே மானையாகச்சொல்லுவதை ஸம்பவிக்குமோ? வாசாமகோசரமானதையும் தோஷமாகவே கண்டு சொல்லுமிடத்தும் எங்ஙனம் இன்னதாயிருக்கிற தென்கிறாள். ௫௮

(மேவிநைந்து) விளையாடப்பிள்ளையாயிருப்பதமாய் மின்னிடைச்சிற்றிடையால் குழைவாள்

இ—நாங்களோ ஆழ்வாரின் பெண்மையாலே பின்னையும் அழுதுகொண்டே இருக்குமோ வென்னபடி. ௫௯

※ நாலாம்பாட்டு. ※

அந்தப்பெண்ணுக்குக் காதல்மருளிச்செய்கிறார் (ஐச்வர்யத்தாலித்யாதியால்) இளமானென்றதற்குக் காதல்மருளிச்செய்கிறார் (மாநிஷ்ணானவளென்று) கொல்லையென்பர்கொலோ வென்கிறதற்குக் காதல்மருளிச்செய்கிறார் (பெண்பிள்ளையித்யாதியால்) குணமிக்கனளென்பர்கொலோ வென்கிறதற்குக் காதல்மருளிச்செய்கிறார் (அன்றியேயித்யாதியால்) சில்லைவாய்ப்பெண்டிரென்கிறதற்குக் காதல்மருளிச்செய்கிறார் (அங்ஙனே மானையாகவித்யாதியால்) ௬௦

※ ஐந்தாம்பாட்டு. ※

விளையாடலுறாளென்கிறதற்குக் காதல்மருளிச்செய்கிறார் (பிள்ளையித்யாதியால்) ...

௬—இளமான் - பாலஹரிணியானவள், தஞ்சாவிஷ்டானவளென்றபடி. இருக்குமிடம் ... ஸ்தானம். செல்வமல்கி - ஐச்வர்யம் ஸம்ருத்தமாய்க்கொண்டு, அவன்கிடந்த - அவன்கண்வளர்ந்தருளின திருக்கோளூர்க்கே - திருக்கோளூரிலே, இருக்குக்குச்சொல்ல வேண்டுமிடமான ஸ்தலம். மெல் - ஸௌகுமார்யமான இடை - தன்னுடைய இடையானது, நுடங்க - மருங்காலைத்தாலே துவளும்படி, செல்ல - போருமைக்கு, மேவினாள் - இச்சைகொண்டாள், தன்னுடைய வயஸ்ஸுக்கும் ஸௌகுமார்யத்துக்கும் ... சில்லைவாய் - சிறுமைகூறுமவாயையுடையவர்களான, பெண்டிர் - ஸ்த்ரீகள், அயல்சேரியுள்ளாரும் - அசல்தெருவிலே யிருக்கிற ஸ்த்ரீகளும், கொல்லை - வரம்பழிந்தவளென்று கொல்லையென்று சொல்லுவார்களோ, கொல்லை - மர்யாதையை கடந்து பாவையரென்று ... பார்களோ வென்னபடி. குணமிக்கனளென்பர்கொலோ - மானையிலே என்று சொல்லுவார்களோ, திருக்கோளூரிலேப்பெருமான் பக்கல் மானைக்கமைதத்தைப் பற்றிப்பேச விருப்பமுடைய மானையிலே பற்றத்தையுடையவளென்று சொல்லுவார்களோ வென்றபடி. எல்லே யென்று விஷாதத்தோடு அன்று ... ஆய்த்து பதினற நான் இத்தனை மானையிலையான விஷயத்தைப் பற்றிச்சொல்லவும் கேட்கும் ... வே யென்றுகருத்து. * * * * * ௬௧

௯ - மேவி - கிட்டி, அவனெஞ்சாலே கிட்டி, அவனையாசைப்பட்டென்றபடி. நைந்து நைந்து - க்ஷணம்தோறு மிளிர்மெலிவாய், விளையாடல் - பாலக்ரீடைகளிலே, உறாள் - ஸமர்த்தையாகமாட்டாள். ... "வன்சழிப்பமக்கயர்தோள்கைவிட்டு" வாத்ஸல்யமில்லாமலிருக்கும் ஸ்வபாவத்தில் என்கிறபடியே ... க்ரீடைகளிலே ப்ரவ்ருத்தியாதவளானவளென்றபடி. என் - என்னுடையவளான, சிறு - பால்யமுடைய, தேவி - தேவியானவள், சிறுபெண்ணாயிருக்கச்செய்தே ஸௌந்தர்யமுடைய ஸ்வாதந்த்ர்யம் தரிக்கப்படியான திவ்யஸௌந்தர்யத்தை யுடையவளான விவளென்றபடி. போய் - இந்தவிடத்தைப்போய், இனி - இக்காலம், தன் திருமால் - தனக் கவ[ர]யானவனான ஸ்ரீயபதியினுடைய, திருக்கோளூரில் - ஸ்தானம். பூவியல் - புஷ்பங்களையே ஸ்வபாவமாக உடையவான, இயல் - ஸ்வபாவம். புஷ்பப்ரசுரங்களானவென்றபடி. பொழிலும் - உத்யானங்களையும்

ரு—பொழிலுந்தடமுமவன்கோயிலுங்கண்* டாவியுள்குளிரவெங்ஙனேயுகக்குங்கொலின்றே* ॥ரு॥
இன்றெனக்குதவாதகன்றவிளமானினிப்போய்த்* தென்றிசைத்திலதமனைய திருக்கோளூர்க்கே* சென்று
தன்திருமால்திருக்கண்ணுஞ்செவ்வாயுங்கண்டு* நின்றுநின்றுநையுநெடுங்கண்கள்பனிமல்கவே* ॥சு॥

அ—எம்பெருமானைக்காண வேணுமென்றாசைப்பட்டுப் பெருமையாலே நைந்துநைந்து இருந்தவென்சிறுத்தே விபோயினித்தன்திருமால் திருக்கோளூரில் பூவியல்பொழிலையும் அதுக்குள்ளே தாமரைத்தடாகங்களையு மதுக்குள்ளே யவன்கோயிலையுங்கண்டு தன்னுடைய நிரவயிகஸங்கல்பமெல்லாம்போய் ஆவியுள்குளிரவின்று எங்ஙனேயுகக்கிறாளோ? ஸாநந்தஸம்ருத்தியைக் காணப்பெற்றிலேனென்கிறாள். ॥ரு॥

(இன்றெனக்கு) இன்றுதன்னைப்பிரிந்துவ்யஸநப்படுகிற வெனக்குத்துணையாகாதே யென்னைப்போகட்டுப்போன வென்னிளமானினிப்போய்த் தென்றிசைத்திலதமனைய திருக்கோளூர்க்கேசென்று அவன்கோயிலுள்ளேபோய்த் தனக்குப்பிராட்டிபோன்ற ஸம்ஶ்லேஷத்தாலே புதுக்கணித்ததிருக்கண்களையும் திருப்பவளத்தையுங்கண்டு நிரவயிகப்ரீதியாலே விகஸிதமான வவளுடையகண்களையுமாநந்தஜமானகண்ணீர்நிறையுமாநந்தமதமான மெளக்த்யஸௌரபவைரையையுங் காணப்பெற்றிலேனென்கிறாள். ॥சு॥

இ—மேவியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எம்பெருமானையித்யாதியால்) தடமுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தாமரையித்யாதியால்) பாட்டுக்குப் வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (ஸாநந்தேத்யாதியால்) ॥ரு॥

✳ ஆறாம்பாட்டு. ✳

இன்றெனக்குதவாதகன்றவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இன்றுதன்னையித்யாதியால்) திருமாலென்கிறவதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தனக்குப்பிராட்டி இத்யாதியால்) தனக்கென்கிறவத வெம்பெருமானைச்சொல்லுகிறது. நெடுங்கண்களென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரவயிகேத்யாதியால்) பனிமல்கவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆநந்தஜ இத்யாதியால்) நின்றுநின்றுநையுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆநந்தாஶ்ருவைகஶ்யேத்யாதியால்) [ஆநந்தமதயானவென்று பாடாந்தரம்.] ॥சு॥

ப—தடமும்-அந்த வுத்யாநங்களுக்குள்ளேயிருக்கிற தாமரைத்தடாகங்களையும், தடம்- தடாகம். அவன்கோயிலும்- அவனுடைய திவ்யாயதநத்தையும்; இன்று - தனக்குநல்லவிடிவானவின்றைக்கு; கண்டு - இங்கிருந்து நினைத்து ஸமிதமாக நின்றவிவள்தன்கண்ணாரக்கண்டு, ஆவி- ப்ராணனானது, ஈக்ஷணயாப்ராணாத்யமான ஹ்ருதயமானதென்றபடி. உள்குளிர-விரஹஜநித தாபமெல்லாம்போயுள்ளங்கூடக்குளிரும்படி, எங்ஙனே யுகக்குங்கொலோ - எப்படி ஸந்தோஷிப்பாளோ, அந்தப்ரயுக்தஸந்தோஷமுகஸௌமையைநான்காணப்பெற்றிலேனென்று கருத்து. * * * * * ॥ரு॥

சு எனக்கு- தன்னைப்பிரிந்து நோவுபடாநிற்கிற வெனக்கு, இன்று- இப்படி வ்யஸநதஶையாயிருக்கிறகாலத்திலே, உதவாது-உதவாதே, ஈஷ்வராதீநம்படியாக ஸஹிதமெத்தனை பிராதே யென்றபடி. அகன்ற-விஶ்லேஷித்துப்போனவளான, இளமான்- பாலஹரிணிபோலே முக்தையானபெண்ணானவள், போய்- ப்ரயாஸ நடந்துபோய், இதுக்குச்சென்றென்கிறதோடே அந்வயம். தென்திசை - தக்ஷிணதிக்குக்கு, திலதமனைய - திலகம்போலேயிருக்கிற, திலதமென்று திலகத்துக்குப்பேர். அனையஶப்தம் ஸாத்ருஶ்யவாசி. திருக்கோளூர்க்கே- திருக்கோளூரிலே, சென்று - ப்ரவேஶித்து, இனி- அங்கேபோய்ப்புக்கபின்பு, தன்திருமால் - தனக்கஸாதாரணனான ஶ்ரிய:பதியினுடைய, திருக்கண்ணும் - ஶ்ரீநேத்ரங்களான லோசநங்களையும், செவ்வாயும் , சுமமான வதரத்தையும், கண்டு - தன்கண்களாரக்கண்டு, நெடுங்கண்கள்- அந்ததிவ்யாவயவங்களைக்கண்டவாநந்தத்தாலே விஸ்த்ருதங்களானதன்னுடையலோசநங்கள், பனிமல்க- ஆநந்தபாஷ்பப்ரவஹியாநிற்க, பனியென்றுஜலம். நின்றுநின்றுநையும்- ஆநந்தாதிஶயத்தாலேபின்னையும் ஶிதிலையாகாநிற்பள். அந்த ஶோபையை நான்காணப்பெற்றிலேன் "ஆஹ்லாதஶீதநேத்ராம்பு: புலகீக்ருதகாத்ரவான்। ஸதா பரகுணாவிஷ்டோ த்ரஷ்டவ்யஸ்ஸர்வதேஹிபி:" என்னும்படியான விவளுடைய ஶோபையாகிற பாக்யத்தை யிழந்தேனென்றுகருத்து. ॥சு॥

மூ— நினைக்கிலேன் தெய்வங்காள் நெடுங்கணிளமானினிப்போய்* அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனைத்*
தினைத்தனையும் விடாளவன்சேர் திருக்கோளூர்க்கே* மனைக்கு வான்பழியும் நினையாள் செல்லவைத்தனளே*(௰)॥

ஆ— த்ருணமாக நினையாதே போகட்டு லோகமெல்லாம் இவள் தனிமைப்போனாளென்று பழிசொல்லியிரைக்கும்படியாகத் திருக்கோளூரிலே போனாளென்கிறாள். ॥௯॥

(நினைக்கிலேன்) தன் திருக்கண்களின் அழகாலே ஸர்வலோகங்களையும் தோற்பித்தடிமைபாக்கிக்கொண்டிருக்கிறவனுடைய திருக்கண்களைக் கண்டல்லதொரு க்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டாதிருக்கிற நெடுங்கணிளமான் இனி இது குடிப்பழியென்றுமிடமென்று நினையாதே அவன் சேர் திருக்கோளூர்க்கே போய்ப்புக்காள். இவளைப்பிரிந்த வ்யஸநாதிஶயம் நினைக்கவும் கூடுகிறதில்லை, என்று சொல்லிப் பின்னையும் தன்செயலறுதியாலே தெய்வங்காளென்றழைப்பிடுகிறாள். ॥௰॥

(வைத்தமாநிதி) ஆழ்வார் விஶ்லேஷமாகிறவாபத்துக்குத் தமக்குவைப்பாக வைத்த உபாயமாயிருந்த

இ—(எங்களையுமித்யாதியால்) சேரிபல்பழி தூஉய்இரைப்பனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (லோகமெல்லாமித்யாதியால்) ॥௯॥

※ பதப்பாட்டு. ※

அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனையென்கிற விஶேஷணத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன் திருக்கண்களித்யாதியால்) தினைத்தனையும் விடாளென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (க்ஷணமாத்ரமித்யாதியால்) மனைக்கு வான்பழியும் நினையாளென்கிறதையுரைக்கிறார் (இதுகுடிப்பழித்யாதியால்) நினைக்கிலேனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவளைப்பிரிந்தவித்யாதியால்) நினைக்கவும் கூடுகிறதில்லையென்றது - நினைக்கவுமாட்டுகிறதில்லையென்றபடி. செயலறுதியாலேயென்றது - தன்னால் செய்யலாவதில்லாமையாலேயென்றபடி. ॥௰॥

※ நிகமனம். ※

வைத்தமாநிதியாமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆழ்வாரித்யாதியால்) ஆழ்வார் தமக்கு

ஸா— வசநம். ஒன்றும் நினைத்திலள் - ஒன்றாகவும் நினைத்தாளில்லை, உறவுடையவளாகவும் நினைத்திலள், ...கவும் நினைத்திலளென்றபடி. தன்னையவள் நினையாததற்குத் தாயார் ஶோகிக்கிறாள் ...... வருடைய வஶீகரணமே உத்தேஶ்யமாகையாலே, * * * ॥௯॥

ஶ. அனைத்துலகும் - ஸமஸ்தலோகங்களையும்: உபயவிபூதிகளையுமென்றபடி. உடைய - உடையவனான, அரவிந்தலோசனனை - அரவிந்தலோசனனை. தினைத்தனையும் - க்ஷணமாத்ரமும், ஒருக்ஷணமாத்ரமுமென்கிறபடி. தினை - ஸூக்ஷ்மம், தனையென்று வஶீகரணவாசி ...... என்னத்தனையுமென்றுமாப்போலே தினைத்தனையுமென்கிறது. விடாள் - விடாதவளான, நெடுங்கண் - ...... இதுவாகி ...... லம். இவள்தான் நெடுங்கண்ணாளாகையாலே ...... போலே ...... வென்றென்றுனவள், இனி - இதுக்குமேலே, ... நிற்கின்றபடி இக்கண்ணழகுக்குத் தோற்று ...... அவனிக்கேவரவேண்டியபடியாயிருக்க இவளங்கேபோனவிதென்ன வாஶ்சர்யமென்றுகருத்து. போய் - அவனைநாடிக்கொண்டுபோய், மனைக்கு - தன்னுடைய குடிக்கு, வான்பழியும் - பெரியவபவாதத்தையும், வான் - பெரியது, பழியுமென்கிறவிடத்தில் உகாரத்துக்கு ஸமுச்சயார்த்தமாவது. நினையாள் - எண்ணாதவளாய்க்கொண்டு, அவன்சேர் - அவன்வஸிக்கிறவிடமான, திருக்கோளூர்க்கே - திருக்கோளூரிலே, செல்லவைத்தனளே - போகவைத்தாள், ஸடுதியாகப்போனாளென்றபடி. செல்லவைத்தாளென்கிற லோகோக்தியாலே ஸடுதியாகப்போனாளென்கிறதாகிறது, நினை - அவளுடைய வ்ருத்தியை நினைக்கவும், கிலேன் - மாட்டுகிறிலேன், தெய்வங்காள் - தேவதைகாள், இது உபவம்பொறுக்கமாட்டாமையாலேயாக ...... நம்பண்ணுகிறபடி, இங்கு தேவதாஸம்போதநம் க்ஷணமாத்ரமாக ...... பண்ணுகிறாளென்று பழிசொல்லுவாரோடே யித்துக்கத்தைச்சொல்லியாறவொண்ணாமையாலும் தேவதைகள் பழிசொல்லாதிருக்கையாலும் தன்னோடொக்கவுறங்காதிருக்கையாலும் தேவதைகளோடே துக்கத்தைச்சொல்லிக்கூப்பிடுகிறாள்.

மூ — வைத்தமாநிதியாம் மதுசூதனையே அலற்றிக் * கொத்தலர் பொழில்சூழ் குருகூர்ச் சடகோபன் சொன்ன * பத்து நூற்றுள் இப்பத்தவன் சேர் திருக்கோளூர்க்கே * சித்தம் வைத்துரைப்பார் திகழ்பொன்னுலகாள்வாரே. ௧௧

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ — எம்பெருமானையே அலற்றிச்சொன்ன இத்திருவாய்மொழியைத் திருக்கோளூர்க்கே ப்ரவணமான மநஸ்ஸையுடையராய்க்கொண்டு சொல்லுவாரிட்டவழக்காகும் திருநாடென்கிறார். ௧௧

திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவடிகளே சரணம்.

இ — வைப்பாக வைத்தவென்றபயம். தமக்கு ஸ்வாமிநியாக வ்யவஸித்திருந்தவென்றபடி. பொன்னுலகாள்வாரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இட்டவழக்காமித்யாதியால்) ௧௧

ஈ — வைத்த - வைக்கப்பட்டதான, ஆபத்திலே ரக்ஷகமாகவேணுமென்று வைக்கப்பட்டதானவென்றபடி. மா - ஸ்ரேஷ்டமான, சிலகாலத்துக்கப்பால் மீண்டுபோகக்கடவதான லௌகிகத்தில் நிதிபோலன்றிக்கே எத்தனை காலம் ஸேவித்தாலும் குறையாததானவென்றபடி. நிதியாம் - நிதியாகாநிற்கிற, "தத்யா ஹிரண்யநிதிம் நிஹித" மென்கிறபடியே நிதிபோலேயிராநிற்கிறவென்றபடி. அதாவது:— ஆபத்திலே ரக்ஷகமாய்த் தன்னையுடையவனொன்றுக்கும் விசாரப்படவேண்டாதபடியாய் ஸகலபோகங்களையும் தன்னைக்கொண்டே ஸாதிக்கலாய் ஸகலஸாதநங்களும் தன்னையநுபவிக்கிற ஸாதநத்துக்குள்ளேகிடக்கும்படியாய் தன்னையுடையவனுக்கு ஸர்வலோக ப்ரதிபத்தியையுண்டாக்கவற்றாய்த் தன்னையுடையவன் காலிலே யெல்லாரும்விழும்படி பண்ணவைத்தாய் மற்றும் ஐச்வர்ய ஸாதநங்களையுடைத்தாயிருக்கிறவென்றபடி. இத்தால் ஸாரார்பழிக்குமஞ்சாதே தாயையும்கைவிட்டுத் தனிவழிபோகைக்கு நிதாநஞ்சொல்லித்தாய்த்து. மதுசூதனையே - ஸ்வாமி நனையே, ப்ரதிபந்தகநிரஸநனானவனையென்றபடி. உத்தேச்யமானதுதானே விரோதியையும்போக்கித் தன்னையநுபவிப்பிக்கவைத்தாயிருக்கிறதென்றுகருத்து. அலற்றி - அவிச்சிந்நமான வாக்யாலே ப்ரலாபித்து, இதுக்குச்சொன்னவென்கிறத்தோடே அந்வயம். கொத்து - புஷ்பகுச்சங்கள், அலர் - விகஸியாநிற்கிற, தாம் விச்லேஷத்தையுபசமிக்க க்ஷமரல்லாதபடி. திருக்கோளூரி லெம்பெருமான்பக்கல் ப்ராவண்யாதிசயத்தாலே தமக்குப்பிறந்த ப்ராவண்யத்தால் ஸ்ப்ருஷ்டபுஷ்பகுச்சங்களானவென்றபடி. பொழில் - உத்யாநங்களையுடைத்தான, குருகூர்ச்சடகோபன்சொன்ன - ஸூக்தம், இதுபத்துக்கு விசேஷணம். பத்து - பத்துப்படிகளான, 'ஸேவாயோக்யர் திவ்யஹ்ருத்:' என்கிறச்லோகத்தின்படியே ஸர்வஜ்ஞாதிகளான பத்தர்களையுடையவே ப்ரதிபாதிக்கிறவையானவென்றபடி. நூற்றுள் - சதங்களுக்குள்ளே, இப்பத்து - ப்ராப்யப்ராபகாம்சமான நிதர்சகத்தை, இதுக்கு உரைப்பாரென்கிறத்தோடே அந்வயம். அவன்சேர் - அவனெழுந்தருளியிருக்கிற, திருக்கோளூர்க்கே - திருக்கோளூரிலே, சித்தம்வைத்து - சித்தத்தைவைத்து, அவ்வூரிலே ப்ரவணமான மநஸ்ஸையுடையவராய்க்கொண்டென்றபடி. உரைப்பார் - சொல்லுகிறவர்கள், திகழ் - உஜ்ஜ்வலமாயிருக்கிற, ஸமஸ்தஸாதநங்களாலே பூஜ்யமானவென்றபடி, பொன்னுலகு - ஸ்ப்ருஹணீயமான லோகத்தை, பரமபதத்தையென்றபடி. ஆள்வாரே - ஆளுவர்கள், ஸமஸ்தஸ்வாமித்வ ஸ்வாதந்த்ர்யத்தாலே பண்ணப்பெறுவரென்றபடி. ௧௧

ஜ்ஞாநவைராக்யபூஷணாய நமோஸ்து ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜ மஹாதேசிகாய நம:.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி:

(உண்ணுஞ்சோறு.)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௭௫ ॥

([illegible]) கண்ணனெம்பெருமானென்றென்றே - [illegible] க்ருஷ்ணனுய்வந்தவதரித்தும்

த்ரா — படைத்தவளவு ஹர்ஷத்தாலும், (ஸ்ருஷ்டி ஹர்ஷமேவ) பெருந்தார்களும் பேபிதற்றி - திருநாமஸங்கீர்த்தனத்தாலும் திருமாலையினுடைய உக்தியாலும், (ஸ்ரீ ஸம்பந்த ப்ரபந்த்ர) இந்தாலே நாலுபாட்டில் ஸம்பந்தமொத்துணமறு லிக்கப்படுகிறது. யாவையும் திருமால் - செல்வம்மல்கியவன் கிடந்த - இனித்தன் திருமால் திருக்கோளூரில் - தன் திருமால் திருக்கண்ணுஞ்செவ்வாயுங்கண்டு - ப்ரியம் வேதிதத்தாலும் அக்கூருண்டானவெவாஸ்ருப்யைஸ்வரியாலும் பிராட்டியோடே பொருந்தியிருக்கையாலே மிகவும் வஸ்யமாகச்செல்லுகிற காமவ்யாபிகாரகாலதிராக்ஷிதையாலும், ஸகலஸம்ஸ்லேஷத்தாலே புகுக்கணித்த திருக்கண்கள்முதலான திவ்யாவயவஸௌந்தர்யத்தையாலும், (வெளஹ்மேத) நெடுமாலென்றழைத்தினிப்போய் - குன்றிகர்ப்பக்கல் வ்யாமோஹத்தையாலும், (குஸ்ரீவ்யாஸ) ஒசிந்தவொண்மலராள் கொழுநன் - மேனிமாறுதபூமேலிருப்பாளுக்கநாயகனாயினவனுக்கு ஸ்வாதந்த்ர்யாதியாலும், (ப்ரீதவரஸா) என்கண்ணுக்கென்றியாயிருப்பாள் - குன்றிதபா ஸந்தேதையாலும், (ஸவநேத்ரகோசரத்வை) அனைத்துலகுமுடையவரவிந்தலோசனனை - ஸவஸ்வாதந்த்ர்யத்தையாலும், ஸ்ரீஸ்வாத்தாலே அத்தைக்கொள்சொல்லுகிற ஸ்வரூபவசனம் ஸம்ரூஹீதமாகிறது. இப்படிகளாலே திருக்கோளூரெம்பெருமான் குன்றிகர்க்கு விஸ்லேஷதசையில் ஸவாதரிக்கயில்லாதபடி ஸ்வயங்கோண்டாக்காநிற்கிறனென்று "உண்ணுஞ்சோறு" என்கிறஉபக்ரமத்திலே ஸ்வஜீவநாதிவ்யாபாரம் உபகிருஷ்ணோ ஸுதிவ்யாஷாரவமாக ஸம்ரக்ஷித்த ஸம்வேகர் உபபாதிக்கருளினார்களென்கிறார். ௨ ௮

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆறாம்பத்தில் ஏழாந்திருவாய்மொழி முற்றிற்று.

எட்டாந்திருவாய்மொழி.

ஆ— (பொன்னுலகு) திருக்கோளூரிலேபோய்ப்புக் கெம்பெருமானோடே ஸம்ஸ்லேஷிக்கப்பெறாமல் பின்பு ஸ்ரீராமாய் பழையபடியே எம்பெருமானைக்காணப்பெறாமையாலே தமதாஸஹிஷ்ணுதயாய் ஸந்தேஶத்தாலே ஒருபிராட்டியாய் அவனைக்குறித்து தூதப்ரேஷணம்பண்ணுகிறார்; இப்படி திருக்கோளூரிலே

எட்டாந்திருவாய்மொழி.

இ— மானுக்குவைத்திலே விரஹவ்யஸனத்தால்வந்த வைஹ்வல்யத்தாலும் உண்ணுஞ்சோற்றிலே திருக்கோளூரிலே எம்பெருமான்பக்கலிலே ஸங்கோசம் மிகவும் ஆவேசமாகையாலும் "விஸ்லாகநாகஸ்ரீ சக்திஸஞ்ஜாதா" என்னும்படியான ஸ்ரீபரதாழ்வானைப்போலே தம்மைமறந்து தம்முடைய விரஹவ்யதையையும் அநுஸந்திக்க க்ஷமரல்லாதவராயிருந்த வாழ்வார் விரஹாநுஸந்தானவேளையிற்போலே இத்திருவாய்மொழியிலே ஒருபிராட்டி யெம்பெருமானுக்கு தூதப்ரேஷணம்பண்ணுகிறதாகச்சொல்லுகை யஸம்பந்தமன்றோவென்னவ தரிப்பிக்கிறார் (திருக்கோளூரிலேஉக்தியால்) அப்படியிருந்தாரேயாகிலும் திருக்கோளூரிலெம்பெருமான்பக்கலிலே ஸங்காத்விதராய் அவன்முகங்களை நெடும்போதநுபவிக்கையாலே பெருவிடாய்ப்பட்டவர்கள் நீரிலேமுழுகி ஸம்ஜீவிக்குமாப்போலே அந்தவிரஹவ்யஸனத்தால்வந்த வைஹ்வல்யநீங்கி ஸம்ஜீவித்து "ப்ரஹ்லாதோஸ்மி ஸஸ்மார" என்னுமாப்போலே தம்மையுணர்ந்து தம்முடைய தசைகளையும நுஸந்திக்கக்ஷமரானவாறே பழையபடியே தம்முடைய விரஹதசை உபாஸனையால் அத்தைப்ரஸஹநராய்க்கொண்டு தூதப்ரேஷணம்பண்ணுகிறாரென்றுகருத்து. காணப்பெறாமையாலே என்றது - வாஹ்யஸம்ஸ்லேஷாபாவமாம்படி காணப்பெறாமையாலேயென்றபடி. ஒருபிராட்டியாயென்றது - விரஹிணியானவொருபிராட்டி தசையையுடையவராயென்றபடி. ஸந்தேஶத்தாலே தூதப்ரேஷணம்பண்ணுகிறாரென்றபடி. இப்படி ஸந்தேஶத்திலே, திருவாய்மொழிஸம்பந்தமாவதும் மானுக்குவையத்திலே ஸம்ஸ்லேஷமதையாயிருந்த பிராட்டி இத்திருக்கோளூரிலேசென்றாளென்று உண்ணுஞ்சோற்றிலே சொல்லுகையாலே இவளுக்கு தூதப்ரேஷணம்பண்ணவேண்டாமையால் ஸந்தேஶத்திலே இத்திருவாய்மொழி யஸம்பந்தமன்றோவென்னவ தரிப்பிக்கிறார் (இப்படிதிருக்கோளூரிலேயெழுந்தருளினவிக்ருதியால்)

மூ— பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ நன்னலப்புள்ளினங்காள் வினையாட்டியேனானிரந்தேன் முன்

ஆ— பெருந்தருளினபிராட்டியோடுள்ள ஸாக்ஷாத்ஸம்ஸ்லேஷஜநிதாநந்தபிகாரத்தாலே ஆனந்தநிர்ப்பரனான எம்பெருமான் அந்தப்ரீதியெல்லாம் தனக்கு ஸாத்ம்யமானவாறே அதுக்கு ஸாத்ம்யத்தைக்காக விஸ்லேஷித்து நெடுங்காலம் எழுந்தருளாதிருந்தவாறே தத்விஸ்லேஷத்தாலே க்லேஶயுக்தையான பிராட்டி தன்னுடைய ஆற்றாமையாலே அவனைக்குறித்து சிலபக்ஷிகளைத் தூதாகவிடுகிறாளென்றுமாம். திருக்கோளூரிலே போய்ப்புக்க வேணுமென்று புறப்பட்டவிப்பிராட்டி தன்னுடைய தௌர்ப்பல்யத்தாலே பின்னைபோகக்கூடமாட்டாதே அங்கே உத்யாநத்திலேயிருந்து எம்பெருமானைக்குறித்து தூதுக்ஷணம்பண்ணுகிறாளென்றுமாம். உபய ஸ்லேஷஸமயாநந்தரமாக ஸ்வாமியானவன் ஸர்வேஶ்வரனே விஶ்லேஷிக்கவேண்டிற்றென்று என்னோடு ஸம்ஶ்லேஷித்து விஶ்லேஷிக்கிறான், என்னுடைய ஸௌந்தர்யத்தையும் அபஹரித்துக்கொண்டு என்னைத் தோற்பித்துத் தனக்கடிமையாக்கிக்கொண்ட எம்பெருமான் தன்னைப்பிரிந்து நான்படுகிற வ்யஸநத்தைச் சென்று சொல்லவேணுமென்று புள்ளினங்களைக் குறித்துச்சொல்ல; பின்னையும் அவை போகாதிருந்தவாறே அவன் நம்முடைய ஸம்ஶ்லேஷத்திலே ஸ்வபாவமில் செப்பமென்று போகாதிருந்தனவாகக்கொண்டு

இ— தூதாகவிடுகிறாளென்றுமாமென்கிறவிடத்தில் ஸம்ஶ்லேஷமானது மேல்வாக்யத்தில் ஸம்ஶ்லேஷத்தோடே ஸம்பந்திக்கிறது. ஸாக்ஷாத்தாலே திருக்கோளூரிலெம்பெருமானோடு போகஸம்ஶ்லேஷமின்றிக்கேயிருக்க ஸம்ஶ்லேஷத்திலே யவனோடு போகஸம்ஶ்லேஷம் நடந்ததாகச்சொன்னால் விஷயாந்தரமென்கிற ஸம்ஸாரத்தாலே ஸாகாஶமொன்றுதான் கற்பிக்கிறார் (திருக்கோளூரிலே போய்ப்புகவேணுமித்யாதியால்) *

முதற்பாட்டு

பிரானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உபய ஸம்ஶ்லேஷத்யாதியால்) பொன்னுலகாளீரோ இத்யாதியாலே உபயவிபூதியையும் பக்ஷிகளுக்குக் கொடுக்கிறதாகச்சொல்லும்போது இவ்விபூதியெல்லாம் அவனுடையதென்றுமிட்ட இப்பாட்டிலே சொல்லவேண்டுகையால் பிரானென்கிறவசனத்துக்கிப்படி தாத்பர்யமாகப் புநிதமென்றுகருத்து. என்னலங்கொண்டவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (விஶ்லேஷிக்கிறானித்யாதியால்) விஶ்லேஷிக்கிறானென்றது - விஶ்லேஷியாநிற்கிறவனென்றபடி. ஸௌந்தர்யத்தைப்பெற்றது - ஸௌந்தர்யம் ஸர்வாபஹாரமாக்யாதிகளையென்றபடி. தூதிபோக்யத்திலே சொல்லுகிற விஶேஷங்களுக்கு ஸம்பந்தமிதென்னவது சொல்லுகைக்காகவே கற்பிக்கிறார் (பின்னுநான்படுகிறவித்யாதியால்) போகாதிருந்தனவாகக்கொண்டென்றது - போகாதேயிருந்தனவாக உத்ப்ரேக்ஷித்தென்றபடி. இந்தஸம்ஶ்லேஷமாய்

ப— நன்னலம் - நல்லதான நலத்தையுடையவையான; நலம் - ஸௌந்தர்யம். ஸ்வாமித்தார்க்குத் தூதுசெய்கைக்கடியான உயர்ந்தஸௌந்தர்யங்களையுடையவையானவென்றபடி. புள்ளினங்காள் - பக்ஷிஸமூஹங்காள், புள் - பக்ஷி, இனம் - ஸமூஹம், பிரிந்தாரைச்சேர்க்கை தியக்குகளுக்குஸ்வபாவமென்று இருக்கிறாள் ஸம்வாதத்தில் வாஸலப்யமே. இனங்காளென்று "ஜிக்ஷ வானரஸமூஹம்" என்கிறபடியே பெல்லாவிக்கிறாம்போகவிடலாம்படி திரள் இருக்கிறபடியைக்கொண்டாடினபடி. முன் - முன்பே; இந்த ஜகத்தெல்லாம் காரண கலேவரங்களை யிழந்து தங்களுடைய ஜீவங்களை யறிவிக்கவும் மாட்டாதே கிடக்கிற தஶையிலே யென்றபடி. உலகங்களெல்லாம் - லோகங்களெல்லாத்தையும், படைத்த - தன் ஸங்கல்பத்தாலே ஸ்ருஷ்டித்தவனான, முகில்வண்ணன் - தேவஸாவனாவ வண்ணம் - ஸ்வபாவம் போல உதாரனானவன்றபடி. கண்ணன் - க்ருஷ்ணனை, ஆஸ்ரிதஸுலபனானவென்றபடி. ஸ்வ தாரதம்யாயிலேயிலேவாத்ஸல்ய திகள் நமக்குப்ரகாஶிப்பது, என்னலம் - என்னுடையநன்மைகளை, என்னுடைய ஸௌந்தர்யாதிகுணங்களையும் போக்யதாதிகளான ஆத்மகுணங்களையும்என்று ஸர்வஸ்வத்தையுமென்றபடி. கொண்ட - அபஹரித்தவனை, விஶ்லேஷத்தாலே ஸம்ஸ்லேஷமாம்படி பண்ணினவனை என்றபடி. பிரான்தனக்கு - உபகாரகனானவனுக்கு, இந்த விஶ்லேஷ வ்யஸநம் என்னோடு ஸம்ஶ்லேஷித்து உபயஸம்ஶ்லேஷமானநுப்ரேய நாதாத்மீயவிபூதிகளுமிருந்தவனுக்கென்றபடி. அவனுடைய ஸௌந்தர்யாதிகளில் இவன் உபயவிபூதியையும் ப்ரீதிநிமித்தமாகக் கொடுக்கும்படியிறே யவன் தன்னையும் தன் விபூதியையும் இவளுக்காக்கினைத்தபடி. என்னிலைமை - என்னுடைய ஸ்திதியை, உரைத்து - விண்ணப்பஞ்செய்து, பொன்னுலகு - ஸ்வர்க்காயல

மூ— முன்னுலகங்களெல்லாம்படைத்தமுகில்வண்ணன் கண்ணன் என்னலங்கொண்டபிரான்றனக்கென்னி லைமையுரைத்தே.

ஆ— அவன்வரஸ்தாநாதிகளுகையாலும் ஆஶ்ரிதவத்ஸலனாகையாலும் நம்முபேக்ஷிதஞ்செய்தருளும், ஆதலால் என்னுடையத³ஶையைச் சொல்லவேணுமென்று சொல்லி அவற்றின்பக்கலுள்ள ஸௌஹ்ருதாதிஶயத்தாலே திருநாட்டையும் லீலாவிபூதியான ஸம்பந்தங்களையுமடங்க இவைசெய்கிறஉபகாரங்களுக்குக்கைம்மாறாகக்கொடுத்துப் பின்னையும் நிரூபித்து இவை செய்கிறமஹோபகாரத்துக்குக் கைம்மாறாகப்போராதென்று பார்த்து வாஸ்தவ்யார்த்தங்களான உங்களுடைய நிரவதிகதயையாலே ஸம்ஶ்லேஷார்த்தநிர்ப்பந்தமான என்னுடைய த³ஶையைச்சென்று சொல்லவேணுமென்று ப்ரார்த்திக்கிறாள்.

(மையமர்) ஒருதாமரையிலே ஒருதாமரைபூத்தாப்போலே திருக்கையும் திருவாழியும்சேர்ந்திருக்கிற

இ— வாஶ்லேஷிக்கைக்காக இவ்விஶேஷணங்களென்றுகருத்து. முன்னுலகங்களெல்லாம்படைத்தமுகில்வண்ணன்னென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவன்வரஸ்தாநாதியால்) கண்ணனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதேத்யாதியால்) என்னிலைமையுரைத்துஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆதலாலித்யாதியால்) ப்ரதமபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவற்றின்பக்கலித்யாதியால்) கைம்மாறாக - ப்ரத்யுபகாரமாக, உபயவிபூதியுமிவளதீநமாம்படி யவன்பண்ணியிருக்கையாலும் "ஸர்வஸ்வஹ்ருதயோ தேவாபிஷ்டம் மோஹந ஞ்ஜக:" என்றுசொன்னவனவனுடைய திருவுள்ளத்தைப்பார்த்தால் இவளைத்தன்னோடுசேர்த்தார்க்கு உபயவிபூதியுங்கொடுக்கை யவனுக்கு ஸம்மதமாகையாலும் இப்புள்ளினங்களுக்கு இவள் உபயவிபூதியையுங்கொடுக்கத் தட்டில்லையென்றுகருத்து. இத்தாலித்திருவாய்மொழிக்கு வடிவாய நின்றபவிபூதிகமென்கிற ஸமஸ்தநம் ஸம்ப்ரதாயமென்று ஸூசிதமாய்த்து இப்படியுபயவிபூதியையுங்கொடுத்தவிவள் நானிரந்தேனென்று அகிஞ்சநரைப்போலே ப்ரார்த்திப்பானேனென்ன இதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பின்னையுமித்யாதியால்) வாஸ்தவ்யார்த்தவென்கிறத்தாலே நன் நலஸம்பந்தம்வ்யஞ்ஜிதம்.

✳ இரண்டாம்பாட்டு. ✳

கையமர்சக்கரத்தென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒருதாமரையிலேஇத்யாதியால்) சக்கரத்

ஸ— ப்ரத்யக்ஷமான லோகத்தை, யதா- நித்யஸம்ஸஹணீயமானலோகத்தை, ஸ்ரீவைகுண்டலோகத்தையென்றபடி, ஆளீரோ - ஆளுங்கோள், முழுது - க்ருத்ஸ்நமான, புவனி- விபூதியையும், இது உபலக்ஷணம். லீலாவிபூதியையுமென்றபடி. ஆளீரோ - ஆளுங்கோள், என் த³ஶையை நீங்களவனுக்கு விண்ணப்பஞ்செய்த ஸந்தோஷம். உபயவிபூதியு முங்களதன்றோ வென்றுகருத்து. என் த³ஶையை யவனுக்கு அறிவிக்கும்படி நீங்கள் சிலருளராகப் பெற்றேனே, உங்களுக்கு உபயவிபூதியையும் தருகிறேனென்று கருத்து. தருகிறேனென்று சொல்லாதே ஆளுங்கோளென்று சொன்னது உங்கள் விபூதியை நீங்கள் ஆளுகையத்தனைபோக்கி நான் தருகையென்றொன் றுண்டோவென்றுவபாமராகியாகச் சொன்னபடி. ஆளீரோவென்கிறவிடத்தில் ஓவென்கிற அவ்யயம் அநந்யாபேக்ஷாதகம். உங்களுடைய விபூதியும் நான் பட்டது படவேணுமோ; அப்படிப்படாதபடி இவைத்தை ரக்ஷித்தருளவேணும். இவைத்துக்கு ரக்ஷகர் நீங்களே யன்றோ, எங்களுக்கதில் ப்ராப்தியுண்டோ? நாங்களு முங்களுக்கு ரக்ஷ்யராயிருக்கு மத்தனையன்றோவென்று கருத்து. வினை யாட்டியேன் - விஶ்லேஷித்து நோவுபடுகைக்கீடான பாபத்தை யுடையவளான, வினையையுடையவள் வினையாட்டி. இஸ்வபத்தால் தன்னைச் சொல்லிக்கொள்ளும்போது வினை யாட்டியேனென்று ரூபமாயிருக்கு. நான்- என்னுடைய விஶ்லேஷத்திலே "ஸா ஸ்ரீ வம்ஶாரணம்கத:" என்று தியக்கின்காலிலே யவன்போய்விடும்படியிருக்கிறவளான நான், இரந்தேன்- ப்ரார்த்தித்தேன், நீங்கள் செய்கிற மஹோபகாரத்துக்கும் உபயவிபூதியும் அநுரூபமல்லாமையாலே அகிஞ்சநனாய்க்கொண்டு உங்களை ப்ரார்த்தித்தேனென்றபடி. இரக்கிறேனென்று வர்த்தமானமாகச் சொல்லாதே பூதகாலமாகச் சொன்னது என்றால் ஶரணவரணம் பண்ணியத்து, இனி உங்களாலுபேக்ஷிக்கக் கூடாதென்று ஸூசிப்பிக்கைக்காக. யதா:— இரண்டு மூன்றுதரமிரந்தால் உங்களுக்கு ஶரணாக்ஷமாமென்றறிந்து ஒருக்கால் இரந்தொழிந்தேனென்றபடி.

மூ—மையமர்வாணெடுங்கண்மங்கைமார்முன்பென்கையிருந்து*நெய்யமரின்னடிசில்நிச்சல்பாலொடுமேவீரோ*
கையமர்சக்கரத்தென்கனிவாய்ப்பெருமானைக்கண்டு* மெய்யமர்காதல்சொல்லிக்கிளிகாள்விரைந்தோடிவந்தே॥ (௨

ஆ— வழகாலும்திருவாழியைக்கண்டஸ்த்ரீயாலேபுதுக்கணித்ததிருப்பவளத்தினழகாலும்என்னையடிமையாக்கினவனுடைய அழகைக்கண்டு நீங்கள்ஸப்ரஜைராய்ப் பின்னை அவனுக்குன்பக்கலுள்ளஸ்நேஹம் மெய்யானஸ்நேஹம் என்று அவனுக்குச்சொல்லி அவனருளிச்செய்யும் வார்த்தைகளை நான்முடிவதற்குமுன்னே விரைந்தோ

இ—துஎன்றுசொன்ன வசநாம்கனிவாயென்றுசொன்னஸப்தவிஸ்தாரத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவாழியைக்கண்டவித்யாதியால்) புதுக்கணித்தஎன்றது - நவீநதவஸௌந்தர்யமான என்றபடி. எம்பெருமானென்றதைப்பித்து இதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையித்யாதியால்) சொல்லியென்றபோதே காணுகை விஷயமாயிருக்கச்செய்தே கண்டுஎன்கிறபதம் ப்ரயோகித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அழகைக்கண்டித்யாதியால்) மெய்யமர்காதல்சொல்லியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனுக்குன்பக்கலித்யாதியால்) விரைந்துஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நான்முடிவதற்கித்யாதியால்) இவள் விரஹாவஸ்தைபொறாதே யழித்திருந்தாலல்லது தோழிமார்க்கௌஜ்ஜ்வல்யங்கூடாமையால் மெய்யமர் வாணெடுங்கணென்று தோழிகளுக்கு ஔஜ்ஜ்வல்யஞ்சொல்லுகிறவிடத்திலே ஸம்பாவிதமான வைஷம்யத்தையருளிச்

ப— கிளிகாள் - ப்ரதக்ஷ்யாபேக்ஷைதயாலே எனக்காதரணீயராய் க்ஷாவப்ரயோஜநத்தாலே அவனுக்காதரணீயராயிருக்கிற ஶுகங்காள்? கையமர் - திருக்கையிலேயமர்ந்திருக்கிற, ஸர்வ்வஸாவிஜஸத்ருஶமான திருக்கையிலே ஸநாதநமாய்க்கொண்டிருக்கிறஎன்றபடி. சக்கரத்து - ஸக்ரத்தையுடையவனுன, சக்கரத்தையுடையவன் சக்கரத்தன், சக்கரத்தென்கனிவாய் என்றுஸப்தஸவசம். என் - என்னுடைய, கனிவாய்ப்பெருமானை - பிம்பவயாநுஸாரிபை, கனி - பழம், இங்கு பிம்பபலம் விவக்ஷிதம். கண்டு - நெஞ்சாலேநினைத்துக்கொண்டு, ஸொகிக்கிற வென்னைப்போலன்றிக்கே கண்ணாலே காணப்பெற்று, மெய் - ஸத்யமான, அமர் - ஸ்திதிஷ்டிதமான, காதல் - ஸ்நேஹத்தை, தம்முடைய ஸ்நேஹத்தைப்போலே பொய்யுமாய் - வஞ்சமுமாயிராதே ஸத்யமாய் ஸ்திரமான வென்னுடைய ஸ்நேஹத்தை யென்றபடி. சொல்லி - அவனுக்கறிவித்து, விரைந்து - த்வரித்து, அவனோடேகூட வருகிறோமென்று அங்கே நில்லாதே யென்றபடி. ராவணவதானந்தரம் பெருமான் மீண்டெழுந்தருளுகிறபோது திருவடி முன்னேவந்து ஸ்ரீபரதாழ்வானை யாஶ்வஸிப்பித்தாப்போலே யென்னுடைய தாபத்தை யாற்றுகைக்காகவும் நீங்கள்வந்த ஸ்ரீக்யெனக்கு முற்பட ஸாதித்து பின்பு அவன்வந்த ஸ்ரீதியைய நுபவிக்கலாம்படி யிருக்கைக்காகவும் நீங்களவனுக்கு முன்னே வரவேணுமென்று கருத்து. ஓடிவந்து - வழியிலேமெள்ளவராதேவேகமாகவந்து, பிராட்டியைககண்டு மீண்டவநந்தரம் ஸ்ரீவாநரமுதலிகள் பெருமாள் தாபத்தை யாற்றவேணுமென்றோடிவந்தாப்போலே நீங்களு மவனருளிச்செய்தவார்த்தைகளைக்கொண்டுவந்தென்னுடைய தாபத்தையாற்றுகைக்காக வதிஶீக்ரமாக வோடிவந்தென்றபடி. இதுக்கு என்கையிருந்தென்கிறதோடே ஸம்பந்தம். மையமர் - மை அமர்ந்தவையான, அஞ்ஜநத்தாலேயலங்க்ருதமாயலங்க்ருதமானஎன்றபடி. நீங்கள் திரும்பிவந்தவன்வார்த்தைகளைச் சொல்லக்கேட்டு எனக்குண்டான ஹர்ஷத்தைக்கண்டு தோழிமார்தங்களை அஞ்ஜநாதிகளாலே யலங்கரித்துக்கொள்ளுவரென்று கருத்து. வாள் - அந்தஹர்ஷத்தாலே காந்திமதிகங்களான, வாள் - காந்தி, வாணெடுங்கணென்று ஶாகவாய்த்தவகஸமாஸ:. வாள்நெடுமென்கிறவிடத்தில் ளகாரஸ்ய ணகாரோ ணகாரவணகாதேஶ:. நெடும் - ஹர்ஷாதிஶயத்தாலேயதிவிஸ்த்ருதங்களான, கண் - கண்களை யுடையவர்களான, மங்கைமார்முன்பு - யுவதிகளுடையமுன்னே, மங்கை - யுவதி, உங்களைப்போலே ரக்ஷணீயராகவேகளான என்ஸகிகளுடையகண்முன்னேஎன்றபடி. "ஸமாந நாஸ்தூரஶோகா:" என்கிறகணக்கிலே என்றுகருத்து. என்கையிருந்து - என்னுடையகையிலேயிருந்து, வத்ஸலதமம்போலே அவன்ஸ்பர்ஶஸுகிக்கிற வென்கையைப்புங்களுக்கு வாஸஸ்தலமாக அங்கீகரித்தென்றபடி. இதுக்கு மேவீரோவென்கிறத்தோடே ஸம்பந்தம். நெய்யமர் - நெய்யமர்ந்திருக்கிற, ஸநாதநமானநெய்யோடே கலந்திருக்கிறவென்றபடி, இன் - ஸ்வாதுவான, அடிசில் - ஶால்யோதநங்களை, பாலொடு - க்ஷீரத்தோடேகூட, நிச்சல் - நித்யமும், மேவீர் - புஜிக்கக்கடவீர்கள், மேவுதல் - புஜித்தல், ஓவென்கிறவவ்யயம் ஸநாநயஶ்த்யாதகம். க்ஷீரத்தோடே ஸ்வீகரித்தென்னை யுஜ்ஜீவிப்பித்தருளவேணுமென்றபடி. இங்கு இன்னடிசு

மூ—ஓடிவந்தென்குழன்மேலொளிமாமலரூதீரோ* கூடியவண்டினங்காள்குருநாடுடையைவர்கட்கா* யாடிய

ஆ—டிவந்தெனக்குச்சொல்லி என்னையபிப்பித்துஎன்னுடையதோழிமாரெல்லாரும் உங்களுடைய வாஶ்ரயிலை க்கண்டாசைப்படும்படி என்கையிலேயிருந்து அவன்திருநாமங்களை நான்கற்பிக்கக்கற்று வாழ்மினோவென்று தன்கிளியைநோக்கிச்சொல்லுகிறாள். ॥௨॥

(ஓடிவந்து) ராஜ்யார்ஹராய் ஸௌஶ்ரீகருமான பாண்டவர்பக்கலுள்ளவாத்ஸல்யத்தாலே பெருமை த்விஜயாவகாரணமாகிதமாய் ஸாத்ம்யமாயிருந்த திருத்தேரிலேநின்று அவர்களுக்குவாராவரும்பண்ணி ப்ரதிபக்ஷராயிகளை நிரஸித்தருளினஸமயத்திலே உபமேக்ஷிபரமான த்வஜங்கள் பரிமளவராமாக சாற்றியருளப்பண்ணின திவ்யமான திருத்துழாயின்மதுவைப் பானம்பண்ணி அத்தாமதாரைகளைக் கொண்டு ஓடிவந்து அம்மதுவையும் மதீயமான திவ்யமயத்தையும்என்குழல்மேல் ஒளிமாமலர்களின்மேல்

இ—செய்கிறார் (எனக்குச்சொல்லியித்யாதியால்) மங்கைமார்முன்புஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தோழிமாரித்யாதியால்) ஆசைப்படும்படியென்கையிலே யிருந்தென்கிறவித்தாலே கீழ்ப்பாட்டிலே திருநாட்டைக்கொடுத்தாள் இப்பாட்டிலே யதிற்காட்டில் மிகவும்ஸ்லாக்யமாய் "வாணிம்ருத்வீஷவாணிந" என்றவனுக்கு மிகவுமாதரணீயமான தன்திருக்கையைக்கொடுக்கிறாளென்று ஸம்ஸ்க்ருதமிசை, த்விதீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவன்திருநாமங்களையித்யாதியால்) உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையுமெல்லாங் கண்ணனென்றிருக்கிறவளாகையாலும் "டஹீஷலாதீ" என்கிறந்யாயத்தாலே இவளுடையகிளிகளுக்கும் திருநாமங்களே ஸஹமோஹ்யங்களாகையாலும் நெய்யடிசில்பாலென்றிவள் சொல்லாது திருநாமங்களேயாகை யுசிதமென்றுகருத்து. ॥௨॥

✳ மூன்றும்பாட்டு. ✳

குருநாடுடையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ராஜ்யார்ஹராயென்று) ராஜ்யார்ஹராயென்ற படி. ஐவர்கட்காயென்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸௌஶ்ரீகருமித்யாதியா ல்) வாத்ஸல்யத்தாலேஎன்கிறதற்கு பண்ணிஎன்கிறத்தோடும் நிரஸித்தருளினவென்கிறத்தோடு மன்வயம். நெடுந்தேரென்கிறவிடத்தி லபிப்ராயமருளிச்செய்கிறார் (பெருமைக்கு த்யாதியால்) நெடுந்தேரென்கி றதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாத்ம்யமித்யாதியால்) படைநீறெழச்செற்றவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரதிபக்ஷமித்யாதியால்) நீறெழச்செற்றபிரான் சூடியஎன்கிறவிஶேஷணத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸமயத்திலித்யாதியால்) தண்டுளபமுண்டவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செ ய்கிறார் (திவ்யமயமித்யாதியால்) ஊதீரோவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அம்மதுவையுமித்யா தியால்) இவள்விரஹமேகப்யாயிருக்க ஒளிமாமலரென்னக்கூடுமோவென்ன விதக்குத் தாத்பர்யமருளிச்

ஶ— லென்றது காரணத்வஸ்ய ஶ்ரீத்ரிமதிவாதக தயாஸ்வாதக்களான திருநாமங்களை,பாலென்றது- அந்தத்திருநாமங்களை மிகவும்ரஸிக்கும்படியான ஶக்தியை, நெய்யென்றது - அந்தஶக்திஜந்யமாய் த்திருநாமோஷ்ர ரணத்துக்கு ஹேதுபூதவாதகங்களான மாநங்களை.

௩ கூடிய - பரஸ்பரம் ஸம்ஶ்லேஷித்து வர்த்திக்கிற, வண்டினங்காள் - ப்ரமரஸமூகங்காள்? குருநாடுடை - கு ருதேஶத்தை யுடையவர்களான, கூருதேஶத்தையாள ஹர்ஹரானவென்றபடி, ஐவர்கட்காய்- உ.ணுவர்க ளுக்காக, இதுக்குநீறெழச்செற்றபிரானென்கிறத்தோடே அந்வயம். ஆடிய - ஆடாநிற்கிற பாகங்களை யுடைத்தான, ஆடுகை- ஜ்வேநாஸாரமாக ஸஞ்சரிக்கை, மா - அஶ்வம். ஜ்வேநாஸாரஸஞ்சாரிதாஶ்வமாக்கியானவென்ற படி. நெடும் - "ஜஹதிஸ்ரூநெருஷிகள" என்கிறபடிபெயதிசயமான, தேர் - ரதத்வஸ்வீகம்வநம். தேரி லேயிருந்தென்றபடி. தேரிலேஸாரதியாயிருந்தென்று தாத்பர்யம். படை - ஸேனையை, ஶத்ருஸேனையை யென்றபடி. நீறெழ - நீறுயெழும்படி, த்ருணமாய்ப் பறந்துபோம்படி யென்கை. செற்ற - ஸம்ஹரித்தவனான பிரான் - உபகாரகன்; சூடிய - அந்தஸாரத்ரமாவ நயநாபர்த்யமாகச் சூடிக்கொண்டிருக்கிற, தண் - ஸௌரபமான, துளபம் - தளஸியை, உண்ட - பாநஞ்செய்தவையான, தளஸியிலிருந்தவை பானஞ்செய்தவையான வென்றபடி. தூமது - அந்த தளஸியிலிருந்த ப்ரஸஹ்யவாஸந்களான மதுக்களையுடையவையான, தூவென்றது ப்ரஸஹ்யம்வாஸமும். வாய்கள்கொண்டு - வதநங்களைக்கொண்டு, ஓடிவந்து - விரஹதாபத்தாலேவாடின

௪—மனைநெடுந்தோப்படைகேழைச்செந்நெல்லாய்* ஆடுபதன்றினைபமூண்டதூமதுவாய்கள்கொண்டே* ௱௫
தூமதுவாய்கள்கொண்டுவந்தென்முல்லைகள்மேல்தும்பிகாள்* பூமதுவுண்ணச்செல்லில்வினையேனைப்பொய்செய்தகன்ற* மாமதுவார்தண்டுழாய்முடிவானவர்கோனைக்கண்டு*

ஆ—வஹிக்கச்சென்றும்,வஹிக்கவே அறவலர்ந்து பூக்கணிக்கும் என்கிறபண்டுபோலக்கும்கெண்டையொண்கண்ணுந்துயிலும் என்று ஹ்ருதயஸம்ஶ்லேஷகரமான வண்டுகளைநோக்கிச்சொல்லுகிறாள். ௱௬
(தூமது) நீங்கள்பூமதுவுண்ணச்செல்லில் ஸாம்ஸாரிகபோயானவனுக்கு ஸம்ஶ்லேஷியென்றுருஜாவத்தைக்காட்டி என்னைபசன்ற திருநாட்டிலே திருமாமணிமண்டபத்திலே அயர்வறுமமரர்கள் ஸேவாவிஷத்திலே ஸர்வேஸ்வரராயிருந்த அவர்களாலே கைங்கர்யம்பெற்றிருந்த அவனைக்கண்டு அவன் திருக்குழலில் திருத்துழாயின் மதுவெள்ளத்தை உங்கள்தூமதுவாய்கள்கொண்டு பருகிப்பின்னை உம்மை

இ—செய்கிறார் (வஹிக்கவே உதாஹ்ருதியால்) வஹிக்கவேயென்றது - வஹிக்கவுலகுத்தவளவிலே என்றபடி. பூக்கணிக்குமென்றது - நவீநமாயென்றபடி. இது உடைக்ஷணமென்று நினைத்தருளிச்செய்கிறார் (என்றிறுமிதாஹ்ருதி) பண்டுபோலக்குமென்றது - ஸ்வரூபம்போலே பசுமைபெறுமாயென்றபடி. கெண்டையொண்கண்ணுமென்றது - உத்தம்போலேயழகியதான வென்கண்ணுமென்றபடி. துயிலுமென்றது - நித்ரைகூடுமென்றபடி. கூடியவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வாஸரஸ்த்ராஹ்ருதியால்) ௱௬

❋ நாலாம்பாட்டு. ❋

வினையேனைப்பொய்செய்துஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸம்ஶ்லேஷமென்றொருவிதாஹ்ருதியால்) வானவர்கோனையென்கிறவிடத்திலே பலிதமானவைஷ்ண்யத்தையருளிச்செய்கிறார் (திருநாட்டிலே உதாஹ்ருதியால்) வானவர்கோனையென்கிற ஸம்விஹாரத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (மாமணி உதாஹ்ருதியால்) பூமதுவுண்ணச்செல்லிலென்றுவகுத்துமாமதுவாரென்று விஶேஷணங்கொடுத்தவித்தாலே ஸ்வயமாய் தூமதுவாய்கள்கொண்டு என்கிறவிடத்திலே விவக்ஷிதமானவைஷ்ண்யத்தையருளிச்செய்கிறார் (அவன் திருக்குழலிதாஹ்ருதியால்) யாமிதுவோதக்கவாறென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உம்மையொருத்

ஸ—முடியாதபடி ஶ்ரேஷ்டமாகவந்து, என்குழல்மேல்- என்னுடையகேஶங்களின்மேலே, ஒளிமாமலர்- காந்திமத்தானவைகளாய் ஶ்ரேஷ்டங்களான புஷ்பங்களை, ஒளி - காந்தி, மாகவோதிம்மவகுஸம்ஹாரம். அவன்பக்கல் நின்றும்வந்தவுங்களுடைய ஸம்பர்க்கத்திலே பத்ராஜங்களாய் ஸ்வச்சமான புஷ்பங்களையென்றபடி. ஊதிரோ - ஊதுங்கோள், ஓவென்கிற ஶப்தம் காகுயமேதாவிகம். அவன்குழல் இருந்துழாயில்நின்று முங்கள்வாயில் கொண்டு வந்த மதுக்களைல்லா மென்குழல்மேலே புஷ்பங்களில்விரும்படி ஸங்காரம்பண்ணவேணுமென்றபடி. 'வாஸவாதயநக்ஷாந ஸம்ஸ்ப்ருஷ்டா உபவிஶ்ய ஸு ! ஸ்ப்ருஶமாது ஸம்ஸுஷ்டம் த்ருஷ்ட்வாஷிமாமகம்" என்னுமாப்போலே சொல்லுகிறாள். ௱௬

மூ என் முல்லைகள்மேல் - என்னுடைய முல்லைகளின் மேலே, நான் வளர்க்கிற முல்லைக் கொடிகளின்மேலே யிருக்கிறவென்றபடி. தும்பிகாள் - ப்ரமரவிஶேஷங்காள், தும்பி - ப்ரமரவிஶேஷம், பூமது - புஷ்பங்களின் ரஸங்களை. அந்தமுல்லைப் புஷ்பங்களில் மகரந்தங்களை யென்றபடி. உண்ணச்செல்லில் - பாஜிக்கப்போனால், பாஜிக்கவாரம்பாதானிகோளாகிலென்றபடி. இதுக்குஇதுவோதக்கவாறென்னவேண்டு மென்கிறதோடே அந்வயம். வினையேனை - அவன் சொன்னதெல்லாம்மெய்யென்றிருக்கைக்கு ஹேதுவான பாபத்தை யுடையவளான வென்னை, இதுக்ககன்ற வென்கிறத்தோடே அந்வயம். பொய் செய்து - என்னோடு ஸம்ஶ்லேஷமென்றொரு வ்யாஜத்தைச்செய்து, அகன்ற - விஶ்லேஷித்துப்போனவனான, இது வானவர்கோனுக்கு விஶேஷணம். மா - மஹத்தான, அதிஶயமான என்றபடி. மது - மகரந்தங்களை, வார் - வாராநிற்கிற, பாய்வதாகவிடாநிற்கிற என்றபடி. தண் - திருமுடி ஸம்பந்தத்தாலே பரிஶீதளமான, துழாய் - தாமோதரை, முடி - கிரீடத்திலேயுடையவனான, துழாய்முடியென்றுவ்யதிகரணபஹுவ்ரீஹி. வானவர்கோனைக்கண்டு - நித்யஸூரிநாயகனைக் கண்டு, கோன் - ஸ்வாமீ. தூமது - பரிஶுத்தமானதுபாவையுடையவையான; அநவத்யங்களாய் மதுரங்களான பேச்சுக்களை யுடையவையானவென்றபடி. இங்கேமதுஶப்தம் ரஸவாகிஶப்தோக்தியாய் பேச்சைச் சொல்லுகிறது. உங்களுடைய வாஜாயுபயமவ்னை யிங்கேயாகவழிக்குமென்று கருத்து. வாய்கள்கொண்டு - வசநங்களை

ரு—இதுவோதக்கவாறென்னவேண்டுங்கண்டீர்நுங்கட்கே* ॥ ச॥

நுங்கட்கியானுரைக்கேன்வம்மின்யான்வளர்த்தகிளிகாள்* வெங்கட்புள்ளூர்ந்துவந்துவினையேனைநெஞ்சங்

ஆ—பொருத்தியின்றிசைப்பட்டுக்கூப்பிடாநிற்க அவனிங்ஙனேயாயிருக்குமிதுவோ உம்முடைய ஸ்வபாவமே ன்றவன் ஸந்நிதியிலேசொல்லவேணுமென்று தனக்குப்பரமஸுஹ்ருத்துக்களாய் தன்முல்லைகளிலே வந்திருந் த தும்பிகளைநோக்கிச்சொல்லுகிறாள். ॥ ச॥

(நுங்கட்கு) ஸ்ரீராமாவதாரஹநுமதாதிகளைப்போலே பெரியதிருவடி திருத்தோளிலேயேறியருளிவந்தென்னோடே ஸம்ஶ்லேஷித்து விஶ்லேஷிக்கிறபோது அத்யந்தமாய் ஸ்வஸஞ்ஜீவநமான திவ்ய

இ—திவ்யத்ருஷ்டியால்) என்முல்லைகள்மேல் என்கிறவிடத்தில அபிப்ராயமானவர்த்தத்தையருளிச்செய்கிறார் (தனக்கிதத்ருஷ்டியால்) தன்முல்லைகள்மேலே வந்திருந்தவாறே தனக்குப்பரமஸுஹ்ருத்துக்களாக பாவித்துச்சொ ல்லுகிறாளென்றுகருத்து. ॥ ச॥

✳ ஐந்தாம்பாட்டு. ✳

வெங்கட்புள்ளென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீராமத்ருஷ்டியால்) ஊர்ந்துவந்தென்கிறத ற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருத்தோளிலேறத்ருஷ்டியால்) வினையேனைநெஞ்சங்கவர்ந்தவென்கிறதற் குத் தாத்பர்யஞ்சொல்லச்செய்தே நடுவேத்ருதீயபாதத்துக்குங்கூடத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (விஶ்லே ஷிக்கிறபோதித்ருஷ்டியால்) அதில்அதிஶயிதமித்ருஷ்டியாலே செங்கண்மாலு தாத்பர்யமும் அதிஶயோக்தித்ருஷ்டி

ஶ—க்கொண்டு, உவந்து, உகந்து, வாஹநங்களைக்கொண்டுகைக்கையாவது வாஹநங்களாலேயுந்த ஸ்வஹஸ்தயில் உபாசகர்களைப் பாடநம்பண்ணி ஸஞ்சாரிக்கை. நுங்கட்கு - என்னுடைய விஶ்லேஷத்திலே என் முல்லைக் கொடிகளிலே வந்திருக்கிற வுங்களுக்கு, இதுக்கு என்ன வேண்டு மென்கிறதோடே அந்வயம். இதுவோ - இப் படி நித்யஸூரிஸேவிதனுப் ஸர்வஸமர்த்தனாயிருக்கிற பதிஸ்தனமான உபாயத்வ தாரதம்யத ஞயிருந்துகொண்டுவிரஹ காவாமல்தேடிப்பானவிவளை ரக்ஷித்தும் விடுயாதிருக்கிறவிதுவோ, யாந்தக்கவாறு "நஜீவேயம்க்ஷணமபிவிநாதாமஸிதேக்ஷணாம்" என்னும்படி உபகாரக்ஷணிகனை நாம் செய்யத்தக்க உப காரம், நீரென்கிற ஸ்தாநத்திலே நாமென்றுவவாரோக்தியாகச்சொன்னபடி தக்கது - உசிதம், ஆறு - ப்ரகா ரம், தக்கவாறென்று ஸம்ஶேஷம். தக்க ஆறுஎன்கிறவிடத்திலே யாவளவ சர்வாநாமம். என்னவேண்டுங் கண்டீர் இப்படிசொல்லவேணுங்கிடீர், கண்டீரென்கிறவத்ய உபஸந்தாக்ஷா நிர்தாரணம். என்முல்லைக்கொடி களிலேபோவாநம் பண்ணப்பார்க்கிற வுங்களுக்கு அவனைக்கண்டிவ்வார்த்தை ப்ரஸங்கு சொல்லவேணும். இ து சொல்லாதபோது அவன் வாராதகையாலே என் விரஹவ்யஸநம் போகாமையால் "அவிலக்ஷாக்ஷீ ஸீதை நா" என்கிறக்ஷணத்திலேயென்னுடைய தாபத்தாலே என்முல்லைக்கொடிகள்தாங்களும் உருகாவிருக்கையாலே யவற்றிலே புங்களுக்கு வாஸஸ்தானங் கிடையாதொழியும், நீங்களிவ்வார்த்தைசொல்லவே யவன்வருகை தப்பா மையால் நானுஜ்ஜீவிதையாய் என்னுடைய முல்லைக்கொடிகளும் அதிஶீக் ரமேவ உஜ்ஜ்வ லோகாரு ஹர் ஷயுக்களாமாகையாலே அப்போதுங்களுக்கு உபாவாநம் பண்ணலாமென்று பாட்டுக்கெல்லாம் வடாஸம். * * * * ॥ ச॥

ஸ்ரீ யான்வளர்த்தகிளிகாள் - தோஷமெதுவான வென்றாலேவளர்க்கப்பட்டதான பாசுங்காள்? என்னால் வளர்க்கப்பட்ட வுங்களுக்கு ஸ்வதந்த்ரராய்விளையாடித்திரிய அவகாசமுண்டோ? அவனுடைய வரிகாமாயிரு க்கிறே ஸ்வதந்த்ரராயிருக்கலாவதென்றுகருத்து. நுங்கட்கு - என்னில்காட்டிலும் ஆர்த்தராயிருக்கிறவுங்க ளுக்கு, நீங்களிப்படியார்த்தராயிருக்க வுங்களைக்காப்பேயுகிறது யாதுமோவென்றுகருத்து, யானுரை க்கேன் - நான்சொல்லுகிறேன், வம்மின் - வாருங்கோள், இவளைநாம் ஜீவிப்பிக்குமுபாயமேதோவென்று வி ஷெப்படாநிற்கிறவுங்களுக்கு ஒருஉபாயம்நான் சொல்லக்கேட்கவாருங்கோளென்றபடி. வெங்கண் - வெவ்வியகண்களையுடைத்தான, ப்ரதிகூலர்க்குஅஸஹ்யங்களாயிருக்கிற த்ருஷ்டிபாதங்களையுடைத்தான வென்றபடி. எம்பெருமான் என்னோடுஸம்ஶ்லேஷிக்கிறபோது நடுவுள்ளப்ரதிபந்தகங்களை நிரஸிக்கும்படி யான த்ருஷ்டியையுடைத்தானவென்றபடி. வெங்கண்புள்என்கிறவிடத்திலே ஸகாரஸம்ப்ரதாயமெவலோடகாரா தேஶம். புள் - பக்ஷியை - கருடனையென்றபடி. ஊர்ந்து - ஊரப்பண்ணி, நடத்திக்கொண்டென்றபடி.

மூ— கவர்ந்த*செங்கட்கருமுகிலைச்செய்யவாய்ச்செழுங்கற்பகத்தை* யெங்குச்சென்றாகிலுங்கண்டிதுவோ தக்கவாறென்மினே* ॥௫॥

என்மின்னுநூன்மார்ப னென்கரும்பெருமா னென்கண்ணன்*

ஆ— கடாக்ஷங்களாலும் ஸஸ்மிதமான பணிமொழிகளாலும் திருமேனியிலழகாலும் ஆஸ்சர்யரூபமான வைலக்ஷண்யத்தாலு மென்னுடைய ஸர்வேந்த்ரியஸகலகரணங்களையும் அபஹரித்துக்கொண்டுபோனவனை த்திருநாட்டிலேசென்றாகிலுங்கண்டு உம்முடையதக்கவாறிதுவோவென்று சொல்லவேணுமென்று தான்வளர்த்தகிளிகளைக்குறித்துச்சொல்லுகிறாள். ॥௫॥

(என்மின்னுநூன்மார்பன்) இதுவோதக்கவாறென்றுசொல்லவேணுமென்று தான்வளர்த்தபூவைகளை அபேக்ஷிக்கப் பின்னையும்அவைபோகாதிருந்தவாறே நம்ம அபேக்ஷிதமவன் செய்தருளாவிடில்செய்வதென்னென்று போகாதிருந்தனவாகக்கொண்டு ஸ்வகீயாஸம்வேத்ய நிவ்ருத்திக்ஷணஸம்பந்திதமான நிவ்ருத்தத்தையும் தன்

இ— பாலே செய்யவாய்ஸ்வாதுர்யமும் திருமேனியினழகாலுமென்கிறவித்தாலேகருமுகில்ஸ்வாதுர்யமும் ஔதார்யத்தாலே செழுங்கற்பகஸ்வாதுர்யமும் சொல்லிற்றாய்த்து. நெஞ்சைச்சொன்னது உபலக்ஷணமென்கிறதத்தாலே ஸர்வேந்த்ரியாபஹாரம். எங்குச்சென்றாகிலுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருநாட்டிலேயாத்யாதியால்) ॥௫॥

✳ ஆறாம்பாட்டு. ✳

அவனென்னையநாதரித்துப்போயிருக்கிறானென்றுகிளேல்லாஞ்சொன்னவ ளிப்பாட்டிலே நமக்கன்றி நல்காரனென்பானேனென்ன அவதாரிப்பிக்கிறார் (இதுவோவித்யாதியால்) போகாதிருந்தனவாகக்கொண்டென்னு மளவுமவதாரிகை. கொண்டென்றது - உத்ப்ரேக்ஷித்தென்றபடி. இதுக்கு உதாஹரணத்தில் க்ரியையோடேகமும். இதுவோதக்கவாறென்று சொல்லவேணுமென்கிறவித்தாலே த்ருதீயபாததாத்பர்யஞ்சொல்லிற்றாய்த்து. த்விதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்வகீயேத்யாதியால்) அதல் ஸம்பந்திதமான

ப— ஊர்ந்துஎன்றது- அநேகாவிதநிஜவ்ருக்ஷம். வந்து-என்னோடுஸம்ஶ்லேஷிக்கைக்காகயிப்படிஸம்ப்ரமமாகவந்து, விளையேனை- விஶ்லேஷித்தாலவன் யரித்திருக்கிறப்போலே யிருக்கவொட்டாதவாபத்தைப்பண்ணினவென்னை, நெஞ்சங்கவர்ந்த - உதஸ்ஸைஸம்ஶ்லேஷித்தவனை, உதஸ்ஸையபஹரித்தவனைவென்றபடி. என்னை உதஸ்ஸை யபஹரித்தவனென்று விசேஷிக்கவும் ஸ்வஸ்வாமிஸம்பந்தவவனும். என்னுடையஉதஸ்ஸையபஹரித்தவனைவென்றபடி. செங்கண் - என்பக்கல்வாத்ஸல்யத்தாலே சிவந்தகண்களையுடையவனை, செங்கட்கருமுகிலைஎன்கிறவிடத்தில் ணகாரஸ்யககாரேவணா டகாரஸ்சஷஶ:, கருமுகிலை - காளமேகநிறனை, செய்யவாய் - என்னைவிஶ்லேஷிக்கிறஸமயத்திலே ஸாந்த்வந்தம்சொல்லப்புக்கு ஸ்ரீதம்பண்ணும்போது மிகவும் சிவந்தவதரத்தையுடையவனை, செழுங்கற்பகத்தை - அழகியதாகநிற்கிற கல்பகத்தை, செழுமென்றது அழகியது. லோகத்தில் கல்பகம்போலன்றிக்கே ஸ்வாத்மாவைக்கொடுக்கிற விலக்ஷணகல்பகமாயிருக்கிறவனை யென்றபடி. எங்குச்சென்றாகிலுங்கண்டு - எங்கேபோயாகிலுங்கண்டு, திருநாட்டிலேபோயாகிலுங்கண்டென்றபடி. இதுவோதக்கவாறு - இப்படியவள்நெஞ்சையு மபஹரித்துக்கொண்டு உம்முடையநெஞ்சை அவன் பக்கலிலே ஸம்ஶ்லேஷித்தும்வையாதேநிரப்போருகையோவுமக்குத்தக்கப்ரகாரம், என்மினே-என்னுங்கோள், இப்படிசொல்லுங்கோளென்றபடி. ॥௫॥

ஶீ தீவினையேன்வளர்த்த - க்ரூரமான பாபத்தையுடையவளான நான்வளர்த்த, உங்களுடைய கார்யம் நான் செய்யவேண்டியிருக்க வுங்களைக்கொண்டென்காரியஞ் செய்துகொள்ளும்படியான பாபத்தைப்பண்ணினவளான என்னாலே வளர்க்கப்பட்டவையான வென்றபடி. சிறு- உபேக்ஷைகளான, பூவைகளே - ஶாரிகைகாள்? என் - என்னுடையவனை, மின்னுநூல்மார்பை யெனக்கு போக்யமாக்கினவனை வென்றபடி. மின்னுநூல் மின்னாநிற்கிறநூலையுடையத்தான, யஜ்ஞோபவீததாரியானவென்றபடி. மார்பன்- வக்ஷஸ்ஸையுடையவனை, என்- என்னுடையவனை, தன்னுடையகறுத்ததிருமேனியைஎனக்குபோக்யமாக்கினவனை வென்றபடி. கரும்பெருமான் - நீலவர்ணனானஸர்வேஶ்வரன், உத்க்ருஷ்டமான திருமேனியி னழகைக்காட்டி யென்னையடிமை கொண்டவனைவென்றபடி. என்கண்ணன் - என்னுடைய க்ருஷ்ணன், தன்ஸ்வரூபத்தை

மூ— தன்மன்னுநீள்கழன்மேற்றண்டுழாய்நமக்கன்றிநல்கான்* கன்மின்களென்றும்மையான்கற்பியாவைத்த மாற்றஞ்சொல்லிச்* சென்மின்கடீவினையேன் வளர்த்தசிறுபூவைகளே* ॥கூ॥
பூவைகள்போனிறத்தன்புண்டரீகங்கள்போலுங்கண்ணன்* யாவையும்யாவருமாய்நின்றமாயனென்னாழிப்பிரான்* மாவைவல்வாய்பிளந்தமதுசூதற்கென்மாற்றஞ்சொல்லிப்* பாவைகள்டீர்க்கிற்றீரேவிளையாட்டொ

ஆ— னையும் எனக்கே ஸௌஹார்த்தமாகப் பரிக்ரஹித்துக்கொண்டிருக்கிற என்கண்ணன் தன்மன்னுநீள்கழல்மேல் தண்டுழாய்நமக்கன்றிநல்கான் ஆதலால்நீங்கடெனச்செல்லுங்கோளென்கிறாள். ॥கூ॥

(பூவைகள்) நான்வளர்த்தசிறுபூவைகளினுடைய நிறம்போலேயிருக்கிற திருநிறத்தையும் புண்டரீகங்கள்போன்றிருந்தகண்களையும் அக்கண்களாலேஸூசிதமான ஸகலசேதநாசேதநவஸ்துக்களினுடைய நியமநஸ்வரூபத்தையும் என்னைத்தோற்பித்தடிமையாக்கின திருவாழியையேந்தின அழகையும் திருக்கையில்தழும்பாலே ஸூசிதமான ஆஸ்ரிதவிரோதிநிரஸந திவ்யசேஷ்டிதங்களையுமுடையரா

இ— யென்னுமளவாலேமின்னுநூல்மார்பனென்கிறதற்குத்தாத்பர்யஞ்சொல்லிற்றுப்த்து திவ்யாயுதத்தையென்கி றவித்தாலே கரும்பெருமானென்கிறதற்குத் தாத்பர்யஞ்சொல்லிற்று. தன்னையுமென்கிறவித்தாலேகண்ணனென் கிறதற்குத் தாத்பர்யஞ்சொல்லித்தாய்த்து. எனக்கேஉதாஹ்ருதியாலே என்னென்கிறவசநங்களுக்குந் தாத்பர்யஞ் சொல்லித்து. சென்மின்களென்கிறதற்குந் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆதலாலித்யாதியால்) ॥கூ॥

✳ ஏழாம்பாட்டு. ✳

புண்டரீகங்கள்போலுங் கண்ணன்யாவையும்யாவருமாய்நின்றமாயனென்கிற ஸகலவ்யாபாரத்துக்குந் தாத்பர்யமருளிச்செய்கிறார் (கண்களாலேஸூசிதமானவென்று) யாவையுமித்யாதிக்குந் தாத்பர்யமருளிச் செய்கிறார் (வேதைகேத்யாதியால்) என்னாழிப்பிரானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னைத் தோற்பித்தித்யாதியால்) இத்தோடு ஆஸ்ரிதவாத்ஸல்யவ்யாபாரத்துக்குந் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருக்கையிலித்யாதியால்) ஆஸ்ரிதவாத்ஸல்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதவிரோதீத்யாதியால்)

ஈ—யெனக்குஸௌஹார்த்தமாக்கினக்ருஷ்ணனென்றபடி. தன் - தன்னுடைய, நீள்கழல்மேல் - த்ரிவிக்ரமத்தில் விட்டளவும்நீண்டுவருவதானதிருவடிகளின்மேலே, மன்னு - மன்னியிருக்கிற, ஸ்திரமாயிருக்கிற நித்யஸம்பந்தப் பட்டிருக்கிறவென்றபடி. தண் - ஸௌஸீல்யமான, துழாய் - திருத்துழாயை, நமக்கன்றி - நமக்கொழிய, நல்கா ன் - உபகரியான், நமக்கொழிய வேறொருவர்க்கும்தர கொடானென்றபடி. கன்மின்களென்று - கற்பியுங் கோளென்று, ஸுந்தராய் விளையாடித்திரியாதே யித்தையப்யஸியுங்கோளென்று நியமித்திகென்றபடி. கற் கை - அப்யஸிக்கை, உம்மை - ஸுந்தரான உங்களை, யான் - உங்களைக்கொண்டு கார்யங்கொள்ளவிருக்கிற நா ன், கற்பியாவைத்த - கற்பித்து வைத்த; அப்யஸிப்பித்துவைத்தவென்றபடி. மாற்றம் - வார்த்தையை, இதுவோ தக்கவாறென்கிறவார்த்தையையென்றபடி. சொல்லி - இத்தை வழிக்குப் பாதேயமாகச் சொல்லிக்கொண்டு சென்மின்கள் - செல்லுங்கோள், அவன் ஸமீபித்துப்போங்கோளென்றபடி. அங்கேபோனபின்பு சொல்லுகி றேனென்றிராதேசொல்லிக்கொண்டே போங்கோளென்றபடி. ✳ ✳ ॥கூ॥

இ—ரித்த்யாதியால்) வெவ்வுயிர்த்துயிர்த்துருகுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னுடைய ஸந்தாபஜநிதேத்யாதியால்) முன்செய்தவினையேமுகப்பட்டாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஈத்ருஶமானவித்யாதியால்) முகில்வண்ணாதகுவதோவென்றுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரேத்யாதியால்) முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிர்ஹேதுகமித்யாதியால்) ||உ||

✳ மூன்றாம்பாட்டு. ✳

வட்கிலளிறையுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னைக்காணவித்யாதியால்) ஸ்த்ரீலக்ஷணங்களையுமென்றது - ஸ்த்ரீத்வத்துக்கஸாதாரணமான லஜ்ஜாதிகளையுமென்றபடி. மணிவண்ணாவென்னுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரதிஶயேத்யாதியால்) வானமேநோக்குமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஶ்ரீகஜேந்த்ரேத்யாதியால்) மையாக்குமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அங்குக்காணாதித்யாதியால்) சக்ரஹஸ்த என்கிறத்துக்கு போக்கியருளாயென்னுமென்கிறவிடத்தில் என்னுமென்கிறக்ரியையோடே அந்வயம். உட்குடையசுரருயிரெல்லாமுண்டவொருவனேயென்னுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சக்ரேத்யாதி போக்கியருளாயென்னுமித்யந்தம்) கட்கிலீயுன்னைக்காணுமாறருளாயென்ற ஸந்நிவ்யாஹாரத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ராக்ருதமானவித்யாதியால்) மணிவண்ணாவென்று ஸௌந்தர்யத்தை யநுஸந்தித்தவள் காகுத்தாகண்ணனேயென்று பின்னையும்பின்னையுமந்தவஸர

ஸ—கிலே தனக்கொரு ஸாக்ஷாத்காரம் கிட்டாமையாயிருக்கிறதாக நினைத்து ஸர்வகாருணிகனையுங்கூட ப்ரதிபந்தகமாக்கிறவுன்னுடைய க்ருபையத்தைநாளொருக்கால்கண்ணாலே காணவாராயென்று தன்னுற்றாரையாலற்றுகிறாளென்றுகருத்து. முகில்வண்ணா - தேவஸ்வபாவனே, வண்ணம் - ஸ்வபாவம், நிருபாதிக ஸர்வேஶ்வரனே என்றபடி. தகுவதோ என்னும் - உசிதமோவென்றுசொல்லாநிற்கிறாள், தகுவது - உசிதம், நீயிப்படிமுகங்காட்டாதிருக்கிற விதுவா ஸர்வேஶ்வரனான உனக்கு உசிதமோ என்னாநின்றாளென்றபடி. முன் - பூர்வகாலத்திலே பூதங்களெல்லாம் அசித்விஶேஷிதங்களாய் தங்களுக்கொரு ஐஹிகங்களை யபேக்ஷிக்கவும் மாட்டாதே கிடக்கிற தஶையிலேயென்றபடி. இவ்வுலகம் இந்தலோகத்தை, செய்து - ஸ்ருஷ்டித்து, உண்டு - ப்ரளயகாலத்திலே வயிற்றிலே வைத்து ரக்ஷித்து, உமிழ்ந்து - புநஸ்ஸ்ருஷ்டித்து, அளந்தாய் - பிறர்கொண்டுபோகாதபடி த்ரிவிக்ரமனாய் அளந்து கொண்டவனே, நீ இத்தனை ஸர்வேஶ்வரனன்றோ வென்றபடி. இவட்கு - உண்மையொழியமாட்டாதவளான இவளுக்கு, முடிகின்றது - பர்யவஸிக்கப்புகுகிறது, என்கொலோ - என்னவாயிருக்கிறதோ, இவளுடைய ஸத்தையே ஹநிக்கப்புகுகிறதோ உன்னுடைய ஸ்வபாவமே ஹநிக்கப்புகுகிறதோவென்றுகருத்து. ||உ||

மூ—வட்கிலளிறையுமணிவண்ணாவென்னும்வானமேநோக்குமையாக்கும்* உட்குடையசுரருயிரெல்லாமுண்ட
வொருவனேயென்னுமுள்ளுருகும்* கட்கிலீயுன்னைக்காணுமாறருளாய்காகுத்தாகண்ணனேயென்னும்*
திட்கொடிமதிள்சூழ்திருவரங்கத்தாயிவள்திறத்தென்செய்திட்டாயே* ||௬||

ஆ—னென்றுனக்கொரு நிர்ப்பந்தமுண்டாகில்நானுன்னை நிர்ப்பந்தியுமுன்னைக்காணும்படி க்ருபைபண்ணுவென்னும் அங்ஙனேசெய்யக்கடவதோவென்னில்? உன்னைக்காணவேணுமென்றாசைப்பட்டார் காண்கைக்காகவன்றோ வஸுதேவர்திருமகனும் ஸ்ரீதசரதர்திருமகனும் பிறந்தருளிற்றென்றுசொல்லும். இவளோடே ஸம்ஸ்லேஷிக்கைக்காக த்வஜபதாகாலங்க்ருதமான ப்ராகாரங்களாலேபரிவ்ருதமான கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற நீ இவள்திறத்தென்செய்ய நினைத்தருளினாயென்கிறார். ||௬||

இ—ஸஹ்ருதயோக்தகவசநங்களைச்சொல்லுவானேனென்ன அவற்றுக்குத்தாத்பர்யஞ்சொல்லுகைக்காக வ்யதிரேகிப்பிக்கிறார் (அங்ஙனேசெய்யவித்யாதியால்) அவற்றுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னைக்காணவேணுமித்யாதியால்) திட்கொடிமதிள்சூழென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவளோடேஇத்யாதியால்) ||௬||

ஈ—இறையும் - லேசத்தும், வட்கு - லஜ்ஜை, இலள் - இல்லாதவளானாள், வட்குதல் - வெட்குதலாய், லஜ்ஜையைச் சொல்லுகிறது. லஜ்ஜையில்லாமையை நீ கண்டபடி எங்ஙனேயென்ன? சொல்லுகிறாள். மணிவண்ணாவென்னும் - நீலஸ்வபாவனேயென்று சொல்லுகிறாள், வண்ணம் - ஸ்வபாவம், மணிபோலே முன்தானையிலே முடிந்து ஆளலாம்படி ஸுலபனாயிருக்குமவனேயென்று சொல்லாநிற்கிறாளென்றபடி. பெற்றதாய்முன்பென்று ஸங்கோசப்படாதே யிப்படி தன் நாயகனைச் சொல்லுகிறபோதே இவள் லஜ்ஜையில்லாதவளானாளென்றறிந்தேனென்று கருத்து. வானமே நோக்கும் - ஆகாசத்தையேபாராநிற்கும், மணிவண்ணாவென்று தான் கூப்பிடுகிற த்வநியைக்கேட்டவன் வருகைதப்பாதென்றுபார்த்து நீ பெரிய திருவடிமேலேயேறியெழுந்தருளும் ப்ரதேசமான ஆகாசத்தைப் பாராநிற்கிறாளென்றபடி. வானமே என்கிற அவதாரணத்தாலே நிர்நிமேஷமாகப் பார்க்கிறாளென்று தோற்றுகிறது. மையாக்கும் - அப்படி வரக்காணாமையாலே மோஹியாநிற்கும், மையாக்கை - மோஹிக்கை, உட்கு - ஸாமர்த்த்யத்தை, உடை - உடையவர்களான, இந்த்ராதிகளை ஜயிக்கும்படி ப்ரபலரானவென்றபடி, உட்கென்று ஸாமர்த்த்யத்துக்குப்பேர். அசுரர் - அஸுரர்களுடைய, உயிரெல்லாம் - ப்ராணங்களெல்லாவற்றையும், உண்ட - த்வம்ஸித்தவனான, ஒருவனே என்னும் - ஏகவீரனேயென்று சொல்லாநிற்கிறாள், என்னுடைய ப்ரதிபந்தகங்களை நிரஸிக்கைக்குனக்கு ஸாமர்த்த்யமில்லையோவென்று கருத்தாலே இப்படி சொல்லுகிறாளென்று தாத்பர்யம். உள்ளுருகும் - பின்னையும், நீவாராமையாலே நெஞ்சுநீராயுருகாநிற்கிறாள், கட்கு - கண்ணுக்கு, இலீ - இல்லாதவனே, ப்ராக்ருதசக்ஷுஸ்ஸுக்கு கோசரனல்லாதவனே என்றபடி. உன்னை - அப்படிப்பட்டவனான வுன்னை, காணுமாறு - காணும் ப்ரகாரம், நான் என்கண்ணாலே காணும்படியென்கை. அருளாய் - க்ருபைபண்ணவேணும், ப்ராக்ருதசக்ஷுஸ்ஸுக்கு கோசரனல்லனென்கிற நிபந்தத்தை எனக்கொருத்திக்குமாத்ரமந்யதாகரித்தாலாகாதோ என்று வடிதாத்பர்யம். நாமந்த நிபந்தத்தையாரேனுமொருவர்க்கந்யதா கரித்ததுண்டோவென்ன? சொல்லுகிறாள். காகுத்தா - காகுத்ஸ்த, வஸுதேவர்திருமகனாயவதரித்து "த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" மென்றும் "ரூபஸம்ஹநநம் லக்ஷ்மீம் ஸௌகுமார்யம் ஸுவேஷதாம் | தத்ருசுர்விஸ்மிதாகாரா ராமஸ்ய வநவாஸிந:" என்றும் நாட்டோடும் காட்டோடும் வாசியற எல்லார்க்கும் முன்னை நீ காட்டினாயில்லையோ வென்றுகருத்து. அதொருக்கால்செய்ததத்தனையன்றோவென்ன சொல்லுகிறாள் கண்ணனே? - க்ருஷ்ணனே? "தாஸாமாவிரபூச்சௌரி:" என்கிறபடியே இடைச்சிகளுக்குங்கூட உன்னை நீ காட்டினாயில்லையோ என்றுகருத்து. என்னும் - இப்படி சொல்லாநிற்கும், திண் - த்ருடமான, மஹாபரிணாஹ வஜ்ரமணிப்ரோதமாக விரசிதமாகையாலே த்ருடதரமான என்றபடி. இது ப்ராகாரத்துக்கு விசேஷணம். திண்கொடி யென்கிற விடத்தில் ணகாரஸ்ய ககாரேபரே டகாராதேச:. கொடி - மதிள் - த்வஜாலங்க்ருதமான ப்ராகாரத்தாலே, கொடி - த்வஜம், ஶாகபார்த்திவவத் ஸமாஸ:. சூழ் - பரிவ்ருதமான, திருவரங்கத்தாய் - ஸ்ரீரங்கத்திலே இருக்கிறவனே, அவதாரகாலத்திலே யுதவாதாரிழக்கவொண்ணாதென்று பார்த்து ஸ்ரீரங்கத்திலே நித்யஸந்நிஹிதனாயிருக்கிறவனே என்றபடி. இவள்திறத்து - இவள்விஷயத்திலே, என்செய்திட்டாய் - என்னசெய்தாய், இடு என்று ஸாமாந்ய ப்ரயோக:. என்செய்யநினைத்தா

மூ— இட்டகாலிட்டகையளாயிருக்குமெழுந்துலாய்மயங்குங்கைகூப்பும்* கட்டமேகாதலென்றுமூர்ச்சிக்குங்
கடல்வண்ணாகடியைகாணென்னும்* வட்டவாய்நேமிவலங்கையாவென்னும் வந்திடாயென்றென்றேமய

ஆ— (இட்டகால்) இவள்வாராமையிலே சமான ஸாவயவாக்ருதிகளையுடையவளாயிருக்கும். இப்படி வெளிக்க க்ஷமையின்றியே யிருக்கச்செய்தே யவஸாநஸமயத்திலே தீபம்போலே ஸஹஸா எழுந்துலாவி மயங்கிக்கிடக்கும். பின்னையும் ப்ரவேசிக்கையத் தன்னுடைய ஸ்நேஹாதிசயத்தாலே உன்னைத்தொழாநிற்கும். ஸ்நேஹமானதித்தனைபொல்லாதாகாதே; ஸ்நேஹஸ்ருங்கிகளல்லாதார் என்னஸாஹஸம்பண்ணினரோவென்று சொல்லிமோஹிக்கும். ஆநவயிகாதிசயபாவஸம்ஸ்வாப ஆஸ்ரயணமாணமனே யென்றுன்னைச்சொல்லுகிற விதெல்லாம்போய் நீ சாலநிஷ்டுரன்காணென்றுசொல்லும். வலத்திருக்கையிலே திருவாழியை யேந்திக்கொண்டிருக்கிற வழகைநான்காணும்படி வந்திடாயென்று சொல்லவுபக்ரமிக்கும். முடியச்சொல்ல க்ஷமையல்லாமை வட்டவாய்நேமிவலங்கையாவென்னும், பின்னையும் நெடும்போதுங்கூட வந்திடாயென்னும், வாராமையாலே பின்னையும் வந்திடாயென்னும், வாராமையாலே மயங்கும். இங்ஙனேசொல்லாநிற்கும்.

✳ நாலாம்பாட்டு. ✳

இ— இட்டகாலிட்டகையளாயிருக்குமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவள்வாராமையிலே நிராஸ்யயால்) எழுந்துலாய்மயங்குமென்கிறவிடத்தி லபிப்ராயமருளிச்செய்கிறார் (இப்படிவெளிக்க க்ஷமையிராதியால்) கட்டமேகாதலென்று மூர்ச்சிக்குமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்நேஹமானதிராதியால்) கடல்வண்ணாகடியைகாணென்கிற ஸம்போதனத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆநவயிகாதிசயத்ராதிசொல்லுமென்னுமளவாலே) சாலவென்றது - மிகவுமென்றபடி. க்ஷமையல்லாமை யென்றது - க்ஷமையல்லாமையாலே என்றபடி. நெடும்போதுங்கூடஎன்றது - தீவ்ரகாலமானபின்பு என்றபடி. தீவ்ரகாலமவன் வாராதிருந்தவாறே என்கை. என்றென்றேஎன்கிறவீப்ஸைக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வாராமையாலேபின்னையுமிராதியால்), மயங்குமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வாராமையாலேமயங்குமென்று) இவ்வளவுக்கும் பட தாத்பர்யமருளிச்செய்கிறார் (இங்ஙனேசொல்லாநிற்குமென்று) இப்படியே மோஹமும்தெளிவுமாய் நடவாநிற்குமென்றபடி. சிட்டனேஎன்கிறதற்குத் தாத்பர்ய

ஸ— என்றபடி. உபேக்ஷிக்கக்கடவதோ ஆநாஸ்ரயிக்கக்கடவதோ வென்கை. 1ஈ

ஈடு இட்டகாலிட்ட கையளாயிருக்கும்- இடப்பட்டகால்களை யுடையவளாய் இடப்பட்ட கைகளை யுடையவளாயிருக்கிறாள், தான் வெளிக்க க்ஷமையல்லாமையாலே ‘ஸர்வேந்த்ரியஸர்வாணிவாஸநார்த்திவியாம்’ என்கிறபடியே ஸவிகளிட்டு வைத்தபடியே நிஸ்சலமாய்க்கிடக்கிற காவயவங்களை யுடையவளாய் யிருக்கிறாளென்றபடி. எழுந்து. கிளம்பி, அணைப்புகுகிற விளக்குப்போலே ஸஹஸாத்தாகஎழுந்திருந்து என்றபடி. உலா- உலாவி, ஸஞ்சரித்தென்றபடி. மயங்கும் - மோஹித்துக்கிடக்கும், கைகூப்பும் - மோஹந்தெளிந்தவாறே வ்யஸநம் பொறுக்கமாட்டாதே யாஞ்ஜலிபண்ணாநிற்கும், காதல் - ஸ்நேஹமானது, கட்டமென்று - கஷ்டமென்றுசொல்லி, வைஷம்யஜ்ஞானத்துக்கு நிதானமேபொழிய அத்தாலொரு ஸாபமில்லையென்று அத்தை நிந்தித்தென்றபடி. மூர்ச்சிக்கும்- மோஹியாநிற்கும்; கடல்வண்ணா- ஸமுத்ரஸ்வபாவனே, கம்பீரஹ்ருதயனே என்றபடி. ஆநவயிகாதிசய ஸம்வேத்யஆஸ்ரயணமாணமானனே என்கை. கடியைகாணென்னும் – நீகடியன்காணென்று சொல்லாநிற்கும், கடியன் - க்ரூரன், இங்கு நிஷ்டுரனைச் சொல்லுகிறது. கடல்வண்ணாஎன்றது ஸாபிப்ராயஸம்போதநம், உன்னைஸம்வேத்யமானனாகஅநுஸந்தித்தோம், நீ நிஷ்டுரன்காணென்று பட்டாபிப்ராயம். கடியன் ஸ்வஸம் ஆஸ்ரிதனைச் சொல்லும்போதுகடியையென்று ஸம்போதனமாயிருக்கும், வட்டவாய்-வட்டமானவாயையுடைத்தான, ஸுஸ்ரீகரக்ஷணார்த்தமாகச்சுற்றிலும் வாயையுடைத்தான என்றபடி. நேமி - சக்ரத்தை யுடைத்தான, வலங்கையாஎன்னும் - தக்ஷிணஹஸ்தத்தையுடையவனேஎன்றுசொல்லாநிற்கும், திருவாழியையேந்தினவழகோடேவரவேணுமென்றுசொல்லவுபக்ரமித்துமுடியச் சொல்லமாட்டாமையாலேயத்யாக்ஷேபம் பண்ணாநிற்குமென்றபடி. வந்திடாயென்றென்றே - நீவரவேணுமென்றென்றே பலகாலுஞ்சொல்லி, இடாயென்று ஸாபேக்ஷநாஸ்ரயோமம். ஸம்ஸ்லேஷாபேக்ஷையிலே விஸ்ரமித்த வசனாம்குறைவாசெயுஞ்சொல்லின்றபடி. மயங்கும் – பின்னையும்நீ வாராமையாலே மோஹியாநிற்கும், சிட்டனே - ஸிஷ்டனே, ஸதாசாரமுடையவனே

மூ— ங்குஞ்* சிட்டனே செழுநீர்த்திருவரங்கத்தாய் இவள் திறத்தென் சிந்தித்தாயே* ॥சா॥
சிந்திக்குந் திசைக்குந் தேறுங் கைகூப்புந் திருவரங்கத்துள்ளாயென்னும்* வந்திக்குமாங்கே மழைக்கண்ணீர்ம
ல்க வந்திடாயென்றென்றே மயங்கும்* அந்திப்போதவுணனுடலிடந்தானே அலைகடல் கடைந்தவாரமுதே*

ஆ— செழுநீர்த்திருவரங்கத்தா யிதுவோ வுன்னுடைய ஸீலத்வம், இவள் திறத்தென் செய்ய நினைத்தருளினாய் என்கிறாள். ॥சா॥

(சிந்திக்கும்) உன்னழகையு முன்னோடே பண்டு ஸம்ஶ்லேஷித்தபடியையும் நினைக்கும். நினையா சோகிக்கும் நெடும்போதுங்கூட வ்யஸனவிஜ்ஞையாம்; தன்னுடைய ஸம்ஶ்லேஷத்துக்காக உன்னைத்தொழாநிற்கும், தன்னுடைய வ்யஸநம் பொறுக்கமாட்டாமையாலே திருவரங்கத்துள்ளாயென்னும், ஸஜாதீயையாயிருந்து வைத்தே காயஹீநனைப்போலே திருவடிகளிலே விழுந்துகிடக்கும், ஆங்ஙனே விழுந்துகிடந்து தன்னுடைய அழகிய கண்கள் நீர்மல்க வந்திடாயென்றென்றே மயங்காநிற்கும். உன் திருவடிகளை யொருகால்கண்டு ஸம்ஶ்லேஷிக்கவேணுமென்னுமாசையாலே தன்னை யழித்துக்கொண்டிருக்கிற விப்பெண்பிள்ளையை இப்பாடு

இ— மருளிச்செய்கிறார் (இதுவோ இத்யாதியால்) ॥சா॥

※ ஐந்தாம்பாட்டு. ※

சிந்திக்குமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னழகையுமித்யாதியால்) திசைக்குமென்கிற தற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நினையா சோகிக்குமென்று) நினையா என்றது - நினைத்தாலேயென்றபடி. தேறுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நெடுமித்யாதியால்) தன்னுடையவித்யாதி வாக்யத்வயம் வ்யாக்யாதம். வந்திக்குமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸஜாதீயையாமித்யாதியால்) ஆங்கேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆங்ஙனே விழுந்துகிடந்து என்று) த்விதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்திருவடிகளையித்யாதியால்) த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்

ஶ— என்றபடி. இது மஹாலக்ஷ்மிக்கமான ஸம்போகம் - உம்முடைய ஶீலமழகியதாயிருந்தது - ஸவமெய்கள் குடிகெடுக்கைக்கு அழகியதாக க்ருதஸம்ஸ்வ்யாநராயிருந்தீர் - ஸ்ஹேஹதுகளைப் பண்ணிப் பூணுநூலை வெளுக்க யழித்துக்கொண்டு கையிலே பவித்ரத்தையுமிட்டு ந்யாயஞ் சொல்லிக்கொண்டு திரிவாரைப்போலேயிருந்தது உம்முடைய ஶீலமென்றுகருத்து. செழு - ரமணீயமான, செழு ஶப்தம் ரமணீயவாசி. நீர் - ஜலங்களை யுடைத்தான, திருவரங்கத்தாய் - ஸ்ரீரங்கத்திலே யிருக்கிறவனே, ஸௌசீல்யத்தை பண்ணிக்கொண்டு நீர்க்கரையிலே கிடக்கிறவனே என்றபடி. தண்ணீர்ப்பந்தலிலேயொரு கொதிக்கிறப்போலேயா யிருக்கிறது நீ யிவ்வூரில் வஸிக்கிறது என்றுகருத்து. இவள் திறத்து - உம்முடைய விஶ்லேஷதுகத்திலே சோகிக்கும் ஸ்வபாவையான இவள் விஷயத்திலே, என் சிந்தித்தாய் - என்ன சிந்தித்தாய், இவனை சோகிப்பிக்கவே நினைத்திருக்கிறாயோ? தேறப்பண்ணவைக்க நினைத்திருக்கிறாயோ? என்றபடி. இப்படி இப்பாட்டிலே யிவனை மஹாலக்ஷ்மியாலே ஆஸ்ரிதர் ஸ்வஸநாதராய்த்தன்னை மஹத்தால் "கருணாத்வ [illegible] நயதீபாதி வஜ்ரபாலு । ஸாதுவர்தீவ [illegible] வாயவந்த [illegible]" என்கிறபடியே யவர்களைத்தான் ரஞ்ஜிப்பித்து அந்த மஹத்துவத்தை ரக்ஷிப்பிக்குமென்கிற மஹார்த்தம் இத்திருவாய்மொழிக்கு வ்யங்க்யமென்று ஸூசிதமாய்த்து. ॥சா॥

ஶ அந்திப்போது - அஸுரர்களுக்கு பலம் வர்த்திக்கிற ஸந்த்யாகாலத்திலே, அவுணனுடல் - ஹிரண்யனுடைய தேஹத்தை, அவுணன் - ஹிரண்யன், இடந்தானே - ப்ரஹ்லாதாழ்வானுக்காகப்பிளந்தவனே, இடக்குகை - நகத்தாலே பிளக்குகை, "உதஸ்வஸ்வ ஸோமஸஸ்வ" மென்று தெளிவோடே இருப்பார்க்கோ நீ யுதவலாவது, சோகத்தாலே சோகித்துக்கிடப்பார்க்குதவலாகாதோ. அந்த ஸம்யமென்றொரு காலநியமம் பார்த்தாப்போலே இவளை ரக்ஷிக்கைக்கு அப்படியே ஒரு காலநியமம் பார்த்தான்பார்க்கவேணுமோ வென்று கருத்து. ப்ரஹ்லாதனென்பா னொருவனுக்கொருகாலுதவினோ மென்றால் அப்படி யெல்லாருக்கும் நாமுதவப்போமோ வென்னச் சொல்லுகிறாள். அலைகடல் - அலையாநிற்கிற ஸமுத்ரத்தை. தேவாஸுரர்களுக்குங்கூட நினைத்தபடி காயக்லேஶங்கொள்ள வொண்ணாதபடி ரூஹாதிஸங்காதமாயிருக்கிற க்ஷீரஸமுத்ரத்தை என்றபடி. கடைந்த - அவர்களுக்காகவே நம்பண்ணிக்கொடுத்தவனே, ஆரமுதே - அபிவ்ருத்தி சோக்யமே, நிரதிஶயபோக்யமானதனே

மூ— சந்தித்துன்சரணஞ்சார்வதேவலித்தகையலைமையல்செய்தானே* ॥ரு॥
மையல்செய்தென்னைமனங்கவர்ந்தானேயென்னுமாமாயனேயென்னுஞ்* செய்யவாய்மணியேயென்னுந்த

ஆ— படுத்தவேணுமோ உன்னுடையநிரவதிகமான வாஸ்ரிதவாத்ஸல்யமெல்லாம் எங்ஙனேபோயிற்றென்கிறாள். (மையல்செய்து) அதிக்ஷுத்ரமான காகத்தின்பக்கலிலே ப்ரஹ்மாஸ்த்ரத்தைவிட்டருளின உன்னுடைய ஸர்வவஸீகரணையான ப்ராட்டியினுடைய ஸமாரணத்தாலே என்னுடையநெஞ்சை அபஹரித்தவனேயென்னும், வக்ஷ்ய)

இ— (உன்னுடையநிரவதிகமித்யாதியால்) ॥ரு॥

✳ ஆறும்பாட்டு. ✳

மையல்செய்துஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அதிக்ஷுத்ரேத்யாதியால்) பெரியபெருமாளுக்கு ராமாவதாரம் ஸஹஜதமாகையால் மையல்செய்தென்றது ராமாவதாரத்தில் ப்ராட்டிவைபவத்தை விவக்ஷிக்கிறதுஎன்கையே யுக்தமென்றுகருத்து. என்னைமனங்கவர்ந்தானேஎன்னுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுடையவித்யாதியால்) மாமாயனேஎன்னுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்

ஸ— என்றபடி. உன்னைக்கொண்டொருப்ரயோஜநாந்தரங்கொள்ளுவார்க்கோ நீ புதவலாவது. உன்னையேப்ரயோஜநமாகப்பற்றினார்க்குதவலாகாதோவென்றுகருத்து. சந்தித்து- ஸமயித்து, உன்னைக்கிட்டி என்றபடி. ஜ்ஞாநஸாதநாதிகளன்றிக்கே பக்ஷபாதிகாரணங்களாலும் அநுபவிக்கும்படி உன்னையடைந்து என்றபடி. உன்சரணம் உன்னுடைய திருவடிகளை, சார்வதே- சார்வதாகவே, உன்திருவடிகளோடு ஸாஹ்யஸம்ஸ்லேஷம் பெறுகைக்காகவே என்றபடி. வலித்த- வலித்தவளான, வலிக்கை- கரைந்துபோகாதே த்ருடமாயிருக்கை. “வநதிஜீவஞ்ஜாநகீ நாவஷ்டம்ப தாதஷி” என்கிற கணக்கிலே என்றேனுமொருநாளுன் திருவடிகளோடு ஸாஹ்யஸம்ஸ்லேஷம் பெறவேணுமென்று மாசையாலே தன்ஸரீரத்தை நிராயுகிப் போகாதபடியபித்துக்கொண்டு இருக்கிறவளான என்று பதார்த்தம். தையலை-பெண்பிள்ளையை, தையலென்று பெண்பிள்ளைக்குப்பேர். மையல் செய்தானே - மோஹம்பண்ணிவித்தவனே, மையல் - மோஹம், இவளை இப்படி மோஹிப்பித்து க்லேஸப்படுத்துகிறவனே என்று மஹாநிர்மமான ஸம்போதநம். சிந்திக்கும் - உன்னுடைய கல்யாண ஸௌந்தர்யாதிகுணங்களையும் உன்னோடுதான் பண்டு ஸம்ஸ்லேஷித்தபடியையும் சிந்தியாநிற்கும், திகைக்கும் அந்த ஸம்ஸ்லேஷமிப்போது பெறாமையாலே மோஹியாநிற்கும், தேறும் - தெளியும், சிலபோது போன பின்பு பின்னையும் ஸம்ஸ்லேஷ ப்ரஜ்ஞையாமென்றபடி. கைகூப்பும் - மோஹந்தெளிந்தவாறே தன்னபேக்ஷிதம்பெறுகைக்காக வுன்னைக்குறித்து அஞ்ஜலி பண்ணாநிற்கும். திருவரங்கத்துள்ளாயென்னும் - ஸ்ரீரங்கத்துக்குள்ளேயிருக்குமவனே என்றுசொல்லாநிற்கும், இப்படி நீ ஸந்நிஹிதனாயிருக்கச்செய்தே யெனக்குதவாதொழிகையாவதேயென்றுதன்னாற்றாமையாலே சொல்லாநிற்குமென்றபடி. வந்திக்கும்- வந்தநம்பண்ணாநிற்கும், அநாமெயைப்போலே காலவஸ்தைந்தோற்ற உன் திருவடிகளைநினைத்துதெண்டனிட்டுக்கிடக்குமென்றபடி. அங்கே - அவ்வவஸ்தையிலே, அப்படி தெண்டனிட்டபடியே கிடக்கச்செய்தே என்றபடி. மழைக்கண் - மழைபோலே குளிர்ந்திருக்கிற கண்களுடைய, நீர் - ஜலங்களானவை, மல்க - ப்ரவஹிக்க, வந்திடாயென்றென்றே - நீ வரவேணுமென்றென்றே சொல்லி, மயங்கும்- பின்னையும் வரக்காணாமையாலே மோஹியாநிற்கும், ஸம்ஸாரிகளுடைய விகாரங்களில் இவளுக்கில்லாதவையில்லையென்றுகருத்து. ॥ரு॥

ம - மையல் செய்து - பிச்சேறினாருடைய வ்யாபாரத்தைச் செய்து, மையலென்று பிச்சுக்கும் பிச்சேறினாருடைய வ்யாபாரத்துக்கும் பேர். ஸ்ரீஜநகராஜன் திருமகள்பக்கல் பிச்சாலே அதிக்ஷுத்ரமான காகத்தின் மேலே ப்ரஹ்மாஸ்த்ரப்ரயோகத்தைப்பண்ணி என்றபடி. இப்படி ப்ராட்டிகள் பக்கலிலே தனக்கத்யந்தாஸக்தியுள்ளதாகக்காண்பித்தென்கை. என்னை - உன்னுடைய க்ருத்யங்களறியாதவென்னை, மனம் - நெஞ்சை. நிக்ஷேபக்கும். என்னுடையநெஞ்சையென்றபடி. கவர்ந்தானேஎன்னும் - அபஹரித்தவனே என்று சொல்லாநிற்கும், கவருகை - க்ரஹிக்கை. இங்கேஅபஹரிக்கையைச் சொல்லுகிறது. மாமாயனேஎன்னும் - மஹாஸ்சர்யசேஷ்டிதனே என்று சொல்லாநிற்கும், மஹாஸ்சர்ய ஸௌந்தர்யமுடையவனே என்றுசொல்லாநிற்கும் என்றபடி. அதையே விவரிக்கிறாள் மேல். செய்யவாய் மணியே என்னும் - அதாதாயரத்தையுடைத்தான நீலரத்னமேயென்றுசொல்லாநிற்கும். நானுன்னுடையவொத்தன்றோஎன்றுப் போலே ஸம்ஸ்லேஷதசையிலே

௬—தண்புனல்சூழ்திருவரங்கத்துள்ளாயென்னும்* வெய்யவாடண்டுசங்குசக்கரம்வில்லேந்தும்விண்ணோர்முதலென்னும்* பைகொள்பாம்பணையாயிவடிறத்தருளாய்பாவியேன்செயற்பாலதுவே* ॥௬॥

ஆ—ஶரண்யனான வனுடைய ஶௌஸ்வரூபலக்ஷணமாய் ஸௌந்தர்யத்தையநுஸந்தித்து அம்ஶௌஸ்வரூபலக்ஷணனே என்றுசொல்லும், நிரதிஶயதீப்தியுக்தமாயிருப்பதொரு நீலரத்நம் செந்தாமரைபூத்தாபோலேயிருந்த திருவுடம்பையும் திருப்பவளத்தையுமுடையவனே என்றவ்வழகைச்சொல்லும். அடியேனுக்கு ஶுத்தாநம்பண்ணுகைக்காகவன்றோ கோயிலிலேகண்வளர்ந்தருளுகிறதென்னும். ஸர்வஜ்ஞனுமாய் ஸர்வஶக்தியுமாய் த்ருடமாயிருந்த பஞ்சாயுதங்களை ஏந்தியருளுகிற தெனக்காகவன்றோவென்னும், இவளுக்காக நீ கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளாநிற்கச்செய்தே இவள்பக்கல் க்ருபைபண்ணியருளுகிறதில்லை, இதுக்குஹேது என்னுடையபாபமேயிறே என்கிறாள். ॥௬॥

(பாலதுன்பங்கள்) ஸாம்ஸாரிகங்களை யநாதிகாலமார்ஜிதங்களான ஸம்ஸாரவ்யமாக நீ பண்ணின வ்யவ

இ—(ஶரண்யரனென்த்யாதியால்) செய்யவாய்மணியேயென்று ஸௌந்தர்யம்ஶரண்யத்வமிறே, செய்யவாய்மணியேயென்னும்என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரதிஶயேத்யாதியால்) விண்ணோர்முதலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வஜ்ஞனுமித்யாதியால்) வெய்யவாளித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (த்ருடமித்யாதியால்) பைகொள்பாம்பணையாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவளுக்காகநீயித்யாதியால்) இவள்திறத்தருளாயென்கிறதையுரைக்கிறார் (இவள்பக்கலித்யாதியால்) பாவியேன்செயற்பாலதுவென்பதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இதுக்குஹேதுவித்யாதியால்) ॥௬॥

✳ஏழாம்பாட்டு.✳

பாலத்துன்பங்களின்பங்கள்படைத்தாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாம்ஸாரிகேத்யாதியால்) (அநாதிகாலேத்யாதி) ஸுகதுக்காநுபவங்களுக்கும் தத்ஹேதுவிகளுக்கும் காரணங்களாக என்றபடி.

மு— ஸவிநயமாக விவளைக்குறித்து சிலவார்த்தைகளைச் சொல்லும்போது ஶரணாகதவத்ஸலமான உன்னுடைய ஸ்வபாவத்தையும் தத்காலத்தில் திருமேனியொளியையும் நினைக்கிறாளென்றுகருத்து. தண்புனல் - குளிர்ந்த ஜலங்களாலே பரிஶிராமாமெபாத ஶரண்யர ஸர்வஜ்ஞங்களாலே என்றபடி. சூழ் - வளிவ்ருதமான, ஸம்ஶயரக்ஷக ஶணிகன கணங்களுடைய குளிர்ச்சிபோலே யிராநின்றதவ்வூரில்குளிர்ச்சியுமென்றுகருத்து. திருவரங்கத்துள்ளாயென்னும் - ஸ்ரீரங்கத்திலே நித்யஸந்நிஹிதனாயிருக்கிறவனேயென்று சொல்லாநிற்கும். வெய்ய - உக்ரங்களான, ஆஶ்ரிதவிரோதிகள்பக்கல் தீக்ஷ்ணங்களான என்றபடி. வாள்தண்டுசங்குசக்கரம்வில் - பஞ்சாயுதங்களை, ஏந்தும் - ஏந்திக்கொண்டிருக்கிறவனை, “ஶாதம் ஶரண்யம் விநாபாவிஸ்ஸமந்தாத் ஸவாஹநாயுதஸ்ஸஹ ஸர்வதஃ ஶ்ரீரங்கநாயகஃ” என்னும்படியே ஶரண்யத்வம் தோன்றும்படி. ஸர்வதா தரித்துக்கொண்டிருக்கிறவனை என்றபடி. உன்னுடைய திவ்யாயுதங்களை நலியுமாப்போலேகாதிநிகளையும் நலியாநின்றது. “ஶஸ்த்ரமெய ஜாயதே வாமநாதம்ஶபோஹவதி” என்னும்படியான திவ்யாயுதங்களையே கொண்டு நீ பெண்பிள்ளைகளை இங்கே அழப்பண்ணலாமோ. இங்ஙனேயோ நீ ஶரணாகதர்கள்பக்கல் ஸக்தனாயிருப்பதென்கிறாளென்று கருத்து. விண்ணோர் முதலென்னும் - பரமபதவாஸிகளுக்குநிர்வாஹகனென்னாநிற்கும். அவர்களுடையஸத்தைக்கும் போஷணத்துக்கும் நிர்வாஹகனும்படி ஸர்வஜ்ஞனும் ஸர்வஶக்தனுமாயிருக்குமவனென்று சொல்லாநிற்கிறாள் என்றபடி. பைகொள் - பையைக்கொள்ளாநிற்கிற, பையென்று படத்துக்குப்பேர். ஸதீபதிவ்யதேஹஸம்ஸ்பர்ஶ ஸந்தோஷித ஸந்தோஷ விகஸிதணாமண்டலனான என்றபடி. பாம்பு - நாகத்தை, அணையாய் - ஶயநமாக வுடையவனே, இவளுக்காக இங்கேவந்து கண்வளர்ந்தருளுகிறவனே என்றபடி. இவள்திறத்து - விஶ்லேஷதஶையிலே ஸாவஶயிதனாயிருக்கத் தறைப்பட்டுகிடந்து அலற்றுகிற விவள் விஷயத்திலே, அருளாய் - க்ருபைபண்ணுகிறாயில்லை, பாவியேன் - இவளை இப்படி காண்கைக்கீடான பாபங்களை யுடையவளானவென்னுடைய, செயற்பாலது - கர்மத்திலேயிருப்பது, செயல் - கர்மம், பால் - இடம், பாவிலேயிருக்குமது பாலது. இப்படி நீ யிவள்பக்கல் க்ருபைபண்ணுமைக்கு நிபந்தநம் என்னுடைய துஷ்கர்மத்திலேயிருக்கிறதென்று பாவம். ॥௬॥

மூ—பாலதுன்பங்களின்பங்கள்படைத்தாய்பற்றிலார்பற்றநின்றானே*காலசக்கரத்தாய்கடலிடங்கொண்டகடல்வண்ணாகண்ணனேயென்னும்* சேல்கொள்தண்புனல்சூழ்திருவரங்கத்தாயென்னுமென்தீர்த்தனேயென்னும்* கோலமாமழைக்கண்பனிமல்கவிருக்குமென்னுடைக்கோமளக்கொழுந்தே* 0எ ॥

ஆ—ஸுகதுக்கங்களை என்னளவிலே வ்யவஸ்தையாக்கவோ பார்த்தருளிற்றென்னும். உன்னுடைய ஸர்வஜ்ஞஸர்வசக்திகளும் மங்கிப்போயிற்றென்னும் ஆச்ரிதவிரோதிகளுடைய காலசக்ரமாகத்தைப்பற்றி நிர்வாஹகனாய் திருவாழியையேந்திக்கொண்டிருக்கிற தடிபேணுக்காகவன்றோவென்னும், திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிறதும் ஸ்ரீநந்தகோபர்திருமகனாகவந்து திருவவதாரம்பண்ணியருளினதும் கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளுகிறதும் ஆச்ரிதார்த்தமாகவன்றோவென்னும். ஆச்ரயணத்துக்கு ப்ராப்யமான வேஷமேகோபலக்ஷணவிரோதியாய்

இ—பற்றிலார்பற்றநின்றானேஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்(உன்னுடையவிபூதியால்) காலசக்கரத்தாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆச்ரிதவிரோதிகளுடையவிபூதியால்) கடலிடங்கொண்டஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருப்பாற்கடலிலேஉபூதியால்) கண்ணனேஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீநந்தகோபவிபூதியால்) திருவரங்கத்தாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (கோயிலிலேஉபூதியால்) என்தீர்த்தனேஎன்னுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆச்ரயணவிபூதிசொல்லிக்கொண்டென்றுமளவாமே) கோமளக்கொழுந்தென்கிறதற்குத் தாத்பர்யமருளி

ஈ—பால - பாலாக, இரண்டுபாலாக என்றபடி. பாலென்றுஸ்தானம். ப்ரதிகூலர்க்கு துக்கமும் அநுகூலர்க்கு ஸுகமும் என்றிப்படி இரண்டுஸ்தானமாக என்றபடி. துன்பங்களின்பங்கள் - ஸுகங்களையும் துக்கங்களையும், துன்பம் - துக்கம், இன்பம் - ஸுகம், படைத்தாய் - ஸ்ருஷ்டித்தவனே, இதுஸாதிஸாதாரணமல்லவோவெனின்; இப்படி யதாக்ரமமாக நீ கட்டினஸம்பந்தத்தை என்பக்கலிலேவ்யவஸ்தமாக்கிறுயேவென்றபிப்ராயம். ஸம்பந்தங்களொன்றுமில்லாதாரை விஷயீகரிக்கப்போமோவென்ன? சொல்லுகிறாள்; பற்றிலார் - அவலம்பநமில்லாதார்; பற்று - அவலம்பநம், ஒருஸம்பந்தமுமில்லாதாரென்றபடி. பற்ற - ஆச்ரயிக்கும்படி. நின்றானே, நின்றவனே, ஸம்பந்தமுமன்றியே யவராயமேயாயிருக்கிற காகாஸுரன் முதலானவர்களுமுன்னே யாச்ரயிக்கும்படி நின்றவனே என்றபடி. இவ்வஸர்வஜ்ஞ ஸர்வஜ்ஞத்வஸர்வஸக்தித்வமுனக்கு இப்போது போய்விட்டதோவென்றுகருத்து. ஆனாலும் ப்ரதிபந்தகங்களிருக்க விப்போது அங்கீகரிக்கக்கூடுமோவென்ன? சொல்லுகிறாள். காலசக்கரத்தாய்- ஆச்ரிதவிரோதிகளுக்கு ம்ருத்யுவாயிருக்கிற சக்ரத்தை யுடையவனே. காலோஸ்மி ம்ருத்யு:. ப்ரதிபந்தகநிரஸநார்த்தமாகவன்றோ நீதிருவாழியேந்திக்கொண்டிருக்கிறதென்று கருத்து. ஆனாலும் த்ருஷ்டிகோசரமாய் ஸ்ரீவைகுண்டத்திலே யன்றோ நாமிருக்கிறதென்னா? சொல்லுகிறாள் மேல். கடலிடங்கொண்ட - க்ஷீரஸாகரத்திலே ஸ்தானத்தைக்கொண்டவனான, கடல்வண்ணா - ஸாகரஸ்வரூபனே, ஒருகடலிலேயொருகடல்சாய்ந்தாப்போலேஇருக்கிறவனேஎன்றபடி. ஆச்ரிதஸம்ரக்ஷணார்த்தமாகவன்றோ க்ஷீரஸாகரத்தில் கண்வளர்ந்தருளுகிறதென்று கருத்து. கண்ணனே - க்ருஷ்ணனே, க்ஷீராப்தியிலே வரமாட்டாதார்க்குமாச்ரயணீயனாகைக்காகவன்றோ "நாமரூபம் அநேக ஸம்பவம் ஸம்பவாமி யுகே யுகே" என்கிறபடியே க்ருஷ்ணனாய்வந்து அவதரித்தருளிற்றென்றுகருத்து. என்னும் - என்னாநிற்கும், இப்படி சொல்லாநிற்குமென்றபடி. சேல்கொள் - மத்ஸ்யங்களைக் கொண்டிருக்கிறவையான, சேல் - மத்ஸ்யம். மத்ஸ்யங்களை யுடைத்தானவையான என்றபடி. மத்ஸ்யங்கள் ஜலத்தைப்பிரிந்துபரிக்கிலன்றோநானுன்னைப் பிரிந்துபரிக்கவல்லளாவது என்றுகருத்து. தண்புனல் - சீதலங்களான ஜலங்களாலே, சூழ் - பரிவ்ருதமான, திருவரங்கத்தாயென்னும்— ஸ்ரீரங்கத்திலே யிருக்கிறவனேஎன்றுசொல்லாநிற்கும், அந்த க்ருஷ்ணாவதாரத்திலும்உதவாதார்க்காகவன்றோ கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளுகிறதென்கிறாளென்றுகருத்து. என்தீர்த்தனேஎன்னும் - என்னுடைய தீர்த்தனேஎன்னாநிற்கும், எனக்கு பாவநபூதனே என்னாநிற்குமென்றபடி. எனக்கு அபீஷ்டப்ரதிவிரோதிகளையெல்லாம் போக்கினவனே என்னாநிற்கிறாளென்கை. என்னுடைய - மதீயையான, கோமளக்கொழுந்து - ஸுகுமாரமான அங்குரம்போலே அத்யந்தஸௌகுமார்யயான பெண்ணானவள், கொழுந்து - அங்குரம், கோல - ரமணீயங்களான, மா - மஹத்துக்களான, விசாலங்களான என்றபடி. மழை - வர்ஷம்போலே வாரிசீதலங்களான, கண் - நேத்ரங்கள், பனிமல்க - ஜலம்ப்ரவஹிக்க, இருக்கும்—

மூ—கொழுந்துவானவர்கட்கென்னுங்குன்றேந்திக்கோநிரைகாத்தவனென்னும்* அழுந்தொழுமாவியனலவெவ்வுயிர்க்குமஞ்சனவண்ணனேயென்னும்* எழுந்துமேல்நோக்கியிமைப்பிலளிருக்குமெங்ஙனேநோக்குகேனென்னுஞ்* செழுந்தடம்புனல்சூழ்த்திருவரங்கத்தாயென்செய்கேனென்திருமகட்கே* ॥அ॥

ஆ—உசிதமான விஸ்லேஷங்களையும் போக்கினப்போலே ஸம்ஸ்லேஷவிரோதியான வென்னுடைய பாபங்களையும் போக்கியருளாயென்னும் சொல்லிக்கொண்டுபிரிவென்னுஞ் சொல்லுங்கூடப்பொறுக்கமாட்டாதபடி ஸௌகுமார்யமுடையளான வென்னுடைய பெண்பிள்ளை தன்னுடைய அழகியதிருக்கண்கள் நீர்மல்கவிருக்குமென்கிறாள். ॥எ॥

(கொழுந்து) ஸ்ரீவைகுண்டநிலயனாய் அயர்வறுமமரர்களதிபதியாய் அவர்களுக்கு ஸேவ்யனாயிருந்துவைத்து தேவவேஷம்ரக்ஷிதனுக்கொண்டு பிறந்தருளி வஷ்டத்திலே கஷ்டீஸ்வஹீயங்களான கோவம்ஸங்களையும் பசுக்களையும் ஸ்ரீகோவர்த்தநத்தை யெடுத்துரக்ஷித்தருளின உன்னுடைய நிரவதிகமான காருண்யத்துக்குங்கூட விஷயமல்லேனோவென்னும். பின்னையும் நீ பார்த்தருளாதொழிந்தவாறே அழாநிற்கும். தன்னுடைய வைவர்ண்யம்பெறுகைக்காக உன்னைத்தொழாநிற்கும். தன்னுடைய வாத்ஸல்யாதி ஸம்ஹாரமயா

இ—செய்கிறார் (பிரிவென்னுஞ்சொல்லுமித்யாதியால்) ॥எ॥

எட்டாம்பாட்டு.

கொழுந்துவானவர்கட்கென்கிறவிடத்தில் ஐஸ்வர்யத்தை யருளிச்செய்கிறார் (ஸ்ரீவைகுண்ட இத்யாதியால்) அத்தையுரைக்கிறார் (அயர்வறுமித்யாதியால்) இங்கே ஸௌசீல்யமருளிச்செய்கிறார் (கோவ இத்யாதியால்) குன்றேந்தியென்கிறவிடத்தில் ஐஸ்வர்யத்தையருளிச்செய்கிறார் (கோவ இத்யாதியால்) குன்றேந்திக்கோநிரைகாத்தவனென்னுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வஷ்டத்திலே இத்யாதி அல்லேனோவென்றுமித்யந்தம்) ஆவியனலவெவ்வுயிர்க்குமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னுடையவாத்ஸல்யாதியால்) எழுந்துமேல்நோக்கி இமைப்பிலளிருக்குமென்கிறதற்குத் தாத்பர்ய

ப—நிஷ்கர்ஷமாயிருக்கும், தன்னுடைய வாத்ஸல்யநிக்கெல்லா மவன்வாராதொழிந்தவாறே இப்படி கண்ணீர்மல்கவிருக்குமென்றுகருத்து.

ஈ வானவர்கட்கு - பரமவ்யோமவாஸிகளுக்கு, நித்யஸூரிகளுக்கென்றபடி. கொழுந்தென்னும் - கொழுந்துபோலே ஸ்ப்ருஹணீயனென்று சொல்லாநிற்கும், அவர்களுக்கு நிரவதிகபோக்யனாய்க்கொண்டு தலைவனாயிருக்கிறவனென்று சொல்லாநிற்கிறாளென்றபடி. குன்று - கோவர்த்தநத்தை, கோவர்த்தநத்தையென்றபடி. ஏந்தி - கையிலேதரித்து, கோநிரை - கோவர்க்கத்தை, காத்தவனென்னும் - ரக்ஷித்தவனென்றுசொல்லாநிற்கும், அவனுக்குப் பரதந்த்ரமில்லாமையாலே யென்னையிசைத்திழக்கிறேனோ ஸௌலப்யமில்லாமையாலே இழக்கிறேனோவென்று வாக்யபத்துக்குத் தாத்பர்யம். அழும் - பின்னையும் நீ வாராதொழிந்தவாறே அழாநிற்கும், தொழும் - உன்னைக்குறித்தஞ்ஜலிபண்ணாநிற்கும், ஆவி - ஸூத்ராவானது, அனலவெவ்வு - அனலாலேவேகும்படி, ஸோகாக்நியாலே உஷ்ணமாம்படி, உயிர்க்கும் - பெருமூச்சுவிடாநிற்கும், அஞ்சனவண்ணனேயென்னும் - என்னையிப்படியாகப்பாக்கின நீலவிக்ரஹத்தையுடையவனேயென்று சொல்லாநிற்கும், எழுந்து - இவ்வாதத்ரு ஜநியைக்கேட்டு நீ வருகை ஸம்பாவிதமென்று பரஷியாலே எழுந்திருந்து, மேல்நோக்கி - மேலேநோக்கி, ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்தாப்போலே ஆகாஸத்திலே நீ வரப்புகுகிறாயென்று கருத்தாலே ஊர்த்வதேஸத்திலே பார்த்தென்றபடி. இமைப்பு - நிமேஷம், இலள் - இல்லாதவளாக, இருக்கும் - இராநிற்கும், நீ வருகிற தை அடியே துடங்கிக்காணவேணுமென்னுமாசையாலே கண்கொட்டாதே பார்த்துக்கொண்டிருக்குமென்ற படி. இமைப்புஎன்றுநிமேஷம். எங்ஙனேநோக்குகேனென்னும் - அப்படி வரக்காணாதவாறே உன்னைநானெ ப்படி காணப்புகுகிறேனென்று சொல்லாநிற்கிறாள். செழும் - ரமணீயங்களான, செழுஎன்று ரமணீயம். தடம் - விஸாலங்களான, புனல் - ஜலங்களாலே, சூழ் - பரிவ்ருதமான, "ஸ்ரீகீணா பயஸாரஸஹிதம்" யான ஸுநகாவேரியாலே பரிவ்ருதமானஎன்றபடி. திருவரங்கத்தாய் - ஸ்ரீரங்கத்திலே யிருக்கிற வனே, என்திருமகட்கு - என்னுடையவளான லக்ஷ்மீஸத்ருசையான விப்பெண்பிள்ளைக்கு, என்செய்கேன் - என்னத்தைச்செய்யக்கடவேன், இவ்வாதிக்கடியான பேதத்தை பரிஹரிப்படுத்துவேனோ, வாராதவவனை

மூ — என்திருமகள்சேர்மார்வனேயென்னுமென்னுடையாவியேயென்னும்* நின்திருவெயிற்றாலிடந்துநீகொண்டநிலமகள்கேள்வனேயென்னும்* அன்றுருவேழுந்தழுவிநீகொண்டவாய்மகளன்பனேயென்னும்* தென்

ஆ — ம்படி நீவெளிப்பட்டு விஶ்லேஷநிர்வாஹத்தைப்பண்ணும். என்னுடையஸஞ்ஜ்வரமெல்லாம்போம்படி உன்னுடையவசீகரமான ஸஜ்ஜநமேனியைக் காட்டியருளாயென்னும். நீவரும்படி காணவேணுமென்றெழுந்திருந்து க்ஷிதிஷ்வைரவலோகநபரா யாகாஶத்தைப்பார்த்துக்கொண்டிருக்கும். அங்குங்காணாதொழிந்தவாறே உன்னைக் காண்கைக்கு உபாயமேதோவென்னும். செழுந்தடம்புனல்சூழ் திருவரங்கத்தாய் என்திருமகட்கினிநான்செய்வதென்னென்றுகூப்பிடுகிறாள். ॥௮॥

(என்திருமகள்) ஸர்வலோகைகஶரண்யையாய் ஸர்வகல்யாணகுணாஶ்ரயையாயிருந்த பெரியபிராட்டியார்க்கும்சேஷியாய் உன்னுடைய குணங்களாலே ஊராஸ்த்ரீபூதையான ஸ்ரீபூமிப்பிராட்டிக்கும் சேஷியாய் தன்னுடைய நிரவதிகஸௌந்தர்ய ஸௌகுமார்ய ஸௌசீல்யாதி ஸமஸ்த கல்யாணகுணங்களாலே பரமபோக்யையான நப்பின்னைப்பிராட்டிக்கும் ப்ரணயியாயிருந்த நீ ப்ரகாரிஸமமாகையாலே என்னை ரக்ஷிக்கக்கடவையாக்கினாப்போலே இன்னமும் த்வத்வி ஷயமென்றென்னை யுன்திருக்கண்களாலே பார்த்தருளாயென்றுசொல்லும். இவளுக்காகக்கோயிலிலே கண்

இ — ருளிச்செய்கிறார் (நீவரும்படியித்யாதியால்) எங்ஙனேநோக்குகேனென்னு மென்கிறதற்குத்தாத்பர்யமருளிச்செய்கிறார் (அங்குங்காணாதித்யாதியால்) ॥௮॥

✳ ஒன்பதாம்பாட்டு. ✳

திருமகள்சேர்மார்வனேஎன்னுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதியால்) நீ கொண்டநிலமகள் கேள்வனேஎன்னுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடையகுணங்களாலேஇத்யாதியால்) அன்றுருவேழுந்தழுவிநீகொண்ட என்கிறவிடத்தில் ஸமித்தவாக்யத்தையருளிச்செய்கிறார் (தன்னுடையநிரவதிகேத்யாதியால்) ஆய்மகளன்பனேயென்னுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நப்பின்னையித்யாதியால்) என்திருமகளென்கிறவிடத்திலே என்ஶப்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரகாரிஸமமாகையாலேஎன்று) என்னுடையாவியேயென்னுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னைரக்ஷிக்கேத்யாதியால்) வாக்யத்வயத்திலபிப்ராயமருளிச்செய்கிறார் (இன்னமுமித்யாதியால்) தாத்பர்யவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவளுக்காகவித்யாதியால்) ॥௯॥

ஈ — வரப்பண்ணுவேனோ, இவ்விரண்டுமஶக்யமன்றோவென்றுகருத்து. ॥௮॥

ஒ — என்திருமகள் - எனக்கு ஸ்வாமிநியான பெரியபிராட்டியார், சேர் - சேர்ந்திருக்கிற, நித்யமாக வஸியாநிற்கிறாளென்றபடி. மார்வனேஎன்னும் - வக்ஷஸ்ஸம். பெரியபிராட்டியார்க்கு நான் ஸம்பந்தஸூசகமாக ப்ரத்யக்ஷமான சேஷத்வத்தையென்றன்றோநீஎன்னையென்றுமாதரிக்கிறது, இப்போதுமவளுடைய புருஷகாரமாக வென்னை கடாக்ஷித்தருளவேணுமென்கிறாளென்றுகருத்து, நின் - உன்னுடைய, திருவெயிற்றால். ஸ்ரீவராஹவேஷத்தால், எயிறு - தம்ஷ்ட்ரை. "உத்ருதாஸி வராஹேண க்ருஷ்ணேந ஶதபாஹுநா" என்னும்படி ஶ்லாகநீயமான திவ்யதம் ஷ்ட்ரையாலே என்றபடி. இடந்து - அண்டபித்தி தலத்தில்நின்றுங்கீண்டெடுத்து, உன்னை யதிவ்யாகாரித்துக்கொண்டாகிலும் ப்ரணயிநிகளுக்கு நீ காரியஞ்செய்யுமவனல்லையோ வென்கிறாளென்றுகருத்து. நீகொண்ட - இப்படி உன்னுடைய ப்ரணயித்வகுணத்தைக்காட்டி நீயுனக்கு சேஷமாக்கிக்கொண்ட, நிலமகள் . பூமிப்பிராட்டிக்கு, கேள்வனே என்னும் - வல்லபனேஎன்றுசொல்லாநிற்கும், அன்று - க்ருஷ்ணனோடே ஸம்ஶ்லேஷிக்கப் பெறுவேனோவென்று நப்பின்னைப்பிராட்டிவ்யதிதாவப்படாநின்றவந்த காலத்தில், உரு - இடிபோலே பயங்கரமான த்வநியை யுடையவையான வ்ருஷபங்களை, உருவென்று இடிபோலே பயங்கரத்வநியானவஸ்துவுக்குப் பேர். ஏழு - ஏழுகளையும், தழுவி - ஆலிங்கநம் பண்ணி, மர்த்தநத்தாலேவதித்தென்றபடி. நீஹாகாரவத்தா ஸம் ஸம்ஶ்லேஷஸாதநமாகையாலே ப்ரகாரிஸம்ஶ்லேஷம்போலே க்ருஷ்ணனுக்கு போக்யமாயிருந்ததென்று வ்யஞ்ஜிப்பிக்கைக்காக மர்த்தநத்தை தழுவுதலாகச் சொல்லுகிறாள். நீகொண்ட - நீயுனக்காக்கிக்கொண்ட. ஆய்மகள் - கோபகுமாரிகைக்கு நப்பின்னைப்பிராட்டிக்கென்றபடி. அன்பனேயென்னும் - ப்ரியதமனேஎன்று சொல்லாநிற்கும். இப்படியவர்கள்பக்கலிலே ஸ்நேஹியாயிருந்த நீ அவர்களுக்கு சேஷமான வென்பக்கலிலே க்ருபை

மூ—திருவரங்கங்கோயில்கொண்டானே தெளிகிலேன்முடிவிவடனக்கே* ‖ ௬ ‖

முடிவிவடனக்கொன்றறிகிலேனென்னுமூவுலகாளியேயென்னும்* கடிகமழ்கொன்றைச்சடையனேயென்னுநான்முகக்கடவுளேயென்னும்* வடிவுடைவானோர்தலைவனேயென்னும்வண்டிருவரங்கனேயென்னும்*

ஆ—வளர்ந்தருளுகிற நீ இவளைப்பார்த்தருளுகிறதில்லை, இனியிவளுக்கென்னாய்விளையுமென்றோன்று மறிகிறிலேனென்கிறாள். ‖ ௬ ‖

(முடிவிவள்தனக்கு) இப்பெண்பிள்ளைதனக்குமுடிகைக்கொருபாய மறிகிலேனென்னும், ப்ரஹ்மருத்ராதி ஸகலதேவதைகளுக்கு ஸ்ரஷ்டாவுமாய் அவர்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்த்யாதி ஸத்தாஹேதுவானவனே? உன்திருவடிகளிலவர்களோபாதி யுறவுபோராதோவென்னும், அயர்வறுமமரர்களையுங்கூடத் தோற்பித்தடிமையாக்கிக்கொண்டிருக்கிற வுன்னைக்காட்டியருளாயென்னும், கோயிலிலேபுகுந்து கண்வளர்ந்தருளி ஸுஶ்ரீதர்க்காஸ்ரயணம்பண்ணிக்கொண்டிருக்கிற வாத்ஸல்யனேயென்னும்.

✳ பத்தாம்பாட்டு. ✳

இ—மூவுலகித்யாதிகடவுளேயென்னுமித்யந்தத்துக்கு வ்யாக்யானமாக த்வயமருளிச்செய்கிறார் (ப்ரஹ்மருத்ராதியால்) இதுக்குப் பாகோத்வயமருளிச்செய்கிறார் (உன்திருவடிகளிலித்யாதியால்) வடிவுடைவானோர்தலைவனேயென்னுமென்கிறதற்குத் த்வயமருளிச்செய்கிறார் (அயர்வறுமித்யாதியால்) வண்டிருவரங்கனேயென்னுமென்கிறதற்குத் த்வயமருளிச்செய்கிறார் (கோயிலிலேயித்யாதியால்) அடியடையாதாள்போலிவளென்கிறதற்குத் த்வயமருளிச்செய்கிறார் (பெருமாள்திருவடிகளையித்யாதியால்) சேர்ந்துமுடியவென்றது - சேர்ந்துதலைக்கட்டஎன்றபடி. போய்முடிந்தாளென்றது - மிகவும் ஶிதிலையானாளென்றபடி.

ப—பண்ணு தொழிவதெங்ஙனே யென்றாளென்றுகருத்து. தென் - ஸுந்தரமான, திருவரங்கம் - ஶ்ரீரங்கத்தை, கோயில் கொண்டானே - கோயிலாகக்கொண்டவனே, அவதாரத்திலே யுதவாதாருன்னை யிழந்து போகாதபடி கோயிலை நித்யவாஸஸ்தானமாக ஸ்வீகரித்தவனே என்றபடி. இவள்தனக்கு - இப்பெண்பிள்ளைக்கு, தன்னென்று ஸாபேக்ஷப்ரயோகம். முடிவு - தேஹாவஸானத்தை, முடிவு - அவஸானம், தெளிகிலேன் - தெளியமாட்டுகிறேனில்லை, நீஎத்தனை ஸர்வஜ்ஞனேயாகிலு மிவளுடைய வ்யஸனகஷ்டத்தைப் பார்த்தாலிதுக்கு முடிவுண்டாகப் புகுகிறதாகவெனக்குத் தோற்றுகிறதில்லைஎன்றபடி. ‖ ௬ ‖

இவள் - இப்பெண் பிள்ளையானவள், தனக்கு - விரஹாஸஹிஷ்ணுதமையையானதனக்கு, முடிவொன்று - முடிவை யொன்றையும், முடிக்கைக்குபாயமொன்றையு மென்றபடி. இங்குமுடிவு ஶப்தம் முடிக்கைக்கு உபாயபரம். அறிகிலேனென்னும் - அறியமாட்டுகிறிலே னென்றுசொல்லுகிறாள். இந்தவிரஹதஶையிலே தனக்கு முடிகையே நன்மை யென்று நினைத்து அதுக்குபாய மொன்று மறியமாட்டுகிறிலே னென்று சொல்லாநிற்கிறாளென்று கருத்து. மூவுலகாளியே என்னும் - மூன்றுலோகங்களையு மாளுகிறவனேஎன்னாநிற்கிறாள், மூன்றுலோகங்களையுமாளுகிற விஷ்ணுக்கு ஸம்போதனமென்று சொல்லுகிறாளென்றபடி. கடி - பரிமளமானது, கமழ் - பரிமளியாநிற்கிற, கமழ்கை - பரிமளிக்கை. பரிமளம் ப்ரஸரியாநிற்கிற என்றபடி, கொன்றைச் சடையனே யென்னும் - கொன்றைப்பூவை ஜடையிலே யுடையவனேயென்னாநிற்கிறாள். ருத்ரனுக்ஸம்போதனமென்றுசொல்லாநிற்கிறாளென்றபடி. நான்முக - சதுர்முகமான, கடவுளேயென்னும் - தெய்வமேஎன்னாநிற்கிறாள். கடவுள் - தெய்வம், சதுர்முகதேவதைக்கஸம்போதனமென்று சொல்லாநிற்கிறாளென்றபடி. ப்ரயோஜநாந்தரபரரான ப்ரஹ்மருத்ராதிகளோடுள்ள வுறவு அநந்யகதியான என்னோடுனக் கில்லையோ வென்று வ்யங்க்யார்த்தம். வடிவுடை - திவ்யரூபத்தை யுடையவர்களான, ஸமஸ்தகல்யாணகுணமெல்லாம் வடிவிலேதோன்றும்படி யுஜ்ஜ்வலரூபஶாலிகளான என்றபடி, வானோர் - நித்யஸூரிகளுக்கு, தலைவனேஎன்னும் - ப்ரதானனே என்னாநிற்கிறாள், உன்னழகாலேயவர்களை தோற்பித்தடிமை யாக்கிக்கொண்டு அவர்களுக்கு ஶேஷியாயிருக்கிறவனே என்றுசொல்லுகிறா ளென்றபடி. அவர்களுக்கு நீயுன்னைக் கொடுத்துக்கொண்டிருக்குமாப்போலேஎனக்கு முன்னைக்காட்டியருளா யென்கிறாள் என்று த்வயம். வண் - உதாரமான, திருவரங்கனேயென்னும் - ஶ்ரீரங்கத்திலேயிருக்கிறவனேஎன்னாநிற்கும். நித்யஸூரிகள் ஸ்ருமநஸ்விக்கிறதாய்ப்போகாதே ஸம்ஸாரிகளுமநுபவிக்கும்படி கோயிலிலே

மூ— அடியடையாதாள்போலிவளணுகியடைந்தனள்முகில்வண்ணனடியே* ॥
முகில்வண்ணனடியையடைந்தருள்சூடியுய்ந்தவன்மொய்புனற்பொருநல்* துகில்வண்ணத்தூநீர்சேர்ப்பன் வண்பொழில்சூழ்வண்குருகூர்ச்சடகோபன்* முகில்வண்ணனடிமேற்சொன்னசொல்மாலையாயிரத்திப்பத்து

ஆ— இனி பெருமாள்திருவடிகளைச்சேர்ந்து முடியமாட்டாள் போய்முடிந்தாளென்னும்படி தஶாபந்நையானவிவள் ப்ரார்த்திதமானவிந்த விஶ்லேஷநிவர்த்தநமான நிரவதிகதுஃகமெல்லாம் விஸ்ம்ருதமாம்படி தானாசைப்பட்டபடியே பெரியபெருமாள்திருவடிகளையே ஸம்ஶ்லேஷிக்கப்பெற்றாள் என்றிவளுடைய திருத்தாயார் ப்ரீதையாகிறாள். ॥

(முகில்வண்ணன்) பெரியபெருமாள்திருவடிகளைச்சேர்ந்து ஸர்வாத்மநாஸம்ஶ்லேஷமும் பண்ணப்பெறுகையாலே உஜ்ஜீவநராய் ஸாத்விகஸத்வப்ரதான பரிவாஹரூபமான திருப்பொருநலாலும் கமநீய திவ்யோத்யாந ஸாந்த்ரதாஸந்நிவேசங்களாலும் பரிஷ்க்ருதமான திவ்யநகரநிலயனாயிருந்த சடகோபன் முகில்வண்ணனடிமேற்சொன்ன சொல்மாலையாயிரத்திப்பத்தும்வல்லார் பெரியபெருமாள்திருமேனியில் நீலமான ஜ்யோதிஸ்ஸின்வெள்ளத்தாலே தீப்யமாநமான திருநாட்டிலே யயர்வறுமமரர்கள்சூழ ஸுகி

இ— ப்ரீதவர்யாரயானென்றுகருத்து. அணுகியித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரார்த்திதமான வித்யாதிகளால்) இத்தால் ஸர்வேஶ்வரனிவளுடைய ஆர்த்தியையறிந்து தன்ஶீலாதிஶயத்தாலும் ஔதார்யத்தாலுமிவளுடையவாஞ்சாஸம்ஶ்லேஷத்தை விஶேஷித்து ப்ரகாஶிப்பிக்க இவளுக்கதனால்பிறந்த ஆஶ்வாஸத்தைக்கண்டு தாயார் ஸந்தோஷியாய்ச்சொல்லுகிறாளென்று ஸங்கதிஸூசிதமிதே. ॥

✳ நிகமனம். ✳

முகில்வண்ணனடியையடைந்தருள்சூடி யுய்ந்தவனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பெரியவித்யாதியால்) மொய்புனற்பொருநல்துகில்வண்ணத்தூ நீர்சேர்ப்பனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாத்விகஸத்வேத்யாதியால்) வண்பொழில்சூழ்என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திவ்யோத்யாநேத்யாதியால்) வண்குருகூர்ச்சடகோபனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திவ்யநகரேத்யாதியால்) முகில்வண்ணவானத்துஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பெரியபெருமாளித்யாதியால்) இமையவர்சூழஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அயர்வறுமித்யாதியால்) பேரின்பவெள்ளத்தேஎன்கிற

ஈ— வந்து கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனேஎன்கிறாளென்று பாவம். நீ கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற ஸுகம்நான் பெறவேண்டாவோ என்கிறாளென்று ஸாரதாத்பர்யம். அடி - அவன்திருவடிகளை, அடையாதாள்போல்- அடையாதவள்போலே இருந்தவளான, இந்த விரஹத்தாலே யிவள் முடிந்து போமித்தனையொழிய இனியவன்திருவடிகளை யடையமாட்டாளென்னும்படி இருந்தவளான என்றபடி. இவள் - இப்பெண்பிள்ளையானவள், முகில்வண்ணன் - மேகஸ்வபாவனானவனுடைய, முகில்-மேகம், ஜலஸ்தலவிபாகமற வர்ஷிக்கும் மேகம்போலே ஸர்வர்க்கும் முகமளிக்கும் ஸ்வபாவரான பெரியபெருமாளுடைய என்றபடி. அடி - திருவடிகளை, அணுகி - கிட்டி, அடைந்தனள் - அடைந்தாள், மநஸ்ஸிலேவிஶதமாக அநுபவிக்கப்பெற்று ஸுகித்தாளென்று கருத்து. ॥

ஶ - முகில்வண்ணன் - மேகவர்ணரான பெரியபெருமாளுடைய, அடியை - திருவடிகளை, அடைந்து - ஸம்ஶ்லேஷித்து, மநஸ்ஸிலே விஶதமாக அநுபவித்தென்றபடி. அருள்சூடி - க்ருபையை ஶிரஸாவஹித்து, அவருடைய ப்ரஸாதத்தைப் பெற்றுஎன்றபடி. உய்ந்தவன் - உஜ்ஜீவித்தவரான, விரஹதாபந்தீர்ந்து ஸுகித்தவரான என்றபடி. மொய் - நிபிடங்களான, ஸம்ருத்தங்களான என்றபடி. புனல் - ஜலங்களை யுடைத்தான, பொருநல் - தாம்ரபர்ணியினுடைய, இதுக்கு, நீர் என்கிறத்தோடேஅந்வயம். துகில்வண்ண - வஸ்த்ரவர்ணஸத்ருஶம்போலே, துகில் - வஸ்த்ரஸத்ருஶம், தூ - ஶுத்தமான, "ரமணீயம் ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோயதா" என்கிறபடியே ஸ்வச்சமானஎன்று பாவம். நீர் - ஜலத்தை, சேர்ப்பன் - சேர்ந்தவரான, தாம்ரபர்ணீ ஸமீபதடஸ்தரான என்றபடி. வண் - அதிஸுந்தரங்களான, பொழில் - உத்யாநங்களாலே, சூழ் - பரிவ்ருதமான, வண்குருகூர் - அதிரமணீய திருநகரியில், சடகோபன் - ஆழ்வாரானவர், முகிலவண்ணனடிமேற்சொன்ன - மேகவர்ணன்விஷயமாகவருளிச்செய்ததான, சொல்மாலையாயிரத்து - ஸூக்திஸஹஸ்ரத்தில்,

ஏ—ம்வல்லார்* முகில்வண்ணவானத்திமையவர்சூழவிருப்பர்பேரின்பவெள்ளத்தே* ॥கக॥
ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ—ஸூக்திகலாரவைசாரத்யாநஸஜநித நிரவதிகாநந்த ஸமாநப்ரவாஹநிமக்நராயிருப்பரென்கிறார். ॥
திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

இ—தற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸவிஸூக்திகெசத்ராதியால்) ॥கக॥

ப— இப்பத்தும்- இந்த பத்து பாட்டுக்களையும், வல்லார்- அப்யஸிக்கவல்லார்கள், முகில்வண்ண- மேகவர்ணமான, பெரியபெருமாளுடைய திருமேனியி லத்யுஜ்ஜ்வலகாந்திப்ரவாஹங்களாலே நீலவர்ணமான என்றபடி. வானத்து- பரமவ்யோமத்திலே, இமையவர்-தேவர்கள், நித்யஸூரிகளென்றபடி. சூழ- இவர்கள்பக்கலாதரா திசயத்தாலேசூழ்ந்துகொண்டிருக்க, பேரின்ப வெள்ளத்தே - ஆநந்தப்ரவாஹத்திலே, இன்பம் - ஆநந்தம் பரிபூர்ண ஸமஸ்தாநந்தத்திலேஎன்றபடி. இருப்பர் - நித்யமாக ப்ரதிஷ்டிதராவர்கள். ॥கக॥
ஜ்ஞாநவைராக்யநிஷ்டாநமோகயிஶ்ரீமதகோபாலதாஸஜமஹாதேசிகாயநம:.

ஶ்ரீ:.
த்ருதீயோபநிஷத்தாத்பர்யரத்நாவளி:.
(கங்குலும்பகலும்.)

ஶ்ரீரங்கேஶஸ்யாநாஸ்விஜநதாஸந்த்ருஷ்டாதைத்ய ஶாஸீ கா
ஸ்வஸ்தாநிஷ்டஸ்தாவாதாரமஸ்யநத:வாஸ்ஸாகஸ்ரநாராவம் !
ஶரண்யஶரண்ய ப்ரதாநாஜ்ஜ்வலத நாதயோகக்ரிய ாதத்வாகஸ்
ஸாவீஸ்வாநாம்விமஹாஸ்ரவாஶம்யதிவெதாமயீஸாமஶம்ஸி: ॥

(ஶ்ரீரங்கேஶஸ்யாநாக) செங்கயல்பாய் நீர்திருவரங்கத்தாய் - தியக்குகளுக்குங்கூடக் களித்துவ திக்கும்படி ஶ்ரேஷ்டமான ஜலஸம்ருத்தியையுடைய ஶ்ரீரங்கத்திலே யெழுந்தருளியிருக்கையாலும், (நிவிஜஜ மதநாஸு, ஷட்ஜதாமெது:) முன்செய்திவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாய் - எல்லாலோகங்களையும் ஸ்ருஷ்டிக்கை யாலும், க்ருஷ்ணஶப்தத்தாலே கதநமாமையிலே "காகுத்தாகண்ணனேயென்னும்" என்றுசொல்லுகிற கவதீயரக்ஷகத்வம் ஸம்க்ருஹிக்கப்படுகிறது. (ஶாஸிகாஸ) சிட்டனே - ஶாஸநனைகையாலும், (விஸ்வஸ்தா நிஷ்டாவாஸ) அந்திப்போதவுணனுடலிடந்தானே - விரோதியான ஹிரண்யனை ஸம்ஹரிக்கையாலும் (உரமஶயநத:) பைகொள்பாம்பணையாய் - தன்திருமேனிஸ்பர்ஶத்தாலுண்டான ஹர்ஷத்தாலே விகஸித மான பணங்களையுடைய திருவனந்தாழ்வானை திருப்படுக்கையாகவுடையவனைகையாலும், (வாம்ஸாகஸ்ர நாராவம்ஶரண்யஶரண்ய ப்ரதாநாக) பாலதுன்பங்களின்பங்கள்படைத்தாய் - வேதநருடைய கர்மாநு ரூபமாக ஸுகது:கங்களைக் கொடுக்குமவனைகையாலும், (ஜலதநாதயா, உவக்ரியாதஸ்வரகாஸ) இங்கேக ஸம்விக்ஷிதமன்று குன்றேந்திக்கோநிரைகாத்தவனேஎன்னும் - நின்திருவெயிற்றலித்ராதி - முகில்வ ண்ணனடியை - கோவர்த்தநத்தையெடுத்து கோகோபாலகர்க்குவகரிக்கையாலும், வராஹரூபத்தை க்கொண்டு ரக்ஷிக்குவகரிக்கையாலும், வர்ஷாகவலாஹகம்போலே ஶ்யாமமாய்க்குளிர்ந்திருக்கிற வடி வையுடையனைகையாலும், எல்லார்க்கும்ஸ்வாமியான ஶ்ரீரங்கநாயகன் ஸ்வாஶ்ரிதருடைய மமேஹத்தை ஶமிப்பி யாநிற்கிறானென்று "கங்குலும்பகலும்" என்கிறதஶகத்திலே காரிமாறன் அருளிச்செய்தானென்கிறார். ॥
ஶ்ரீமதேநிகமாந்தமஹாதேசிகாயநம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஏழாம்பத்தில் இரண்டாந்திருவாய்மொழிமுற்றிற்று.

மூன்றாந்திருவாய்மொழி.

ஆ—(வெள்ளைச்சுரிசங்கு) இப்பிராட்டியோடே பெரியபெருமாள் ஸம்ஶ்லேஷரஸத்தை யநுபவித்து அந்த ஸம்ஶ்லேஷரஸமுள்ளடங்காதபடி பெருகினவாறே அதுஸாக்ஷிக்கைக்காகவு மாஶ்ரிதரக்ஷணத்துக்கும் ஶுஶ்ரூஷாபரமாகவுந் தென்திருப்பேரையிலே எழுந்தருளத்திருவுள்ளத்தே கோலியருளி இவளுடைய ஸம்வாஹநமாக வியவிடத்திலே கதிரோத்ஸவத்தைப்பண்ணியருளி தென்திருப்பேரையிலே வேட்டைக்குப்போய்வருகிறோமென்றருளிச்செய்ய, இப்படி பதிவ்ரதையான விலலக்ஷணவிஶ்லேஷையாகையாலு மிவனெழுந்தருளுகை யிவளைக்காணுமொழிகைக்கு ஹேதுவென்னுமிட மறியாமையாலு மெழுந்தருள ஸம்மதித்து விஜயபத்ரத்தைபாஸமதித்து திவ்யாயுதங்களைக்கொடுத்தருளி “ஶ்ரூஆரோஹணேஸ்வராஜ ஸம்ஹா நவிஷய்யாஸீ” என்னும் ஶ்லோகத்தின்படியாலே திருப்பல்லாண்டுபாடிக்கொண்டு திருவணுக்கன் திருவாசலளவும் பின்னேயெழுந்தருளப் பெரியதிருவடி திருத்தோளிலேயேறியருளி தாமரைத்தடாகம் மலர்ந்தாப்போலேயிருந்த திருக்கண்களாலே யிவளைப்புரிந்துபார்த்தருளி இவளாலேயநுஜ்ஞாதனாய்த் தென்திருப்பேரையிலேயெழுந்தருள, இவளவனைக்காணாமையாலே கத்ருஶ்வேஸம்ஶயாய் அவனெழுந்தருளியிருந்த தென்திருப்பேரையிலேயெழுந்தருள வுத்யமிக்க இவளுடைய திருத்தாயாரும் தோழிமாரும் மற்றுமுள்ள ஸமாஜங்களு மிவளைஶ்லேஷிக்க நான்போகைதவிரேன், தனியேபோனாளென்னும் பழியுங்களுக்கு வாராமே

இ—கீழ்ப்பாட்டில்சொன்னபடியே ஆழ்வார் பெரியபெருமாளோடே நவஸம்ஶ்லேஷவிஶேஷத்தைப்பெற்று ஸந்தோஷராயிருக்க விஶ்லேஷதஶையில்போலே இத்திருவாய்மொழியிலே விரஹிணியான வொருபிராட்டியினுடைய பேச்சுக்களைப்பேசுகை யஸம்மதமன்றோவென்ன? இப்போதிவர் ஸநவஸாநந்தவிஶேஷமாஹத்தாலே ஸம்ஶ்லேஷஸந்தோஷராயிருந்தாரேயாகிலும் பாஹ்யஸம்ஶ்லேஷங்கிடையாமையாலே பின்னையுமவஸநராய் இப்போதவனோடே பாஹ்யஸம்ஶ்லேஷம்பெறவேணுமென்று க்லேஶப்படுகிற தம்முடையதஶையை பெரியபெருமாளோடு ஸம்ஶ்லேஷித்துப்பிரிந்து விரஹார்த்தையான வொருபிராட்டியானவள் தான் திருப்பேரையில் செல்லவேணுமென்று அன்னைமாரையும் தோழிமாரையுங்குறித்துச்சொல்லுகிற வாக்யாவஸ்தைஶத்தாலே பேசுகிறாளென்கிற கருத்தாலே யவதரிப்பிக்கிறார் (இப்பிராட்டிபோமடைத்யாதியால்) இப்படி ஸாவஸ்தைஶத்திலே இத்திருவாய்மொழி ஸம்மதமானாலும் அந்யாவஸ்தைஶத்திலே பெரியபெருமாளோடு ஸம்ஶ்லேஷிக்கவேணுமென்று கீழ்த்திருவாய்மொழியிலே வ்யஸநப்பட்ட விப்பிராட்டி இத்திருவாய்மொழியிலே திருப்பேரையிலே செல்லவேணுமென்று பேசுகை யஸம்மதமன்றோவென்ன வருளிச்செய்கிறார் (அந்தஸம்ஶ்லேஷரஸமித்யாதியால்) இத்தனைஸம்ஶ்லேஷம் நடவாநிற்க இவளவன்விஶ்லேஷத்தை ஸம்மதிப்பனோ, இவள் ஸம்மதிக்கவில்லையாகில் அவனிவளை விஶ்லேஷித்துப்போகை யுசிதமோவென்னவருளிச்செய்கிறார் (இவளுடைய ஸம்வாஹநமாகவித்யாதியால்) கத்ருஶ்விஶ்லேஷையாகையாலுமென்றது - ஸம்ஶ்லேஷரஸதத்பரையாகையாலே விஶ்லேஷமின்னபடியிருக்குமென்று தெரியாதேபோம்படி அத்தை மறந்தவளாகையாலுமென்றபடி. (இவனெழுந்தருளுகையித்யாதி) இவன் திருப்பேரைக்கெழுந்தருளுகிறது இவனைக்காணாதேபோகுகைக்கு ஹேதுவென்னுமிடத்தை யறியமாட்டாதபடி கத்ருஶ்ஸம்ஶயாகையாலுமென்றபடி. இவன் திருப்பேரைக்கெழுந்தருளுகிறதுவும் ஒருஸம்ஶ்லேஷவிஶேஷமென்றே எண்ணிக்கொண்டிருந்தாளென்றுகருத்து. இப்படி அவனைப்பிரிந்தவிவள் பாவபந்தன்னோடு அவன் ஸம்ஶ்லேஷித்திருந்த தஶையிலுண்டான வவனுடையவழகுகளை நினைத்துச்சொல்லுமத்தனையொழிய ஸந்தோஷத்திலேயிருக்கிற தான் காணாதவனுடைய வ்யாபாரஸந்நாஹங்களை வெள்ளைச்சுரிசங்கொடித்யாதியாலே யிவள் பேசக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (விஜயபத்ரத்தையித்யாதியால்) திவ்யாயுதங்களைக்கொடுத்தருளி என்கிறவிடத்திலே “தத்ஸ்நேஹஸமுத்தஸ்த்ரீணாம் யநாஸீவாயமேதக்ஷணா । ததஸ்வீகாரயோஹ்யாமேத்ராஃ ஸஹஸஜவீரஸூதா” என்கிறஶ்லோகஜநிதம். திருவணுக்கன் திருவாசலளவுஞ்சென்று வ்யாபாரஸந்நாஹங்களையெல்லாங் காண்கையாலே இவளவற்றைச் சொல்லக்கூடுமென்றதாய்த்து. புரிந்துபார்த்தருளி என்றது - திரும்பிப்பார்த்தருளினென்றபடி. *

மூ— வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தித்தாமரைக்கண்ணனென்னெஞ்சினூடே* புள்ளைக்கடாகின்றவாற்றை க்காணீரென்சொல்லிச்சொல்லுகேனன்னைமீர்காள்* வெள்ளச்சுகமவன்வீற்றிருந்தவேதவொலியும்விழா

ஆ— நீங்களேயென்னைத் தென்திருப்பேரையிலே யீண்டெனக்கொண்டுபோய்விடுங்கோளென்கிறாள். நிரதிசயௌஜ்ஜ்வல்ய ஸம்பந்நமாய் நிஷ்களங்கமான சந்த்ரமண்டலம்போலேயிருந்த ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், நிரதிசயதீப்தியுக்த ஸூர்யமண்டலம்போலேயிருந்த திருவாழியையுமேந்தி, பொன்மலையின்மீமிசைக் கார்முகில்போலே பெரியதிருவடி திருத்தோளிலேயேறியருளி இலங்கொளிசேரரவிந்தம்போன்ற நீண்டகண்களையுடையனானவ னென்னெஞ்சினூடே சாரிகைத்திரிந்தருளுகிறபடி நீங்கள் காண்கிறிலீகோள். இன்னபடியென்றெனக்குச் சொல்லநிலமாகிறதில்லை, ஆதலாலவனை யொருக்ஷணங்காணுதொழியில் ஜீவிக்கமாட்டேன் வேதகோஷத்தாலும் உத்ஸவகோஷத்தாலும் ஸ்ரீஸூக்திநரான பாகவதர்களுடைய ஸம்வாதகோஷ ணஸ்துதிகோஷத்தாலும் ஸம்ருத்தமான திருப்பேரையிலே உத்ஸவஸ்ரேஷ்டஜநித நிரவதிகஸுக

✳ முதற்பாட்டு ✳

இ— வெள்ளைச்சுரிசங்கொடு என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரதிசயௌஜ்ஜ்வல்யேத்யாதியால்) ஆழியேந்தியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரதிசயதீப்தீத்யாதியால்) புள்ளைக்கடாகின்ற என் கிறவிடத்தில் ஸம்ப்ரதாயார்த்தத்தை யருளிச்செய்கிறார் (பொன்மலையித்யாதியால்) மீமிசையென்றது - உபரி என்றபடி. கநககிரிஶிகர காளமேகம்போலேயென்றபடி. தாமரைக்கண்ணனென்கிறதற்கு திருமொழிப்பாசுரத்தாலே தாத்பர்யமருளிச்செய்கிறார் (இலங்கொளியித்யாதியால்) இலங்கொளி - விளங்காநின்றகாந்தியானது, சேர் - சேர்ந்திருக்கிற, காந்திவ்யாப்தமாயிருக்கிற என்றபடி. அரவிந்தம்போன்ற - அரவிந்தஸத்ருஶமான, புள்ளைக்கடாகின்றவாற்றைஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சாரிகையித்யாதியால்) என் சொல்லிச்சொல்லுகேனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இன்னபடியித்யாதியால்) ஸந்தர்ப்பத்துக்குப் பாவதாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆதலாலித்யாதியால்) வேதவொலியுமித்யாதி விளையாட்டொலியு மென்னுமளவுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வேதேத்யாதியால்) ஸ்ரீஸூக்திநரானவென்கிறவிடத்திலே "பாகவதஸ்ரீஸூக்திநா ஸ்தோத்ரகோஷஸம்பதஸ: । ஸாத்விகபாஸம்பந்நா ஸ்ரீரங்கேஶவ்ரதாஶ்ரயா:" என்கிறஶ்லோகமபிப்ரேதம். வெள்ளச்சுகமவன்வீற்றிருந்தஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உத்ஸ

ப— அன்னைமீர்காள்?- மாத்ருஜநங்காள், வெள்ளை - தவளமான, ஸ்யாமளமான திருமேனிக்குப் பரபாகமாம்படி ஶுப்ரமான என்றபடி, சுரிசங்கொண்டு - சுரியையுடைத்தான ஶங்கத்தோடே, சுரி - சுழல், சுழித்துழிபோலே வர்த்துளமான ஶுபாவயவஸந்நிவேஶவிஶேஷத்தையுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தோ டேகூட என்றபடி. ஆழி - சக்ரத்தை, அப்படியொருவிஶேஷண மிட்டுச்சொல்லவொண்ணாதபடி ஸர்வோத்தரமான ஸ்ரீஸுதர்ஶனத்தைஎன்றபடி. ஏந்தி - அவற்றில்ப்ரீதிஶயத்தாலே திருக்கைகளாலே ஏந்திக் கொண்டென்றபடி. தாமரைக்கண்ணன் - ஸ்வாமித்வமாவிஷ்கரிப்பவன், ஆயுதங்களையுந் திருக்கண்களையுஞ்சேர வநுஸந்தித்தது இவைகளுடையவிந்யாஸஸாம்யத்துக்குண்டாயிருக்கையாலே. அதாவது:— திருக்கண்களைப்போலே திவ்யாயுதங்களும் திருமேனிக்கலங்காரமாயிருக்கையாலும் திவ்யாயுதங்களைப்போலே திருக்கண்களும் எல்லாரையும் தோற்றுக்காலிலே விழப்பண்ணுகையாலுமென்றபடி. என்னெஞ்சின்- என்மநஸ்ஸி னுடைய, ஊடே - மத்யத்திலே, புள்ளை-பக்ஷியை, கருடனை என்றபடி, கடாகின்ற- சக்ரமமாக நடத்துகிற, ஆற்றை - ப்ரகாரத்தை. ஆறு - ப்ரகாரம், கடாகின்ற ஆற்றைஎன்கிறவிடத்திலே ஸம்யிலேயகாரமதம். காணீர்-காண்கிறிகோளில்லை. உங்கள்நெஞ்சிலே தோற்றுத மாத்ரத்தைக்கொண்டு நீங்களிதுகூடாதென்றிருக்கக்கூடு மோ வென்றுகருத்து. நாங்கள் காணோமாகில் நீசொல்லலாகாதோவென்ன? உத்தரஞ் சொல்லுகிறாள். என் சொல்லி - என்ன பாசுரத்தைச் சொல்லி, சொல்லுகேன் - என்னெஞ்சில்நடக்கிற வாஶ்சர்யத்தைச் சொல்லக் கடவே னென்றபடி. அதுவாசாமகோசரமென்றுகருத்து. வெள்ளச் சுகம் - வெள்ளமான ஸுகங்களை யுடையவனான, நிரவதிகாநந்த ஸஹிதனென்றபடி. அவன் - அந்த ஸர்வேஶ்வரன், வீற்றிருந்த - வீறு தோன்றும்படி இருந்த, வீறு - உத்கர்ஷம், ஸர்வோத்கர்ஷந்தோன்றும்படி எழுந்தருளி யிருந்தவிடமான என்றபடி. இதுதிருப்பேரைக்கு விஶேஷணம். வேதவொலியும் - வேதகோஷமும், ஒலி - கோஷம், விழா

மூ— வொலியும்* பிள்ளைக்குழா விளையாட்டொலியுமறாத்திருப்பேரையிற்சேர்வன் நானே* ||௧||

நானக்கருங்குழற்றோழிமீர்காளன்னையர்காளயற்சேரியீர்காள்* நானித்தனிநெஞ்சங்காக்கமாட்டேனென்

ஆ— ஸ்நேஹோபயிநிருத்தைப் பரிவஞ்சனைப்பண்ணிக்கொண்டிருக்கிற இருப்பைக்காணவேணும்; நீங்களென்னைக் கொண்டுபோய்விடீர்களாகில் நானேயாகிலும் போவேனென்று தன்னை நியமிக்கிற தாய்மாரையும் தோழிமாரையுங்குறித்துச்சொல்லுகிறாள். ||௧||

(நானக்கருங்குழல்) ஸுகந்தி நீலாலகாந்த ஸுகுமாரவிருங்களையுடைய தோழிமாருமன்னையரும் மற்றுமுள்ளஸம்பந்திஜனங்களும் நீதனியேபோகையிடல்லவென்றுசொல்ல, அவர்களைக்குறித்து நானென்னுடைய ஸ்வதந்த்ரமானநெஞ்சைக் காக்கமாட்டேன், எனக்குவிதேயமன்று, ஆஶ்ரிதவாத்ஸல்யனைக் காணத் திருநாட்டில்நின்றும் ஸ்ரீவைகுண்டவாஸர் திருமகளும் வந்துபிறந்தருளி, அக்காலத்தில் பெறுதாருடை யவிழவுதிரும்படி தேன்மொய்த்தபூம்பொழில் தண்பணைசூழ் தென்திருப்பேரையில் ஸர்வஸ்வாமியையழுந்

இ— ஸம்ஶ்லேஷ க்ருதாதியால்) சேர்வன்நானேஎன்கிறவிடத்தி லவதாரணத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நீங்களென்னையி க்ருதாதியால்) சேர்வன்நானேஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நானேயாகிலுமி த்யாதியால்) ||௧||

நான் திருப்பேரையிலேபோயல்லது நில்லேனென்று சொல்லவந்தவிவள் அத்தைப்பிப்பாட்டிலே என்னெஞ்சவன்பக்கலிலே கிடக்கிறதென்றுசொல்லுகை யஸம்கதமன்றோவென்ன விதுக்குத்தாத்பர்யஞ்சொல்லுகைக்காக வவதரிப்பிக்கிறார் (அதிவர்த்தம்ஸ க்ருதாதியால்) இத்தால் ப்ரதமபாதத்தில் ஸங்கங்களுக்குமர்த்தம் ஸூசிதமாயிற்று. த்விதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நானென்னுடையவி த்யாதியால்) மணிவண்ணனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்ரித க்ருதாதியால்) கண்ணனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீவஸுதேவரி த்யாதியால்) அக்காலத்திற்பெறுதாருடையவென்றது - அந்த க்ருஷ்ணாவதாரகாலத்திலே பந்துவிக்கப்பெறுதாருடைய என்றபடி. வானப்பிரானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வரிவஞ்சனி க்ருதாதியால்) பாட்டுக்குப் பரதாத்பர்யமருளிச்செய்கிறார்

ப— வொலியும்- உத்ஸவ கோஷமும், விழா- உத்ஸவம், உத்ஸவங்களிலுண்டான மங்களவாத்யாதி கோஷமுமென்றபடி. பிள்ளைக்குழா - பாலஸமூஹத்தினுடைய, குழா - ஸமூஹம், விளையாட்டொலியும் - க்ரீடநத்திலுண்டானகோஷமும், க்ரீடநகாலத்திலே பாலரானவர்கள் சொல்லுகிற வசநத்தால் உண்டான கோலாஹலமுமென்றபடி. அறா - அறாததான, விச்சேதியாததானதென்றபடி. இதுவெல்லாம் நித்யமாக நடவாநிற்கிறதான வென்றபடி. திருப்பேரையில்- திருப்பேரையென்கிற திவ்யநகரத்திலே. நானே- நான்தானே, நீங்கள் கொண்டுபோய்விடீர்களாகில்நான்தானேயாகிலுமென்றபடி. சேர்வன் - போவேன். ||௧||

ஶ- நானக் கருங்குழல் - ஸுகந்தி நீலங்களாய ஸ்நிக்தங்களான குந்தளங்களையுடையவர்களான, நானமென்று மயிர்முடிக்கிடும் மயிர்ச்சாந்துக்குப்பேர். நானக்கருங்குழலென்று மாஸகந்த்தி ஸம்போதனம். இப்படிவர்த்தமான குந்தளங்களையுடையவர்களான நீங்கள் ஸந்நிதியில்லையாகில் நானங்குப்போகக்கூடாதிரோமோ வென்றுகருத்து. இவளோடு ஸம்ஶ்லேஷகாலத்திலே தானேசாற்றிக்கழித்தவையாய் "கேஶவஸ்வம்ஹ்ருஷீகேஶ" என்கிறதனத்திலே தங்களுக்கவன் ப்ரஸாதித்தருளினவையான ஸுகந்தத்ரவ்யங்களையெல்லாமித்தோழிமார்கள் அவன்பக்கல் ப்ரீதியாலே தூரவி யமித்துக்கொண்டிருக்கையாலே யவர்களுடைய ஸந்நிதியேயிவளுக்கு உத்தீபகமாய்க்கொண்டு ஸாதகமாயிருக்கையாலே இப்படிசொல்லுகிறாள். தோழிமீர்காள்- ஸகிகாள், அன்னையர்காள் - தாய்மார்காள், அயல்- அசலாரான, ஸமீபஸ்தஜநங்களிலிருக்கிறரான என்றபடி. சேரியீர்கள்- ஊரிலிருக்கிறவர்காள், சேரி-ஊர், சேரியிலிருக்குமவர்கள் சேரியார், சேரியீர்களென்று ஸம்போதநம் ஸஹாயமத்திகளான தோழிமாரோடு ஸஞ்சாரமேதகளான தாய்மாரோடு ஸஞ்சாரமல்லாதானஊராரோடு வாசியற இவளுடைய பாவத்தை யெல்லாரு மறியும்படியாய்த் திவளுடைய பாரவஶ்யம். நான் - அவன்பேர் சொன்னாலுமையும் ப்ரக்ருதியான நான், இத்தனி நெஞ்சம் - இந்த தனிநெஞ்சத்தை, சொல்விற்றுக் கேளாதே, ஸ்வதந்த்ரமான வித்ததநத்தைவயென்றபடி. "மநஸ்ஸங்கல்பிஷ்யதி" என்றுகொண்டு ஒருவரையும் பாராதே போகாநின்ற வித்ததநத்தையென்கை. காக்கமாட்டேன்- அவன் பக்கல் போகாதே தகையமாட்டேன்

மூ—வசமன்றிராப்பகற்போய்* தேன்மொய்த்தபூம்பொழிற்றண்பணைசூழ்தென்திருப்பேரெயில்வீற்றிருந்த* வானப்பிரான்மணிவண்ணன்கண்ணன்செங்கனிவாயின்றிறத்ததுவே* ‖௨‖

செங்கனிவாயின்றிறத்ததாயுஞ்செஞ்சுடர்நீண்முடித்தாழ்ந்ததாயுஞ்* சங்கொடுசக்கரங்கண்டுகந்துந்தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்தும்* திங்களுநாளும்விழாவறாததென்திருப்பேரெயில்வீற்றிருந்த* நங்கள்பிரானுக்கென்னெஞ்சந்தோழிநாணுநிறையுமிழந்ததுவே* ‖௩‖

ஆ—தருளியிருந்தவனுடைய உகஸம்ஶ்லேஷத்தாலே புதுக்கணித்த திருப்பவளத்திலே என்னெஞ்சிராப்பகல் போய்ப்படிந்துகிடக்கும், இனிநானெங்ஙனேபோகாதிருக்கும்படியென்கிறாள். ‖௨‖

(செங்கனிவாயின்) உன்னுடைய லஜ்ஜைக்கும் நிறைவுக்கும்போருமோ தனியேபோகையென்று தோழிசொல்ல திருப்பவளத்தினழகிலே போய்ப்படிந்தும் திருப்பவளத்திலொளிகொழுந்துவிட்டு மேனோக்கிவளர்ந்ததோவென்னும்படி நீண்டிருந்த திருவபிஷேகத்திலழகிலேதாழ்ந்தும், திருவாழியுந் திருச்சங்குமேந்தின வழகைக்கண்டுகந்தும், மற்றோரழகுக்குரித்தல்லாதபடி தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்தும், என்னுடையநெஞ்

இ—(இனிநானித்யாதியால்) ‖௨‖

✳ மூன்றாம்பாட்டு ✳

மநஸ்ஸவன்பக்கலிலே ப்ரவணமாயிருக்கிறதென்று கீழ்ப்பாட்டிற்சொன்ன அர்த்தத்தையே சொல்லுகிறதாகையா லிப்பாட்டு வ்யாக்யாநாபேக்ஷையன்றோவென்ன விதுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக அவதாரிப்பிக்கிறார் (உன்னுடையவித்யாதியால்) லஜ்ஜாதிகள் நிஶ்ஶேஷமாய்ப்போயிற்றென்கையிலே பாட்டுக்குத் தாத்பர்யமாகையால் வ்யாக்யாநாபேக்ஷையில்லையென்றதாய்த்து. நிறைவு - அடக்கம், அதாவது:— நெஞ்சிலேயோடுகிறது ஒருவர்க்குந்தெரியாதபடியிருக்கை. செஞ்சுடர்நீண்முடித்தாழ்ந்ததாயுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருப்பவளத்திலொளியித்யாதியால்) தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்துமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்

ஆ — ஸர்வஜ்ஞன தானே அஹம் ஸர்வவாவ்ருனென்று தோற்றும்படி தன்னைக் குறித்து இவ்வாத்மாவுக்குண்டான நிரவதிக வாத்ஸல்யமாய் ஸாக்ஷாத்காரரூபமாயிருந்த சேஷத்வைக ரஸஜ்ஞானத்தையுந் தந்தருளினானென்கிறார். ॥ ௩ ॥

(யானும்) நான் அஹமென்றுகொண்டென்னுடைய விஜ்ஞானமாகத் தன்னையெனக்கு அகலவொண்ணாதபடி தன்னைக் குறித்து இவ்வாத்மா சேஷத்வைக ஸ்வரூபனென்னுமிடத்தைக் காட்டித் தந்தருளுகையன்றியே தன்திருவடிகளை நானே யகல்வேனல்லேனென்றிருக்கும்படியாக ஸ்வசேஷத்வைக ரஸமான இவ்வாத்மா நித்யஸூரிகள் ப்ரஹ்மானந்தம்போலே யிருக்குமென்னுமிடத்தையுங் காட்டித் தந்தருளினான்.

இ — அனுஸந்தித்துப்பின்பு அனந்யஸ்வமான ஸ்வாத்மஸ்வரூபவைலக்ஷண்யத்தை அநேகம் பாட்டுக்களாலே அனுஸந்திப்பதாகவும் அத்தாலே பவனுடைய நித்ய ஸுகானுபவ ப்ரகாசநத்வத்தைப் ப்ரஜிப்பிப்பதாகவும் உபக்ரமித்து ஸ்வாத்மாவுக்கு ஸாரதமமான ஸமஸ்தவ்ருக்ஷத்தை முற்பட அனுஸந்தித்து அவனுடைய ஔதார்யத்தைக் கொண்டாடுகிறாரென்று திருவுள்ளம். இத்தாலித்திருவாய்மொழிக்கு "ஸ்வாத்மஸ்வரூப ப்ரகாசகம்" என்கிற ஸமஸ்தமானம் ப்ரதிபாத்யமென்று ஸங்கதமாயிற்று. ஸபத்தாலே என்கிறதற்கும் ஒண்ணாதொருபடி என்கிறதற்கும் தந்தருளினானென்கிறத்தோடே யந்வயம். தன்னை சேஷமென்றறிந்தால் சேஷிக்குத்தான் அயோக்யனென்று நினைக்கையும் சேஷியைவிட்டகல நினைக்கையும் ஸ்வாதந்த்ர்யமும் முதலானவை பொன்றுஞ் செய்யவொண்ணாதிறே. தன்னைக்குறித்தென்கிறதற்கு சேஷத்வைக ரஸமென்கிறத்தோடே யந்வயம். உண்டானவென்றது - ஸ்வாபாவிகமானவென்றபடி. இவ்வர்த்தம் பூர்வார்த்தத்திலே பாட்டினுத்தரார்த்தத்தின் அர்த்தமும் ஸம்க்ருஹீதம். அஹமர்த்த சப்தத்தாலே யானுந் தானுமென்கிறதின் ஸஹிதார்த்தமும் நிரவதிகவாத்ஸல்யமாயென்கிறவித்தாலே த்ருதீயபாதத்தில் ஸஹிதார்த்தமும் ஸாக்ஷாத்கார சப்தத்தாலே இறவேறியென்கிறதின் தாத்பர்யமும் சேஷத்வ சப்தத்தாலே யானுந் தானுமென்கிறதின் தாத்பர்யமும் ஸம்க்ருஹீதமாயிற்று. ॥ ௩ ॥

✳ நாலாம்பாட்டு. ✳

யானுந்தானாயொழிந்தானையென்கிற அனுஸந்தாநத்துக்கு ப்ரயோஜனங்காட்டுகைக்காக அதைவிவரிக்கிறார் (நானிச்சாதிதந்தருளுகையன்றியேயென்னுமளவாலே) தந்தருளுகை சாத்ரமன்றியென்றபடி. தாமநஸர்களென்றகலாமைக்கு சேஷத்வத்திற்காட்டில் அபிதேயமொழி இவ்வாத்மாவினுடைய ஸமஸ்தஸௌஹ்ருத்யமென்று ப்ரஜிப்பிக்கை யிவ்வனுஸந்தானத்துக்கு ப்ரயோஜநமென்றதாயிற்று. இதுவே யிப்பாட்டுக்கு ஸங்கதியுமாயிற்று. உத்தரார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்திருவடிகளாயி சப்தத்தாலே ஸ்வரூப சேஷத்தாலே) அதில் ஸ்வசேஷத்வைக ரஸமென்றது - நின்றவொன்றையென்கிற ஜீவவிஷயவாதத்துக்குத் தனிமுதலையென்கிறதோடு ஸாமாநாதிகரண்யத்தாலே யிவனுக்குமுசித்த வாகாரத்தைச்சொன்னபடி. தேனும்பாலும் சப்தத்தாலே ஸௌஹார்த்தமருளிச்செய்கிறவிடத்தில் இன்னார்க்கென்றுவிசேஷியாமையாலே ஸம்ஸாரிணுக்குங்கூட ஸௌஹார்த்தம்விவக்ஷிதமென்று நினைத்தருளிச்செய்கிறார் (நித்யஸூரி சப்தத்தால்) காட்டித்தந்தருளினானென்றது - உணர்ந்தேனென்கிறதற்குத் தாத்பர்யஞ்சொன்னபடி. நின்றவொன்றையென்கிறது ஜீவபரமன்றிக்கே நித்யஸ்வரூபபரமானாலோவென்னில்? தானாயொழிந்தானை யவர்க்கும்முன்னோனையென்று உபக்ரமத்திலே பரப்ரயோஜநத்துக்கு ஸாமாநாதிகரணமாக ப்ரயோகிக்கையாலே இச்சப்தம் தத்பரமி

ஸ — யானுந்தானாயொழிந்தானை: ஏகப்ரகாரதயா அஹம்ஸர்வவாவ்ருனும் தானேயாய்விட்டவனை, யாதும் — ஸர்வசேதநங்களுக்கும், யவர்க்கும் — ஸர்வசேதநருக்கும், முன்னோனை — பூர்வசித்யான, ஸர்வஸ்ருஷ்டி ஸர்வசேதநாசேதந காரணபூதனை யென்றபடி. தானும் சிவனும் பிரமனுமாகி — ஸ்வஸ்வதாரபூதனான தானும் சிவனும் ப்ரஹ்மாவுமாய், பணைத்த — களைத்தவனை, பஹூஸ்யாவனை யென்றபடி. காரணதசையில் நாமரூப விபாகாபாவத்தயா ஏகாகாரபூதனான் ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே விசித்ரவ்யூஹவிபவ ஸமஸ்தாவதாரங்களும் தத்துவபூதசரீரங்களும் விசிஷ்டனாவனென்கை. தனிமுதலை — அத்விதீய காரணபூதனை, ஸ்ருஷ்டிஸ்ருஷ்டிபாதிந ஸம்ஹாரவிஷயதனுபூதனை

மூ— முதலடி: தேனும்பாலுங்கன்னலுமமுதுமாகித்தித்தித்தென்* னூனிலுயிரிலுணர்வினினின்றவொன்றை யுணர்ந்தேனே* ॥௪॥

ஆ— னென்கிறார். ॥௪॥

'உணர்வுமுயிருமுடம்பும்'' என்றுதொடங்கி நாலாம்பாட்டளவும் ஸாதகபாதகமாய் நிஷேதித்ததை ஸம்ஸயஸ்தமாகப் பண்ணிக்கொண்டுபோந்தது, இனி யிதன்நிஷேதமும் ஸித்தவத்க்ருதமேயாகிறது.

இ— ஸித்தவஸ்துவாதமாக வேண்டுகையால் யானுந்தானாயென்ற ப்ரஸ்துதமான ப்ரத்யகாத்மாவினுடைய ஸாமாநாதிகரண்யமாய் பரமாத்மவிஷயஸப்தங்களோடு ஸாமாநாதிகரண்யத்தாலே தத்ப்ரகாரகவாக்யார்த்தமென்றுகருத்து. இங்ஙனன்றிக்கே இது கேவலஜீவாத்மஸாமாநாதிகரண்யமாகில் மணனகமலமற பாட்டிற் போலே யிங்கேயும் ஸாக்ஷாத்தாக நிஷேதிக்கலாயிற்றே. ஆனாலும் உணர்வில் நின்றவென்கிறவளவும் ஜீவாத்மஸாமாநாதிகரண்யமாய் ஒன்றையென்கிறமேல்பத மொன்றுமாத்திரம் ஜீவஸரீரகபரமாத்மபரமாகலாமே யென்னில்? அப்போது "யானுந்தானாயொழிந்தானை'' யென்கிறதைக்கொண்டு ஸமாநாதிகரிப்பாம். தேனும் பாலுமித்யாதிகளான கீழ்பதங்களோடேகூட யிப்பதமும் ஜீவஸரீரகபரமாத்மபர மென்னும்பக்ஷத்திலும் இப்ஸமாநாதிகரண்யம் தாத்பர்யமன்றோவென்னில்? பரமாத்மப்ரகாரஸம்பந்தத்தாவினுடைய நிரதிஸயபோக்யத்துவத்திலே வாக்யத்துக்குத் தாத்பர்யமாகையாலே ஸமாநாதிகரண்யமில்லையென்று திருவுள்ளம். ॥௪॥

✳ ஐந்தாம்பாட்டு. ✳

மேற்பாட்டுக்களில் நிஷேதங்களில் ஸாக்ஷாத்தன்றிக்கே கேவலநஸாமாநாதிகரண்யங்களாயே யிருக்கையாலே கீழ்ப்பாட்டிற்சொன்ன ந்யாயம் வழிபாமையாலிவை ஸம்ஸயாஸ்பதங்களாகக்கூடாதே ஜீவாத்மஸாமாநாதிகரண்யங்களென்னில் ஜீவஸரீரகபரமாத்மாவாசிப்ரகரணத்துக்கு இப்பாட்டுகள் சேராதொழியுமேயென்ன? வருளிச்செய்கிறார் (உணர்வுமித்யாதி) கீழ்ப்பாட்டுகளிலும் நிஷேதம் ஸம்ஸயாஸ்பதமானாலும் தாத்பர்யம் ஸம்ஸயாஸ்பதமின்றிக்கே ஸித்தாந்தத்திலேயாகையால் ப்ரகரணத்துக்கு இவைசேராமையில்லையென்றதாயிற்று. கீழ்ப்பாட்டில் நிஷேதித்தது ஸ்வாத்மஸேஷத்வைக ரஸக்ஞாநஸம்பந்நாதீநமாகையாலே மேல் விலக்ஷணஞாநாகாரங்களை அநுஸந்திக்குமிடத்தில் அப்படி நிஷேதித்தது மறுபக்ஷமென்றுகருத்து. கடாதிவிஷயத்தில் ஸாக்ஷிஸ்வாதிஸப்தங்கள்போலே பரமாத்மவிஷயத்தில் வேதநாவேதநவாதிஸப்தங்களெல்லாம் வைலக்ஷண்யநிஷ்கர்ஷங்களாகையாலே யதாவிவக்ஷம் நிஷேதிக்கக்குறையில்லை,

ஸ— வென்றபடி. இங்கு ஸ்ருஷ்ட்யாதி மஹோபகாரத்தைச் சொன்னது; ஸர்வசேதனர்களுக்கும் விஸேஷித்து அவர்களில் ப்ரதானரான ப்ரஹ்மாதிகளுக்கும் அவர்களுடைய ஞானஸாதனமாக ப்ராக்ருதமான வேதஸப்தாரகந்த்ரத்தைக் கொடுத்துநடத்துகிறவன், அங்ஙனன்றிக்கே; என்னையொருவனையும் விஸேஷிண கடாக்ஷித்து நான் தன்னோடு ஸாயுஜ்யனென்கிற மஹாவிபவத்தையும் தனக்குங்கூட நிரதிஸயபோக்யனென்கிற கல்யாணஸாரத்தையு மெனக்குக்காட்டித்தந்தருளினனென்கைக்காக. தேனும்பாலும்- மதுவும் க்ஷீரமும், கன்னலும்- இக்ஷுவிகாரமும், ஸாரமுமென்றபடி. அமுதுமாகி- அம்ருதமுமாய், தித்தித்து- ரஸித்து, அத்யந்த போக்யமாயென்று வடதாத்பர்யம். இன்னார்க்கென்று விஸேஷியாமையாலே ஸர்வேஸ்வரனுக்குங்கூட போக்யனென்றபடி. இவ்வாக்யம் "அஹமந்நம் அஹமந்நம்'' மென்கிற ஸ்ருதியினுடைய அநுஸந்தாந வாக்யத்துக்கு விவரணமாயிருக்கிறது. இதற்குநின்றவென்கிறதோடே அந்வயம். என்னூனில்- என்னுடைய ஸரீரத்திலே, ஊன்- மாம்ஸம், இங்கே ஸரீரபரம். உயிரில்- ப்ராணனுக்குள்ளே, உணர்வினில்- புத்தியிலே, யதோக்த ஞாநத்திலேயென்றபடி. நின்ற- ஸம்பந்தித்திருக்குமதான, இங்கு ஊனில் உயிரிலென்று அந்நமய ப்ராணமயங்களைச் சொல்லுகையாலும் மேல் நின்றவொன்றையென்று விஜ்ஞாநமயனைச்சொல்லுகையாலும் நடுவே உணர்விலென்று ஜ்ஞாநஸாமாநமான மநோமயனைச்சொல்லுகிறதென்று அபிமதமாயிருக்கும். இதுமேல்பாட்டில், அந்நமய ப்ராணமய மநோமயங்களுக்கும் அந்தரிக்ஷனென்று ஆசார்யர்களருளிச்செய்ததற்கும் சேரும். ஒன்றை- ஒரு விலக்ஷணவஸ்துவை, ப்ரத்யகாத்மஸ்வரூபத்தையென்றபடி. தத்ப்ரகாரகபரமாத்மாவையென்கை. உணர்ந்தேனே- அவனுடைய ப்ரஸாதத்தாலே கண்டுகொண்டேனே, ॥௪॥

மூ — நின்றவொன்றையுணர்ந்தேனுக்கதனுண்மையதுவிதுவென்* றொன்றுமொருவர்க்குணரலாகாதுணர்ந்துமேலுங்காண்பரிது* சென்றுசென்றுபரம்பரமாய் யாதுமின்றித்தேய்ந்தற்று* நன்றுதீதென்றறிவரிதாய் நன்றாய்ஞானங்கடந்ததே* ௫

ஆ — (நின்றவொன்றை) இப்படி யெம்பெருமானுடைய காருண்யத்தாலே என்னால் ஸாக்ஷாத்க்ருதமாய் ப்ரத்யக்ஷாத்யஸங்கோசிதா திஸர்வப்ரமாணாவிஷயமாய் ஸூக்ஷ்மவிஷயமாய் வசநாவிஷயதிக விலக்ஷணமாய் தல்ஸஹாஸ்யமாயிருந்த இவ்வாத்மஸ்வரூபத்தை யொருவர்க்கறிகையுமரிது யோகத்தாலே ப்ரத்யக்ஷிக்கையு மரிதென்கிறார். ௫

இ — தமக்கு ஸஹஜ தாஸ்யமென்று வ்யஞ்ஜிப்பிக்கைக்காக ப்ரஸ்துதமான ஶுத்தஸாக்ஷாத்காரத்திலுடைய துர்ஜ்ஞேயத்தை யருளிச்செய்கிறாரென்று ஸாமதிகாட்டுகைக்காக (இப்படியென்கிறஸூத்ரம்) உணர்ந்தேனுக் கென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எம்பெருமானுடையவித்யாதியால்) சென்றுசென்று பரம்பரமா யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரத்யக்ஷாதீத்யாதியால்) இவ்வாக்யத்தில் ஸகலப்ரமாண ப்ரமேயங்களிற்காட்டில் வைலக்ஷண்யஞ் சொல்லுகிறதேயாகிலும் அவற்றில் வசநாவிஷயதிகளும் ஸஜாதீயமாகையால் அதிவைலக்ஷண்யமும் ஸித்தமென்றுகருத்து. யாதுமின்றியித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தல்ஸஹாஸ்யேத்யாதியால்) ஒன்றுமொருவர்க்குணரலாகாவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒருவர்க்கித்யாதியால்) காண்பதரிதென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (யோகத்தாலே இத்யாதியால்) ௫

✳ ஆரும்பாட்டு. ✳

ஸ்வாத்மாவினுடைய ஜ்ஞானஸ்வரூபத்தை யநுஸந்திபாநின்றுகொண்டு ஆம்ஶாவத்தாலே அவனுடைய ஔதார்யத்தை வ்யஞ்ஜிப்பிக்கிறதிவ ரிப்பாட்டிலே பகைபற்றுவித்யாதியாலே வைராக்யமுண்டானால் மோக்ஷமுண்டென்றுப் படிபேசுகை யஸம்மதமன்றோவென்ன வதுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக

ஶ்ரு — நின்ற- ஸ்திரமான, தேஹாதிரூப ப்ரக்ருதிப்ராணங்களழியும்போது மழியாதே ஸ்திரமாயிவற்றுக்கு நியாமகமாய் நின்றவென்றபடி. ஒன்றை- ஒரு விலக்ஷணவஸ்துவை, ஜீவாத்மஸ்வரூபத்தை யென்றபடி. உணர்ந்தேனுக்கு- பகவத்காருண்யத்தாலே யறிந்தவெனக்கு, இதுக்கொருவர்க்கு முணரலாகா வென்கிற தோடங்கம். என்னைப்போல இதொருவர்க்கு மறியப்போகாதென்றே தோற்றுகிறதென்று தாத்பர்யம். அதின்- அந்த ஆத்மஸ்வரூபத்தினுடைய, நுண்- அதிஸூக்ஷ்மமான, துர்ப்ரமாதமான வென்றபடி. நேர்மை- வைலக்ஷண்யமானது, ஒன்றும்- ஏகதேசத்தும், ஒருவர்க்கும்- எத்தனைபேறும் அதிஶயிதஜ்ஞானராயிருப்பார்க்கும், அது இதுவென்று- ஸதிசம் வசநமோடியென்று, அதீதவஸ்து ஸஜாதீயமென்றுதல் வசநமோடிய ஸஜாதீயமென்றுதல் என்றபடி. உணரலாகாது- ஜ்ஞாதம் ஶக்யமன்று, ஶ்ரவணமநநங்களா லறியப் போகாதென்றபடி. உணர்ந்து- ஶ்ரவணமநநங்களாலே ஸம்யக் அறிந்து, மேலும்- ஸமாதிவிஶேஷமாக த்யாநஞ்செய்தாலும், காண்பு- ஸாக்ஷாத்கரிக்கை, அரிது- அரியது, அஶக்யமென்றபடி. நீரறிந்தபடி யாதென்னில், சென்றுசென்று- போய்ப்போய், ஸமஸ்தப்ரமாண ப்ரமேயங்களையெல்லாம் அதிக்ரமித்தென்றபடி, பரம்பரமாய்- உத்க்ருஷ்டோத்க்ருஷ்டதரங்களான, ப்ரமாண ப்ரமேயங்களைக் காட்டிலும் பரமாய் அவையொன்று மின்றிக்கே அவையெல்லாவற்றையு மதிக்ரமித்திருந்துள்ள அத்யந்தஸ்வ ஸ்வபாவங்களை யுடைத்தாயென்று வ்யாக்யானம். யாதுமின்றி- அவற்றினுடைய ஸ்வபாவங்களொன்று மின்றிக்கே, விகாரஜந்மாதிக ளொன்றுமின்றிக்கே யென்றபடி. தேய்ந்து- அதிஸூக்ஷ்மமாய், அற்று- அவற்றோடு ஸம்பந்தமற்று- ஸ்வாஶ்ரயகாரிசே ஸ்வபாவ தத்ஸம்பந்தநிரபேக்ஷமாய் என்றபடி. நன்றுதீதென்று- நல்லது பொல்லாததென்று, அறிவு- அறிகைக்கு, அரிதாய்- அஶக்யமாய், காதாசித்க ஸுகாஸுக ஸாதநங்களைப்போலே ஸுகஸாதநம் அஸாதநம் என்று நிரூபிக்க அஶக்யமாயென்றபடி. நன்றாய்- கல்யாணதமமாய், ஜ்ஞாநஸ்வபாவதயா ஸர்வவிலக்ஷண ஶோபநமாயென்றபடி. ஞானங்கடந்தது- ஜ்ஞாநத்தைப் அதிக்ரமித்தது, இந்த்ரியஸாபேக்ஷமாந ஸ்வபாவமான வைஷயிகஜ்ஞாநத்துக்கு விஷயமல்லாததென்றபடி. இங்ஙனேயிராநின்றதென்று ஸ்வாத்மஸ்வரூபத்தை அநுஸந்திக்கும்படி. ௫

மூ—நன்றாய்ஞானங்கடந்துபோய்நல்லிந்திரியமெல்லாமீர்த்* தொன்றாய்க்கிடந்தவரும் பெரும்பாழுலப்பிலதனையுணர்ந்துணர்ந்து* சென்றாங்கின்பத்துன்பங்கள்செற்றுக்களைந்துபசையற்றால்* அன்றேயப்போதேவீடு

ஆ—(நன்றாய்) யோகத்தினாலே ஆத்மஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கையிலருமையென்னென்னில்? ப்ராக்ருதவிஷயங்களினுடைய அஸ்திரத்வாதி தோஷாநுஸந்தாநத்தாலே ப்ரஸந்நமாக ஸர்வேந்த்ரியங்களையு மாத்மவ்ருத்திசுத்த ஸர்வவிஷயங்களினின்றும் நிவர்த்திப்பித்தால் இவ்வாத்மஸ்வரூபம் கைவருவது, ஆகையாலே காண்கையரிதென்கிறார். ॥சா॥

இ— ஸங்கதிப்பிக்கிறார் (யோகத்தினாலேயித்யாதியால்) த்விதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ராக்ருதேத்யாதியால்) இப்பாட்டில்சொல்லுகிற விஷயவைராக்யாதிகளெல்லாம் இந்த்ரியஜயசேஷமாகையாலேயிதுவேபாட்டுக்கு ப்ரதாநவிஷயமென்று வ்யஞ்ஜிப்பிக்கைக்காக நல்லிந்திரியமெல்லாமீர்த் தென்கிறதையிவையெல்லாத்துக்கும்மேலே ஆகர்ஷித்து பசையற்றாலென்கிறதோடே யந்வயித்து இதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரஸந்நமாகவித்யாதியால்) ரஸோऽப்யஸ்ய. 'விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந:। ரஸவர்ஜம் ரஸோऽப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே' என்கிறபடியே ராகநிவ்ருத்தியினுடைய உத்கர்ஷத்தை வ்யஞ்ஜிப்பிக்கைக்காக இப்பாட்டிலே நல்லிந்திரியமெல்லாமீர்த்துப்பசையற்றாலென்று இந்த்ரியஜயாபேக்ஷயா ராகநிவ்ருத்திக்கு ப்ருதக்ப்ராதாந்யம் தோற்றுகிறதேயாகிலு மிந்தராகநிவ்ருத்தியும் ப்ரத்யாஹாரரூப யோகாங்கத்துக்கு இந்த்ரியஜயத்துக்கு சேஷமாகையால் இந்த்ரியஜயத்துக்கே ஸர்வாதிப்ராதாந்யமென்கிற அபிப்ராயத்தாலே வ்யாக்யாநத்திலே யிதை ப்ரதாநமாக நிர்தேசித்தது. த்ருதீயபாதத்துக்கு தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவ்வாத்மேத்யாதியால்) கைவருவது- வச்யமாவது, யோகேந ஸாக்ஷாத்க்ருதமாவதென்றபடி. பாட்டுக்குப் பலிதார்த்தமருளிச்செய்கிறார் (ஆகையாலித்யாதியால்) ॥சா॥

ரா— ஒன்றாய்க்கிடந்த- ஏகரூபமாய்க்கிடந்ததான, தேவமநுஷ்யாதிரூபவைவித்யமாய்க்கொண்டாதாவோடே அநாதியாக ஸம்ஸ்ருஷ்டமாய்க்கிடந்த வென்றபடி. அரும்- அருமையான, "துர்ஜ்ஞேயா துரத்யயா" வென்கிறபடியே துரத்யயமான வென்றபடி. பெரும்பாழ் - அபரிச்சிந்நமான ப்ரக்ருதிதத்வமாகிற, ஸமஸ்தஸ்வரூபவிரோதி காரமாகையாலே ஸமஸ்த ஜ்ஞாநமும் விளையாத நிலமாகையாலிதைப் பாழென்கிறார். உலப்பிலதனை- அழிவில்லாத வந்த வஸ்துவை யென்றபடி. உணர்ந் துணர்ந்து- அநவரதம் அநுஸந்தித்து, அநித்யத்வாஸ்திரத்வாதி தோஷாஸ்பதமாகத் தெரிந்தென்றபடி. ஞானம் கடந்துபோய்- ப்ராக்ருதவிஷய ஜ்ஞாநங்களை யதிக்ரமித்துப்போய், அவைகளிலே யகப்படாதே தப்பிப்போயென்றபடி. விஷயவைராக்யம் பண்ணியென்கை, நன்றாயென்கிற முதல்பதத்தை த்ருதீயபாதத்திலே ஆங்கென்கிற பதத்தோடே கூட்டி ஆங்கு நன்றாகச்சென்றென்றந்வயிப்பது. ஆங்கு- அந்த ப்ராக்ருதவிஷயத்திலே, ஸூக்ஷ்மவஸ்துதர்சநவிரோதியான ப்ராக்ருதிகத்திலேயென்றபடி. நன்றாய்ச்சென்று- ஸம்யக்காய்ப் போய், அவிஷயத்திலநாஸக்தியிலே யிழியாதே ஸம்யக்காய்ப்போயென்றபடி. வைராக்யம்பண்ணிப்போரச்செய்தே யதா பூர்வவாஸநாதிகளாலே மதையநாஸக்தியாதே ஸம்யக்காய்த்தப்பிப்போயென்கை. இன்பத்துன்பங்கள்- ஸுகது:க்கங்களை, இன்பம்- ஸுகம், துன்பம்- து:க்கம், செற்று- ஜயித்து, களைந்து- கழித்து, மிகவும்வைராக்யத்தென்று வாக்யதாத்பர்யம். ப்ராரப்தத்தாலே ஸுகது:க்கஜநகமான சிலவிஷயங்களை யநுபவித்தாலும் அபுநராவ்ருத்திமாக ஹர்ஷசோகங்களில்லாதவனாயென்றபடி. நல் லிந்திரியமெல்லாம்- நல்லவிந்த்ரியங்களெல்லாவற்றையும், நல்லவிந்த்ரியமென்று- நல்லபாம்பென்னுமாப் போலே 'பலவாநிந்த்ரியக்ராமோ வித்வாம்ஸமபிகர்ஷதி' என்னும்படி பலவத்துக்களான விந்த்ரியங்க ளெல்லாவற்றையுமென்றபடி. இதுவென்கிறதற்குத் ஈதென்று ப்ரயோகிக்கிறாப்போலே இந்த்ரியமென்கிறத ற்கு ஈந்திரியமென்று ஆதேசரூபமாகவும் ப்ரயோகமுண்டு. ஈர்த்து- ஜயித்து, ஜயித்தென்றபடி. பசையற்றால்- ராகம்போனால், பசை- ராகம், ஆந்தரமான ஸம்ஸ்காரமும் நசித்தாலென்றபடி. அன்றே- அந்நசித்ததிநத்திலேயே, அப்போதே- அந்த க்ஷணத்திலேயே, ஸாதாரணத்தாலதுக்குமுன்பு ஒரு நாளிலுமொருக்ஷணத்திலும் ஸித்தியாதென்றபடி. வீடு- மோக்ஷம், உண்டாமிதிசேஷ:. ஸாத்யாயாசு ப்ரக்ருதி ப்ரத்யய விமோக்ஷமுண்டாமென்றபடி, ப்ரக்ருதி நிவ்ருத்தியைச் சொல்லுவதென்; ஆத்மஸாக்ஷாத்

மூ— அதுவேவீடுவீடாமே* ।கூ॥

அதுவேவீடுவீடுபெற்றின்பந்தானுமதுதேறி* யெதுவேதானும்பற்றின்றியாதுமிலிகளாகிற்கி* லதுவே
வீடுவீடுபெற்றின்பந்தானுமதுதேறா* தெதுவேவீடேதின்பமென்றெய்த்தாரெய்த்தாரே* ॥எ॥

ஆ—(அதுவேவீடு) இந்த ஶுத்தஸ்வரூபாவிர்ப்பாவமே மோக்ஷமாகிறது, மோக்ஷம்பெற்றால் பெறுமானந்த மாவது மதுவே யென்றநுஸந்தித்துக்கொண்டு வ்யதிரிக்தவிஷயஸம்ஶ்லேஷத்தை யெல்லாம்விடில்

✳ ஏழாம்பாட்டு. ✳

இ— அதுவேவீடென்கிறதையுரைக்கிறார் (இந்தவாக்யத்தால்) ஶ்ரீபாஷ்யஸூத்ரத்தாலே "ஸம்பத்யாவிர்ப்பாவஸ்ஸ்வேநஶப்தாத்" என்றது ஸூத்ரகாரருக்கு ஸம்மதமாகிறது. அவயானம் மோக்ஷம் ஸ்வதந்த்ரமின்மை யென்கிற ஶாஸ்த்ரஸித்தாந்தம். விஶேஷ்யமாகிய ஶுத்தஸ்வரூப ஸாக்ஷாத்காரத்திலேயல்லது அதி ஶேஷமென்கை ஸ்வாபாவிகாத்மாவிர்ப்பாவம் வழியாமையால் இவ்வாத்மஸ்வரூபாவிர்ப்பாவத் தையே மோக்ஷமாகவநுபவிக்கக் குறையில்லையிறே. வீடுபெற்றின்பந்தானுமது தேறியென்கிறதையருளி ச்செய்கிறார் (மோக்ஷம்பெற்றால் இத்யாதியால்) த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வ்யதிரி க்தேத்யாதியால்) த்ருதீயபாதத்தில் அதுவேவீடு வீடுபெற்றின்பந்தானுமிதென்கைத்துக்குத் தாத்பர்யமருளி

ஸ— காரத்தையிறே சொல்லவேண்டுவதென்ன வருளிச்செய்கிறார் மேல். அதுவே வீடு- அந்த ப்ரக்ருதிஸம்பந்த நிவ்ருத்தியே ஶுத்தஸாக்ஷாத்கார ரூபமோக்ஷம், ஸாவாஸமேயிறே ஈஶ்வரமென்றுகருத்து. இதைமுற்பட ப்ரக்ருதிஸம்பந்தநிவ்ருத்திகேவல நிஷேதித்தது; ப்ரக்ருதிஸம்பந்தத்திலுடைய அநிஷ்டநிவ்ருத்தோபாயம். ஸா தாநஸமயம் மோக்ஷமாயிருக்க விதை மோக்ஷமென்னக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் மேல், வீடா மே- ஸமஸ்தப்ரகாரத்துக்கு விரோதத ஸ்வரூபாவநிவ்ருத்தியும் ப்ராப்யாந்தரமாகையாலே யிதுவும் மோக்ஷமாமென்றபடி. இந்த மோக்ஷமையிலாத்ம ஸ்வத்தைச் சொல்லுகிறதேயாகிலுமிது மோக்ஷஸம யிலாத்மஸ்வத்தோடு தாதாத்ம்யமென்று வ்யஜிப்பிக்கைக்காகவதை மோக்ஷமாக அநுபவித்துச்சொன்னபடி. இப்படி ஜ்ஞாதாவப்ராப்யமென பொருள்களுக்குங்கூட உபாதேயமான ஸாத்யஸாதனத்தையெனக்கு ப்ரகாஶிப் பித்தருளினனென்று அவனுடைய ஸௌஶீல்யத்தைக் கொண்டாடுகையிலே தாத்பர்யம். ।கூ॥

(௧) அதுவே- அந்த ஶுத்தஸ்வரூபாவிர்ப்பாவமே, வீடு- வீடாக, மோக்ஷமாகவென்றபடி. வீடுபெற்றின்ப ந்தானும்- வீடினுடையபேற்றாலே யுண்டாமின்பந்தானும், மோக்ஷஸுகத்தாலுண்டாகக்கடவ ஸுகந்தா னுமென்றபடி. அது- அதுவாக, அந்தவாத்மஸ்வரூபாவிர்ப்பாவமேயாக, தேறி- தெளிந்து, அநுபவித் தென்றபடி. அந்த ஶுத்தபாஶாத்மாவிர்ப்பாவமே அநிஷ்டநிவ்ருத்தியும் அதுவே இஷ்டப்ராப்தியுமென்று நிஷ்கர்ஷி த்ததென்றுவக்தாத்பர்யம். எதுவேதானும்- எந்தெந்தவிஷயங்களினும், ஸௌந்தர்யஸௌஶீல்யவைலக்ஷண்ய ஸௌ லப்யாதிரூபங்களான ப்ராக்ருதஸகலவிஷயங்களினுமென்றபடி. பற்றின்றி- ஸம்பந்தமில்லாமல், ஸங் கைவிட்டென்றபடி. யாதுமிலிகள்- ஒன்றுமில்லாதவர்கள், அவற்றிலே ராகவிஷயமிசைகளும் இல் லாதவர்களென்றபடி. ஆகிற்கில்- ஆகமாட்டினால், ராகவிஷயநிரஸிதராகப் பெற்றாலென்றபடி. ப்ரத்யாஶம் ஸநத்தாலே இது ஶாத்யதாதோஷமென்றுகருத்து. ஆகிற்கிலென்கிறவிடத்திலே சங்கையென்கிறவிடத்திற்போ லே ஸர்வப்ரகாரம் ஸ்பஷ்டமாய் ஆகிற்கிலென்று ஸம்பயிருக்கிறது. வீடு- மோக்ஷமும், வீடுபெற்றின்ப ந்தானும்- மோக்ஷஸுகத்தால்வருமாநந்தமும், அதுவே- அந்தவிஷயாஸக்த்யாமமே, ஶுஸ்வரூபமென் னுமாப்போலே ஸௌந்தர்யஸௌஶீல்யாதிகாரமெஸேஷ்வவாரா:, ஸத்யக்காந விஷயவிவரணத்தைப் பெற்றால் "மோக்ஷஸ்த்வஜ்ஞாநநிவ்ருத்திரேவ" என்கிறபடியே அதுவே அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திரூப ஸ்வாத்மாவி ர்ப்பாவலக்ஷண மோக்ஷஸாதநமாமென்று வக்தாபாஸம். உபாஸநநிஷ்ட ஆராதநஸாதநமாமென்று விவக்ஷி தம். அதுதேறாது- அதைத்தெளியாதே, பரமாத்மப்ராகாரஸஹித ஸ்வாத்மபாஶாத்மாவிர்ப்பாவம் மோக்ஷமெ ன்று நிரூபிக்கமாட்டாதென்றபடி. எதுவேஎன்கிறவிடத்தில் ஏ என்றது ஓவென்றபடி. இத்தையேதுவென்கிற மேல்வாக்யத்தோடேயும் அந்வயிப்பது. எதுவேவீடு- ஏதேதின்பமென்றபடி. எதுவோமோக்ஷம், மோக்ஷம்பெற் றால்வரும் ஸுகந்தானெதோவென்கை. என்று- இப்படிஸம்ஶயித்து, எய்த்தார்- இளைத்தவர்கள், விஷய ஸம்ஶயமத்யமத்தில் யீமாந்திக்கே தேவதாவிஶேஷாயிருந்தவர்களென்றபடி. எய்த்தாரெய்த்தாரே- இளைத்தும்

மூ— எய்த்தாரெய்த்தாரெய்த்தாரென்றில்லத்தாரும்புறத்தாரும் மொய்த்தாங்கலறிமுயங்கத்தாம்போகும்போ

ஆ— ஸத்வஸ்தோபாவிஷ்ரவணமாயிருந்த மோக்ஷம் கைவரும், இப்படிசெய்யாதார்க்குக் கைவாராது, அவர்கள் ஸம்ஸரித்தேபோமித்தனையென்கிறார். ॥௭॥

(எய்த்தார்) இவ்வாத்மஸாக்ஷாத்காரமோக்ஷமொன்று ஐஸ்வர்யஜபஸாத்தாலே கைவரார்

இ— ச்செய்கிறார் (ஸத்வஸ்தோபாவிஷ்ரவணமித்யாதியால்) கைவருமென்றது அப்யாஸஸாத்யமென்றபடி. வ்யதிரிக்தவிஷயஸம்பந்தமற்றால் உபாஸநநிஷ்டர்க்காராமோக்ஷம் ஸுலபமென்று வடகாதுபர்யம். அநந்தரம் ஸ்ருதிஸ்ருதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படிசெய்தார்க்கித்யாதியால்) இத்தால் "ஜ்ஞாத்வாதேவம் ஸர்வபாசாபஹாநி:" என்கிற ஸூக்தியிலே ஐந்தாம்பாட்டிலே ஸாத்யஸாதநம் ஸாங்கமுபஸம்ஹரித்த ஸாத்யஸாதநமென்னுமிடத்தையும், ஆறாம்பாட்டில் பொருமநாள்புகுந்த ஸாதநமென்னுமிடத்தையுமருளிச்செய்தவ ரிப்பாட்டிலே உபாயமனனபஜனாதிவேதநவத்தினுடைய ஸர்வேஷாமுபாஸ்யத்வத்தை வெளியிட்டபடி. ஸாத்யமாயிருந்துள்ள ஸாத்வஸித்வமக்ஷயத்தைக் கிடைசெனக்கு ஸ்வீகாரமாகத்தந்தருளுமென்று வனுடைய ஸௌஹார்த்தத்தை வ்யஜிப்பிக்கிறாரென்று ஸமதிஸ்ருதிமெ. ।௭।

✻ எட்டாம்பாட்டு. ✻

கீழ்ப்பாட்டிற்சொன்ன ஸாதநஸௌலப்யத்துக் கஷ்டஸௌலப்யத்தை யுபபாதித்துக்கொண்டு இப்பாட்டு கீழ்ப்பாட்டுக்கு சேஷமாகிறதென்று ஸங்கதிகாட்டாநின்றுகொண்டு பாட்டுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவ்வாத்மேத்யாதியால்) இதில் அந்திமதசையிலே என்கிறவித்தாலே பொழியும்போது ஐக்யத்தை

ஸ— போனவர்கள்தானே, "அந்தகாலஸ்மரணம் ஸர்வஸ்வம் ஜந! மோக்ஷஸாதநமுபாயம்" என்கிறபடியே ஜந்மஜராமரணங்களை விவ்ருத்தியாலே ஸாதநாய்க்கிடப்பர்களென்றபடி. தீர்க்காதிபாதிலே யத ஸ்மரணம் ஸம்ஸாரநிவ்ருத்திவிஷயமெ, இப்படி ஸாதநஸௌலப்யத்தை ஸாத்யமான ஸாத்விகங்களை க்கிடைசெனக்கு ஸ்வீகரிப்பித்தருளினானென்றுகருத்து. ।௭।

ஸ எய்த்தாரெய்த்தாரெய்த்தாரென்று - இளைத்தாரிளைத்தாரிளைத்தாரென்று, ஐயோ இவர்முடிந்தார்முடிந்தாரென்று என்றபடி. இதுக்கு அலற்றி என்கிறத்தோடே சம்பந்தம். அபிமதிதாநுசாரத்துக்குக் கருத்தென்னென்னில்? பாரம்பரியரான ஸம்பந்திகள் ஸுஜநனிவன் முடிவதுதங்களுக்குநெஞ்சிலே யிஷ்டமாயிருக்கையாலே யிவனுக்கு ராமநாமதிவ்ய ஸம்ஷ்காரஸ்ரவணப்பதற்குமுன்னே உபதேசஹாவம்பண்ணி முடிந்தான் முடிந்தானென்றுபலகாலும் கூப்பிட்டுப் பின்னையும் கலங்கப்பண்ணுவார்களித்தனைபோக்கி ராமவேதமென்பாலே இவன்கலங்கின தசையிலே நெஞ்சுதெளிந்து பகவத்ஸமாச்ரயணமான பாரமார்த்திகத்துக்கு நினைக்கவல்லனும்படிபண்ணுவார் ஒருவருமில்லையென்று கருத்து. இல்லத்தாரும் - க்ருஹத்திலேயிருக்கிற ஸம்பந்திபாந்தவாதிகளும், இல்லம் - க்ருஹம், இவன்தானிருந்தநாளிவர்களுக்கு ஒன்றும்கூடாமையாலே யினியிவன் முடிந்தாலிந்த க்ருஹம் நமக்கு ஸ்வாதீநமென்று இருக்கிற ஸம்பந்திகளுமென்றபடி. புறத்தாரும் - க்ருஹத்துக்குப் புறம்புள்ளவர்களும், இவன் க்ருஹத்துக்குப்புறம்பாய் ஊரவ்வூரிலிருக்கும் ஜநங்களுமென்றபடி. இவனும் ஸம்பந்திபாந்தவாதிகளான ஸமுதாயமும் பொருமையாலே யிவன் முடிந்தாலாகாதோ வென்றிருக்கிற வைரிஜநங்களுமென்கை. மொய்த்து- ஸங்கடமாக ஸஞ்ஜவித்து, ஸம்ப்ரமைத்துக்கழைத்தாலும் வாராதாரிதுக்குத் தாங்களேவந்துவிழுவர்களென்று கருத்து. ஆங்கு- அந்த தசையிலே, இவனுக்கு ஜ்ஞாநங்கலங்குகிற அந்த்யதசையிலேயென்றபடி. அலறி- இவனுக்குள்ள தெளிவும்போம்படி மஹாகோஷமாக வோயாதே க்ரந்தனம்பண்ணி, இன்னம் ஜீவிக்கஸம்பவமுண்டான தசையிலே பயத்தாலே ப்ராணன்போம்படி யாக்ரந்தனம்பண்ணி நிற்பர்களென்றுகருத்து. முயங்க- மேலேவிழ, மேல்மேல் விழுந்துக்கட்டிக்கொள்ளவென்றபடி. அந்த க்ரந்தனத்துக்குத் தப்பியிருந்தகுறை ப்ராணனும்போம்படி வ்யாக்ரங்கள்போலே விழுந்து கட்டிக்கொள்ளுவரென்று கருத்து. தாம் போகும்போது- தாங்கள் போகிறபோது, இந்த ஸம்பந்திகளையும் வைஷயிகத்தையும் விட்டுப்போகிறோமேயென்று நெஞ்சிங்கேயிழுக்கத் தங்களால் மீளவொண்ணாமையாலே தாங்கள்போதும் சரீரத்தைவிட்டு

மூ—உன்மத்தர்போற்* பித்தேயேறியநுராகம்பொழியும்போதெம்பெம்மானோடு* ஒத்தேசென்றங்குள்ளங்
கூடக்கூடிற்றாகில்நல்லுறைப்பே* ॥அ॥
கூடிற்றாகில்நல்லுறைப்புக்கூடாமையைக்கூடினால்* ஆடற்பறவையுயர்கொடி யெம்மாயனாவததுவதுவே*

ஆ—து, ஈத்ருசதசையிலே ஸமஸ்தஸாதநாகாரதாநுஸந்தானமும் வேண்டுமென்கிறார். ॥அ॥
(கூடிற்றாகில்) பரமபாகவதஸாதநாகாரதயா ஸ்வஸாத்யஸாதநத்வமெய்யமென்று சொல்லுவானென்? தத்விஷமன்றோவென்னில், பரமபாகவதனுக்கு மிவ்வாத்மாவுக்கும் ஐக்யங்கூடுவது ஸாமாநாதிகரண்யத்தாலைக்யங்கூடிலன்றோ, ஆகலால் அவனுமவனே இவனுமிவனே அவனிவனாகக்கூடாது,

---

இ—ஸம்க்ஷேபம். ஸமஸ்தஸாதநாகார உத்யாதிபால் எம்பெருமானோடொத்தேசென்று என்கிறது வ்யாக்யானம், சேஷ சேஷம் வ்யாக்யாதம். ॥அ॥

✱ ஒன்பதாம்பாட்டு. ✱

ஸ்வாத்மாவினுடைய ஸம்ச்லேஷத்தையும் உபேக்ஷாவஸ்தைகளையு மநுபவித்து அம்சாவத்தாலே இவனுடைய ஸௌசீல்யத்தைக் கொண்டாடாநிற்கிற வாழ்வார் இப்பாட்டிலே ஜீவபரயோரைக்யங் கூடாதென்று பேசுகை யஸம்மதமன்றோவென்ன ஸமர்ப்பிக்கிறார் (பரமசேத்யாதியால்) எம்மாயனாவதென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பரமபாகவதனுக்குமித்யாதியால்) கூடாமையைக் கூடினாலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாவேத்யாதியால்) ஸாமாநாதிகரண்யஸ்வாவதயா ப்ராணப்ருத்விவஸ்வாஸ ஜீவபரயோரைக்யங் கூடாதென்றுகருத்து. அதுவதுவேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆதலா

ஸ—ப்போகிற தசையிலே யென்றபடி. உன்மத்தர்போல்- உந்மாதம்கொண்டவர்களைப்போலே, பித்தேயேறி- சோகமே வடிவமாய், எத்தனையேனும் விகாரமருங்கூட உந்மத்தரைப்போலே அறிவுகெட்டென்றபடி. அநுராகம் பொழியும்போது- அநுராகம் வர்ஷிக்கும்போது, ஸமஸ்தஸாரணம் வழியாதபடி தாங்களாக நினைத்தும் தன்னைப்பண்ணின ஸாத்மன்றிக்கே இளையாளை பொன்னையும் பூட்டிக்கொண்டுவந்து முன்னேநிறுத்துவர்களாகையாலே இவனுக்கு ஸ்வாதீ ஸாதநஸாரணங்க ளில்லாதேபோன ஸாத்மன்றிக்கே விபரீதமாக அநுராகவ்ருத்தி யுண்டாய்விடுகிறதென்று கருத்து. எம்பெம்மானோடு- அஸங்க்யேயமான பரமபாகவதனோடே, ஒத்தேசென்று- ஸமாநமாகவேநடந்து, அவனோடு ஸமாநமாகவே அநுபவித்து என்றபடி. அவனைப்போலே இவனையும் ஜ்ஞாநாநந்தஸ்வரூபனாக அநுபவித்துக்கொண்டென்கை. அங்கு- அந்த ப்ரதமபர்வத்திலே, உள்ளம்- மநஸ்ஸானது, கூட- சேருகைக்கு, ப்ரவ்ருத்திக்கைக்கு என்றபடி. கூடிற்றாகில்- வழிக்குமாகில், அநுராகம் பொழியும்படியான அந்த உபதசையிலே சித்தம்தெளிந்திருந்து இப்படி ஸமாஸ்ய ஸ்தவிஷயமாக வழித்ததாகிலென்று வ்யாக்யாதம். இத்தனை அநுபவத்திலே யிதுகூடுகை அஸம்பாவிதமென்று கருத்து. நல்லுறைப்பு- நல்லவாய்ப்பு, நல்ல லாபமென்றபடி. ஸ்தாவிபாவமுண்டாமென்று கருத்து. ॥அ॥

(ஈ) கூடிற்றாகில்- ஸ்தவாஸாதனோ: ஸ்வாமிவைக்யம்வழித்ததாகில், நல்லுறைப்பு- நல்லவாய்ப்பு, ஸமீசீநலாபமென்றபடி. பரஸ்வரனோடு ஸம்பந்தமே பரமபுருஷார்த்தமென்றிருப்பார்க்கு அவனோடு ஸ்வாமிவைக்யந்தானே லபித்துவிட்டால் ஸந்தோஷமன்றோவென்கை. இது ஸாமாநாதிகரண்யமான வுபாலம்பம். ஆடற்பறவை- ஆடாநிற்கிறபக்ஷியை, ஸர்வேச்வரனுக்கவாயாரணமான விஹங்கமாயிருக்கப்பெற்ற ஸதைசிதியத்தாலே யாடாநின்றுள்ள பெரியதிருவடியையென்றபடி. உயர்கொடி- உச்ரிதத்வஜமாகவுடையவனை, தான்ஸர்வசேஷியென்று தோற்றும்படி வேதாத்மாவான கருடனைத்தனக்கு விஹங்கதவஜிகாரமாக வுடையவனையென்றபடி. எம்மாயனாவது- நம்முடையவாச்சர்யபூதனாவது, ஜீவஸ்வரூபமானதுஉசிசேஷ:. இஜ்ஜீவஸ்வரூபமானது ஆச்ரிதரான நமக்கநுபாவ்யனாய் ஆச்சர்யபூதஸ்வாமிவ குணசேஷ்டிதாதிகளையுடைய ஸர்வேச்வரனாய்விடுவதென்றபடி. கூடாமையை- ஸம்பவியாதவஸ்துத்தை, ஸாமாநாதிகரண்யைக்ய ப்ரவிஷ்டமான ஸமஸ்தாஸ்தாதிகளையென்றபடி. கூடினால்- வழிக்கப்பெற்றால், எம்மாயனாவதென்று கீழோடேஸம்பந்திக்கிறது. இவை ஸம்பவியாதாப்போலே ஜீவபரயோரைக்யமும் ஸம்பவியாதென்றுகருத்து. அது வதுவே- அந்தஸ்தஸ்வரூப ஸ்தஸ்வரூபமே, வேறொருஸ்வரூபமாக மாட்டாதென்றபடி.

மூ— விடைப்பண்ணியொருபரிசேயெதிர்வுநிகழ்வுகழிவுமா*யோடித்திரியுமியோகிகளுமுளருமில்லையல்லரே॥

ஆ— இங்ஙனே யிவற்றைச்சொல்லுவார் சிலருளரோவென்னில், ஸ்வதந்த்ரவசீகரிக்கு நிரதிசயாநந்தவாதிகளான யோகிகளென்றுமுளரென்கிறார், ॥கூ॥

(உளரும்) இப்படி ஜகதாகாரமாய் ஸர்வவிசேஷணவிசிஷ்டமாய் விலக்ஷணமுமான பரதத்வத்தை

இ— (விடைத்யாதியால்) ஜீவபரயோரைக்யம் நிரூபிக்கவந்தவ ரிவ்வுத்தராயத்திலே சிலயோகிகள்காலத்ரயத்திலுமுளரென்றிதைப்பேசுகை. ப்ரஸங்கமன்றோவென்ன பரமபதத்திற்சொன்னது ஸர்வஸ்ருதிவிஷயமென்கிற ஸம்ஸாரார்ணவமாகையாலே ஸங்கதமென்றுகாட்டுகைக்காக வந்த ஸங்கையைக்காட்டுகிறார் (இங்ஙனேயித்யாதியால்) இங்ஙனேயென்றது- ஸமிஞமாகவென்றபடி. இவற்றையென்றது- ஸ்வஸ்வரூபஸ்வரூபங்களையென்றபடி. ஆழ்வாரெழுந்தருளியிருந்தகாலத்துக்கு ஸநகாதிகள் காலாந்தரவாஸிகளாகையாலே அப்போது ஜீவபரயோரைக்யாநுபவமில்லாமையால் தாமதைநிரூபித்தது ஸர்வஸ்ருதிவிஷயமென்று தாமேஸங்கித்து பரிஹரிக்கக்குறையில்லையிறே. விடைப்பண்ணியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்வதீத்யாதியால்) அதில் நிரதிசயஸௌக்யத்தாலே ஒருபரிசேயென்கிறதற்குத் தாத்பர்யஞ்சொல்லிற்றாயிற்று. யோகிகளென்றது உபாஸகரென்றுநினைத்து அருளிச்செய்கிறார் (ஸநகாதிகளென்று) எதிர்வித்யாதிமேலுக்கெல்லாம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்றுமுளரென்று) ॥கூ॥

பத்தாம்பாட்டு.

உத்தராயத்தில் ஸம்ஸிலாஷத்தையருளிச்செய்கிறார் (இப்படியித்யாதி தந்தருளினபோதுஎன்னுமளவாலே) "பஶ்யந்தி ஸர்வஸம்ஸாரம் ஸர்வதோ நாயிகம் ததஃ" என்னும்படி நிரதிஶயபோக்யமான ஸ்வரூபவைலக்ஷண்யத்தைக்கண்ட ப்ரஸங்கத்தாலே இவர்தானிதுவே பரமபுருஷார்த்தமென்றிருக்கும் ஸ்வபாவமான ஸாம்யபுத்திலே புகாதபடிபண்ணியருளினனென்று இப்ப்ரயோகத்திலே அநுஸந்திக்கிறார்

ஸா— "பரமாத்மநோ யோ யோகஃ பரமார்த்த இதீஷ்யதே । மித்யைதத் அந்யத் த்ரவ்யம் ஹி நைதி தத்த்ரவ்யதாம் யதஃ" என்கிறஶ்லோகத்தை யிங்கேயநுஸந்திப்பது. இப்படி நீர் நிஷேதிக்கைக்கு இப்போது ப்ரஸக்தியுண்டோவென்ன? வருளிச்செய்கிறார்மேல். ஒருபரிசே- ஒருப்ரகாரமாகவே, பரிசு- ப்ரகாரம், ஸாஸ்த்ரமன்றிக்கே ஸ்வதிவசீகிதமான வேதேனுமொருப்ரகாரமாக வென்றபடி. ஜீவப்ரஹ்மணோஃ ஸ்வரூபைக்யவஸ்துத்வமாகவென்றபிப்ராயம். விடைப்பண்ணி- தோஷத்தைஸ்வீகரித்து, இதற்குத் திரியுமென்கிறத்தோடே யந்வயம். இங்கே "உக்தாதிஷ்ட கணவஸ்வாதித்யாத்யாஃ" என்கிறவாக்ய ஸ்மிருதம். எதிர்வும்- பவிஷ்யத்காலத்திலும், நிரஸநீயமான வித்யாத்மம் பவிஷ்யத்காலத்தில் ஸங்காராதிதுவெந ப்ரகொளவிக்கப்புகுகிறதாகையாலே இதுக்கப்போது ப்ராமாண்யை ப்ரஸக்தியுண்டென்றுகருத்தாலே வர்த்தமாநகாலங்களுக்குமுன்னே பவிஷ்யத்காலத்தை நிர்தேசித்தது. நிகழ்வும்- வர்த்தமாநகாலத்திலும், கழிவும்- பூதகாலத்திலும், ஆய்- உளராய், காலத்ரயத்திலும் ஸம்ஸாவிதரரயென்றபடி. ஒடித்திரியும்- தாங்கள்கட்டின தோஷமொருவர்க்கும் கிடைப்பதொன்றல்லாமையாலே "ஸ்வேந் ஸஜாதஸாஹஸ்ரம் ஸம்ஸாரபதவீம் வ்ரஜந்" என்கிறபடியே ஜநநபதவீஜம்பமராய் ஓடித்திரியாநிற்கிற, யோகிகளும்- யோகிகளும், ஔபநிஷத்ப்ரஸக்திகளான தேஹாயோகிகளுமென்றபடி. இது உபாஸகஸ்வதிகளென்கை. உகாரத்தாலே இத்தனை ஸந்நிவஸ்வபமான வித்யாத்மத்தைச்சொல்லுவாரும் சிலருண்டாயிருந்ததென்றுகருத்து. உளர்- உண்டாயிருப்பார்கள், இவ்விடத்தில் உகாரம்ஸாக்ஷ்யாலங்காரம். இல்லையல்லர்- இல்லாதவர்களல்லர், வ்யதிரேகேண த்ருடீகரிக்கிறபடி. யத்வா - ஒருபரிசேவிடைப்பண்ணித்திரியும் யோகிகளும்கழிவுமாய் நிகழ்வுமுளரும் எதிர்வுமில்லைபல்லரென்றந்வயிப்பது. தயாவியரான ஸ்வதிகளும் பூதகாலத்திலுமுளராய் இப்போதும் வித்யமாநருமாம். பவிஷ்யத்காலத்திலுமில்லாதவர்களல்லரென்றபடி. ஆக காலத்ரயத்திலுமுளரென்றதாயிற்று. இந்தயோஜனை ஸ்வதிகளென்றுமுளரென்கிற வ்யாக்யாநவாக்யஸாரஸ்யத்தாலே தோற்றுகிறது. இப்பக்ஷத்தில் உளருமென்கிறஉகாரத்துக்கு ஸமுச்சயம் கிடைக்கிறது. இந்தஉகாரத்துக்கு பவிஷ்யத்காலத்திற்போலே ப்ராமாண்யமில்லையாகிலும் ஸமீசீநமாக பவிதாகையால் அத்யந்தாவித்யமாநரல்லரென்றுகருத்து. ॥௧0॥

மூ—உளருமில்லையல்லராயுளராயில்லையாகியே* யுளரெம்மொருவரவர்வந்தென்னுள்ளத்துள்ளேயுறைகின்றார்* வளரும்பிறையுந்தேய்பிறையும்போலவசைவுமாக்கமும்** வளருஞ்சுடரு மிருளும்போற்றெருளுமருளுமாய்த்தோமே* ||௰||

ஆ—வ்யக்தஸங்கல்பஸ்வரூபஸ்தமாக கௌஸ்துபஸ்வபாவே யெனக்குக் காட்டித்தந்தருளி னிப்போது, முன்பு இஸ்ஸங்கல்பஸ்வரூபஸ்தமாக நிரவதிகஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநந்த கல்யாணகுணவிஶிஷ்டனாய்ச் ஸர்வேஶ்வர ஸ்வரூபரூபகுணவிபூதிவிஷயத்வேயாகெளதனை தன்னைக்காட்டிக்கொண் டென்னுள்ளேபுகுந்தருளினான், ஆதலால ஸமஸ்தாநுஸந்தாந ஜ்ஞாநாஜ்ஞாநவ்ருத்தி க்ஷயாதி ஸமஸ்தஸம்ஸாரவிரோதிகளெல்லாம் போக்கினோமென்கிறார். ||௰||

இ—கையாலே இவ்வாத்மவிலக்ஷணாநுஸந்தாந மிப்படியிப்ரவாஹத்திலே ஸம்க்ருஹீதமென்னவேணுமிறே. இப்படியென்றது- உணர்வுமுயிருமுடம்புமென்று தொடங்கி எட்டாம்பாட்டளவாக உக்தரீத்யாவென்றபடி. இதுக்குத் தந்தருளினானென்கிறத்தோடே அந்வயம். இத்தால் கீழநுபவித்ததெல்லாவற்றையும் ப்ரீத்யதிஶயத்தாலே ஸங்க்ரஹேணாநுஸந்திக்கிறா ரிப்பாட்டிலேயென்று ஸங்கதிஸூசிதமாகு. ஊர்த்வோர்த்வமென்றது- ஐந்தாம்பாட்டுதொடங்கி நாலுபாட்டுகளாலே அநுஸந்தித்த ஜ்ஞாநப்ரதாநப்ரவ்ருத்தி ஊர்த்வங்களைச்சொன்னபடி. ஸமஸ்தவிஷயகைகார்யமாயென்றது- யானுந்தானாயொழிந்தானை யென்றதைச்சொன்னபடி. விலக்ஷணமாயென்றது- தேனும்பாலும்கன்னலுமமுதுமாகித்தித்தித்து என்றதைச்சொன்னபடி. அவர் வந்தித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (முன்பித்யாதி புகுந்தருளினானென்னுமளவாலே) முன்பென்றது- கீழ்த்திருவாய்மொழி பேசிக்கொண்டநுபவிக்கும்போதென்றபடி. ஸௌந்தர்யேத்யாதிகளெல்லாம் கீழ்த்திருவாய்மொழியி லுக்தங்களாயிந்த த்விதீயப்ரவாஹத்தி லொருவரென்கிறவசநங்களிலே ஸம்க்ருஹீதங்கள். உளரெம்மொருவரென்கிறத்தையுங் கூட்டிக்கொண்டு ப்ரதமப்ரவாஹத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரீஶ்வரேத்யாதிபால்) இது ஸேஶ்வரஸாங்க்யத்துக்கும் உபலக்ஷணம். உத்தரார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆதலாலித்யாதிபால்) ஸமஸ்தாநுஸந்தாநஜ்ஞாநமென்றது- ஸமஸ்தாநுஸந்தாந

ஸ—இல்லையாகியே உளராய்- நிரீஶ்வர ஸாங்க்யமதத்திலே இல்லையாயே இருக்குமவராய், அவர்கள்பக்ஷத்தில் ஸத்தாஸ்தநாயில்லாதவரா யென்றபடி. ஸர்வேஶ்வரனில்லையென்று அவர்களாலே ஸாதிக்கப்பட்டவரான வென்றபடி. இல்லையல்லராய்- ஸத்ருஶமில்லாதவரல்லராய், உளரும்- விஶிஷ்டருமான ஸேஶ்வரஸாங்க்யமதத்திலே ஸர்வேஶ்வரனில்லையென்னாதே ஸாமாந்யேந விஶிஷ்டருமான வென்றபடி. ஸர்வநிர்பந்தாதி ஸேஶ்வரங்களொன்று மின்றிக்கே ஈஶ்வரனென்றொரு வஸ்துவுண்டென்றிப்படி யவர்களாலே ஸாதிக்கப்பட்டவருமானவெங்கை, ஸகாரம்கீழ்ச்சொன்ன ஸாத்தோடு ஸமுச்சயார்த்தம், எம்மொருவர்- நம்முடைய வொருவிலக்ஷணர், நமக்கு ஸ்வாமியாய் ஸர்வஜ்ஞத்வ ஸர்வ விலக்ஷண ஸௌந்தர்யாதி கல்யாணகுணவிஶிஷ்டங்களை யுடையவர், உளர்- விஶிஷ்டராயிராநின்றார், இப்போது எனக்கு ப்ரகாஶிக்கிற விஶ்வாதிகாநுஸந்தாநத்தையே ப்ரத்யக்ஷமாக நிரூபித்திருக்கிற நிரீஶ்வர ஸாங்க்யமதத்திலேயாதல் அப்படியேயாயிருக்கிற ஸேஶ்வரஸாங்க்யமதத்திலேயாதல் நான்புகாதபடி ஸமஸ்தகல்யாணகுண விஶிஷ்டாதிவிஶிஷ்டனாய்க் கொண்டெனக்கு ப்ரகாஶித்தாரென்றபடி, அவர்- அப்படி ப்ரகாஶித்தவர், வந்து- க்ருபையாலேதாமேவந்து, என்னுள்ளத்துள்ளே- என்நெஞ்சுக்குள்ளே, உறைகின்றார்- நித்யவாஸம் பண்ணாநின்றார், வளரும்பிறையும்- வர்த்திக்கிற சந்த்ரகலையும், தேய்பிறையும்போல- க்ஷயியாநிற்கிற சந்த்ரகலையும்போலேயிருக்கிற, அதுகளைப்போல் மாறிமாறி வாராநிற்கிறவென்றபடி. ஆக்கமும் அசைவும் என்று மாறியநயிப்பது. வ்ருத்தியையும் க்ஷயத்தையுமென்றபடி, ஆக்கம்- வ்ருத்தி, அசைவு- க்ஷயம். ஶரீர ஆரம்பகங்களான வ்ருத்திக்ஷயங்களையென்றபடி, இதுக்குமாய்த்தோ மென்கிறத்தோடே அந்வயம். வளரும் சுடரும்- ஸம்ருத்தமாகாநிற்கிற தேஜஸ்ஸும், ஒருநாளும் க்ஷயமில்லாதவனான ஸூர்யனு மென்றபடி, இருளும்போல்- அந்தகாரமும்போலேயிருக்கிற, ஸூர்யாந்தகாரங்களைப்போலே மாறிமாறி வாராநிற்கிற வென்றபடி, தெருளும்- ஜ்ஞாநத்தையும், ஸமஸ்தாநுஸந்தாநரூப ஜ்ஞாநத்தையும், மருளும்- அஜ்ஞாநத்தையும், தத்விபரீத யதார்த்தாஜ்ஞாநத்தையு மென்றபடி,, மாய்த்தோம்- போக்கினோம், ஸூக்ஷ

மூ—தெருளுமருளுமாய்த்துத்தன் றிருந்துசெம்பொற்கழலடிக்கீ* ழருளியிருத்துமம்மானு மயனுஞ் சிவனுந் திருமாலா* லருளப்பட்ட சடகோப னோராயிரத்து ளிப்பத்தா* லருளியடிக்கீழிருத்து நம்மண்ணல் கருமாணிக்கமே* ॥ கக ॥

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ—(தெருளும்) ஸத்த்வஸமாவிஷ்டப்ரக்ருதி ஸம்ஸ்ருஷ்டாக்களுக்கும் நியந்தாவாய் ஸ்ரிய꞉பதியா யிருந்துவைத்து ப்ராக்ருதவிஷய ஜ்ஞாநாஜ்ஞாநாதி ஸாதநஸவிரோதிகளைப்போக்கி ஸ்வாஶ்ரிதரைத்த திருவடிகளின்கீழ்சேர்ப்பிக்கும் ஸ்வபாவனாயிருந்த வெம்பெருமானுடைய வருளுக்கே பாத்ரமான சடகோ னோராயிரத்துளிப்பத்தும் வல்லாரை யருளியவன் அடிக்கீழிருத்து மென்கிறார். ॥ க

திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

இ—பூர்வவஜ்ஞாநமென்றபடி. ॥ ட

✳ நிகமனம். ✳

அயனுமித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸத்த்வஸ்த்வேத்யாதியால்) தெருளும்மருளும்மா த்தென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ராக்ருதேத்யாதியால்) ஸ்வாஶ்ரிதரையென்றது அத்யாஹ ரித்துச்சொன்னபடி. ஶேஷம் ஸ்பஷ்டம். ॥ க

ஶ—ப்ரயோஜ்யம் ஸாக்ஷாத்காரமாகையாலே அநுஷ்டாநஸம்பாதனத்தைப் போக்கினோம்; ப்ரபத்தே ஷு ஸாக்ஷாத்காரிக்கையாலே உத்தேஶ்யம் நமக்கு வ்யுத்பத்யாதிகளுமில்லை, ஸாக்ஷாத்பாவஸ்தாநத் ஸந்தநிஷ்டராகப் பெற்றோமென்று பூர்வதாத்பர்யம். ॥ க

ப தெருளும்- ஜ்ஞாநத்தையும், ப்ராக்ருதவிஷயத்தில் ஸ்வயத்நாதிஜ்ஞாநத்தையுமென்றபடி. மருளுட அதில் அஸஹாத்யஸ்வாதந்த்ர்யஜ்ஞாநத்தையும், மாய்த்து- நஶிப்பித்து, ஆஶ்ரிதர்க்கென்றுசேருத்து. தன்- தன் டைய, இதுக்கு அடியோடே அந்வயம். திருந்து- திருந்தாநின்ற, விலக்ஷணங்களாயிராநின்ற வென்றபடி திருத்தம்- விலக்ஷணம். ஸ்வாஶ்ரிதருக்கு வேறொருவர்காலில் குனியவொண்ணாதபடி ஸர்வஶோபாவ வஶீகரண ஸமர்த்தங்களாயிராநின்ற வென்கை. இது திருவடிகளுக்கு விஶேஷணம். செம்பொற்கழல்- சிவந் பொன்னாலான கழல்களையுடையதுகளான, கழல்- வீரகடகம். அத்யுஜ்ஜ்வலகநகமயமான ஆஶ்ரிதஸம்ரக்ஷண விஜயகடகத்தை யுடையதுகளான வென்றபடி. அடிக்கீழ். திருவடிகளின்கீழே, அருளியிருத்து மம்ம னும்- க்ருபைபண்ணி ப்ரதிஷ்டிதராக்கிக்கொள்ளும் நிரவதிகஸ்வாமியாயிற்கிற, ஸ்வாஶ்ரிதரை ஶேஷ꞉. அயனும்- அஜனாகிற்கிற, ஸத்த்வஶரீரகனாகிற்கிற வென்றபடி. சிவனும்- ருத்ரஶரீ கனாகிற்கிற, திருமாலால்- ஸ்ரிய꞉பதியாலே, அருளப்பட்ட- 'மயர்வற மதிநல மருளின' னென்கிறபட யே க்ருபைபண்ணப்பட்டவரான, சடகோபன்- ஆழ்வாருடைய, ஓராயிரத்துள்- அத்விதீயமான ஸஹஸ்ர த்தில், இப்பத்தால்- இத்தஶகத்தால், தஶகாஸ்வாத நிமித்தமாகவென்றபடி. இதுக்கு இருத்து மென்கி தோடே அந்வயம். நம்மண்ணல்- நம்முடைய ஸ்வாமியான, கருமாணிக்கம்- நீலரத்நம்போலிருக்கிற எம்பெ ருமான், அருளி- நிரவதிக க்ருபையைப்பண்ணி, அடிக்கீழ்- ஸ்ரீபாதச்சாயையிலே, இருத்தும்- ப்ரதி ஷ்டிதராக்கியருளும். இத்திருவாய்மொழிவல்லாரை யிதிஶேஷ꞉. ॥ கக

ஜ்ஞாநவைராக்யநிஷ்டாநஶேவதி ஸ்ரீமத்வேதாந்தராமாநுஜமஹாதேஶிகாயநம꞉.

ஸ்ரீ:.

த்ருதீயோபநிஷத்தாத்பர்யரத்நாவளீ.

(கண்கள்சிவந்து.)

ஸ்வாஸாயிநேத்ருஸநாதா ஸ்புரிதவிஹிதயா ஸம்ஸ்ம்ருதாநந்தஸாரா
நாயோபாம்தேஸுதாஜ்யாதிஷு அமதயா ஸ்வஸாம்யப்ரகாஶாத்।
அத்ருஶ்யத்ராவ்யபாவாத் ஸ்வபரவபுஷோ ஸாம்யதாநாத்
ஜ்ஞாநாஜ்ஞாநப்ரஶமகாத் ப்ரகடபதிஹுதி: பஞ்சஶிக்ஷாஸ்யம் ஸ்வப்ருதே ॥௮௮॥

(ஸ்வாஸாயிநேத்ருஸநாதாஸ்புரி) கண்கள்சிவந்து இத்யாதி- தன்னுடைய திவ்யாவயவ திவ்யாபரணதிவ்யாயுத ஶோபைகளோடேகூட ஆஶ்ரிதஹ்ருதயத்திலே ப்ரகாஶியாநிற்கையாலும், (விஹிதயாஸம்ஸ்ம்ரு) அடியேனுள்ளானித்யாதி- விஹிதமாக ஸ்மரணீயனாகையாலே ஸம்பந்திகளிலும் தத்ஸம்பந்திகளாயும் ஸம்பந்திகளாயுமிருக்கிற ஸத்த்வஸத்த்வங்களிலும் வ்யாபித்துநிற்கையாலும், (உராங்க) உணர்விலும்பெருவனை- ஜ்ஞாநாயிகரான நித்யஸூரிகளுடைய ஸத்தாதிகளும் தன்னையிட்டாம்படி ஸந்நிதியனு யிருக்கையாலும், (நாயோபாம் தேஸுதாஜ்யாதிஷு அமதயா) தேனும்பாலுமித்யாதி- தேன்போலேயும் பால்போலேயும் கன்னல்போலேயும் போக்யனாகையாலும், ஶரீரஜீவவ்யவஸ்திகளிலே யிருக்கையாலும், (ஸ்வஸாம்யப்ரகாஶாத்) இது மூன்றுபாட்டிலர்த்தம். நின்றவொன்றையுணர்ந்தேனுக்கு- நன்றாய் ஞானங்கடந்துபோய்- அதுவேவீடுவீடுபெற்றின்பம்- ஸாக்ஷாத்தானதன்னை ஸாக்ஷாத்காரகவுடையனை ஜீவாத்மஸாம்யத்தை ப்ரகாஶிப்பிக்கையாலும், (அத்ருஶ்யத்ராவ்யபாவாத்) எய்த்தாரெய்த்தாரித்யாதி- ஶரீராவஸாநத்தில் ஸந்நிதத்வத்தாலே ப்ராப்யனாகையாலும், (ஸ்வபரவபுஷோ ஸாம்யதாநாத்) கூடிற்றாகில் இத்யாதி- ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் தனக்கு ஐக்யத்தை நிவர்த்திப்பிக்கையாலும், (ஜ்ஞாநாஜ்ஞாநப்ரஶமகாத்) தெருளும்மருளும்மாய்த்தோமே- தன்னுடைய ஸம்பந்தத்துக்கு விரோதியானவஜ்ஞாநத்தையும் உபாயவிஷயமான அஜ்ஞாநத்தையும் போக்குகையாலும், எம்பெருமான்தன்னைக்குறித்து உபாஸ்யமேவதநனுக்கு ஸாதனமென்று ப்ரகாஶிப்பியாநிற்கிறானென்று "கண்கள்சிவந்து" என்கிற தஶகத்திலே யாழ்வாரருளிச்செய்தாரென்கிறார். ॥௮௮॥

ஸ்ரீமதேநிகமாந்தமஹாதேஶிகாய நம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

எட்டாம்பத்தில் எட்டாந்திருவாய்மொழிமுற்றிற்று.

ஒன்பதாந்திருவாய்மொழி.

ஆ— (கருமாணிக்கமலை) எம்பெருமான் நிர்ஹேதுகமாகத் தன்னழகைக்காட்டித் தம்மைவஶீகரித்துக்

ஒன்பதாந்திருவாய்மொழி.

இ— இப்படி பரிபூர்ணாநுபவரராயிருக்கிற ஆழ்வார் விரஹதஶையில்போலே இத்திருவாய்மொழியிலே அந்யாபதேஶத்தாலே பேசுகை யஸம்பவமன்றோவென்ன வ்யவஸ்தாபிக்கிறார் (எம்பெருமானித்யாதியால்) விரஹதஶையாகவுமாம், ஸம்ஶ்லேஷதஶையாகவுமாம், ஏதேனுமொருதஶையில் அவன்பக்கல் அத்யாஸக்திவத்தாலே 'நவிவேதாத்மநோமாத்ரம்" என்கிறகணக்கிலே தம்மைத்தாம் மறக்கும்படியான பாரவஶ்யமுண்டாகும்போது இவர் அந்யாபதேஶத்தாலே இழிவரென்கை உசிதமாகையாலே இங்குமத்யதிஶயத்தாலே அந்யாபதேஶமாகப் பேசுகிறாரென்றுகருத்து. இது கீழ்மேலொருவிடத்திலும் இப்படி கண்டதில்லையேயாகிலும் இத்திருவாய்மொழியிலே "அப்பன்திருவருள்மூழ்கினளே" என்றும் "கண்ணபிரான்திருவருள்களும் சேர்ந்தமைக்கடையாளந்திருந்தவுள" என்றும் இப்போது பரிபூர்ணஸம்ஶ்லேஷமும் தத்கார்யமான அவயவகாந்த்யாதிகளும் உளதாகச்சொல்லுகையாலே இதில் விரஹமுள்ளதாகச் சொல்லக்கூடாமையால் இத்திருவாய்மொழியில் அந்யாபதேஶம் ப்ரீதிநிபந்தநமென்றே அங்கீகரிக்கவேணு

ஆ—கொண்டு தம்மோடுகலந்தகலவியால் தமக்குவந்த நிவ்ருத்தியை அந்யாபதேசத்தாலேபேசுகிறார். இப்பிராட்டி திருப்புலியூரிலேயிருந்தருளுகிற வெம்பெருமானோடே யியற்கையாலே புணர்ந்தருளின புணர்ச்சியை யறியாமையாலும் "மானிடவர்க்கென்றுபேச்சுப்படில்வாழகில்லேன்" என்றிருக்கும்ஸ்வபாவத்தை யறியாமையாலும் இவளுடைய தாயாரும் உறவுமுறையாரும் ஸந்நிதியிலே இவளுக்கொருவனை அபேக்ஷித்து அவனுக்குக்கொடுக்கையிலே உத்யுக்தராகிறபடியைக்கண்டு இவள்ஸ்வபாவத்தையும் இவளெம்பெருமானோடு கலந்தகல

இ—மென்று திருவுள்ளம். நிஷேதகமாக என்றது- ஸமஸ்தஸ்வபாவாந்தராஶ்ரயத்துக்கு ஒன்றும் ஹேதுவன்றென்கிறகருத்தாலே. யதா- தன்காருண்யத்தையொழிய ஒன்றும் உபாயமேஹேதுவன்றென்னவுமாம். தன்னழகைக்காட்டியென்றது- இவருடைய ஶுத்தஸ்வபாவத்தின் ஸௌந்தர்யத்தைக் காட்டினதுக்கும் உபலக்ஷணம். யதா- திவ்யஸௌந்தர்யவிக்ரஹம்போலே ஆழ்வாருடைய ஶுத்தஸ்வபாவமும் "யஸ்யாத்ம ஶரீரம்" என்கிறபடியே இவன்திருமேனியாகையாலே இதினுடைய ஸௌந்தர்யமும் அவனுக்கேஅழகாகையால் தன்னழகையென்கிறவசனத்தாலே இதுவுங்கூட விவக்ஷிதமாகவுமாம். அவனுடைய ஸௌஶீல்யாத்யாதிகளையும் ரக்ஷகத்வத்தையும் அவனுக்குங்கூட க்ஷமாபலகமாம்படியான ஸ்வஸ்வரூபஸௌந்தர்யத்தையும் "அநந்யாராதனீயம் ஹி ஸக்ஷோணாத்ஸ்வயா" என்கிறகணக்கிலே அவனுக்குத்தாம் அநந்யத்விஶேஷணமாய்க்கொண்டு நித்யஶேஷமாயிருக்கிறபடியையும் அவனுடைய காருண்யத்தாலே ஸாக்ஷாத்கரிக்கப்பெற்று 'தாஸ்யஶேஷவஸ்த்வாதம் தாஸ்யாதிஜநலக்ஷணம் । ராமவோஹம் ததுஹ்யம் தந்யதஸ்திலக்ஷணா" என்னும்படி அநந்யார்ஹமாய் 'அஹமந்நமஹமந்நமஹமந்நம்' மென்கிறபடியே அவனுக்கு போக்யபூதராயிருக்கிற தம்பக்கல் அவன் அநந்யகாமியாய்க்கொண்டு ஸம்ஶ்லேஷிக்கிறபடியைக்கண்டு பதிவ்ரதையாய் விரஹிணியாயிருந்த உத்தராஜகுமாரிக்கு உத்தராஜகுமாரனை உத்தநாயகன் உகந்தணைத்துக்கொண்டுவந்து ஸம்ஶ்லேஷிக்கப்பெற்றபோது தன்னுடைய பதிவ்ரதாத்வம் ஸபலமாகையாலே இப்படி ஸபலமான பதிவ்ரதாத்வத்தைப்பெற்று நிரவதிகநிவ்ருத்தியுண்டாமாப்போலே தமக்குமவனுடைய மாதாபிதாமஹாதிஸம்ஶ்லேஷத்தாலே தம்முடையஶேஷத்வம் ஸபலமாகப்பெற்றதென்று மிகவும் நிவ்ருத்தியுண்டாய் இந்த ரஸாதிக்யத்தாலே பரவஶராய் ஸ்வஸ்வபாவத்தைமறந்து "ஸம்ஶ்லேஷ்யதயா பதிம்யதி நாவிநந்தம் ஸ்த்ரீபாவஸேவநஸாவிஷ்காரம்பஹுதா:" என்கிறபடியே நாயிகாஸ்வபாவராய் இந்த ஸ்தானஸௌஹார்த்தாலே உஜ்ஜ்வலிதகாந்திகநகஸித ஸமர்த்தயயராயிருக்க இந்த வ்ருத்தாந்தத்தைக்கண்டு இவருடையபரிவரான அந்யாபதிகளும் பாக்யவான மற்றுள்ள ஜநங்களும் இந்தஉத்ஸவத்துக்கு ஹேதுவேதென்று ஜிஜ்ஞாஸுக்களாயிருக்க; ஸ்ரீமதுரகவிமுதலான அநுராகர் இப்போது பரமபதஸம்ஶ்லேஷஸ்தாநத்தாலே அத்யந்தமாநந்தநிர்ப்பர ஸமர்த்தயயவராயிருக்கிறாரென்று அவர்களுக்கு அறிவித்தபடியை "ஸாக்ஷாத்கர்த்ருஸ்வரூப" என்னும்படியிருக்கிற ஔருராஜகந்யகைக்குத் திருப்புலியூர்நாயனாரோடே ஸம்ஶ்லேஷம்வ்ருத்தமாய் அத்தாலேஇவள் உஜ்ஜ்வலிதியாயிராநின்றாளென்று இவளுடைய தோழியானவள் அன்னைமாருக்கறிவிக்கிற வாக்யாபதேசத்தாலே பேசிக்கொண்டு தம்முடைய க்ருதார்த்ததையை அநுஸந்தித்துப் ப்ரீதராகிறாரென்றபடி. இப்படி இத்திருவாய்மொழி ஆஸ்யாவஸிகதையைச் சொல்லுகிறதென்கையாலே 'ஆஸ்யநிஷ்டாஜ்ஞகாத' மென்கிற லக்ஷணம் இத்திருவாய்மொழிக்கு உத்தீபகமென்று ஸூசிதமாய்த்து. இப்படிஸ்வாபதேசம் ஸமதமானாலும் இவ்வந்யாபதேசத்திலே பிராட்டிக்கு அந்தரங்கையான தோழியானவள் இந்தஸம்ஶ்லேஷரஸத்தையன்னைமார்க்குவெளியிடுகை யஸாமதமன்றோவென்ன வருளிச்செய்கிறார் (இப்பிராட்டியித்யாதி). இயற்கையாலே- பாஞ்சராத்ரபாத்மப்ரஸித்தகாந்தர்வவிவாஹவிதியிலே, புணர்ச்சி- ஸம்ஶ்லேஷம், (மானிவர்க்கித்யாதி) ஸந்நிதியிலே யொருவர்க்கிவள் என்கிறவார்த்தையுஞ் செவிப்பட்டாலென்றபடி. வாழகில்லேன்- ஜீவிக்கமாட்டேனென்றபடி. இவள்ஸ்வபாவத்தையுமித்யாதி இவள்உத்யோகத்தை யிப்பிராட்டியறியில் ஜீவியாளாகையாலே நாமிவளையிழந்தோமாவோமென்று பயத்தாலே யவர்களுக்கித்தை வெளியிடவேண்டுவதென்றுகருத்து. இத்திருவாய்மொழியில் விரஹவ்யஸனஞ்சொல்லுகையன்றிக்கே ஸம்ஶ்லேஷரஸம்சொல்லுகிறதாகில் இதற்கென்செய்கேனோவென்று விஷண்ணையாய்போலே சொல்லுவானேனென்ன வருளிச்

மூ— கருமாணிக்கமலைமேல்மணித்தடந்தாமரைக்காடுகள்போல்* திருமார்வுவாய்கண்கையுந்திகாலுடையாடைகள்செய்யபிரான்* திருமாலெம்மான்செழுநீர்வயற்குட்டநாட்டுத்திருப்புலியூர்* அருமாயன்பேரன்றிப்

ஆ—ரியையும் அறிந்திருந்த இவளுடையதோழியானவள் தான்சொல்லிற்றை இவர்கள் அங்கீகரிக்கைக்காக அவர்களோடேகூடத் தானும் ஸந்திக்தையாய்க்கொண்டு இவள் திருப்புலியூரிலிருந்தருளின எம்பெருமானுடையகுணங்களாலே வஶீக்ருதையாய் அவன்திறமல்லது மற்றொன்றறியாள், இனிநாம் கோவினைவைமுடியா அவனையே வரனாகப்பார்க்கவேணுமென்றுகொண்டு அவர்களை நிவர்த்திப்பிக்க, அவர்களும் இவளுக்

இ— செய்கிறார் (தாஞ்சொல்லித்தையித்யாதி) ஸந்திக்தையென்றது- அவர்களைப்போலே தானுமிவளையநுக்கூலிக்கொடுக்கையாலே பாக்ஷிகஸந்திக்தையென்றபடி. தான் ஸந்திக்தையல்லளென்னுமிடத்தையவர்கள் அறிந்தார்களாகில் தான்சொன்னத்தையெல்லா மிவர்கள் அநாதரிப்பார்களென்றுபார்த்து தன்னுடையபவிஷ்யத்தை மிகவும் கௌரவம்பண்ணுகைக்காக அவர்களோடு ஸந்திக்தையாயிருந்துகொண்டெல்லாருங்கூட யிவளையொருமநுஷ்ய ராஜகுமாரனுக்குக் கொடுப்பதாக உத்யோகித்து தேவதாராதனங்கள் பண்ணுவிக்கச்செய்தே இவ்வியானவள் இப்பிராட்டியினுடைய ஆபாவவிஶேஷத்தையும் அவயவசோபாவிஶேஷங்களையும் ஆராய்ந்துபார்த்தால் இவள் திருப்புலியூர்நாயனார்பக்கல் ஆஸக்தையாய் மநுஷ்யருக்கு யோக்யையல்லாதவளாயொழிந்தாப்போலே இராநின்றாள், இதுக்கென்செய்யக்கடவோமென்று விஷண்ணையைப்போலே சொல்லுகிறாளாகையாலே இதுஸங்கதமென்றதாயிற்று. ஸந்திக்தையாய்க்கொண்டு என்கிறதற்கு நிவர்த்திப்பிக்கப்புக என்கிறத்தோடேயந்வயம். *

முதற்பாட்டு.

இவள் திருப்புலியூர் இத்யாதி ஸவ்யாக்யம். இவளென்றது- இந்தராஜகந்யகையென்றபடி. கோவினைவை- யத்னம்பண்ணி உபாயங்கள், முடியாவென்றது- நிறைவேறாதென்றபடி, இப்படி திருப்புலியூர் எம்பெருமான்பக்கல் தனக்கு பக்ஷபாதம்தோற்றாதபடி தடஸ்தையாய்க்கொண்டு வார்த்தைசொல்லுகிற இவளிம்முதற்பாட்டின்வசநவிஷயத்திலே இவனுடைய ஸௌந்தர்யஸௌகுமார்யங்களை அதிஶயமாகவர்ணிக்கை அஸங்கதமன்றோவென்ன வசநிப்பிக்கிறார் (அவர்களுமித்யாதியால்) அவனுக்கு இவளைக்கொடுக்கையிலே ஸம்மதிப்பதாக அவனுடைய ஸௌந்தர்யஸாரஸ்யஶ்ரவணத்திலே யிழியும்படி இவர்களுக்கிவ்வளவுக்குநாக்ஷமம்பிறந்தவாறே "ஜிதஸம்ஸாரி:" என்றுகொண்டவனுடைய ஸௌந்தர்யஸௌகுமார்யங்களை அதிஶயமாக

பா— கருமாணிக்கமலைமேல். இந்த்ரநீலரத்நத்தின்மேலிருக்கிற, மணித்தடம்- ஸ்வச்சமான தடாகத்திலே. மணி- ஸ்வச்சம், ஸௌந்தர்யமுமான தடாகத்திலேயென்றபடி. தாமரைக்காடுகள்போல்- அநேகபத்மவநங்கள்போலே, இதற்குச் செய்ய என்கிறத்தோடே யந்வயம். திருமார்வு- லக்ஷ்மீகௌஸ்துபாஸ்பதமான வக்ஷஸ்ஸ்தலமும், வாய்- திவ்யாதரமும், கண் கை யுந்தி கால்- நேத்ர நாபி பாணி பாதங்களும், உந்தி- நாபி, உடையாடைகள்- திருவரையில் திவ்ய பீதாம்பரமும், உடை- அரை, ஆடை- வஸ்த்ரம், திருமார்வித்யாதி ஆடையித்யந்தத்துக்கு ஸமாஸமாகையாலே ஆடைகளென்று பஹுவசனம், செய்ய- இவையெல்லாம் சிவந்திருக்கிறவனை, இந்த்ரநீலரத்னம்போலே நீலோஜ்வலகாந்திரமணீயமான திருமேனியையும், அந்த ரத்னத்தில் ஸ்வச்சஸரஸ்தடாகம்போலே ஶோபிதமான காந்திஸமுத்ரத்தையும், அந்த தடாகத்தில் பத்மவனங்கள்போலே சிவந்திருக்கிற வக்ஷஸ்ஸ்தலவதனாத்யங்களையும் உடையவனையென்று பாவார்த்தம். பிரான்- உபகாரகனை, இந்த ஹாராராஜகந்யகைக்கு இப்படி ரமணீயனான நாயகனைப்பெற்ற ப்ரீதியாலே பிரானென்றும் எம்மானென்றும் கொண்டாடுகிறாள். திருமால்- ஸ்ரிய:பதியான, "அப்ரமேயம்ஹிதத்தேஜ: யஸ்யஸாஜநகாத்மஜா" என்கிறபடியே ஸர்வேஶ்வரனானவனென்றபடி. அழகுமாத்ரமன்றிக்கே வாத்ஸல்யமுமுண்டென்றபடி, எம்மான்- என்னுடையவனை, கீழ்ச்சொன்ன ப்ரீதியாலே கொண்டாடுகிறபடி. செழுநீர்வயல்- ரமணீயஜலஸம்ருத்தியான கேதாரங்களையுடைத்தான, செழு- ரமணீயம், குட்டநாட்டுத்திருப்புலியூர்- குட்டநாடென்கிற திவ்யஜநபதத்திலே திருப்புலியூரென்கிற திவ்யநகரத்தில், அருமாயன்- அருமையாய் ஆஶ்சர்யசேஷ்டிதனானவனுடைய, விஶிஷ்டஸந்நிதியுடையவனாய் ஆஶ்ரிதபக்ஷபாதியான எம்பெருமானுடையவென்றபடி, பேர் அன்றிப்பேச்சிலள்- அஸாதாரணமானவாசகங்களான திருநாமங்களை

மூ— பேச்சிலளன்னைமீரிதற்கென்செய்கேனோ* ||க||

அன்னைமீரிதற்கென்செய்கேனணிமேருவின்மீதுலவுந்* துன்னுசூழ்சுடர்நாயிறுமன்றியும்பல்சுடர்களும் போல்* மின்னுநீண்முடியாரம்பல்கலன்றானுடையெம்பெருமான்* புன்னையம்பொழில்சூழ்திருப்புலியூர்

ஆ— கவனழைகொக்குமோ என்றுகேட்க அவனுடைய அழகிலேயிறே இவளகப்பட்டதென்கிறார். ||க||
(அன்னைமீர்)அவன் ஒப்பித்தருளினுவிருக்குமழகைச்சொல்லி அவ்வழகிலேயிறே இவள்விழுந்ததென்கிறாள்.||

இ— ஸ்மரிக்கிறாளென்றதாயிற்று. பூர்வார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனுடைய அழகிலேயித்யாதியால்) உத்தரார்த்தத்தினர்த்தம் இவள் திருப்புலியூரின் ஸ்ம்ருதிவாக்யத்திலே ஸம்க்ருஹீதம். அதில் குணங்களாலேயித்யாதியாலே அருமாயன்பேரன்றிப்பேச்சிலள் என்கிறதற்குத் தாத்பர்யஞ்சொல்லிற்றாயிற்று. நாம் கோவினவை இத்யாதியாலே அன்னைமீரிதற்கென்செய்கேனோ என்கிறதற்குத் தாத்பர்யஞ் சொல்லிற்றாயிற்று. ||க||

✳ இரண்டாம்பாட்டு. ✳

பூர்வார்த்தார்த்தத்தை ஸம்க்ரஹிக்கிறார் (அவனித்யாதியால்) ஒப்பித்தருளினுலென்றது— அலங்கரித்துக்கொண்டாலென்றபடி. த்விதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவ்வழகிலேயித்யாதி) அவனுக்கு ஸௌந்தர்யாதிகளுண்டோ என்றவர்கள்கேட்டதற்கு உத்தரமாகக் கீழ்ப்பாட்டிலே திவ்யாவயவ ஸௌந்தர்யங்களைச் சொல்லி இப்பாட்டிலே திவ்யாபரணஸௌந்தர்யத்தைச் சொல்லுகிறாளென்று ஸங்கதிசொல்லிற்றாயிற்று. ||உ||

ஈ— மொழிய ஒருவார்த்தையுமில்லாதவள், கல்யாணகுணவாசகங்களான அவன்திருநாமமேயொழிய வேறொருவார்த்தையும் சொல்லுகிறாளில்லையென்றபடி. அவன்குணங்களிலே சக்தையாயிராநின்றாளென்கை, அன்னைமீர்? தாய்மார்காள், இதற்கென்செய்கேன்- இதற்கென்னபரிஹாரத்தைச் செய்யப்புகுகிறேன், ஓ என்று விஷாதத்யோதகம், இவளை மற்றொருராஜகுமாரனுக்குக்கொடுக்கிறது அஸக்யமாய்த்தோற்றுகிறதென்றுகருத்து. ||க||

ஈ அணி- அழகியதான, மேருவின்- மஹாமேருபர்வதத்தினுடைய, மீது- மேலே, உலவும்- உலவாநிற்கிற ஸஞ்சரியாநிற்கிற, உதிப்பாநிற்கிறவென்றபடி. இது ஸூர்யனுக்கும் நக்ஷத்ரங்களுக்கும் விசேஷணம். துன்னு- துற்றுக்கொண்டிருக்கிற, நிபிடங்களாயிருக்கிறவென்றபடி. லோகத்தில் காண்கிறவளவன்றிக்கே ஐதேசியஸம்ஸ்தானங்களானவென்கை. சூழ்- வர்த்துலங்களான, சுடர்- கிரணங்களையுடையவனை, நாயிறு- ஸூர்யனும், அன்றியும்- அவ்வளவன்றிக்கே பின்னையும், பல்- அநந்தங்களான, சுடர்களும் போல- தேஜஸ்ஸுக்களும்போலே, ஸூர்யநக்ஷத்ரம்போலேயென்றபடி. மின்னு- மின்னுகின்றுள்ள, ஸ்வப்ரகாசகிரணராஜிவிராஜிதமானவென்றபடி. நீள்- உத்துங்கமான, முடி- கிரீடத்தையும், ஆரம்- ஹாரத்தையும், ஆரம்- பதக்கமென்றுஞ்சொல்லுவர், பல்கலன்- மற்றுமுள்ளபலக்களான ஆபரணங்களையும், கலன்- ஆபரணம், தான்- ஸ்வயமேவ, ஸ்வாபாவிகமாகவென்றபடி. உடை- உடையவனை, மேருவைப்போலே தேஜஸ்ஸ்வர்ணமயமாய் ராஜாஸனமான திருமேனியையும் ததீயசிரஸ்தல ஸமுத்பூதஸூர்யமண்டலவஸ்ஸத்ருசமான கிரீடத்தையும் ததீயகடாக்ஷ நிரந்தரவர்ஷாமிர்த ஸ்வஸநக்ஷத்ரஜாலஸத்ருசஹாராதிப்ரமுகபூஷணங்களையுமுடையவனுவென்று பூர்வார்த்ததாத்பர்யம். எம்பெருமான்- என்நாயனுடைய, இதுஸ்ரீஸூக்தி, இவர்களுக்கு வாயழிக்கவொண்ணாதபடி இத்தனையும் மெய்யாகவுடைய என்னப்பனென்று உகந்துகொண்டாடுகிறபடி. இதுக்குத் திருப்புலியூரென்கிறத்தோடே அந்வயம். அம்புன்னைப்பொழில்என்று மாறியந்வயிப்பது. அழகிய புன்னைப்பொழில்களாலே- ரமணீயஉத்யானவனங்களாலே என்றபடி. சூழ்- பரிவ்ருதமான, திருப்புலியூர்- அந்ததிவ்யநகரத்தை, இவள்- பாலையான இப்பெண்பிள்ளையானவள் புகழும்- ஸ்லாகியாநிற்கிறாள், இவள்வார்த்தை சோலையில்கலந்தார்வார்த்தைபோலேயிராநின்றது. அதுகை பாலையான இவள்அவனை எங்கேகண்டாளென்று நினைத்திராதேகொள்ளுங்கோள், பூர்வஜன்மவாஸனையாலேமாகப்போய் உத்யானவனத்திலே அவனைக்கண்டு அவனுடைய ஆபரணஸௌந்தர்யத்திலும் அவ்வூரில்சோலைகளுடைய ரமணீயகத்திலும் நிமக்நசித்தையாயிருக்கிறாளாகத்தோற்றுகிறதில்லையோ இவள் வார்த்தையிலே

மூ—புகழுமிவளே* ॥௨॥

புகழுமிவணின்றிராப்பகற்பொருநீர்க்கடற்றீப்பட்டெங்கும்* திகழுமெரியொடுசெல்வதொப்பச்செழுங்கதிராழிமுதற்* புகழும்பொருபடையேந்திப்போர்புக்கசுரரைப்பொன்றுவித்தான்* திகழுமணிநெடுமாடநீடுதிருப்புலியூர்வளமே* ॥௩॥

ஆ—(புகழுமிவள்) அழகியனானலோ? ஆண்பிள்ளைத்தனமுடையனாக வேண்டாவோ என்னில்? அந்தஸௌலப்யபராக்ரமங்களையேகாண் இவள் இராப்பகல்புகழாநின்றதென்கிறார். ॥௩॥

* மூன்றாம்பாட்டு. *

இ— திருப்புலியூர்நாயனார்பக்கல் ஆஸக்தையாயிராநின்றாளென்று கீழ்ச்சொன்னத்தையே சொல்லுகிறதாகையாலே இப்பாட்டு வ்யாக்யாதப்ராயமென்றோவென்ன இதற்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக அவதாரிப்பிக்கிறார் (அழகியனிதயாதியால்) போர்புக்கசுரரைப் பொன்றுவித்தான் என்கிறதினம்சத்திலே பாட்டுக்குத் தாத்பர்யமென்றுகாட்டுகிறார் (அந்தஸௌலப்யேத்யாதியால்) ஸௌலப்யம்- ஸஜாதீயநாய்வந்து அவதரித்த ஸௌலப்யம், வீர்யம்- ப்ரதிபக்ஷநிரஸநஸாமர்த்யம், பாட்டிலே திருப்புலியூரினழகை ஸ்லாகிக்கிறாளென்று ஸ்வாரஸ்யமாகிறதேயாகிலும் 'ஸ்ரீமஸ்த்வம் ஸஹ பூஜயநிவஸ ஸ்ரீசேஷஸ்ரயநம்' என்கிறபடியே அதற்கும் அவனுடையஸம்பந்தத்திலே தாத்பர்யமென்றுகருத்து. ॥௩॥

ஸ—என்றுகருத்து. அன்னைமீர்- இவளைச்சேமித்துவளர்த்த தாய்மார்காள், இதற்கு- அவனுடைய ஆஸ்ரமஸௌலப்யம் அதுகாணப்பெற்றஇடமான திருச்சோலையிலும் ஆஸக்தியையுடையளாயிருக்கிற இதற்கு, வளர்த்த உங்களாலும் காத்துக்கொண்டிருக்கிற என்னாலுமன்றிக்கே வந்திருக்கிறவிதற்குஎன்று அன்னைமீரென்கிற ஸம்போதநஸூசிதவ்யாபாரத்தால் தோற்றுகிறது. என்செய்கேன்- என்னவ்யாபாரஞ்செய்யக்கடவேன், இது ஒருவராலும் நிவர்த்திப்பிக்கவொண்ணாதென்றபடி. ॥௨॥

ஸ பொருநீர்- கலஹாயித்தஜலங்களையுடைத்தான, பொரு- கலஹாயிதம். தரங்கஸங்கட்டத்தாலே பரஸ்பரபூதித ஸஜாதீய ஸம்பத்மானவென்றபடி. கடல்- ஸமுத்ரமானது, தீப்பட்டு- அக்நிவ்யாப்தமாய், உபமையாகவே அருளிச்செய்கிறபடி. இதுக்குச்செல்வதென்கிறதோடே அந்வயம். எங்கும் திகழும்- தன்னுடைய ஸர்வப்ரதேசங்களிலும் விளங்காநின்றுள்ள, எரியொடு- ஜ்வாலைகளோடே. செல்வது- நடந்து போவதற்கு, ஒப்ப- ஸத்ருசமாக, இதுக்கு ஏந்திப்போர்புக்கு என்கிறதோடே அந்வயம். செழுங்கதிர்- தீக்ஷ்ணகிரணஸாலிகளான, செழும்- தீக்ஷ்ணம், ஆழிமுதல்- சக்ராத்யாயுதங்களான, புகழும்- ஸ்லாகிக்கப்படுமவையான, ஸத்ருக்களுங்கூடக்கொண்டாடும்படியிருக்கிறவையானவென்றபடி. பொரு- யுத்தஸாதனங்களான, படை- ஆயுதங்களை, ஏந்தி- தரித்துக்கொண்டு, நீலமேகநிபமான ஸ்யாமளமான திருமேனியிலே ஜாஜ்வல்யமானங்களான திவ்யாயுதங்களை ஏந்திக்கொண்டு யுத்தார்த்தம் ஓடியருளுகிறபோது எங்கும் தீப்பட்டு ஜ்வாலாஸமூஹங்களோடே ஸமுத்ரமோடுகிறாப்போலே ப்ரகாசமாயிருக்கிறதென்றுகருத்து. போர்- யுத்தத்தில், புக்கு- ப்ரவேசித்து, அசுரரை- அஸுரர்களை, பொன்றுவித்தான்- நசிப்பித்தவனுடைய, இதுக்குத் திருப்புலியூரோடே அந்வயம். பொன்றுதல்- நாசம், திகழும்மணி- ப்ரகாசமானங்களான மணிகளையுடையவைகளான, நெடுமாட- உன்னதங்களான ப்ராஸாதங்களையுடைத்தான, நீடு- விஸ்தாரமான, அபரிமித விஸ்தாரங்களையுடைத்தான, திருப்புலியூர்- அந்த திவ்யநகரத்தினுடைய, வளமே- அழகையே, அவதாரணத்தாலே தம் திருநாமதேயத்தையும். பிராட்டி ஸ்ரீமிதிலையைவிட்டு 'ராகவஸ்ய நிவேசநே' என்று திருவயோத்யையையே கொண்டாடுமாப்போலே இவளு மவ்வூரையே கொண்டாடுகிறாளென்று கருத்து. இவள்- 'தவாஸ்மி தாஸ' என்கிற ஸ்லோகத்தின்படியே தாஸாநுரூபிணியான இப்பெண்பிள்ளையானவள், இராப்பகல்- நக்தந்திவம், நின்று- ஸ்திரமாய், அவிச்சேதமாயென்றபடி. இவள் அவனைக்கண்டறியாளாகிலும் காதால்கேட்டுச் சொல்லுகிறாளத்தனையென்கைக்கு இவள்ஒருக்கால் சொல்லிவிட்டாளோ; அஹோராத்ரம் இதுவே வாய்புலற்றாநின்றாளிறேயென்றுகருத்து. புகழும்- ஸ்லாகியாநிற்கிறாள்; நெஞ்சால்நினைத்து ஸந்தோஷியாநின்றாளோ; நாணம் குடிப்போய் வாய்விட்டு அலற்றாநின்றாளிறேயென்று கருத்து. ॥௩॥

மூ—ஊர்வளங்கிளர்சோலையுங்கரும்பும்பெருஞ்செந்நெலுஞ்சூழ்ந்* தேர்வளங்கிளர்ந்தண்பணைக்குட்டநாட்டுத்திருப்புலியூர்ச்* சீர்வளங்கிளர்மூவுலகுண்டுமிழ்தேவபிரான்* பேர்வளங்கிளர்ந்தன்றிப்பேச்சிலளின்றிப்புனையிழையே* ॥௪॥
புனையிழைகளணிவுமாடையுடையும்புதுக்கணிப்பு*

ஆ—(ஊர்வளம்) ஆண்பிள்ளைத்தனமே அமையாதிறே, குணவானுமிருக்கவேணுமிறேயென்னில், அவனுடைய ஸௌசீல்யவாத்ஸல்யாதி குணங்களிலேயிறே அகப்பட்டதென்கிறாள். ॥௪॥

✳ நாலாம்பாட்டு. ✳

இ— "அருமாயன்பேரன்றிப்பேச்சிலள்" என்று முதற்பாட்டிலேசொன்னவர்த்தத்தையே ஏர்வளமித்யாதியாலே இப்பாட்டிலுஞ்சொல்லுகிறதாகையாலே இது வ்யாக்யாநஸ்தானமன்றோவென்ன இதுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக வவதரிப்பிக்கிறார் (ஆண்பிள்ளையித்யாதியால்) த்ருதீயவாக்யார்த்தத்திலே பாட்டுக்குத் தாத்பர்யமென்றுகாட்டுகிறார் (அவனுடையவித்யாதியால்) ॥௪॥

✳ ஐந்தாம்பாட்டு. ✳

இப்படியிவள் ஸர்வேச்வரனுக்கு பொதுவல்லாதபடி அவன்பக்கலிலே ஆஸக்தையானாளென்று உபபாதி

ஈ— ஊர்வளம்- ஊரினுடைய ஸம்பத்தானது, கிளர்- விஜ்ரும்பிக்கும்படியான, ஊரினுடைய ஸம்பத்தெல்லாம் தங்களைக்கண்டவளவிலே தோன்றும்படியிருக்குமவையானவென்றபடி. சோலையும்- உத்யாநவநங்களும், பெரும்ஸம்பத்தைக் காகாக்ஷிந்யாயேந கீழேயும் அந்வயிப்பது. பெருங்கரும்பும்- அவ்வுத்யாநங்களோடு விகல்பிக்கலாம்படி ஸம்ருத்தங்களான இக்ஷுவநங்களும், பெருஞ்செந்நெலும்- தந்நாவிதவ்ருக்ஷங்களான ஸாலிவநங்களும், சூழ்ந்து- பரிவேஷ்டங்களாய், ஏர்வளம்- ஏர்களினுடைய அழகானது, ஏரென்று கலப்பையில்பூட்டப்பட்ட எருதுகள், வளம்- அழகு, கிளர்- விஜ்ரும்பியாநிற்கிற, ஸஸ்யஸம்ருத்தியாலே மனஸ்ஸுக்கு ஆஹ்லாதநீயங்களானவென்றபடி. தண்- ஜலஸம்ருத்தியாலே நித்யசீதளங்களான, பணை- கழனிகளையுடைத்தான, குட்டநாட்டுத்திருப்புலியூர்- அந்தத்திவ்யநகரத்தில், இதுக்குத் தேவபிரானென்கிறத்தோடேயன்வயம். சீர்- கல்யாணகுணங்களுடைய, ரக்ஷகத்வாவயவாகுணங்களுடையவென்றபடி. வளம்- ஸம்ருத்தியானது, கிளர்- கிளரும்படி, ஜகத்துக்கெல்லாம் ப்ரகாசிதமாம்படியென்கை. மூவுலகு- க்ருதகம் அக்ருதகம் க்ருதகாக்ருதகம், என்கிற த்ரிவிதங்களானலோகங்களை, உண்டு- ப்ரளயாபத்தில் கொண்டுபோகாதபடி தான்வயிற்றிலேவைத்து, இத்தால் ஸௌசீல்யவாத்ஸல்யம் வ்யஞ்ஜிதம். உமிழ்- ஸ்ருஷ்டிகாலத்திலே உத்கிரணம்பண்ணுமவனை, அவற்றைத் தன்வயிற்றில்நின்றும் வெளியேவிட்டுக் காரணகவைபவப்ரகாசநம்பண்ணி ரக்ஷிக்குமவனையென்றபடி. தேவபிரான்- ப்ரஹ்மாதிதேவதைகளுக்கு உபகாரகனானவனுடைய, தைத்யவீராதிஷ்டபந்தகளிலே அவர்களுக்கு ஸௌசீல்யனானவனுடையவென்றபடி. யத்வா- நித்யஸூரிகளுக்கு ஸ்வாநுபவப்ரதாநாதிகளாலே உபகாரகனானவனுடைய என்றுமாம். பேர்வளம்- திருநாமங்களுடைய ஸம்ருத்தியை, ஸௌசீல்யவாத்ஸல்யாதிகுணங்களுக்கு வாசகங்களான திருநாமங்களையென்றபடி. கிளர்ந்தன்றி- ஸ்ரீத்ருதிசயத்தாலே ஸஸம்ப்ரமோகச்சொல்லியல்லது, கிளர்க்கை- ஸஸம்ப்ரமோகச்சொல்லுகை, இன்று- இன்றைக்கு, நேற்றைக்கில்லையோ? இவளுக்கிந்த வைலக்ஷண்யமென்றுகருத்து. இப்புனையிழை- இந்தபுனையிழையானவள், புனையப்பட்ட இழைகளையுடைய இப்பெண்பிள்ளையானவள் என்றபடி. புனைகை- பூட்டுகை, இழை- ஆபரணம், அவன்திருநாமங்களைச்சொல்லச்சொல்ல ஸ்வயமாபரணம்பூண்டாப்போலே யிராநின்றாளென்றுகருத்து. பேச்சிலள்- மற்றொருபேச்சுடையவளல்லள், திருநாமங்களை ஸஸம்ப்ரமோகச்சொல்லுகிறளத்தனைபோக்கி மற்றொருவார்த்தையும் சொல்லுகிறாளில்லையென்று வாக்யதாத்பர்யம். ॥௪॥

ரூ—ஸர்வமெயாக ஶேஷமாய்நடக்கிறவென்றபடி. அடியரோர்க்கு- அடியாரானவெங்களுக்கு, இப்படி உன்னையொழிய நாயனில்லாதவெங்களுக்கென்றபடி. அருளி- க்ருபைபண்ணி, நீ- ஸர்வஶக்தியுக்தனான நீ, படிக்கு- பூமிக்கு, படி- பூமி, அளவாக- ஸப்ரமாணமாக, நிமிர்த்த- உஜ்ஜ்ரும்பிப்பித்த, த்ரிவிக்ரமதஶையிலே பூமியெல்லாம் வ்யாப்தமாகும்படி விஸ்த்ருதமாக்கப்பட்டவென்றபடி. ஸர்வாத்மாக்களுக்கும் ஸாதாரண ஸாமாந்யமானவென்கை. நின்பாதபங்கயமே- உன்னுடைய பாதபங்கஜத்தையே, ஒருநாள்- ஒருநாளாகிலும், த்ருஷ்டாந்தமொருக்கால் நாக்குநனைக்கவேணுமென்னுமாப்போலே சொல்லுகிறபடி. தலைக்கு- என்னுடைய ஶிரஸ்ஸுக்கு, அணியாய்- அலங்காரமாக்கியருளவேணும். ॥உ॥

திருப்புளிங்குடிக்கிடந்தானே- ஆஶ்ரிதர்க்காக திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே, இப்படியே ஆஶ்ரிதர்க்கு மற்றுமுள்ள அபேக்ஷிதங்களைச்செய்தருள வேண்டாவோவென்றுகருத்து. கிடந்தநாள்கிடந்தாய்- நீகண்வளர்ந்தருளுகிற அழகைக்காண ஆசைப்பட்ட ஆஶ்ரிதர்க்காகக் கண்வளர்ந்தருளுகிறநாளெல்லாம் இங்ஙனே ஒருபடியே கண்வளர்ந்தருளினாய், உன்திருவுடம்பு- அதிஸுகுமாரமான உன்திருமேனியானது, அசைய- அசையும்படி, அசைவு- நோவு, ஒருபடியே கண்வளர்ந்தருளுகையாலே வ்யதிதமாம்படியென்கை. எத்தனைகாலங்கிடத்தி- இன்னும் எத்தனைகாலம் கண்வளர்ந்தருளக்கடவை, நீஎல்லாம் ஆஶ்ரிதர்க்காகச்செய்யுமவனாகையாலே இனி கண்வளர்ந்தருளுகையை எனக்காகத் தவிரவேணுமென்றுகருத்து. தொடர்ந்து- அநுஸரித்து, 'யதாயாவதநம்ராஜாநம் யதாவத்தநுஹவிஸ்தநம்' என்கிறபடியே தத்தவஸரங்களிலே 'ஸாமந்தைக்ருதாஞ்ஜலய' 'அலங்காரவஸநம்ஹஸ்த்ரஜயிதிவ்' நிவேதநம்தநவேதம் ஸ்வீகாரோஷிப்ரியம்வேத" என்னும்போலே உன்னைப்ப்ரதக்ஷிணித்து அதிகாலவனுக்கிக்கொண்டென்றபடி. குற்றேவல்செய்து- அந்தரங்ககைங்கர்யங்களைப்பண்ணி, தொல்- அநாதியான, அடிமை- ஶேஷத்வத்தினுடைய, வழி- க்ரமத்திலே, தநாவித்யப்த்தியிலேயென்றபடி. வரும்- வாராநிற்கிற, தொண்டரோர்க்கு- தாஸபூதரான வெங்களுக்கு, இப்படி உனக்கே அடிமையாகையாலே அநந்யார்ஹர்களான வெங்களுக்கென்றபடி. இம்மூன்றுபாட்டிலும் தாமடிமைசெய்கிறோமென்று ஸ்வாபேக்ஷிதம்சொன்னபடியன்று, ஒருவனுக்கு அடிமையாயிருந்தவனை வேறொருவர்ரக்ஷியாரென்று தம்முடைய அநந்யார்ஹத்வம் வ்யஞ்ஜிப்பிக்கைக்காகச்சொன்னபடி. அருளி- க்ருபைபண்ணி, தடங்கொள்- தடாகத்தைக் அவஹேளித்துக்கொண்டிருக்கிற, தடம்- தடாகம், கொள்ளுகை- க்ரஹிக்கை, அதிவிஶாலமானவென்றபடி. தாமரைக்கண்- தாமரைப்பூக்கள்போலேயிருக்கிற திருக்கண்கள், விழித்து- அவ்வழகுகளையெல்லாம் நாங்கள்கண்டநுபவிக்கும்படி திறந்தருளி, நீ- ஸிம்ஹஸம்ஹநநனான நீ, எழுந்து- ஶேஷபர்யங்கத்தில்நின்றும் உத்திதனாய், உன்தாமரைமங்கையும்நீயும்- உனக்கநுரூபையான ஸ்ரீமஹாலக்ஷ்மீ

மூ—மிடங்கொண்மூவுலகுந்தொழவிருந்தருளாய் திருப்புளிங்குடிக்கிடந்தானே* ||௩||
புளிங்குடிக்கிடந்துவரகுணமங்கையிருந்து வைகுந்தத்துணின்று* தெளிந்தவென்சிந்தையகங்கழியாதே
யென்னையாள்வாயெனக்கருளி* நளிர்ந்தசீருலகமூன்றுடன்வியப்பநாங்கள்கூத்தாடிநின்றார்ப்பப்*

ஆ—வுடம்புநோவாதே உன்னடியேனை யெனக்காகநீயொருநாள் தாமரைத்தடாகம்மலர்ந்தாப்போலே திருக்கண்களைவிழித்து எழுந்திருந்து உன் தாமரைமங்கையும் நீயும் இந்தலோகமெல்லாம் வாழும்படி இருந்தருளாயென்கிறார். ||௩||

(புளிங்குடி) உன்னுடையகாருண்யத்தினாலே எனக்காகப் புளிங்குடிக்கிடந்து வரகுணமங்கையிருந்து வைகுந்தத்துள்நின்று தெளிந்தவென்சிந்தை யகங்கழியாதே யென்னை யடிமைகொண்டருளினாப்போலே இன்னமும் உன்னுடைய வரகாருண்யத்தினாலே சோதிவாய்திறந்து தாமரைக்கண்களாலேநோக்கித் திருவடிகளையென் தலையிலேவைத்தருளிப் பிராட்டியோடேகூட இருந்தருளி ஆழ்வார்க்கபேக்ஷிதத்தைச் செய்தருளினானென்று இந்த கல்யாணகுணத்தைக்கண்டு லோகமெல்லாம் விஸ்மயப்பட நாங்கள்கூத்தாடிநின்றாரவாரப்பட

இ— போடேயுபயம். அதீதவாக்யத்தை ஸங்க்ரஹிக்கிறார் (உன்னடியேனித்யாதியால்) தம்ஸம்பந்திகளையுங்கூட்டி தொண்டரோர்க்குஎன்று ப்ஹுவசநமாயிருந்ததேயாகிலும் தாமேப்ராயேண விவக்ஷிதரென்னும்கருத்தாலே அடியேனை எனக்கென்று ஏகவசநமாக நிர்தேசித்தது. யத்வா— கீழ்ப்பாட்டுக்களில்போலே இப்பாட்டில் குடியைநிர்தேசியாமையாலே தொண்டரோர்க்கென்றது ஸ்வாத்மநிப்ஹுவசநமென்று கருத்தாகவுமாம். சேஷம் ஸ்பஷ்டம். (தாமரைமங்கையுநீயும்) இத்யாதியாலே கீழ்ப்பாட்டிலே உன்திருவடிகளைத் தலைக்கணியாயென்றவர் இப்பாட்டிலே பிராட்டியும்நீயு மிருந்தருளுமழகைக் காணவேணுமென்கிறாரென்று ஸங்கதிஸூசிதை. ௩

✳ நாலாம்பாட்டு. ✳

பூர்வார்த்தத்தில் விசேஷணங்கள் ஸப்ரயோஜநங்களாகைக்காக இது த்ருஷ்டாந்தமென்கிறார் (அருளினாப்போலேயென்று) எனக்கருளியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இன்னமுமித்யாதியால்) நளிர்ந்தசீரென்கிறதற்கு ப்ரஸ்தாநகுணமாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சோதிவாயித்யாதிகுணத்தையென்னுமளவாலே) உலகம்மூன்றுடன் வியப்பவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (லோக

ப—யான ஸர்வாவஸ்திநியும்நீயுமாக, மங்கை- யுவதி, கீழே 'நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்' மென்றிருவருக்கும் ஸம்வலிதவைசேஷ உபாயத்வஞ்சொல்லிற்று. இங்கிருவருக்கும் ப்ராப்யத்வஞ்சொல்லுகிறது. இடங்கொள்- இடத்தைக்கொண்டிருக்கிற, விஸ்தீர்ணமானவென்றபடி. மூவுலகும்- த்ரிலோகமும், தத்ஸ்தஜநங்களெல்லாருமென்றபடி. தொழ- உங்களைஸேவித்துவாழும்படி, இருந்தருளாய்- 'தம்வெருவண ஸங்காசவிஷ்டம்ஸலங்க்ருதம்' என்கிறபடியே திவ்யாஸநகையாக இருந்தருளவேணும். ||௩||

ப— புளிங்குடிக்கிடந்து- எனக்காகத் திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளி, வரகுணமங்கை இருந்து- வரகுணமங்கை என்கிற திவ்யதேசத்திலே திவ்யாஸிகைசெய்தருளி, வைகுந்தத்துள்நின்று- ஸ்ரீவைகுண்டமென்கிற ஸ்தலத்தில் நின்றருளி, தெளிந்த- நான் ஸந்நிதியினென்றகலாதே கண்கள்சிவந்திலே ஸ்வாதந்த்ர்யாபாத்ரத்தைக்கண்டு தேறினவனை, என்சிந்தையகம்- என்னுடைய ஹ்ருதயாகாசப்ரதேசத்தை, சிந்தை- ஹ்ருதயம், அகம்- உள், கழியாதே- விட்டுப்போகாதே, என்னையாள்வாய்- என்னையடிமைகொண்டருளுகிறவனே, இது ஸம்போதநம், எனக்கருளி- இப்படிபோலே இன்னமும் எனக்காகக்க்ருபைபண்ணி, நளிர்ந்த- சீதளமான, ஸந்தாபயித்தார் ஹ்ருதயம்குளிரும்படியான வென்றபடி. சீர்- உன்னுடைய கல்யாணகுணங்களை, என்பக்கல் உனக்குள்ள ஔதார்யஸௌசீல்யாதிகளை யென்றபடி. உலகம்மூன்று- லோகத்ரயமும், விசேஷஜ்ஞரோடு விசேஷஜ்ஞரல்லாதாரோடு வாசியற எல்லாருமென்றபடி. உடன்- கூட, ஏககண்டராயென்றபடி. வியப்ப- விஸ்மயப்படும்படியாக, நாங்கள்- உன்நடையழகைக்காண வாசைப்படுகிறநாங்கள், கூத்தாடி- நீநடந்தெழுந்தருளுகிற அழகைக்கண்ட ஹர்ஷப்ரகர்ஷத்தாலே நர்த்தநம்பண்ணி, நின்று- ஸ்திரமாய் அவிச்சிந்நமாயென்றபடி. ஆர்ப்ப- ஆரவாரம்பண்ணும்படியாக, இதுக்கு வாராயென்கிறத்தோடே யந்வயம்.

மூ—பளிங்குநீர்முகிலின்பவளம்போற்கனிவாய்சிவப்பநீகாணவாராயே* ||௪||
பவளம்போற்கனிவாய்சிவப்பநீகாணவந்துநின்பன்னிலாமுத்தம்* தவழ்கதிர்முறுவல்செய்துநின்திருக்கண் டாமரைதயங்கநின்றருளாய்* பவளநன்படர்க்கீழ்ச்சங்குறைபொருனற் றண்டிருப்புளிங்குடிக்கிடந்தாய்* கவளமாகளிற்றினிடர்கெடத்தடத்துக்காய்சினப்பறவையூர்ந்தானே* ||ரு||

ஆ—நிறமழகிதான மேகத்திலேயுண்டான பவளம்போலே அழகியதிருப்பவளத்தில் சிவப்போடேகாணலா ம்படி நீவரவேணுமென்கிறார். ||௪||
(பவளம்போல்) வருமிடத்தில் ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்காகப் பெரியதிருவடிமேலேறி வந்தருளினாப்போலே.

இ—(மித்ராக்ஷியால்) காணலாம்படியித்ராக்ஷியாலே கீழ்ப்பாட்டிலே திவ்யாவயவசோபையைக் காணவேணுமென்றவ ரிப்பாட்டிலே 'ஹஸிதம் மதுராக்ஷம்' என்னும்படியான ஸ்மிதஅழகைக் காணவேணுமென்கிறாரென்று ஸங்கதி ஸூசிதமாகை. ||௪||

ஐந்தாம்பாட்டு.

ஸாமீப்யாக்ஷத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீகஜேந்த்ராக்ஷியால்) இத்தால் கீழ்ப்பாட்டில்.

ஈ— பளிங்குநீர்- ஸ்படிகம்போலே அதிநிர்மலஜலத்தையுடைத்தான, பளிங்கு- ஸ்படிகம், அதிநிர்மலஜலத் தைப்பானம்பண்ணி அத்தாலே ஸ்வச்சநீலவர்ணமானவென்றபடி. முகிலின்- மேகத்தினுடைய, பவளம்போல்- ப்ரவாளம்போலே, ஸந்த்யாவந்தநஸமயத்தில் ஸந்த்யாராகத்தோடே ஸஹ மேகாங்கப்ரவிஷ்டமாயிருந்து மேகத்தின் மத்யப்ரதேசத்திலே படர்ந்ததொரு நவவித்ருமம்போலே யென்றபடி. கனிவாய்- கனிந்தவாயானது, ஸ்நிக்தகோமளமான உன்னுடைய திவ்யாதரமானதென்றபடி. சிவப்ப- சிவக்கும்படி, எங்களுடைய ஸம்ஶ்லேஷங்க ளைக்கண்டு ஸந்தோஷமானமாகையாலே மிகவும் ஆரக்தமாய்த்தோற்றும்படியென்கை. காண- நாங்கள்காணும் படி, நீவாராயே- நீநடந்தருளவேணும். ||௪||

ரு— நன்பவளவென்று அந்வயிப்பது. ஶ்லாக்யங்களான வித்ருமலதைகளினுடைய, படர்க்கீழ்- தூறுகளின்கீ ழே, படர்- தூறு, சங்கு- ஶங்கங்களானவை, உறை- வஸிக்கும்படியான, பொருநல்- தாம்ரபர்ணியை யுடைத்தான, நீயிருக்கிறவூரில் சங்குகள்எல்லாம் பவளக்கொடிகளைச்சேர்ந்து வர்த்தியாநிற்க; நான் உன்னு டைய திவ்யாதரமாகிற ப்ரவாளத்தைக்காணவும் பெறுதொழியலாமோ பிரானே? என்றுகருத்து. திருப்பு ளிங்குடிக்கிடந்தாய்- திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே, கவளமாகளிற்றின்- கவளக்ராஸி யான மஹாகஜத்தினுடைய, களிறு- கஜம், கவளமாகளிறென்று ஆஶ்ரயணீயோபலக்ஷணம். கவளக்ராஸ நஶீலமென்கையாலே இதற்குமுன் ஒருகாலத்திலும் க்லேஶமறியாதே நித்யஸுகோசிதமான வென்றபடி. இடர்- து:க்கமானது, திவ்யவர்ஷஸஹஸ்ரம் க்ராஹஸ்பர்ஶத்தாலுண்டான து:க்கமானதென்றபடி. கெட- நிவ்ருத்தமாகைக்காக, தடத்து- தடாகத்திலே, தடம்- தடாகம், அந்தயானையானது அகப்பட்டுக்கிடக்கிற மடுதடாகத்திலேயென்றபடி. இதுக்கு ஊர்ந்தானேயென்கிறத்தோடே அந்வயம். காய்சின- காயாநிற்கிறகோ பத்தையுடையவனை, சினம்- கோபம், ஶத்ருவிஷயஜாதகோபமுடையவனை யென்றபடி. பறவை- பக்ஷி யை, ஸ்ரீவைநதேயனையென்றபடி. ஊர்ந்தானே- நடத்தினவனே, "ஹரிம்காருணிகம் நாராயணம் ப்ரஸமீக்ஷ்ய ஸ்வாமிநம் தார்க்ஷ்யஸ்கந்தஸ்தம்" என்கிறபடியே அவன் வேகம்போராதென்று தள்ளிநடத்திக்கொண்டு வந்தவ னேயென்றபடி. ஸம்போதநம். பவளம்போல்- ப்ரவாளம்போலே ஆரக்தமான, கனி- ஸ்நிக்தகோமள மான, வாய்- திவ்யாதரமானது, சிவப்ப- சிவக்கும்படி, என்னைக்காணப்பெற்றஹர்ஷத்தாலே அதிஶயாரக்த மாம்படியென்கை. நீ- நிரதிஶயபோக்யனான நீ, காண- நான் கண்ணாலேகாணும்படியாக, வந்து- எ ன்முன்னே எழுந்தருளி, நின்பல்- உன்னுடையதந்தங்களாகிற, லகாரஸ்ய ஸ்வரவர்ண ஸ்வரமைஶ்ரம், நிலாமுத்தம்- ஜ்யோத்ஸ்நாஸமாநங்களான சந்த்ரஹாஸங்களுடைய, விஸ்ரம்பணீயவஸ்துகாந்திகளான முத்து க்களுடையவென்றபடி. கதிர்தவிழ்என்று அந்வயிப்பது. கதிர்- கிரணங்களானவை, தவிழ்- உள்ளடங்காமல் வெளியிலேதவிழும்படியாக, ஸ்மிதம் விகஸிதமாகையாலே காந்திப்ரஸரணமும் ஸ்மிதமென்கைக்காக ஓடு ம்படியென்றுஸூசித தவிழும்படியென்றது, முறுவல்செய்து- ஸ்மிதம்செய்தருளி, நின்திருக்கண்தாமரை- உன்னுடைய ஸ்ரீநயநாரவிந்தங்கள், கண்தாமரையென்கிறவிடத்தில் ணகாரஸ்தநேரஸ்வ தகாரஸ்வ ...

மூ—காய்சினப்பறவையூர்ந்துபொன்மலையின்மீமிசைக்கார்முகில்போல* மாசினமாலிமாலிமாலியென்றங்கவர் படக்கனன்றுமுன்னின்ற* காய்சினவேந்தேகதிர்முடியானேகலிவயற்றிருப்புளிங்குடியாய்* காய்சினவாழி சங்குவாள்விற்றண்டேந்தி யெம்மிடர்கடிவானே* ௬

ஆ—கனிவாய்சிவப்ப நீகாணவந்து நின்பன்னிலாமுற்றம் தவழ்கதிர்முறுவல்செய்து நின்திருக்கண்தாமரை தயங்கநின்றருளாயென்கிறார். ௬

(காய்சினப்பறவையூர்ந்து) உம்முடையஇந்த [illegible] ஆர்த்தியபங்களுக்குப் ப்ரதிபந்தகங்களில்லையோ [illegible] முடியுமோவென்னில்? என்னுடைய விரோதிகளுக்கு ப்ரதிபந்தகங்களைப் போக்குகைக்காகவன்றோ ஸர்வசக்தி [illegible] திவ்யாயுதங்களை யேந்தியருளியிருக்கிறது. ஆனபின்பு பொன்மலையின்மீமிசைக்கார் முகில்போலக்காய்சினப்பறவையூர்ந்து மாலி ஸுமாலி மால்யவத் ப்ரப்ருதிகளை நிரஸநம் பண்ணியருளினப்

இ—நான்காணும்படிவரவேணுமென்றது- [illegible] த்தாலன்றிக்கே ஸ்ரீமஜ்ஜநகராஜ்ஜர்க்கும் போலே ஸாக்ஷாத்காணும்படிவரவேணுமென்றபடி. [illegible] ஸமாஸ்ரயணீயனாகநின்றருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறாரிப்பாட்டிலேயென்று ஸங்கதிஸூசிதமிதி. ௬

✳ ஆறாம்பாட்டு. ✳

அவன்நமக்கு நிரவாதிகவைபவனென்னும்ப்ரதிபத்தியாலே அவனுடைய ஸௌந்தர்யாதி ஸகலகல்யாணகுணங்களான [illegible] ஸகலபோகங்களைப் பெறவேணுமென்றபெருவிருப்பத்தாலே இப்பாட்டிலே அவனுடைய [illegible] த்தைவர்ணிக்கை [illegible] வென்ன வருளிச்செய்கிறார் (உம்முடையவிரோதியால்) முடியுமோஎன்றது- விரோதிகள் கிறைவேறுமோஎன்றபடி. ஸர்வாபதாத்துக்குத் தாத்பர்யம்

ஸ—ஸாதஸெம:. தயங்க- ப்ரகாசத்தாலே [illegible] களாக, தயங்குகை- [illegible] மாகை, நின்றருளாய்- நாலடிநடந்துவந்தருளின நீ ஸஞ்சாரிச்ரமத்தாலே நடக்கவும்மாட்டாதே ஸர்வஜ்ஞனே என்முன்னே நின்றருளவேணும்.

காய்சின- காயாநிற்கிற சினத்தையுடையவையான, சினம்- க்ரோதம், ஆச்ரிதவிரோதிவிஷயத்தில் தவியாநிற்கிற க்ரோதத்தையுடையவையானவென்றபடி. ஆழி சங்கு வாள் வில் தண்டு- ஸர்வசக்தி ஸம்பந்நமாயுதங்களை, தண்டு- கதை, ஏந்தி- தரித்துக்கொண்டு, எம்மிடர்- எங்களுடையவாதத்தை, கடிவானே- நிரஸிக்கக்கடவனை, எம்மென்று ஸாதுநிவஹங்கள். என்னுடைய ப்ரதிபந்தகங்களையெல்லாம் நிரஸிக்கக்கடவனையென்று [illegible]. இது புளிங்குடியாயென்கிறதற்கு விசேஷணம். பொன்மலையின்- கனககிரியினுடைய, மீமிசை- மேலேயிருந்ததான, கார்முகில்போல- காளமேகம்போல, காய்சின- ஸத்ருக்களைக்காயாநிற்கிற க்ரோதத்தையுடையவனை, பறவை- பக்ஷியை, கருடனையென்றபடி. ஊர்ந்து- நடத்திக்கொண்டு, இதற்குக்கனன்றுஎன்கிறத்தோடே அந்வயம். மாசின- மஹாக்ரோதமுடைய, மாலிமான்மாலிஎன்றவர் என்று சுமிப்பது. மாலிமஹாமாலிஎன்கிறவர்கள், மான்- மஹான், மஹானை மாலி என்றதுஸுமாலியென்றபடி. இது மால்யவானுக்கும் உபலக்ஷணம். மாலி ஸுமாலி மால்யவாநு என்று ப்ரஸித்தர்களான அந்தராக்ஷஸர்களென்றபடி. அங்கு- அந்தபாதாளத்திலே, பட- படும்படி, வராஜிதராம்படியென்கைபடுகை- நசிக்கை. ஆனாலும் நசித்தவன் மாலிஒருவனேயொழிய மற்றையிருவரும் அப்போது நசித்தவரல்லாமையாலே படஎன்றது ஸாமாந்யாபிப்ராயம். கனன்று- ப்ரகோபித்து, கனறுகை- ப்ரகோபிக்கை, முன்நின்ற- அவர்கள்முன்னே நின்றருளினவனை, முன்னின்றநிலையினுடைய ஸௌந்தர்யத்தைக்கண்டவளவிலே ராக்ஷஸர்களெல்லாம் நடுங்கிஓடினார்களென்றுகருத்தாலே முன்னின்றவென்றது. காய்சின- "கோபஸ்ய வசமேயிவாந்" என்கிறபடியே ஆச்ரிதவிரோதிகளைப் ப்ரதவியாநிற்கிற க்ரோதமானத்தையுடையவனை, வேந்தே- ஸ்வாமீ, வேந்தன்- ஸ்வாமீ, கதிர்முடியானே- கிரணஸாலியான கிரீடத்தை யுடையவனை, கதிர்- கிரணம், ப்ரதிபக்ஷநிரஸநஸஞ்ஜாத வீரஸ்ரீயாலே ஜாஜ்வல்யமான திவ்யகிரீடஸாலியானவென்றபடி. கலிவயல்- ஸஸ்யஸம்பத்ஸம்ருத்தமான வயல்களையுடைத்தான, கலியென்றுஸம்ருத்தி. திருப்புளிங்குடியாய்- திருப்புளிங்குடியிலே எழுந்தருளியிருக்குமவனே, நின்திருக்கண்தாமரை தயங்கநின்றருளாயென்று கீழ்ப்பாட்டில் க்ரியையை அநுஷங்கித்துக்கொள்வது. ௬

மூ—எம்மிடர்கடிந்திங்கென்னையாள்வானேயிமையவர்தமக்குமாங்கனேயாய்* செம்மடன்மலருந்தாமரைப்பழனத்தண்டிருப்புளிங்குடிக்கிடந்தாய்* நம்முடையடியர்கவ்வைகண்டுகந்துநாங்களித்துளநலங்கூர* இம்மடவுலகர்காணநீயொருநாளிருந்திடாயெங்கள்கண்முகப்பே* ॥எ॥

ஆ—போலே இந்தது:க்கத்தையும் நீயேபோக்கி என்னுடையமநோரதத்தையும் முடித்தருளவேணுமென்கிறார். ॥௬॥

(எம்மிடர்) உத்கர்ஷாபகர்ஷவிபாகமின்றியே ஸர்வாத்மாக்களுக்கும் நீயல்லது வேறுரக்ஷகருளரோ ஆனபின்புனக்கு நல்லராயிருப்பார், நீயிருந்தருளுமிருப்பைக்கண்டால் படும்பாடுகண்டு நாங்கள்வாழும்படியாக இந்தலோகத்திலுள்ளவர்கள் காணும்படி எங்கள்கண்ணெதிரே நீயொருநாளிருந்திடாயென்கிறார். ॥எ॥

(எங்கள்) நீர்சொல்லிற்றெல்லாம் திருநாட்டிலேசெய்கிறோமென்றோ பேசாதிருந்தருளுகிறது, அங்ஙனே செய்தருளவமையாது, எங்கள்கண்ணெதிரே லௌகிகரெல்லாரும் உன்திருவடிகளிரண்டையும் நிரஞ்சநமாகத்

இ—மருளிச்செய்கிறார் (உன்னுடையவித்யாதியால்) ப்ரவேசத்தில் ஶங்காஸ்தாபநமருளிச்செய்கிறார் (பண்ணியருளினப்போலேஇத்யாதியால்) முடித்தருளவேணும்- நிறைவேற்றியருளவேணும். ॥௬॥

✳ ஏழாம்பாட்டு. ✳

பூர்வவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உத்க்ருஷ்டஇத்யாதியால்) ஆனபின்பு என்கிறதற்கு எங்கள்கண்ணெதிரே இத்யாதியோடே அந்வயம். நம்முடையடியர்கவ்வைகண்டு என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எனக்கு நல்லரித்யாதியால்) உகந்து இத்யாதியை ஸங்க்ரஹிக்கிறார் (நாங்கள்வாழும்படியாகவென்று) இதுக்கு இருந்திடாயென்கிறதோடே அந்வயம். ஐந்தாம்பாட்டில் நீ என்முன்னேவந்து நின்றருளவேணுமென்றவர் ஆறும்பாட்டில் ப்ரஸக்தமான ஶங்கையைப் பரிஹரித்து அநந்தரம் இப்பாட்டிலே என்முன்னே இருந்தருளவேணுமென்கிறாரென்று ஸங்கதிஸூசிதை. மூன்றாம்பாட்டுக்கு நீ ஒருபடியே கண்வளர்ந்தருளுகையைத்தவிர்ந்து எழுந்திருக்கவேணுமென்கையிலே ப்ரதாநதாத்பர்யமாகையாலே இப்பாட்டு புநருக்தியன்றென்று கருத்து. ॥எ॥

✳ எட்டாம்பாட்டு. ✳

ப்ரவேசத்தில் ஶங்காஸ்தாபநம் மருளிச்செய்கிறார் (நீர் சொல்லிற்றெல்லாமித்யாதியால்) இத்தால் இப்படி ஸம்ஸாரிஸ்வாபாவ்யமாக ஶங்கித்து உத்தரமருளிச்செய்கிறாரென்று ஸங்கதி ஸூசிதையாயிற்று. பூர்வவாக்யத்திற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எங்களித்யாதியால்) தங்களன்பாரமென்கிறதற்குத்

ப— எம்மிடர்- எங்களுடைய ஸாம்ஸாரிகது:க்கங்களையெல்லாம், கடிந்து- நிரஸித்து, இங்கு- ஸம்யக்ஜ்ஞாநத்திற்கு அநுகூலமல்லாத இஹலோகத்திலே, என்னை- அத்யந்தநிக்ருஷ்டனானவென்னை, ஆள்வானே- அடிமைகொண்டு ரக்ஷித்தருளுகிறவனே, இமையவர்தமக்கும்- அநிமிஷர்க்கும், நிக்ருஷ்டனான எனக்குப்போலன்றியே உத்க்ருஷ்டரான ப்ரஹ்மாதிதேவதைகளுக்குமென்றபடி. ஆங்கனேயாய்- அங்ஙனேயாயிருக்கிறவனே, எனக்குப்போலே ஸர்வரக்ஷகனாயிருக்கிறவனேயென்றபடி. செம்மடல்- அருணதளங்கள், மலரும்- விகஸியாநிற்கிற, தாமரைப்பழன- தாமரஸங்களையுடைத்தான நீர்நிலங்களையுடைத்தான, பழனம்- நீர்நிலம்- தண்- ஶீதளமான, ஸம்ஸாரஶ்ரமஹரமான என்றபடி. திருப்புளிங்குடிக்கிடந்தாய்- திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளினவனே, நம்முடையடியர்- நம்முடையவரென்னும்படி உனக்கஸாதாரணஶேஷபூதரான நித்யஸூரிகளுடைய, கவ்வைகண்டு- ஆநந்தஜநித கோலாஹலத்தைக்கண்டு, கவ்வை- கோலாஹலம், நாம்உகந்து- நாங்கள்ஹ்ருஷ்டராய், களித்து- உத்தரோத்தராநந்திகளாய், உளம்- மநஸ்ஸிலே, நலம்- ஸௌஹ்ருதமானது, கூர- வர்த்திக்கும்படியாக, இம்மடவுலகர்- இந்த அஜ்ஞாநரான லௌகிகர்கள், காண- தங்கள்கண்ணாலேகாணும்படி, ஸம்ஸாரிகளெல்லாரும் கண்டு க்ருதார்த்தராகவேணுமென்று தம் காருண்யத்தாலே யருளிச்செய்தபடி. நீ- நித்யஸூரிகளுக்கு நித்யாநுபாவ்யனாயிருக்கிற நீ, எங்கள்கண்முகப்பே- எங்களுடைய கண்முன்னே, ஒருநாளிருந்திடாய்- நிவ்ருத்திஸிகையாக ஒருநாளிருந்தருளவேணும். ॥எ॥

மூ — எங்கள்கண்முகப்பேயுலகர்களெல்லாமிணையடிதொழுதெழுதிறைஞ்சித்* தங்களன்பாரத்தமதுசொல்வலத் தாற்றலைத்தலைச்சிறந்துபூசிப்பத்* திங்கள்சேர்மாடத்திருப்புளிங்குடியாய் திருவைகுந்தத்துள்ளாய்தேவா* விங்கண்மாஞாலத்திதனுளுமொருநாளிருந்திடாய்வீற்றிடங்கொண்டே* ||அ||

ஆ — தொழுது க்ருதார்த்தராய்த் தங்களுடைய ஸ்நேஹாநுகுணமாகத் தங்களுடைய ஸக்த்யநுரூபமான சொற்களாலே மிகவும் மேல்விழுந்துகொண்டாட இந்தலோகத்திலே இத்திருப்புளிங்குடியிலே பிராட்டியும்நீயுங்கூட ஒருநாளிருந்திடாயென்கிறார். ||அ||

(வீற்றிடங்கொண்டு) என்னுடைய கண்ணிணையானது விடாய்தீர்ந்து குளிர உன்னுடைய செவ்விப்பூப் போலேயிருக்கிற திருமேனியையோவாதே பருகும்படியாக விஷயநீயமான ஸம்ஸாரத்தில் உன்னுடைய

இ — தாத்பர்யமருளிச்செய்கிறார் (தங்களுடைய வித்யுக்தியால்) தமதுசொல்வலத்தா லென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தங்களுடைய ஸக்தீத்யுக்தியால்) தலைத்தலைச்சிறந்துபூசிப்ப என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (மிகவுமித்யுக்தியால்) இங்கண்மாஞாலத்திதனுளும் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இந்தலோகத்திலேயித்யுக்தியால்) வீற்று என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பிராட்டியும் நீயுமென்று) ||அ||

✳ஒன்பதாம்பாட்டு.✳

கண்ணிணை குளிரவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுடையவித்யுக்தியால்) பாட்டிலே தம் ஸஹபாவிகளையும் கூட்டிக்கொண்டு அடியோங்களென்று பஹுவசநமிருந்ததேயாகிலும் இவருக்குப் ப்ராதாந்யவிவக்ஷயா வ்யாவ்ருத்தில் என்னுடையவென்று ஏகவசநமாக நிர்தேசித்தது. புதுமலராகத் தையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடைய செவ்வியித்யுக்தியால்) செவ்வி- யௌவநம். பருகும்படியாகவென்கிறதற்கு இருந்தருளவேணு மென்கிறதோடே அந்வயம். இத்தால் இவ்விருப்பில் வாசியறியமாட்டாத ஸம்ஸாரத்திலே நாம் இருப்பதெதற்காவென்னில்? அதில்மிகவும் ஆசையுடையவெங்களுக்காக இருந்தருளவேணு மென்கிறாரென்று ஸமதிஸந்திவிதை. வியன்கொள்மாஞாலத் திதனுளுமென்கிறதற்குத்

ஸ — திங்கள்சேர்மாட- சந்த்ரனைக்கிட்டியிருக்கிற க்ருஹங்களையுடைத்தான, அத்யுந்நதஸௌதபரிபான வென்றபடி. திருப்புளிங்குடியாய்- திருப்புளிங்குடியிலே யெழுந்தருளியிருக்கிறவனே? திருவைகுந்தத்துள்ளாய்- அவ்வளவன்றிக்கே ஆஸ்ரிதர்க்காக ஸ்ரீவைகுண்டமென்கிற திவ்யதேசத்திலுமிருந்தருளுகிறவனே? தேவா- தேவ?, பரமபதத்தில்காட்டிலும் ஸௌலப்யஸௌசீல்யாதி குணங்களையுடையவனே என்றபடி. எங்கள்கண்முகப்பே- எங்களுடைய கண்முன்னே, உலகர்களெல்லாம்- லௌகிகரெல்லாரும், இணையடி- பரஸ்பரம் சேர்த்தியாலே அத்யந்தஸௌந்தர்யங்களாம்படி ஸாம்யமாயிருக்கிற வுன்திருவடிகளை, இணை- ஸாம்யம். தொழுது- ப்ரணாமம்பண்ணி, எழுது- எழுச்சிபெற்று, எழுச்சி- அதிசயம். இறைஞ்சி- ஆஸ்ரயித்து, உன்னைத்தங்களுக்கு ரக்ஷகனாக அத்யவஸித்து என்றபடி. தங்கள் அன்பு- உன்பக்கல்தங்களுக்கு ஸ்நேஹமானது, ஆர- பூர்ணமாகாநிற்க, பூர்ணமாம்படி வர்த்திக்க வென்றபடி. தமது- தங்களுடையதான, சொல்வலத்தால்- உக்திஸாமர்த்தியத்தாலே, தங்களுக்குள்ள உக்திஸாமர்த்யாநுகுணமாகவென்றபடி. இதற்குப்பூசிப்பவென்கிறதோடே அந்வயம். தலைத்தலைச்சிறந்து- ஒருவர்க்கொருவர் அதிசயித்தராய், சிறப்பு- அதிசயம், அஹமஹமிகயாமேல் விழுந்தென்றபடி. பூசிப்ப- பூஜிக்க, ஸ்தோத்ரம்பண்ணும்படியாக வென்றபடி. இதற்கு இருந்திடாயென்கிறத்தோடே அந்வயம். இங்கண்மாஞாலத்து- இந்தகண்ணுடைத்தான மஹாப்ருதிவியிலே, கண் என்று இடம், மாவென்று ஸ்ரைஷ்ட்யம், நல்லஇடங்களையுடைத்தாய் ஸுகவஸிக்கும்படி ஸ்ரைஷ்ட்யமான இந்த ப்ருதிவியிலேயென்றபடி. இதனுளும்- இந்த திருப்புளிங்குடியிலும், பரமபதத்தில் போலே இவ்வூரிலுமென்றபடி. இடங்கொண்டு- திவ்யாவஸ்திகைக்கு உசிதமான ஒருதிவ்யஸ்தாநத்தை ஸ்வீகரித்துக்கொண்டு, வீற்று- வீறுபெற்று, வீறு- உத்கர்ஷம், அதாவது:— "தயாஸராஜஹிதஸாதகம், அதீவராஜஸ்ஸாஸாஹே" என்கிறபடியே பிராட்டியோடேகூட இருந்தருளி அத்தாலேயுண்டான ஸௌஹார்திசயத்தையுடையவனுயென்றபடி. ஒருநாள்- ஒருநாளாகிலும், த்ருஷ்டாந்தம் ஒருக்கால் நாக்குநனைக்கவேணுமென்னுமாப்போலே சொல்லுகிறார். இருந்திடாய்- திவ்யாவஸ்திகையாக இருந்தருளவேணும், இடாயென்றது ஸ்வார்த்தகவ்யயோமம். ||அ||

மூ— வீற்றிடங்கொண்டுவியன்கொண்மாஞாலத் திதனுளுமிருந்திடாயடியோம்* போற்றியோவாதேகண்ணிணைகுளிரப்புதுமலராகத்தைப்பருகச்* சேற்றிளவாளைசெந்நெலூடுகளுஞ் செழும்பணைத்திருப்புளிங்குடியாய்* கூற்றமாயசுரர்குலமுதலரிந்தகொடுவினைப்படைகள்வல்லானே* ॥ ௯ ॥
கொடுவினைப்படைகள்வல்லையாயமரர்க்கிடர்கெடவசுரர்கட்கிடர்செய்* கடுவினைநஞ்சேயென்னுடையமுதே

ஆ—வ்யாவ்ருத்திதோற்றும்படி ஒருநாளிருந்தருளவேணும், ரையுடைய து:க்கத்தைப்போக்கவல்லையாயிருந்து அவைசெய்யாதொழியலாமோவென்கிறார்.

இ—தாத்பர்யமருளிச்செய்கிறார் (விஸ்மயநீய வ்ருத்தியால்) வீற்றுகொண்டு இருந்திடாயென்றநயித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடைய வ்யாவ்ருத்தியால்) கார்யவாசித்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதருடைய வ்ருத்தியால்) ॥ ௯ ॥

ப— செந்நெலூடு- சிவந்தநெற்பயிர்களின் மத்யத்திலே, ஊடு- மத்யம், வாகவிஸம்ஸங்களான ஸ்தலங்களிலேயென்றபடி. சேறு- நித்யஜலஸம்ருத்தியாலுள்ள ஸ்தலங்களிலே, இளவாளைகள்- பால்யமத்ஸ்யங்கள், வாளை- மத்ஸ்யம், வனுவிம்ஸதிவாஷிகரான மாத்ருவைப்போலே நித்யளவநமத்மாதிகங்களான மத்ஸ்யங்களென்றபடி. உகளும்- உல்லாஸத்தாலே துள்ளாநிற்கிற, உகளுகை- தலைக்குமேலேகிளம்புகை, அவ்வூரில் பதார்த்தங்களெல்லாம் ஸ்வாபாவிகம்பெற்றுக் களியாநிற்க நானுமென்னஹிதம் பெறவேண்டாவோ பிரானேஎன்றுகருத்து. செழும்பணை- அழகிய நீர்நிலங்களையுடைத்தான, செழுமென்று அழகியது, திருப்புளிங்குடியாய்- திருப்புளிங்குடியில் எழுந்தருளியிருக்கிறவனே, கூற்றமாய்- ம்ருத்யுவாய், கூற்றம்- ம்ருத்யு, அசுரர்குலம்- அஸுரகுலத்தை, முதலரிந்த- மூலத்திலேசேதித்தவனை, நிஸ்ஸேஷமாக நஸிப்பித்தவனையென்றபடி. இது ஹேதுவிஸேஷணம். கொடுவினை- ஆஸ்ரிதவிரோதிவிஷயத்தில் க்ரூரகர்மங்களான, வினை- கர்மம், படைகள்- ஆயுதங்களை, ஸ்ரீஸுதர்சநாதிகளையென்றபடி. வல்லானே- ஆளவல்லவனே, அதுகளை யதாபிமதவிநியோகம்பண்ணவல்ல ஸமர்த்தனானவனேயென்றபடி. அடியோம்- சேஷபூதரான நாங்கள், போற்றி- மங்களாஸாஸநம்பண்ணி, கண்ணிணை- உன்னைக்காணவேணுமென்று விடாய்த்த எங்களுடைய நயநயுகமும், குளிர- ஸந்தாபமெல்லாம்போய் ஆஹ்லாதமடைகிறதாகும்படி, இதுக்குப் பருகவென்கிறத்தோடே அந்வயம். புதுமலராகத்தை- அபிநவபுஷ்பம்போலே ஸுகுமாரஸௌந்தர்யமான உன்திருமேனியை, ஆகம்- ஸரீரம், ஓவாதே- அவிச்சிந்நமாக, பருக- பாநம்பண்ணும்படியாக, "பிபந்நேத்ராஞ்சலிபி:" என்கிறபடியே அதித்ருஷ்ணத்தோடே கண்களாலே ஸேவிக்கும்படியாகவென்றபடி. வியன்கொள்- விஸ்மயத்தைக்கொண்டிருக்கிற, வியன்- விஸ்மயம், விஸ்மயநீயமானவென்றபடி. ஸர்வவியாபியாய் ப்ரதிஸயவாஸ்தவாதிமத்தனுமாயிருக்கிற வுன்னை நினைப்பதும் செய்யாமையாலே விஸ்மயநீயமானவென்றபடி. மாஞாலத்து- மஹாப்ருதிவியிலே, இதனுளும்- இதுக்குள்ளேயும், இந்தத் திருப்புளிங்குடியிலேயுமென்றபடி. அவ்விருப்பில் வாசியறிவாரில்லாத விடத்திலுமென்று ஸ்வபாவதாத்பர்யம். இடங்கொண்டு- திவ்யஸ்தாநத்தை ஸ்வீகரித்து, வீற்று- வீறுபெற்று, வீறு- உத்கர்ஷம், உன்னுடைய உத்கர்ஷம் தோற்றும்படியென்கை. இருந்திடாய்- நீ இருந்தருளவேணும். ॥ ௯ ॥

கொடுவினை- கொடிதானவினைகளையுடையவர்பக்கல், கொடிது- க்ரூரம், வினை- கர்மம், உன்னுடைய ஆஸ்ரிதவிஷயத்தில் க்ரூரகர்மங்களான ப்ரதிகூலரிடத்திலென்றபடி. படைகள்வல்லையாய்- ஆயுதமெடுக்க ஸமர்த்தனே, மற்றயிடத்தில் ஆயுதமெடுக்கஸமர்த்தனல்லனிறே, "பதியாஸாவசோவய:" "நமேவ்ரதம் மோக்ஷ்யதி" என்று ரக்ஷிக்கநாடாநிற்குமிறே, "ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம" என்றும் "லோகவிக்ராந்தசரணௌ" என்று அவன்ஸ்வபாவத்தைப் பராகவிகளும் சொன்னார்களிறே, அமரர்க்கு- ஆஸ்ரிதரானதேவர்களுக்கு, இடர்கெட- ப்ரதிபந்தகமான து:க்கம் நஸிக்கைக்காக, அசுரர்க்கு- ப்ரதிகூலர்களுக்கு இடர்செய்- து:க்கங்களைப்பண்ணும்ஸ்வபாவமான, கடுவினைநஞ்சே- ஸீக்ரகாரியானவிஷமே, கடியது- வேகம், கடியதானவினையையுடையது கடுவினையது, ஸீக்ரகாரியென்றபடி. ப்ரதிகூலர்க்கு விஷமென்றதால் ஆஸ்ரிதவிரோதிநாஸநத்திலுனக்கு ஸ்வபாவமென்றதாயிற்று, என்னுடையமுதே- என்னுடையபோக்யமே,

மூ— கலிவயற்றிருப்புளிங்குடியாய்* வடிவிணையில்லாமலர்மகள் மற்றைநிலமகள்பிடிக்குமெல்லடியைக்*
கொடுவினையேனும்பிடிக்கநீயொருநாள்கூவுதல்வருதல்செய்யாயே* ‖௰‖
கூவுதல்வருதல்செய்திடாயென்று குரைகடல்கடைந்தவன்றன்னை* மேவிநன்கமர்ந்தவியன்புனற்பொருநல்

ஆ— (கொடுவினை) ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸமர்த்தனுமாய்; ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவனுமாய் எனக்கு நிரதிஶயபோக்யனாய், திருப்புளிங்குடியிலேவந்து ஸந்நிஹிதனானவனே வடிவழகுக்கொப்பில்லாத பெரியபிராட்டியாரும் அப்படியேயிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டியும் ஆஸ்வதிக்கவேண்டும்படி ஸுகுமாரமான வுன்திருவடிகளை அதில் போக்யதையையறிந்துவைத் திழக்கைக்கீடான பாபத்தைப்பண்ணின நானும் பிடிக்கும்படி என்னையொருநாள் அங்கேயழைத்துக்கொள்ளுதல் இங்கேவருதல் செய்தருளவேணுமென்கிறார். ‖௰‖

✳ பத்தாம்பாட்டு. ✳

இ— கொடுவினைப்படைகள் வல்லையாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதேத்யாதியால்) அமரர்க்கித்யாதி நஞ்சேஜத்துகைத்திற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவனுமாயென்று) மெல்லடியையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸுகுமாரமானவித்யாதியால்) கொடுவினையேனும் என்கிறதைவிவரிக்கிறார் (அதில்போக்யதையித்யாதியால்) பிடிக்கும்படி யித்யாதியாலே கீழ்ப்பாட்டிலே திவ்யாவயவங்களைக் காணவேணுமென்றவர் இப்பாட்டிலே "ஸவ்யம்பாதம்ப்ரஸார்ய" என்று ப்ரஸாரிதமான திருவடியைப் பிடிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கதிஸாதவிவேக. ‖௰‖

ஈ— நிரதிஶயபோக்யமான உஜ்ஜீவகமேயென்றபடி. அவ்விஷயமே இவருக்கபூதமாயிருக்கிறபடி. கலிவயல்- ஸஸ்யஸம்ருத்தமான க்ஷேத்ரங்களையுடைத்தான, கலி- ஸம்ருத்தம், திருப்புளிங்குடியாய்- திருப்புளிங்குடியிலே இருந்தருளுகிறவனே, இவர் அபூதத்துக்குக் கடல்கடைதல் ஸமுத்ரத்திலேபோதல் செய்யவேண்டா, திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதமாயிற்றிவர்க்கபூதம். வடிவிணையில்லா- ஸௌந்தர்யத்திலே ப்ரதிஸம்பந்தமில்லாதவளான, வடிவு- ஸௌந்தர்யம், இணை- ப்ரதிஸம்பந்தம், அவன் ஸௌபாக்யத்திலே அப்ரதிஸம்பந்தனுப்போலே இவள்ஸௌந்தர்யத்திலே அப்ரதிஸம்பந்தை, ஸம்ஸாரஸம்ருத்திவிஶிஷ்டாவதாரியும் ஸௌந்தர்யத்திலவளுக்கு ப்ரதிஸம்பந்தமாகமாட்டான், 'ததநுரூபலக்ஷணா" என்றேற்றமாய்நின்றதிறே. மலர்மகள்- பத்மத்தில்பெண்ணானவள், ஸர்வஸ்வாதத்திலுடைய ஸௌந்தர்யஸௌரப்ய ஸௌகுமார்யங்கள் ஒருபெண்ணாகப் வடிவெடுத்தாப்போலேயிருக்கிற பெரியபிராட்டிக்குமென்றபடி, மற்றைநிலமகள்- மற்றொருபெண்ணான பூமிப்பிராட்டியும், மலர்மகளுக்குப் ப்ரதிஸம்பந்தமென்று சொல்லலாம்படியான ஸ்ரீபூமிப்பிராட்டியுமென்றபடி. பிடிக்கும்- ஸம்வாஹநம்பண்ணுமதான, மெல்லடியை- ஸுகுமாரமானதிருவடியை, மெல்- ஸுகுமாரம், கொடுவினையேனும்- க்ரூரங்களான கர்மங்களையுடையநானும், திருவடிகளினுடைய போக்யதையையறிந்துவைத்தும் காணப்பெறாதபடியான பாபத்தையுடையவனான நானுமென்றபடி. வஶ்யத்தாலே அவர்களைப்போலே நானுமென்றபடி. பிடிக்க- ஸம்வாஹநம்பண்ணும்படி, நீ- எனக்கு ஸர்வவிதஸஹாயவானநீ, ஒருநாள்- ஒருநாளாகிலும், கூவுதல்- என்னை அங்கேயழைத்துக்கொள்ளுதல், வருதல்- நீஇங்கேயெழுந்தருளுதல், செய்யாய்- செய்தருளவேணும். ‖௰‖

குரைகடல்- கோஷத்தையுடைத்தான ஸமுத்ரத்தை, குரை- கோஷம்; ஶப்தாயமான ஸமுத்ரம். கடையவொண்ணாதபடி உந்நதமஹாவிஶிஷ்டமான ஸமுத்ரத்தையென்றபடி. கடைந்தவன்றன்னை- ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்காக ஶ்ரமம்பண்ணினவனை, தன்னென்று ஸ்வார்த்தப்ரயோஜனம், இப்படி ஆஶ்ரிதரெல்லாருக்கும் ஸுலபனானவனையென்றபடி. மேவி- ஆஶ்ரயித்து, ப்ராபகப்ராப்யமாக ஆஶ்ரயித்தென்றபடி. கூவுதல்வருதல்செய்திடாயென்று- என்னை அங்கே அழைத்துக்கொண்டருளுதல், நீ நான் இருந்தவிடத்திலே எழுந்தருளுதல் செய்யவேணுமென்று, நன்கு- நன்றாக, அநந்யப்ரயோஜநமாகவென்றபடி. அமர்ந்த- கிட்டினவரான, அபேக்ஷித்தவரானவென்றபடி, இது சடகோபனுக்கு விஶேஷணம். வியன்புனல்- விஸ்மயநீயமான ஜலத்தையுடைத்தான, வியன்- விஸ்மயநீயம், பொருநல்- தாம்ரபர்ணியையுடைத்தான

மூ—வழுதிநாடன்சடகோப* னாவியல்பாடலாயிரத்துள்ளுமிவையுமோர்பத்தும்வல்லார்க* ளோவுதலின்றி யுலகமூன்றளந்தானடியிணையுள்ளத்தோர்வாரே* ॥கக॥

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ—(கூவுதல்) குரைகடல்கடைந்தவன்தன்னை ப்ராப்யப்ராபகமாகப்பற்றி கூவுதல்வருதல் செய்திடாயென்று அபேக்ஷித்த வியன்புனல்பொருநல் வழுதிநாடன்சடகோபன் நாவியல்பாடலாயிரத்தி லித்திருவாய்மொழியைவல்லார் ஆஶ்ரிதஸுலபனான வெம்பெருமானுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்திலே அநுஸந்திக்கப்பெறுவரென்கிறார். ॥கக॥

திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவடிகளே சரணம்.

✳ நிகமனம். ✳

இ— மேவியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாமீப்யாதியால்) நன்கமர்ந்தவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அபேக்ஷித்தவென்று) இது சடகோபனுக்கு விஶேஷணம். உலகமூன்றளந்தான் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதைகத்ராஷியால்) ஶேஷம் ஸ்பஷ்டம். ॥கக॥

ப—வழுதிநாடன்- வழுதிநாட்டையுடையவரான, சடகோபன்- ஆழ்வாருடைய, நாவியல்- ஜிஹ்வாவ்யாபார ப்ரபவமான, நா- ஜிஹ்வை, இயல்- வ்யாபாரம், ப்ரயத்நஸாபேக்ஷமின்றிக்கே கேவலஜிஹ்வாவ்யாபார ப்ரபவமானவென்றபடி. அதாவது:— கவிதாரசநத்தில் ப்ரயத்நமின்றிக்கே இவருக்கு வஶமாக ஜிஹ்வையிலே ஆவிர்ப்பூதமானவென்கை. பாடலாயிரத்துள்- ஸாஹஸ்ரத்தில், இவையும்பத்தும்- இந்த பத்துப்பாட்டுக்களையும், முந்தினவும்மை கீழ்த்திருவாய்மொழிக்குப்போலே இத்திருவாய்மொழிக்கும் வைலக்ஷண்யமுண்டென்று ஸூசிப்பிக்கைக்காக, த்விதீயவும்மை இப்பாட்டுக்களினுடைய அந்யோந்யஸமுச்சயார்த்தம். வல்லார்கள்- அப்யஸிக்கவஶக்தரானவர்கள், உலகம்மூன்று- லோகத்ரயத்தை, அளந்தான்- த்ரிவிக்ரமரூபியாலே அளந்தவனான ஸ்வாமியுடைய, அடியிணை- சரணயுகளத்தை, உள்ளத்து- ஹ்ருதயத்தில், ஓவுதலின்றி- விச்சேதமில்லாமல், ஓவுதல்- விச்சேதம், ஓர்வார்- த்யானிக்கப்பெறுவார், நிரந்தரமநுஸந்தாநம் பெற்று வாழ்வார்களென்றபடி. ॥கக॥

✳ ஜ்ஞாநவைராக்யஸந்தாநஸேவ்யஶ்ரீவேங்கடாசார்யராமாநுஜமஹாதேஶிகாய நம:. ✳

ஸ்ரீ:.

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி:.

(பண்டைநாளாலே)

லக்ஷ்மீஸம்பந்தலப்த்யா த்ரிஜகதநிதயா பத்மநேத்ரஸ்வயோகாத்
ஸித்தாதேஶ்யைஸ்த்ரிதேஶைஸ் ஸ்வஹ்ருதவஶரணாச் ஸ்ரீமத்கஜேந்த்ராவநாத்ச ।
தார்க்ஷ்யாரோஹத்வராயாஸ்த்ரிஹஸ்த்ரா ஶ்ரமணநிரஸநா தைவதாஹ்வாவதாதே
ஶக்த்யாஷ்டோத்ராநந்தநாதே ஸ்வாமித்வக்லுப்தபாதாயவஶ்யத்வேவாஹ ॥க௦ச॥

(லக்ஷ்மீஸம்பந்தலப்த்யா) நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளுங்கொண்டு- பெரியபிராட்டியாரோடே ஒருக்காலும் பிரிவற்றவனாகையாலும், (த்ரிஜகதநிதயா) நீ ஒருநாள் படிக்களவாகநிமிர்த்த- த்ரிவிக்ரமரூபத்தைக்கொண்டு ப்ருத்வியையெல்லாம் அளக்கையாலும், (பத்மநேத்ரஸ்வயோகாத்) தடங்கொள் தாமரைக்கண்விழித்து- ஸரஸிஜஸத்ருஶநயநனாகையாலும், (ஸித்தாதேஶ்யைஸ்த்ரிதேஶை: ஸ்வஹ்ருதவஶரணாத்) புளிங்குடிக்கிடந்து வரகுணமங்கையிருந்து வைகுந்தத்துள் நின்று- திருப்புளிக்குடியிலே கண்வளர்ந்தும் வரகுணமங்கையிலே வீற்றிருந்தும் ஸ்ரீவைகுண்டத்திலே நின்றருளியும் ஶயநாஸநாதிகளாலே ஆஶ்ரிதருடைய ஹ்ருதயத்தை அபஹரிக்கையாலும், (ஸ்ரீமத்கஜேந்த்ராவநாத்) கவளமாகளற்றினிடர்கெடத்தடத்து- ஜலஸமீபமாயிருக்கவும் ப்ரபலமான முதலையின்கையிலே அகப்படுகையாலே மிகவும் இடர்பட்ட ஸ்ரீமத்கஜேந்த்ராழ்வானை ரக்ஷிக்கையாலும், (தார்க்ஷ்யாரோஹத்வராயாஸ்த்ரிஹஸ்த்ரா ஶ்ரமணநிரஸநாத்) காய்சினப்பறவையூர்ந்து த்ருஷ்டி- த்ருஷ்டிவிஷத்தின்மேலே காயாநிற்கிற பெரியதிருவடிமேலேயேறியருளி

ஈடு — தா — ஸம்ஸாரவாத்திலே நீயுமெம்மிருந்தாப்போலே ஸம்ஹாரனுக்கொண்டு ராமீ ஸாதாரீ ராமாவதாரமுதலான பதார்த்தங்களை நிர்வஹிக்கையாலும், (தேவாதிராஜ தாதெ) இமையவர் தமக்கு மாங்கனையாய் தேவர்களுக்கும் ரக்ஷகனுமத்தனைபோக்கி அவர்களாலும் ஸ்பர்சத்தாலே ஸ்பர்சிக்க வொண்ணாதவனுமையாலும், சுசிஸ்வத்தாலே மேலிரண்டுபாட்டுக்களின் அர்த்தங்களான நித்ய திவ்யாபரணங்கள் ஸம்ருத்தங்கள். திருப்புளிங்குடியாய்த் திருவைகுந்தத்துள்ளாய்தேவா- வரவேதத்திற்காட்டிலும் இஸ்ஸம்ஸாரத்தில் நிலையாதே மிக்கதேஜஸ்ஸை யுடையவனுமையாலும், கொடுவினைப்படைகள்வல்லானே- விரோதிகளிடத்திலே க்ரூரமான வஸ்துக்களைப் பண்ணக்கடவ திவ்யாயுதங்களை யுடையவனுமையாலும், (ஊஷர நந்தகம்) கடுவினைநஞ்சேயித்யாதி- ஆச்ரிதருடைய உபாஸகங்களை ஸவாஸனமாகப் போக்குமவனுமையாலும், திருப்புளிக்குடி யெம்பெருமான் இச்சேதனனிடத்திலே நெடுநாளேதுடங்கி க்ருபையைப்பண்ணுநின்றானென்று "பண்டைநாள்" என்கிற உபக்ரமத்திலே ஆழ்வார் ப்ரதிபாதித்தருளினாரென்கிறார்

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஒன்பதாம்பத்தில் இரண்டாந்திருவாய்மொழிமுற்றிற்று.

மூன்றாந்திருவாய்மொழி.

மூ—ஓராயிரமா யுலகேழளிக்கும்* பேராயிரங்கொண்ட

ஆறு— (ஓராயிரம்) இப்படி ஆழ்வார் அபேக்ஷிக்க நீரிங்ஙனே ப்ரார்த்திக்கவேணுமோ? நம்மோட்டைக்குடற்றுவக்கறியீரோ? என்றெம்பெருமானருளிச்செய்ய அத்தை யநுஸந்தித்தினியராகிறார். ஒரோருதிருநாமமே ஆயிரம்படியாய் உலகேழளிக்கும்பேராயிரமுடையனாய் ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வ ஸத்யஸங்கல்பத்வ காருண்ய ஸௌசீல்ய வாத்ஸல்யாதி ஸம்பூர்ண கல்யாண குணவிசிஷ்டனாய் ஸௌந்தர்ய ஸௌகுமார்ய ஸௌகுமார்யாதிகளையுடையவனாய்

❧ மூன்றாந்திருவாய்மொழி. ❧

இ— கீழ்த்திருவாய்மொழியில் தாமபேக்ஷித்த ப்ரயோஜனங்களிலொன்றும் இன்னும்ஸித்தியாதிருக்க இத்திருவாய்மொழியிலே 'நங்கள்பிரானவனே' 'என்புகழ்கோவனசீலம்' என்றாப்போலே அவனுடைய குணங்களைக் கொண்டாடுகை அஸங்கதமன்றோவென்ன ஸங்கதிப்பிக்கிறார் (இப்படியித்யாதியால்) அபேக்ஷிக்கவென்றது- அபேக்ஷித்தவாறேஎன்றபடி. இதற்கு எம்பெருமான்அருளிச்செய்ய என்கிறதோடே அந்வயம். குடல்துவக்கு- ஒழிக்கவொழியாத அநாதிஸம்பந்தம், நம்மோடு குடல்துவக்குண்டாயிருக்கையாலே நம்மை அநுபவிக்கை உமக்கு ப்ராப்தமன்றோ வென்றுகருத்து- அத்தையென்கிறது- அந்தகுடல்துவக்கையென்றபடி. இனியராகிறாரென்றது- ப்ரீதராகிறாரென்றபடி. தாம் அபேக்ஷித்த ப்ரயோஜனங்கள் ஒன்றும் ஸித்திக்கவில்லையாகிலும் இப்போதெம்பெருமான் இவையெல்லாமுமக்கு ப்ராப்தமாய் மேல்வரப்புகுகிறது, என்றருளிச்செய்தவாறே அவ்வாக்யார்த்தத்தாலே ஹ்ருஷ்டராய் அவ்வாக்யத்தினுடைய தாத்பர்யங்களாலே அவாப்தஸித்தருமாய் அந்தஸ்ஸம்பந்தாதிகளை அநுஸந்தித்து ப்ரீதராகிறார் என்றபடி. *

❧ முதற்பாட்டு. ❧

ஓர்பீடுடையனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வஜ்ஞத்வேத்யாதியால்) த்ருதீயபாதத்தில் நன்ஸைத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸௌந்தர்யேத்யாதியால்) சதுர்த்தபாதத்துக்குத் தாத்பர்யம்

ப— ஓர்- ஒருதிருநாமமே, ஆயிரமாய்- ஸஹஸ்ரவிதமாய், "ஸம்ஸாரதாரகம்" "ஸர்வபாபஹரம்" இத்யாதிநிர்வசனவிசேஷத்தாலே அநேகப்ரகாரமாயென்றபடி. உலகு- லோகங்களை, திருநாமங்கள் ரக்ஷிக்கப்புக்கால் ஒரோருத்தராகவன்றிக்கே லோகமாக ரக்ஷிக்குமென்று கருத்து. ஏழ்- ஏழுகளையும், அதிலும் ஒருலோகத்தளவே அன்றிக்கே ஸர்வலோகங்களையும் ரக்ஷிக்குமென்றுகருத்து. அளிக்கும்- ரக்ஷிக்கும் ஸ்வபாவங்களான, வேதநூற்பண்ணின பாவங்களைப்பார்த்து 'ரக்ஷிபதி' என்கிறதும் ஒருபோது உண்டாயிருக்குமவனுக்கு அங்ஙனன்றிக்கே ரக்ஷிக்கையே ஸ்வபாவமாயிருக்கும் திருநாமங்களுக்கென்று கருத்து. பேராயிரம் கொண்டது- நாமஸஹஸ்ரங்களையுடைத்தான, நாமஸஹஸ்ரங்களோடேகூடினவென்றபடி.

மூ— தோர் பீடுடையன்* காராயின காளநன்மேனியினன்* நாராயணனங்கள்பிரானவனே* ||க||
அவனேயகன்ஞாலம் படைத்திடந்தா* னவனேயஃதுண்டுமிழ்ந்தா னளந்தா* னவனேயவனு மவனு மவனு* மவனேமற்றெல்லாமு மறிந்தனமே* ||உ||

ஆ— யௌவநாத்யபரிமிதகுணவிஶிஷ்ட நீலமேகநிபஶ்யாமவிக்ரஹனாயிருந்த நாராயணனே ஸர்வேஶ்வரனாகப்பெறுவதே என்று தம்முடையதிருவுள்ளத்தில் இன்னாப்பெல்லாம்தீர்ந்து எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வத்தை அநுஸந்திக்கிறார். ||க||

(அவனே) ப்ரஹ்மருத்ராதிகளும் ஸம்ஸாரிகளல்லரோ, நாராயணனே ஸர்வேஶ்வரனென்னுமிடம் எங்ஙனே அறிந்தபடியென்னில்? அவனே நிகிலஜகதுதயவிபவலயாதி ஸர்வேஶ்வராஸாதாரண திவ்யசேஷ்டிதங்களைப்பண்ணுகையாலும் பதாம்ஸநவஶாஸநகி ஸகலவ்யாப்தி ஸ்தாவரஜங்கம ஸர்வபூதங்களுக்கும் அந்தர்யாமித்வத்தாலும் ஸர்வேஶ்வரன் என்னுமிடம் அறிந்தேனென்கிறார். ||உ||

இ— மருளிச்செய்கிறார் (நாராயணனேயித்யாதியால்) இன்னாப்பு - நிர்வேதம். ||க||

✳ இரண்டாம்பாட்டு. ✳

அவனோடுதமக்குள்ள நித்யஸம்பந்தத்தை அநுஸந்திக்கவந்தவர் இப்பாட்டில் அவனுடைய பரத்வத்தை ப்ரஸம்ஸிக்கை உபக்ரமமென்றேவென்ன ஸமர்த்திக்கிறார் (ப்ரஹ்மேத்யாதியால்) காரணத்வத்தைத் தொடங்கி அருளிச்செய்கிறார் (திவ்யேத்யாதி பண்ணுகையாலுமென்கிறவளவாலே) உதாராயத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பதாம்ஸநவேத்யாதியால்) அதில் அறிந்தனமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நாராயணனே இத்யாதியால்) ஶேஷம் ஸ்பஷ்டம். ||உ||

ஶ்ரீ— ஓர்- அத்விதீயமான, பீடுடையன்- ஐஶ்வர்யத்தையுடையவன், பீடு- ஐஶ்வர்யம், "தேவோநாம ஸஹஸ்ரவாந்" என்கிறபடியே ஸஹஸ்ரநாமங்களையும் தத்ப்ரதிபாத்யங்களான கல்யாணசேஷ்டிதாதிரூபமான ஐஶ்வர்யத்தையு முடையவனே என்றபடி. ஸர்வஸ்வதாநம்பண்ண ஸங்கல்பித்தவர்கள் சோறும் தண்ணீரும் ஸங்க்ரஹமாக வைத்துக்கொண்டிருக்குமாப்போலே ஜகத்ரக்ஷணதீக்ஷிதனான ஸர்வேஶ்வரனுக்கும் அதுக்குபயோகமாக ஆயிரம்திருநாமங்களும் கல்யாணகுண சேஷ்டிதாதிகளும் உண்டாயிருக்கிறனவென்று கருத்து. காராயின- ஶ்யாமமான, கார்- ஶ்யாமம். திருமேனி ஶ்யாமமாயிருக்கிறதென் றபேக்ஷிதரூபமாகச் சொன்னபடி, காள- நீலவர்ணமான, நல்- நல்லதான, ஸௌந்தர்யலாவண்யநிதியான வென்றபடி. மேனியினன்- திவ்யமங்களவிக்ரஹத்தையுடையவனான, இனவொன்று ஶேஷித்வஸ்வரூபகத்யம். நாராயணன்- அந்த ஸகலநாமங்களிலும் ப்ரதானமான நாராயணஶப்தவாச்யனான, அவனே- அந்த ஐஶ்வர்யவிஶிஷ்டனே, நங்கள் பிரான்- நமக்கெல்லாருக்கும் ரக்ஷகன், ஸர்வஜீவர்களுக்கும் நிருபாதிகஸ்வாமியாகப்பெற்றோமென்றபடி. ||

௨ அவனே- அந்தநாராயணனே, ஏவகாரத்தால் ஸஹகாரிநிரபேக்ஷம் விவக்ஷிதம். அகல்ஞாலம் விஸ்தீர்ணமான ஸ்ருஷ்டியை, படைத்து- ஸ்ருஷ்டித்து, இடந்தான்- ப்ரளயார்ணவத்திலே மக்நமாய்க்கலங்கி ப்ருதிவியோடே ஒட்டிக்கிடந்ததை ஶ்ரீவராஹரூபியாய் உத்தரித்தான், அவனே- அந்தநாராயணனே, இங்கும்ஏவ காரம் ஸஹாயாந்தரநிரபேக்ஷபரம், அஃது- அந்தஸ்ருஷ்டியை, உண்டு- ப்ரளயாவஸ்தையிலே வயிற்றிலேவைத்துரக்ஷித்து, உமிழ்ந்தான்- ஸ்ருஷ்டிகாலம்வந்தவாறே உத்காரணம்பண்ணினான், யதாபூர்வம் ஸ்ருஷ்டித்தானென்றபடி. அளந்தான்- மஹாபலிகொண்டுபோகாமே அளந்துமீட்டுக்கொண்டான். அவனே- அந்தநாராயணனே, அவனும் அவனும் அவனும்- ப்ரஹ்மாவும் ஶிவனும் இந்த்ரனும், "ஸப்ரஹ்மா ஸஶிவஸ்ஸேந்த்ர:" என்கிறதை அநுஸந்தித்தபடி. அவர்கள் ப்ரகாரபூதராய் அவனே ப்ரஹ்மருத்ரேந்த்ர ஶப்தங்களுக்கும் ப்ரதானவாச்யனாயிருக்கிறவனென்றபடி. இங்கு ஏவகாரத்தால் அவர்களுக்கு ஸ்வநிஷ்ட ஸ்வாதந்த்ர்யவ்யுதாஸம் விவக்ஷிதம், அவனே- அந்தநாராயணனே, மற்றெல்லாமும்- மற்றுமுள்ளஸமஸ்தபதார்த்தங்களும், "விஶ்வம் நாராயண:" என்கிறதை அநுஸந்தித்தபடி. ஸமஸ்தபதார்த்தங்களும் ப்ரகாரதயா ஶேஷபூதங்களாய், அவனே தத்வஶப்தங்களுக்கு ப்ரதானவாச்யனாயிருக்குமென்றபடி. இவ்வளவும் ஶாஸ்த்ரஸாரம். அறிந்தனம்- ஆதலால் அவனே ஸர்வேஶ்வரனென்றறிந்தோமென்றபடி. ||௨||

மூ— அறிந்தனவேத வரும்பொருணூல்க* ளறிந்தனகொள்க வரும்பொருளாக* லறிந்தனரெல்லா மரியைவணங்கி* யறிந்தனர்நோய்களறுக்குமருந்தே* [௩]

ஆ— (அறிந்தன) ஸ்வாபதேஶமாகையாலே நிகிலஶாஸ்த்ரதாத்பர்யப்ரதிபாத்யபூதனாய் பரதேவதையாத்ம்யஜ்ஞானவனாம்படி ப்ரவ்ருத்தமான ஸகலவேதங்களாலும் ஜ்ஞாநாநந்தஸ்வரூபஜ்ஞ ரதத்வஜ்ஞானமேதிகளாலே ப்ரகாஶிதமான விசேஷஞராய்த் தந்திருவடிகளிலே ஸம்ஜாதஸங்கரான பாகவதராலும் ஸாம்ஸாரிகஸமஸ்தது:கோபஶமனஜனகமாய பரமபுருஷார்த்தமாய அறியப்படுகிற அவனை நான் நிஷ்கர்ஷமாக அறியப்பெற்றேனென்கிறார்.

மூன்றாம்பாட்டு.

இ— வேதஶப்தத்திற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்வாபதேஶப்ரதிபாத்யபால்) அரும்பொருள் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிகிலஶாஸ்த்ரேத்யாதியால்) நிகிலஶாஸ்த்ரம் ஸர்வவிசேஷணம். நிகிலஶாஸ்த்ரதாத்பர்ய ப்ரதிபாத்யமான ப்ரதிபாத்யத்வமும் நிகிலஶாஸ்த்ரவாதார்த்த வத்துக்களென்றுகருத்து. ஸ்வாபதேஶஸ்வ நிகிலஶாஸ்த்ரஸ்வ ஸாக்ஷாத்தாகவும் ஸர்வப்ரவர்த்தகமொ பாகவும் ஹேதுவென்று ஸமர்பிக்கிறது. யதா:— ‘நிகிலஶாஸ்த்ர தத்தாத்பர்ய ப்ரதிபாத்யஜநஞ’ இதிகரண யாரய:. இப்போது ஸ்வாபதேஶமாகையாலே என்கிறதற்கு ஸர்வவத்தாயென்கிறத்தோடே யசய:. தோஷஹேதுத்வாபாவாத் என்றுகருத்து. இப்பக்ஷத்தில் பாட்டில் அநுஶப்தத்தில் நிகிலஶாஸ்த்ர ஸர்வ விஷயமாகிறதென்றுகருத்து. கொள்கவரும்பொருள் அறிந்தவென்றநுபித்து நூல்களுக்குவிசேஷணமாக்கி அதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பரமேத்யாதியால்) த்விதீயபாதத்தில் ஆதல்என்றது சிலவிடத்தில் வாக்யம்போல் வஶ்யார்த்தகமென்று நினைத்தருளிச்செய்கிறார் (வேதங்களாலுமென்று) அரியைவணங்கி என்கிறவிடத்தில் ஸர்வவிஶேஷத்தை அருளிச்செய்கிறார் (ஜ்ஞாநாதேத்யாதியால்) அரியைவணங்கிஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்திருவடிகளிலேயித்யாதியால்) அறிந்தனரெல்லாம்என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பாகவதராலுமென்று) த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாம்ஸாரிகேத்யாதியால்) பரமபுருஷார்த்தஎன்றது- அதில்ஹவிஸ்தாரம்சொன்னபடி. “பேஷஜம்பகவத்ப்ராப்தி ரேகாந்தாத்யந்திகீமதா” என்கிறதை ப்ரதிஜ்ஞாபிக்கிறதாகையாலே மருந்துஶப்தத்திலே புருஷார்த்தமிக்குமிறே. அறிந்தனமென்று கீழ்ப்பாட்டில் க்ரியையோடேகூட்டிக்கொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார் (நானித்யாதியால்) இத்தால்கீழ்ப்பாட்டில் அறிந்தனமென்று பரதேவதாயாதாத்ம்ய ஜ்ஞாநமாம் ப்ரஸ்துதமானவாறே ப்ரக்ருதிமயத்தாலே இப்பாட்டிலே அதை விஶேஷணம்கொண்டாய் அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதிஸூசிதமாகு. *

ஶ— கொள்க- கொள்ளுகைக்கு, க்ரஹிக்கைக்கு, யதாவஜ்ஜ்ஞாதம்என்றபடி. அரும்- அருமையான, ஸுது ர்லபமானஎன்றபடி. பொருள்- ஸர்வத்தை, பரதேவதாயாதாத்ம்யத்தையென்றபடி. அறிந்தன- அறிந்த துகளாயிருக்கிற, யதாவத் ப்ரதிபாதிக்கிறவையானவென்றபடி. வேத- வேதங்களாகிற, அரும்பொருள்நூல்களாதலென்றநுபிப்பது. அருமையான பொருளையுடையவையான ஶாஸ்த்ரங்களும், பொருள்- ஸர்வம், நூல். ஶாஸ்த்ரம், ஆதல்என்றது ஸமுச்சயார்த்தகம், இது மேல்சொல்லப்புகுகிற ஜ்ஞானிகளோடு வேதங்களுக்கு ஸமுச்சயார்த்தம், நிகிலஶாஸ்த்ரப்ரயோஜனபூதமான ஸர்வத்தை ப்ரதிபாதிக்கிற வேதாந்த ஶாஸ்த்ரங்களுமென்று பரமார்த்தம், அறிந்தன- பரதேவதையை யதாவத்தாக அறிந்தவைகள், ஆதல்ஶப்தத்தை அநுஷங்கித்து அறிந்தனரெல்லாமாதல்என்று அந்வயிப்பது. ஸூக்ஷ்மஜ்ஞானிகளான ஸ்ரீவால்மீகிபராஶரவ்யாஸாதிகளான ஸத்ஸஹவாஸிகளும்என்றபடி. அரியைவணங்கி- ஹரியைஸேவித்து, ஸர்வேஶ்வரனை அவன்பக்கலிலே ஸக்தராயென்றபடி. நோய்கள்- வ்யாதிகளை, ஸாம்ஸாரிகது:கங்களையென்றபடி. அறுக்கும்- ஶமிக்கத்தக்கதான, மருந்து- ஔஷதமாக, அறிந்தனர்- அறிந்தார்கள், “பேஷஜம்பகவத்ப்ராப்தி” என்கிறபடியே அவனையே ஸாம்ஸாரிகது:கநிவர்த்தகனாயும் பரமப்ராப்யனாயும் அறிந்தார்களென்றபடி. அறிந்தனமென்று கீழ்ப்பாட்டில் க்ரியையை அநுஷங்கிப்பது, அப்படிப்பட்டவனை நாமறியப்பெற்றோம், இதென்ன! ஆஶ்சர்யமென்றபடி.

மூ — மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கென்று* பெருந்தேவர் குழாங்கள் பிதற்றும்பிரான்* கருந்தேவனெம்மான் கண்ணன் விண்ணுலகம்* தருந்தேவனைச் சோரேற் கண்டாய் மனமே* ॥ ௪ ॥

ஆ — வேதங்களாலும் வைதிகர்களாலும் அறியவொண்ணாதவனை நான் நிர்ஹேதுகமாக உள்ளபடியே யறியப்பெற்றேனென்றுமாம். ௧௩

(மருந்தே) உன்னழகாலே எங்கள் போகத்துக்கு வர்த்தகனானவனேயென்று பெருந்தேவர்குழாங்கள் பிதற்றும்பிரானாயிருந்துவைத்து இங்கேவந்துபிறந்தருளி ஆச்ரிதஸுலபனாய்த் தன்னையாச்ரயித்த நம்போல்வாருக்கும் நித்யஸித்தமான ஸ்வாநுபவத்தைத் தந்தருளும் ஸ்வபாவனான வெம்பெருமானை ஒருவண்ணம் பெற்றோம் இனியவனைச் சோரவிடாதேகிடாய் என்னெஞ்சேயென்கிறார். ௪

(மனமே) ஸர்வேச்வரனைத் தன்னோடொப்பாரின்றிக்கே இருக்கிறவனை விடாதேகிடாய்நெஞ்சமே.

இ — ஸ்வாரஸ்யத்துக்கிந்தயோஜனை நெயில்சொன்ன ஸ்ரீஸம்ப்ரமத்தைப் பேசில்காட்டில் ஸஹிக ஸம்ப்ரமமே விஜிக்குமென்றுகருத்தாலே பாட்டுக்கு யோஜநாந்தரமருளிச்செய்கிறார் (வேதங்களாலுமித்யாதியால்) அறியவொண்ணாதவனையென்றது - த்விதீயபாதத்தில் அறிந்தனஸர்வத்தை க்ரியாபதமாக்கி கொள்கவரும்பொருளாதல் என்கிறதை க்ரியாபதத்தோடும் உத்தராயத்தில் அறிந்தனரென்கிறத்தோடும் அந்வயித்துத் தாத்பர்யமருளிச்செய்தபடி, இங்கே அறியவொண்ணாமை ஸ்வாபாவிகமாகை. ௬

✳ நாலாம்பாட்டு. ✳

ப்ரதமபாதத்திற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னழகாலே யித்யாதியால்) கண்ணன் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இங்கேவந் தித்யாதியால்) விண்ணுலகம்தரும்தேவனை யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னை யித்யாதியால்) நம்போல்வாருக்குமென்றது ஸம்ஸாரிகளுக்குமென்றபடி. சோரேல் கண்டாயென்கிறவிடத்தில ஸம்பந்த விசேஷமருளிச்செய்கிறார் (ஒருவண்ணம் பெற்றோமென்று) 'இனி அவனை' இத்யாதியால் இப்படி கீழ்ப்பாட்டிலே தமக்குள்ள ஸம்பந்தஜ்ஞானத்தைக் கொண்டாடினவர் அது நித்யமாகச்செல்லவேணுமென்னுமாகையாலே இப்பாட்டிலே தம்மனஸ்ஸை அதிலே ப்ரவணமாக்குகிறாரென்று ஸம்பந்தஸங்கதி. ௪

✳ ஐந்தாம்பாட்டு. ✳

த்விதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேச்வர இத்யாதியால்) இனமேதுமிலானை யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னோடொப்பாரித்யாதியால்) இரந்துகனமே சொல்லிமேனன் என்கிற

த்விதீயயோஜனைக்கு ஸ்வாபதேசம்.

ஈ — அரும்பொருளாதல் - இதரர்களுக்கு ஜ்ஞாதும் அசக்யமல்லாத பொருளானமையை, ஆதலென்றது ஸ்வபாவ த்வயமாய் பொருளாதலென்றது பொருளானமையென்றபடி. அறிந்தன - அறிந்தனகள், "யதோவாசோ நிவர்த்தந்தே" என்றதிறே; அரியைவணங்கி - ஹரியைஸேவித்து, தவநிஷ்டராயென்றபடி. நோய்களறுக்குமருந்து - ஸம்ஸாரத்தை ஸம்ஸாரரோக பேஷஜனாக, அறிந்தனரெல்லாம் அறிந்தவரான ஸர்வஜ்ஞர்களும், கொள்கவரும் பொருளாதல் அறிந்தனர் - ஸ்பஷ்டம், இப்படி ப்ரமாணங்களான வேதங்களாலும் வைதிகர்களாலும் அறியப்பட்டவனை நாம் அறிந்தனமென்று கீழ் க்ரியையோடே அந்வயம். ௧௪

௰ - நங்கள் - எங்களுடைய, போகமகிழ்ச்சிக்கு - போகாநுபவத்திற்கு, மகிழ்ச்சி - ஆநந்தம். ஸதாநுபவ ஸம்ஹாரஜந்யாநந்தத்திற்கென்றபடி. மருந்தேயென்று - விசேஷம்போலே வர்த்தகனானவனேயென்று, பெருந்தேவர் - உத்க்ருஷ்டரான தேவர்களுடைய, நித்யஸூரிகளுடைய என்றபடி. குழாங்கள் - ஸங்கங்கள், பிதற்றும்பிரான் - அக்ரமமாகச்சொல்லி அநுபவிக்கும்படி உபகாரகனான, பிதற்றுகை அக்ரமமாகச்சொல்லுகை. கருந்தேவன் - நீலவர்ணனைக்கொண்டு த்யோதமானனான, கண்ணன் - க்ருஷ்ணனாய் அவதரித்தவனான, எம்மான் - அத்தால் நமக்கெல்லாம் ஸ்வாமியான, விண்ணுலகம்தரும்தேவனை - பரமபதத்தைத்தந்தருளும் ஸ்வபாவனானதேவனை, மனமே - என்னுடைய மனஸ்ஸே, சோரேல் கண்டாய் - விடாதேகிடாய், கண்டாயென்றது [illegible]. ௪

மூ — மனமேயுன்னை வல்வினையேனிரந்து* கனமேசொல்லினேனிது சோரேற்கண்டாய்* புனமேவியபூந்தண் டுழாயலங்க* லினமேதுமிலானை யடைவதுமே* ௫॥
அடைவதுமணியார்மலர்மங்கைதோண்* மிடைவதுமசுரர்க்குவெம்போர்களே* கடைவதுங்கடலுளமு தமென்மன* முடைவதுமவற்கேயொருங்காகவே* ௬॥

ஆ — உனக்கடியேனாயிருக்கிறேனென்று பின்னையும் நெஞ்சையிரக்கிறார். ௫॥
(அடைவதும்) 'அவனைவிடாதேகிடாய்' என்று நான்சொல்லிமுடிப்பதற்குமுன்னே அவனுடையசெய ல்களிலே என்னெஞ்சானது ஒருகடலுடைந்தாப்போலே உடைந்துகிடக்கப்பெற்றேனென்று தம்முடைய

இ—தற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உனக்கித்யாதியால்) "பின்னையு" மித்யாதியால் கீழ்ச்சொன்னதையே ஆதராதிசயத்தாலே த்ருடீகரிக்கிறாரென்று ஸங்கதிஸூசிதை. ௫॥

※ ஆறாம்பாட்டு. ※

தாத்பர்யவாக்யத்தில் அவதாரிகையருளிச்செய்கிறார் (அவனையித்யாதியால்) இத்தால் கீழ்த்தாம் பண்ணின உபதேசம் ஸபலமாயிற்றென்று நெஞ்சையுகக்கிறாரென்று ஸங்கதிஸூசிதையாயிற்று. வாக்யார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார் (அவனுடையவித்யாதியால்) தாத்பர்யவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னெஞ்சானதித்யாதியால்) கடலுடைந்தாப்போலே உடைந்துகிடக்கப்பெற்றேனென்றது- ஸாஹஸமாய்க்கொண்டு ஸஹோத்ஸவமாகப் ப்ரவஹித்துப் பின்பு ஒருவராலும்மீட்கவுமொண்ணாதே தானும்

ஸ — புனமேவிய- புனத்தில் மேவியிருப்பதான, புனம்- ஸ்வக்ஷேத்ரம். மேவுகை- பொருந்துகை, ஸ்வக்ஷேத்ரத்திலே நன்றாகவளர்ந்திருப்பதானவென்றபடி. பூம்- தர்சனீயமான, தண்- சீதளமான, துழாயலங்கல்- துளஸீமாலையை யுடையவனான, அலங்கல்- மாலை, இனமேதுமிலானை- உபமானமொன்றுமில்லாதவனை, இனம்- உபமானம், ஸாத்ருச்யத்தில் நிதர்சனமானவனை யென்றபடி. அடைவதும்- அடையவேணும். ஆசிஷி. நிரந்தரமாக அநுபவிக்கவேணுமென்றபடி. இவ்விடத்தில் உகாரம் 'கிணு' சப்தவ்' என்னுமாப்போலே கீழ்ப்பாட்டோடே இப்பாட்டுக்கு ஸமுச்சயார்த்தமாயிருக்கிறது. இதைச்சொல்லினேனென்கிறதோடேயாதல் இந்து என்கிறதோடேயாதல் அந்வயிப்பது. மனமே- என்னுடையமனஸ்ஸே, இது- இந்த அர்த்தத்தை, நிரந்தரமாக அநுபவிக்கையை யென்றபடி. சோரேல்கண்டாய்- விடாதேகிடாய், உன்னை- ஸமவிஷயத்தில் ப்ராவண்யமே ஸ்வபாவமாயிருக்கிற உன்னை, வல்வினையேன்- ஸமவிஷயத்தில் ப்ரவணமான உன்னையும் அந்யரைச்சொல்லுமாப்போலே சொல்லும்படியான பாபத்தைப்பண்ணின நான், இரந்து- ப்ரார்த்தித்து, கனமே- த்ருடமாகவே, சொல்லினேன்- சொன்னேன். ௫॥

அடைவதும்- தனக்குப்ராப்யமாக ஸம்ச்லேஷிப்பதும், ப்ராப்யப்ராபகஷினிதிசேஷ:. அணி- ஆபரணங்களாலே, ஆர்- பூர்ணமான, மலர்மங்கைதோள்- ஸர்வஸௌந்தர்யவதியாய் நித்யாநவத்யையான பெரியபிராட்டியார்திருத்தோளை, தோளழகிலே ஈடுபட்டு மற்றொருதிவ்யாவயவஸௌந்தர்யமும் காணமாட்டாதே அத்தோளிலே சாய்ந்துகிடக்குமென்றுகருத்து. மிடைவதும்- நிரந்தரமாகச்செய்தருளுவதும், மிடைதல்- நிரந்தரமாகச்செய்கை, அசுரர்க்கு- அஸுரர்களுக்கு, வெம்போர்களே- உக்ரங்களானயுத்தங்களே, வெம்மென்று உக்ரம், போர்- யுத்தம், அவன்செய்தருளுவதும் "ஹதாஸுரம்வாஸிஷ்ஷஸ்வஜே" என்கிறபடியே அவள்திருத்தோள்களை உத்தேச்யமாக ஸமாச்லேஷம்பண்ணுகைக்கு உபாயமாக ஆச்ரிதஜநஸம்ரக்ஷணநிமித்தஸம்ரம்பயுத்தங்களே யென்றபடி. கடைவதும்- மதநம்பண்ணுவதும், கடலுள்- ஸமுத்ரத்தில், அமுதம்- அம்ருதம், அவன்மதநம்பண்ணுவதும் 'ஸ்ரீதகூடகடாக்ஷஸ்ய தேவாஸுரமஹோரகா: | மந்தமாரோப்ய ததந்த்ரு க்ஷீராப்திம் ... ப்ரஸாதமாஸ்ஸாத்ய மஹாஸுராஸுரா: ஸ்த்ரியம் ... ' என்கிறபடியே அவளுடைய கடாக்ஷவிசேஷம்பெறுகைக்கு உபாயமாக க்ஷீராணவத்தில் அம்ருதத்தையென்றபடி. என்மனம்- என்னுடையமனஸ்ஸானது, ஒருங்காக- ஏகாக்ரமாக, விச்சேதமின்றிக்கேயென்றபடி. உடைவதும்- ஸௌசீல்யவாத்ஸல்யத்தாலே ப்ரசிதிலமாவதும், அவற்கே- அநந்தவிதஸ்வகுணங்களையுடையவனான ப்ராப்யனுக்காகவே, அவனை அநுபவிக்கைக்காகவேயென்றபடி. ஏவகாரத்தால் மற்றொருதிவ்யதேசங்களிலும் கண்ணோட்டமில்லையென்றபடி. அவன் ஸம்ஸ்

மூ—ஆகஞ்சேர்நரசிங்கமதாகியோ* ராகம்வள்ளுகிராற்பிளந்தானுறை* மாகவைகுந்தங்காண்பதற்கென்மனம்* ஏகமெண்ணுமிராப்பகலின்றியே* ॥எ॥

ஆ— நெஞ்சைப்புகழுகிறார். ॥கூ॥
(ஆகஞ்சேர்) இந்தஸ்வரூபத்தை அநுஸந்தித்துப் பின்னையும் ஸௌலப்யசேஷ்டிதங்களைச் செய்தருளினவன்தன்னை அவனிருக்கிற திருநாட்டிலேசென்று காணவேணுமென்றாசைப்படாநின்றது, அதுவோ அதிப்ரமாயிராநின்றது, என்னெஞ்சைக்கொண்டென்செய்கேனென்றுநோகிறார். ॥எ॥

இ— மீளமாட்டாதே கிடக்கப்பெற்றேனென்றபடி. ॥கூ॥

✳ஏழாம்பாட்டு.✳

ஸங்கதிஸந்தாநம் கீழேசொன்னதை அநுஸந்திக்கிறார் (இந்தஸ்வரூபத்தைஅநுஸந்தித்தென்று) இதுக்கு ஆசைப்படாநின்றது என்கிறத்தோடேயந்வயம், இத்தால் தம்முடைய நெஞ்சுக்குக் கீழ்ப்பாட்டில்பிறந்த ஆஸக்தியுதிர்ந்ததென்கிறார் இப்பாட்டிலென்று ஸங்கதிஸூசிதமாகிறது. பூர்வார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பின்னையுமித்யாதியால்) உத்தரார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனிருக்கிறவித்யாதியால்) அதில் மாகஎன்கிறவிடத்தில் மாஹாத்ம்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அதுவோஅத்யாதியால்) பாட்டுக்கு ஸங்கதார்த்தமருளிச்செய்கிறார் (என்னெஞ்சைக்கொண்டித்யாதியால்) ॥எ॥

✳எட்டாம்பாட்டு.✳

தம்முடையநெஞ்சுக்கு பரமவிஷயத்தில்பிறந்த ப்ராவண்யாதிசயத்தை அருளிச்செய்யாநின்றவரிப்பாட்டிலே திருமலையை தேவர்கள் தொழுவார்களென்றுசொல்லுகை ப்ரஸங்கமன்றோவென்ன பகவதிப்

பு— ப்ரகாரத்தாலே மாஸக்திபண்ணுவதும் பெரியபிராட்டியார் பக்கலிலேயே என்னெஞ்சுமிகவும் ஆஸக்தி பண்ணுமதும் அந்தபரமபுருஷன் பக்கலிலேயே, இவைஇரண்டும் மற்றொருவிஷயத்தில் இல்லையென்று நானுப்ரகாரங்களாலும் ஸூசிதமாகிறது, அவன்பிராட்டிபக்கல் எப்படி ஆஸக்தனாயிருக்கும் அப்படி என் மனம் பரமபுருஷன்பக்கல் ஆஸக்தமாகிறதென்று தாத்பர்யம். ॥கூ॥

வ்யா— ஆகம்சேர்- ஒருஶரீரத்திலேசேர்ந்திருக்கிற, ஆகம்- ஶரீரம், நரசிங்கம்- நரத்தையும்ஸிம்ஹத்தையும் உடைத்தான, ஸாவயவ்யாநிர்தேஶ:. நரஸிம்ஹங்களையுடைத்தானவென்றபடி. அதாகி- அந்தஸ்வபாவமாய், நரனென்றுதல் ஸிம்ஹமென்றுதல் சொல்லவொண்ணாதபடி விலக்ஷணஸ்வபாவமாகையாலே அதாகியென்று ஸாமாந்யநிர்தேஶம்பண்ணித்தது. ஓராகம்- ஒருஶரீரத்தை, பரமசேதநாகாரிந்யான ஹிரண்யாஸுரதேஹத்தையென்றபடி, வள்ளுகிரால்- வளர்ந்தஉகிராலே, உஜ்ஜ்வலஶௌர்யத்தாலே யென்றபடி. பிளந்தான்- விதாரணம்பண்ணினவன், காணவேணுமென்றெல்லாருக்கும் ஆசைபிறக்கும்படி ஸௌலப்யாஶ்சர்யசேஷ்டிதமுடையவனான ஸர்வேஶ்வரனென்றபடி. உறை- வஸியாநிற்கிறவிடமான, மாகம்- உத்க்ருஷ்டமான, மா- மஹத்து, கம்- ஆகாஶம், பரமேவ்யோமவாஸிநஸ்ஸோமபரமாய் பரமேவ்யோமமென்று ஶ்ருதிகளாலே ஓதப்பட்டதானவென்றபடி. வைகுந்தம்- ஸ்ரீவைகுண்டத்தை, காண்பதற்கு- காண்கைக்கு, என்மனம்- என்னுடையநெஞ்சானது, இராப்பகலின்றி- அஹோராத்ரவிபாகமின்றிக்கே, ஏகம்- ஏகப்ரகாரமாக, ராத்ரிஒருகாலமும் பகலொருகாலமுமாயிருக்குமிறே நாட்டார்க்கு, என்னெஞ்சுக்கெப்போதுமிதுவேகாலமாயிற்றென்று கருத்து. எண்ணும் அநுஸந்தியாநிற்கும், இத்தனைவஶ்யமான நெஞ்சைக்கொண்டு நானென்னசெய்யக்கடவேனென்று நோகுறபடி. ॥எ॥

இருவினையும், புண்யபாபரூபங்களான ப்ரதிபந்தகங்களையும், இன்றிப்போக- இல்லாமல்போக, நிஶ்ஶேஷமாய்போம்படியென்கை. கெடுத்து- நஶிப்பித்து, இதற்கு உய்யக்கொள்வானென்கிறத்தோடேயந்வயம். ஒன்றி- ஸந்நிதித்து, நிஜநிர்ஹேதுகஸௌஹார்த்தவஸ்ருபாவிஷ்டவைபவமரயென்றபடி. ஆக்கை புகாமை- ஶரீரங்களிலேப்ரவேஶியாதபடி, இந்தவேதநர் பூநஜந்மங்களை யடையாதபடியென்கை, உய்யக்கொள்வான்- உஜ்ஜீவிப்பிக்கைக்கிச்சையுடையவனான ஸர்வேஶ்வரன், நின்ற- ஸ்வஸாம்ப்ரதீக்ஷணைக்கொண்டு நின்றருளுகிறஸ்தலமான, வேங்கடம்- ஸ்ரீவேங்கடகிரியானது, நீணிலத்துள்ளது- ஶுபவிமானை

மூ — இன்றிப்போக விருவினையுங்கெடுத்து* தொன்றியாக்கைபுகாமையுய்யக்கொள்வா* னின்றவேங்கடநீணிலத்துள்ளது* சென்றுதேவர்கள்கைதொழுவார்களே* ॥௮॥

தொழுதுமாமலர்நீர்சுடர்தூபங்கொண்* டெழுதுமென்னுமிதுமிகையாதலிற்* பழுதில்புகழ்ப்பாம்பணைப்பள்ளியாய்த்* தழுவுமாறறியேனுனதாள்களே* ॥௯॥

ஆ — (இன்றிப்போக) அவனைக்காண்கைக்குத் திருநாட்டிலேபோகவேணுமோ, இங்கே அணித்தாகத் திருமலையிலேயன்றோ அவன்நின்றருளுகிறதென்னில்? ஆத்தால் என்னெனக்கு, அங்குச்சென்றடிமைசெய்வார் அயர்வறுமமரர்களல்லரோவென்கிறார். ॥௮॥

(தொழுது) உமக்குத்தானங்கேசென்றடிமைசெய்கைக்குத் தட்டென்னென்னில், ஸௌலப்யாதிகல்யாணகுணவிசிஷ்டன் ஸௌசீல்யாதி பரமபோக்யனான திவ்யவிக்ரஹங்களாலே வசீகரணயோக்யனான உன்திருவடிமலர்களிலே ஸத்ருசகைங்கர்யஞான நானடிமைசெய்கைக்கறியேனென்கிறார். ॥௯॥

(தாளதாமரையான்) தம்முடைய அநுஸந்தானதாத்பர்யத்தாலே அவன்திருவடிகளிலடிமைசெய்கையில்

இ — பிக்கிறார் (அவனையித்யாதியால்) அணித்தாக- ஸமீபமாக, நீணிலத்தென்கிறவிடத்தில் ஸர்வஸுலப்யமருளிச்செய்கிறார் (அத்தாலென்னெனக்கென்று) த்ருதீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அங்குச்சென்றித்யாதியால்). ॥௮॥

✳ ஒன்பதாம்பாட்டு. ✳

நித்யஸூரிகளடிமைசெய்கிற இடமாகையாலே நாமவ்விடத்துக்கனர்ஹரென்றென்று கீழ்ச்சொன்ன அர்த்தத்தையே தழுவுமாறித்யாதியாலே சொல்லுகிறதாகையாலே இப்பாட்டு ஸங்கதியன்றோவென்ன அவதரிப்பிக்கிறார் (உமக்குத்தானித்யாதியால்) தாம் அநர்ஹரென்னுமிடம் கீழ்ப்பாட்டிலே ஸூசிதமாயிருக்கையாலே அத்தை இப்பாட்டிலே வெளியிடுகிறாரென்றதாயிற்று. த்ருதீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸௌலப்யாதியால்) சேஷ்யைச்சொன்னது உபலக்ஷணமென்றுகருத்தாலே சேஷாசனாதிக்ரஹணம். பரிவாரத்தினர்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார் (வசீவசீதேத்யாதியால்) த்ருதீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸத்ருசமித்யாதியால்) ॥௯॥

✳ பத்தாம்பாட்டு. ✳

இப்படிதாம் அநர்ஹரென்றநுஸந்தித்தால் வாசிககைங்கர்யம்பண்ணுகை யுசிதமல்லாமையாலே இப்பாட்டில் அவனைஸ்தோத்ரிக்கை அஸங்கதமன்றோவென்ன அவதரிப்பிக்கிறார் (தம்முடையவித்யாதியால்)

ஈ — ஸந்நிதியிலே இராநின்றது, நீட்சி- ஔந்நத்யமாய் ஸ்வாதந்த்ர்யத்தைக்காட்டுகிறது, திருமலையையுடைத்தாகையாலே ஸ்வாதந்த்ர்யமானஸந்நிதியிலே யிராநின்றதென்றபடி. ஆனால்தானெனக்கென்ன ப்ரயோஜநமென்றுகருத்து. சென்று- அத்திருமலையிலேபோய், கைதொழுவார்கள்- கைங்கர்யஞ்செய்தருளுவார், தேவர்கள்- நித்யஸூரிகளன்றோ, ஆதலாலவ்விடத்துக்கு நாமாரென்றபடி. ॥௮॥

பழுதில்- பழுதல்லாத, பழுது- தோஷம், தோஷப்ரத்யநீகமானவென்றபடி. தொல்- அநாதியான, புகழ்- கல்யாணகுணங்களையுடையவனான, பாம்பு- சேஷனாகிற, அணை- சய்யையில், பள்ளியாய், கண்வளர்த்தியையுடையவனே? பள்ளி- சயநக்ரியை, பள்ளியையுடையவன் பள்ளியான், பள்ளியாயென்று ஸம்போதநம், மாமலர்- ச்ரேஷ்டபுஷ்பங்களையும், ஸ்வாபாவிகமான வாஸநாதிபுஷ்பங்களையுமென்றபடி, நீர்- அர்க்யாதிஜலங்களையும், சுடர்- தீபாதிதேஜஸ்ஸுக்களையும், தூபம்- தூபத்தையும், கொண்டு- எடுத்துக்கொண்டு, தொழுது- ஸேவித்து, கைங்கர்யங்களைப்பண்ணியென்றபடி. எழுதுமென்னுமிது- எழுவோமென்கிறவிது, கைங்கர்யாரம்பஜநிதஹர்ஷத்தாலே உத்ஸிதராவோமென்கிறஇதுவென்றபடி. மிகை- ப்ரஸ்தாரம், இப்படி கைங்கர்யத்தில் அதிகரிஷ்டர் சேஷசாயநாதிகளாக அவஸ்தாந்தருளரென்றபடி, ஆதலில்- இப்படி ஸர்வோத்க்ருஷ்டதிவ்யவிக்ரஹர்கள் உனக்கடிமைசெய்கையாலே, உனதாள்கள்- உன்னுடையதிருவடிகளை, தழுவுமாறு- ஸம்ச்லேஷம்பண்ணும்ப்ரகாரத்தை, ஆறு- ப்ரகாரம், கைங்கர்யம்பண்ணும்ப்ரகாரத்தையென்றபடி. அறியேன்- அறியமாட்டுகிறிலேன், நானுனக்கடிமைசெய்கைக் கனர்ஹனேனென்றபடி. ॥௯॥

மூ— தாளதாமரையானுனதுந்தியான்* வாள்கொணீண்மழுவாளியுன்னாகத்தா* னாளராய்த்தொழுவாரு மமரர்க* ணாளுமென்புகழ்கோவுனசீலமே* ॥௰॥
சீலமெல்லையிலானடிமேலணி* கோலநீள்குருகூர்ச் சடகோபன்சொன்* மாலையாயிரத்துள்ளிவைபத் தினின்* பாலர்வைகுந்தமேறுதல்பான்மையே* ஆழ்வார் திருவடிகளே சரணம். ॥௧௧॥

ஆ—நமக்குப்பிறந்த கூச்சமெல்லாம்போம்படியாகத் திருவேங்கடமுடையானுடைய நிரவதிகஸௌசீல்யகுணத்தைக்கண்டு ப்ரீதியாலே அக்குணத்தைப் புகழுகிறார். ॥௰॥

(சீலம்) சீலமெல்லையிலானாயிருந்த திருவேங்கடமுடையான் திருவடிகளுக்குத் திருவணிகலமாயிருந்த இத்திருவாய்மொழியோடே ஒருஸம்பந்தமுடையார் வைகுந்தமேறுகை ஸ்வபாவமென்றென்கிறார். ॥௧௧॥

திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவடிகளே சரணம்.

இ— இப்படி ஸௌசீல்யகுணத்தை வர்ணித்து உபஸம்ஹரிக்கையாலே இத்திருவாய்மொழிக்கு அக்குணம் ப்ரதிபாத்யமென்றதாயிற்று, ॥௰॥

✻ நிகமனம். ✻

திருவணிகலம்- திருவாபரணம், பத்தினின்பாலர் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இத்திருவாய்மொழியோடு ஸம்பந்தியால்) பான்மையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்வபாவமென்று) ॥௧௧॥

ப—பண்டே- பண்டைக்காலத்திலேதானே, பரமன்- பரமபுருஷனானவன், பணித்த- அருளிச்செய்ததான, பணிவகையே- ஸ்ரீகீதாஶாஸ்த்ரத்திலே, கீதாசார்யனருளிச்செய்த ஶரமஶ்லோகஶாஸ்த்ரத்திலேயென்றபடி. ஶரமஶ்லோகவிஹிதமான ப்ரபத்தியாலேயென்கை. இதுக்கு கண்டேனென்கிறத்தோடேயந்வயம், தொண்டேசெய்து- தன்பக்கல் ப்ரீதியைப்பண்ணி, தொண்டு- ஸர்வமும், இங்கு ப்ரீதியைச்சொல்லுகிறது, காரணத்தால் ப்ரீதியினுடைய தைரக்யம் விவக்ஷிதம். என்றும்- ஸர்வகாலமும், தொழுது- ஸேவித்து, ஸர்வஶேஷவ்ருத்தியையும்பண்ணி என்றபடி. வழியொழுக- வழியிலேயொழுகும்படி, அந்த ஶாஸ்த்ரஶேஷவ்ருத்தி ப்ரவஸ்தாவுத்திலே பாதரோகாரம்தடையின்றியே நடக்கும்படியென்கை. ஸழு

மூ — தென்றுந்தொழுதுவழியொழுகப்* பண்டேபரமன்பணித்தபணிவகையே* ||கூ||
வகையான்மனமொன்றி மாதவனைநாளும்* புகையால்விளக்காற்புதுமலராணீரால்*

ஆ — (கண்டேன்) என்னை ஸரணாகதராணுருடைய சகலக்ஷிதமெல்லாம் நானேசெய்வேனென்று எம்பெருமான் பண்டேயருளிச்செய்தருளினபடியே அவனுடைய ப்ரஸாதத்தாலே நிரவதிகஸம்ருத்திகாரிதமான ஸவிசேஷவ்ருத்தியையும் ஸ்வலக்ஷணம்பண்ணலாம்படி யவன்திருவடிமலர்களைக்கண்டேன், கண்டவாறே என்னுடைய ஸகலதுரிதங்களும் போயினவென்கிறார். ||கூ||

(வகையான்) ஸ்வக்ஷேமத்தைச்சொல்லவுபக்ரமித்து நிஷ்கர்ஷமாக நானெம்பெருமானுக் கடிமை செய்யப்பெற்றேனென்றுகொண்டு நடுவே தம்முடைய ஸம்ருத்தியைப்பேசி பின்னையும் சமாகரணத்தைநியதித்து ஸமவஜேகவிஷயமாக்கி சதுர்வாரயநோதிதமான த்ருவ்யவிசேஷங்களைக்கொண்டு

* ஒன்பதாம்பாட்டு. *

இ— தாத்பர்யவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையித்யாதியால்) ப்ரஸாதத்தாலேயென்கிறதோடேயன்வயம். இத்தால்கீழ்ச்சொன்ன தம்முடைய இஷ்டப்ராப்த்யநிஷ்டநிவ்ருத்திகளெல்லாம் கீதாவாயமன் சரமஸ்லோகத்திலருளிச்செய்தருளின ப்ரவ்ருத்தியால் ஸர்வஜ்ஞனவனுடைய ப்ரஸாதத்தாலே ஸித்தனவென்கிறீப்பாட்டிலென்று ஸம்கதியுக்திகை, இத்தால் பத்துடையடியவரில் மாணுமேரிடத்திலும்வணக்கொடுமொள்வதுவல்' மென்று ஸாமான்யேநவாவக்ஷமாயிருந்த ப்ரவ்ருத்திஸாமர்த்யத்தை யிங்கேஸாந்தோஷீநராவெண விசேஷித்துச்சொல்லி நிபதித்ததாயிற்று. த்ருதீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரவயிகேத்யாதியால்) வாலவ்யாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவன்திருவடியித்யாதியால்) ||கூ||

* பத்தாம்பாட்டு. *

தகையான்சரணமித்யாதியாலே ஸத்வான்களுக்கவன்திருவடிகள் ப்ராப்யமென்றிப்பாட்டிற் சொல்லுகிறவிது சார்வேதவனெறியென்கிற முதற்பாட்டைக்கொண்டு வாநராக்தியன்றோவென்ன வவதரிப்பிக்கிறார் (ஸ்வக்ஷேமத்தையித்யாதியால்) ஸ்வக்ஷேமத்தைச்சொல்ல வுபக்ரமித்துஎன்றது- ஸ்வக்ஷேமத்திற்கவன் ஸாப்ராவனென்னுமிடத்தைச் சொல்லவுபக்ரமித்துஎன்றபடி. இவ்வளவிந்தாலும் பத்துடையடியவரில் ப்ராப்யமான ஸ்வக்ஷேமஸாமர்த்யத்தையென்று பத்துடையடியவரிலே உபக்ரமித்ததாகக் கீழேதாமருளிச்செய்திருக்க வித்திருவாய்மொழிலே உபக்ரமித்ததாக விங்குசொல்லுகை விரோதமன்றோவென்னில்? இங்கு உபக்ரமித்துஎன்றது- பத்துடையடியவரில் ஓர்குறையில்லையென்று ஸாமாந்யேந உபக்ரமித்தத்தை ஸ்வக்ஷேமத்துக்கு ஸமவ்யாரணம் ஸாப்ராவமென்றிங்ஙனே இத்திருவாய்மொழியிலே விசேஷித்துச்சொல்ல வுபக்ரமித்துஎன்றபடி. ஆதலால் பத்துடையடியவரில் ப்ராப்யமென்று கீழ்ச்சொன்னதற்கு மீத்திருவாய்மொழியி லுபக்ரமித்ததாக விங்குசொன்னதற்கும் விரோதமில்லை, நிஷ்கர்ஷமாகஎன்றது- ஸ்வக்ஷேமப்ரபவ ஸாமர்த்யாவயமன்றிக்கே யென்றபடி. நடுவேயித்யாதி ஸ்வக்ஷேமப்ரபவ ஸாமர்த்யாவயமில்லாத வெனக்குங்கூட விப்ரஸாதஸம்ருத்தம் ஸாத்யமாகையாலே யத்ஸாமர்த்யாவயமுடையார்க்கு இது கைமுத்யஸித்தமென்று வ்யஞ்ஜிப்பிக்கவேணுமென்கிற அபிப்ராயிபானுமிப்படி ஸ்வஸாத்யஸாத்யமான ஸ்வஸாமர்த்யாஸம்ருத்தத்தை சுலபதந்த்தாலே பெற்றேனென்கிற ஸந்தோஷத்தாலும் நடுவேதம்முடைய ஸம்ருத்தியைப்பேசியென்றபடி. பின்னையுமென்கிறதற்குச் சொல்லியென்கிறத்தோடே யன்வயம். வகையால்மனமொன்றிஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சமாகரணத்தையித்யாதியால்) த்விதீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சதுர்வாரயநேத்யாதியால்) த்ருதீயவா

ஶ — மலர்ப்பாதம். சுகவாஸம்போலே நிரதிசயபோக்யமானதிருவடியை, கண்டேன்- காணப்பெற்றேன், தமக்கு வரிவாரணாஸ்ரவம் அத்யாஸஹமாகையாலே கண்டேனென்று விஸ்மயமாக நிர்தேசிக்கிறார். காண்டலுமே- கண்டவளவிலேதானே, வினையாயினவெல்லாம்- துக்கங்களாயுள்ளவையெல்லாம், ப்ராணாபானாவரோதவ்யஸநதுக்கங்களு மென்றபடி. விண்டேயொழிந்த- விச்சேதங்களாய்ப்போயிற்றின. ||கூ||

| — வகையால்- ஸாஸ்த்ரோக்தப்ரகாரத்தாலே, ஸ்ராநப்ரகாரபோயக ஸாஸ்த்ரங்களிலுக்தரீத்யாயென்றபடி. மனம்- நெஞ்சானது, ஒன்றி- ஏகாக்ரமாய், ஸமவஜேகவிஷயமாயென்றபடி. தங்கள்நெஞ்சை ஸமவஜேகவிஷயமாக்கிக்கொண்டென்று வபர்வஸிதார்த்தம், அதுக்கு இறைஞ்சயென்கிறத்தோடே அன்வயம். மாதவனை- மாதவனான்தன்னை, வாத்ஸல்யஸ்வரூபையான பெரியபிராட்டியாரோடு ஸாமாநாதிகரண்ய

மூ— திசைதோறமரர்கள்சென்றிறைஞ்சநின்ற* தகையான்சரணந்தமர்கட்கோர்பற்றே* ।ம।
பற்றென்றுபற்றிப்பரமபரம்பரனை* மற்றிண்டோண்மாலைவழுதிவளநாடன்* சொற்றொடையந்தாதி
யோராயிரத்துளிப்பத்தும்* கற்றார்க்கோர்பற்றாகுங்கண்ணன்கழலிணையே* ।கக।

ஆ— அநந்யார்ஹமாக ப்ரஹ்மாதிகளவனையாச்ரயிக்க அவர்களுடைய அபேக்ஷிதத்தைச் செய்தருளுகிறவன் திருவடிகளே ப்ராப்யமென்றிருப்பாருடைய அபேக்ஷிதஞ்செய்தருளுமே அதிலொரு ஸம்சயமில்லையென்று கொண்டு அந்த ஸக்தியோமத்தினாலே ஸாப்ராவநமென்னுமிடத்தையே சொல்லிமுடிக்கிறார். ।ம।

(பற்றென்று) இத்திருவாய்மொழிகற்றார்க்கு எம்பெருமான்றிருவடிகள் ஸாதநமாமென்கிறார். ।கக।

திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

இ— உத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அநந்யார்ஹமாகவித்யாதியால்) ப்ரயோஜநாந்தரபரமாக என்றபடி. அநந்யார்ஹமாகவென்றது- அமரருடைய அபேக்ஷாஸாமாந்யாபேக்ஷநம், த்ருதீயபாதத்துக்கு விவக்ஷிதமருளிச்செய்கிறார் (அவர்களுடையவித்யாதியால்) தமர்களுக்கென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவடிகளேயித்யாதியால்) தன்திருவடிகளே ப்ராப்யமென்றிருக்கிற ஸக்தியோமநிஷ்டருடையவென்றபடி. ஓர்பற்றென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அபேக்ஷிதஞ்செய்தருளுமித்யாதியால்) ।ம।

✳ நிகமனம். ✳

பற்றாகுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாதநமாமென்று) ।கக।

கையாலே ஸ்வாராயணனைத்தன்னை யென்றபடி. இதுக்கும் இறைஞ்ச என்கிறத்தோடே அந்வயம். நாடோறும்- ப்ரதிதிநமும், அமரர்கள்- ப்ரஹ்மாதிதேவர்கள், திசைதோறு- திக்குகள்தோறும், க்ஷீரார்ணவ- வைதிகபுர வடாரண்யக்ஷேத்ர- ஸ்ரீரங்க, வ்ருஷகிரி- ஸத்யவ்ரத, யதோக்தகாரிப்ரப்ருதிகளான திவ்யதேசங்கள்தோறுமென்றபடி. சென்று- பெரியதிருநாளுக்குப்போவாரைப்போலேபோய், புகையால்- தூபத்தாலும், விளக்கால்- தீபத்தாலும், புதுமலரால்- அபிநவபுஷ்பங்களாலும், நீரால்- அர்க்யாதிஜலங்களாலும், இறைஞ்சநின்றதகையான்- ஆச்ரயிக்கும்படியிருக்கிற ஸ்வபாவத்தையுடையவனுடைய, இறைஞ்சுதல்- ஆச்ரயிக்கை, தகை- ஸ்வபாவம், தகையுடையவன்- தகையான், தேவர்கள் ஸ்வஸ்வப்ரயோஜநஸித்த்யர்த்தமாக ஆச்ரயிக்கும்படியிருக்கிற ஸௌலப்யஸௌசீல்யவாத்ஸல்யாதி கல்யாணஸ்வபாவசாலியான ஸர்வேச்வரனுடையவென்றபடி. சரணம்- திருவடிகள், தமர்கட்கு- ஸ்வகீயர்க்கு, தமர்கள்- ஸ்வகீயர்கள், ப்ரயோஜநாந்தரவிமுகராய் ஸமஸ்தகல்யாணகுணத்தையே ஸர்வேச்வரனாகப்பற்றின ஸக்தியோமநிஷ்டர்க்கு என்றபடி. ஓர்பற்று- அத்விதீயமான ஆச்ரயம்- அவர்களுடைய ஸர்வாபீஷ்டப்ரதமான ஸமஸ்தகல்யாணப்ராப்திக்கு அத்விதீயஸாதநமென்றபடி. ஸக்தியோமநிஷ்டர்க்கு அந்த ஸக்தியோமத்தாலே ஸர்வாபீஷ்டப்ரஸாதநீய ப்ராப்யமாய் ஆன ஸமஸ்தகல்யாணங்கள் ஸாத்யங்களென்று தாத்பர்யம். ।ம।

ப— பரமபரம்பரனை- பரரேஷாம் பரர்க்கும் பரரான ப்ரஹ்மாதிபரரான ப்ரஹ்மாதிகளிற்காட்டிலும் ச்ரேஷ்டரான நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனையென்றபடி. மல்- மல்லயுத்தத்திலே; மல்லென்று மல்லயுத்தத்துக்குப்பேர், திண்- த்ருடங்களான, பாணாஸுராதிஸஹஸ்ரநிக்ரஹ நிபுண வலிஷ்டங்களானவென்றபடி. தோள்- பாஹுக்களையுடையவனை, மாலை- ஆச்ரிதவ்யாமோஹனை க்ருஷ்ணனை, மால்- வ்யாமோஹன், பற்றென்றுபற்றி- ப்ராப்யமென்றவலம்பித்து, இதுக்கு சொல்லென்கிறத்தோடே அந்வயம். வழுதிவளநாடன்- திருவழுதிநாடென்கிற திருநாமத்தையுடைத்தாய், ஸம்பத்ஸம்ருத்தமான ஜநபதத்தையுடையவர், வளம்- ஸம்பத்து, வளநாடென்று சாகபார்த்திவவத்ஸமாஸ:. நாடுடையவன்-நாடன், அந்ததேசத்துக்கு நிர்வாஹகரான ஆழ்வாரென்றபடி. சொல்- சொன்னதான, தொடை- ஸந்தர்ப்பமான, 'பதவைசித்ர்யவத்' என்கிறபடியே ஸமாஸந்தர்ப்பமானவென்றபடி. அந்தாதி- அந்தாதியான, கீழ்ப்பாட்டினந்த மெல்லாப்பாட்டுக்காதியாயிருக்கையாகிற சப்தவைசித்ர்யத்தையுடைத்தானவென்றபடி. ஓர்- லோகவிலக்ஷணமான, ஆயிரத்துள்- ஸஹஸ்ரத்தில்; இப்பத்தும்- இந்தபத்துப்பாட்டுக்களையும், கற்றார்க்கு- அப்யஸித்தவர்களுக்கு, கண்ணன்கழலிணை- க்ருஷ்ணனுடைய பாதயுகளமானது, ஓர்பற்றாகும்- அத்விதீயமான ப்ராப்யமாம், பற்று- அவலம்பநீயம் ப்ராப்யமென்றபடி. ।கக।

ஜ்ஞாநவைராக்யாநுஷ்டாநசேவதயே ஸ்ரீவேதாந்தராமாநுஜமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி:

(சார்வேதவனெறி.)

ஸ்ரீதாமோதரநாமகஸ் ஸுராஸுரதுர்க்ரஹஸ்வமஹிமா
சக்ராதீசாயுதகோ வடதளசயநோ நாகராஜசயகஸ்।
ஸ்வஸ்மின் ஸந்தர்சகஸ் ஸாதுஸாஹாய்யதா தாயகஸ்ரீமதாஸ்
தாஸ்யே ஸ்வாராத்யபாவாஜ்ஜனிஸஹஜகிருபோ தாயகஸ்ரீமதார்யக:॥

(ஸ்ரீதாமோதரநாமகஸ்) தாமோதரன் பேர்கள் - ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாக க்ருஷ்ணனாய் அவதரித்து வாத்ஸல்யத்தாலே அவர்களாலே கட்டுண்டு அவற்றையே நிரூபகமாக உடையவனாகையாலும், (ஸுராஸுரதுர்க்ரஹஸ்வமஹிமா) பெருமையனே வானத்திமையோர்க்கும் - அப்படி கண்ணிக்குறுங்கயிற்றால் கட்டுண்டானாகிலும் எண்ணற்கரியனிமையோர்க்கும் என்னும்படி நிற்கையாலும், (சக்ராதீசாயுதகஸ்) ஆள்கின்ற ஆழியான் - திருவாழியை திவ்யாயுதமாகவுடையவனாகையாலும், (வடதளசயநஸ்) ஆலினிலைமேல் துயின்றான் - ப்ரளயகாலத்திலே ஆலிலைமேலே கண்வளர்ந்தருளுகையாலும், (நாகராஜசயகஸ்) நாகத்தணையானே - திருவனந்தாழ்வானைத் திருப்படுக்கையாகவுடையனாகையாலும், (ஸ்வஸ்மின் ஸந்தர்சகஸ்) நாடோறும் ஞானத்தால் அகத்தணைப் பார்க்கருள்செய்யும் - தன்னை ஹ்ருதயத்திலே த்யானிக்குமவர்களுக்கு ஸாக்ஷாத்கரிப்பையுண்ணுமவனாகையாலும், (ஸாதுஸாஹாய்யதா) இது மூன்றுபாட்டிலர்த்தம் - பரமபரம்பரனே - அமரர்க்குமப்பாலான் - பண்டே பரமன் பணித்த - ஸாஸ்த்ராதிகளிற்காட்டிலும் ஸாரான நிருத்திகளிற் காட்டிலும் ஸாரனாகையாலும், (தாயகஸ்ரீமதாஸ்) மணமொன்றி மாதவனை நாளும் சிந்தி - ஸ்ரீய:பதியாகையாலும், ஸாஸ்த்ராதிகளான் தேவர்கள் ஸர்வசேதாதிக்கமாகவந்து ஸேவிக்கும்படி நிற்கையாலும், எம்பெருமான் எத்தனையேனும் மகிசயிதஜ்ஞானராலும் த்யாஜ்யனாயிருக்கவும் தன்னிடத்தில் பக்திபண்ணினபேர்களாலே ஸாத்யனாகிறானென்று "சார்வேதவனெறிக்கு" என்கிற தசகத்திலே ஸம்க்ஷேபாருளிச்செய்தாரென்கிறார். ॥௪௦॥

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாம்பத்தில் நாலாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஐந்தாந்திருவாய்மொழி.

ஆ—(கண்ணன்) பக்தியோகத்தைச் சொல்லுகிறது, எம்பெருமான் திருவடிகளைப் பெறவேணுமென்றிருப்பார்

ஐந்தாந்திருவாய்மொழி.

இ— இப்படி பக்தியோகத்தாலே ஸமஸ்தஜனங்கள் ஸாத்யனென்று உபதேசித்தவநந்தரம் அந்த பக்தியோகஸ்வீகாரத்தை உபதேசிக்கவேண்டியிருக்க 'எண்ணுந்திருநாமந் திண்ணம் நாரணமே' என்றும் 'பாடீரவன்நாமம்' மென்றும் 'மாதவனென்றென்றோதவல்லீர்' ரென்னும் 'பேராரோதுவார்' ரென்னுமிப்புடைகளிலே திருநாமஸங்கீர்த்தனத்தை உபதேசிக்கை பஸம்ஙதமன்றோவென்ன வஸ்தரிப்பிக்கிறார் (பக்த்யாதியால்) பக்தியோகஸ்வீகாரங்களைச் சொல்லுகிற இத்திருவாய்மொழியென்றபடி. எண்ணுந்திருநாமேத்யாதிகளும் 'தத்ராஜீவநஸாராம்' என்கிற யஜநநநாதிகளைப்போலே 'ஸததம் கீர்த்தயந்தோமாம்' கஷ்டாக்ஷரம் ஸமோச்சார்ய தேஜஸாமேவாக்ஷ்ணவம்வதம்' இத்யாதிகளிற்படியே பக்தியோகஸ்வீகாரவிஷ்டமான திருநாமஸங்கீர்த்தனத்தையாதல், திருமந்த்ரஜபத்தையாதல், பக்தியோகவ்யங்யமான திருநாமஸங்கீர்த்தனத்தையாதல் சொல்லுகிறனவாகையாலே யதுவும் பக்தியோகத்தினுடைய ஒருஸ்வீகாரவிசேஷமென்றுகருத்து. இத்தாலித்திருவாய்மொழிக்கு விவிதபஜநப்ரக்ரியகவமென்கிற ஸமக்ஷாணம் ப்ரகிவாக்யமென்று ஸித்தமாயிற்று.

மூ— கண்ணன்கழலிணை* நண்ணும்மனமுடையீர்* எண்ணுந்திருநாமம்* திண்ணம்நாரணமே* ||க||

ஆ— திருமந்த்ரத்தையே சொல்லுங்கள்; அவன் திருவடிகளைப் பெறுகை நிஶ்சிதமென்கிறார். ||க||
(நாரணன்) திருமந்த்ரத்தினால் ப்ரதிபாத்யனை நாராயணனாகிறானென்னில்? ஸர்வேஶ்வரனாய்.

முதற்பாட்டு.

இ— ஸம்வாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எம்பெருமானிருதயத்தால்) எண்ணுமிருதயத்திற்கு, தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவிருதயத்தால்) திண்ணமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவன்திருவடிகளையிருதயத்தால்) இங்குதிருமந்த்ரத்தையென்றது- நாராயண என்கிற திருநாமத்தையென்றபடி. எண்ணுந்திருநாமமென்று திருநாமமிறே பாட்டிற்சொல்லிற்று, இது திருமந்த்ரத்தில் ப்ரதானமான திருநாமமாகையாலே மற்றதிருநாமங்களிற்காட்டில் ப்ரதானமென்றுமிதுக்கு திருமந்த்ரத்தோடொத்த வைபவமுண்டென்றும் வ்யஞ்ஜிப்பிக்கைக்காக இதுதன்னையே திருமந்த்ரமாக உபபாதித்தருளினர். இதுதன்னையே ஸார்வஜநீநமஹத்தாலே எட்டுத்திருவக்ஷரமாகவாவிக்க திருமந்த்ரத்தோடொக்குமென்று ஸாராஸாரஜ்ஞரானவாசார்யரருளிச்செய்தருளினாரிறே. அல்லது திருமந்த்ரத்தையென்றது- ஸாக்ஷாந்மூலமந்த்ரத்தையே சொன்னபடி. இப்பக்ஷத்தில் பாட்டிலே திருநாமமென்றது- திருமந்த்ரத்துக்கு ஏகதேஶமான ப்ரணவாதிகளாலே சிலபதங்கள் குறைந்தாலும் நிரபேக்ஷமான திருநாமம்போலே தன்ப்ரபாவம் குறைவற்றிருக்குமென்று, வ்யஞ்ஜிப்பிக்கைக்காக திருமந்த்ரத்தை திருநாமஶப்தத்தாலே உபபாதித்தருளிச்செய்தபடியென்றுகருத்து. நாரணமென்றதுவும் ப்ரணவநமஸ்ஸுக்களும் சதுர்த்தியுங்குறைந்தாலு மவைகூடினவுள்ள ப்ரபாவத்திற்கு குறைவில்லையென்று வ்யஞ்ஜிப்பிக்கைக்காகவென்று திருவுள்ளம். ப்ரதமபக்ஷத்திற்கு, பாட்டில் ஶப்தஸ்வாரஸ்யமும் 'நாம்நாம் ஸங்கீர்த்தநேந' என்கிற தாத்பர்யப்ரதர்ஶநமும் ஸாரஜ்ஞஸம்ப்ரதாயமும் முறையோடைகார்யமுமுண்டு, த்விதீயபக்ஷத்திற்கு ஆறாயிரப்படி திருமந்த்ரஶப்தஸ்வாரஸ்யமும் ஒன்பதினாயிரப்படி முப்பத்தாறாயிரப்படிகளோடே ஐககண்ட்யமுமுண்டு. ||க||

இரண்டாம்பாட்டு.

ஸக்தியோகப்ரகாரஞ்சொல்லவந்த விப்ப்ரகரணத்திலே வாரணந்தொலைத்தவிருதயத்தாலே க்ருஷ்ணாவதாரத்தைவணிக்கை யஸாமகமென்றேறவன்ன வபதாபிப்பிக்கிறார் (திருமந்த்ரஹ்ருதயத்தால்) ஆகிறது- கேஶவமஹாமானப்ரஸம், க்ருஷ்ணனன்றே என்றபடி. திருமந்த்ரப்ரதிபாத்யம் வாஸுதேவமாகையாலே க்ருஷ்ணாவதாரரூபவமல்லாமையால் க்ருஷ்ணரூபத்தையுபாஸிப்பார்க்கு திருமந்த்ரஜபஸம்பயமாக்கூடுமோவென்று கீழ்ப்பாட்டின்மேலே ஶங்கைபிறக்க திருமந்த்ரவாச்யத்திலே விஶேஷித்து விநியாஸமாயிருந்தாலுமிது ஸர்வஸாதாரணமாமாகையாலே க்ருஷ்ணரூபவாச்யமாமென்றருளிச்செய்கிறாராகையாலே ஸமாகமென்றதாயிற்று. கீழ்ப்பாட்டுத் திருநாமஸங்கீர்த்தநபரமானபக்ஷத்தில் திருமந்த்ரப்ரதிபாத்யனை வவன்திருவடிகளன்றோ உபாஸகர்களுக்குப்ராப்யம், கண்ணன்கழலிணை ப்ராப்யமென்னக்கூடுமோவென்று, கீழ்ப்பாட்டின்மேலே ஶங்கைபிறக்க திருமந்த்ரம் ஸர்வஸாதாரணமாகையாலே திருமந்த்ரப்ரதிபாத்யன் கண்ணனுமாகையால் விரோதமில்லையென் றுதாரமருளிச்செய்கி.

ஶ— கண்ணன்கழலிணை- க்ருஷ்ணனுடைய பாதாரவிந்தத்தை, சார்வேதவனெறிக்குத் தாமோதரன்தாள்களென்று ஸக்தியோகத்துக்கு ப்ராப்யமாக நாம்கீழ்ச்சொன்ன க்ருஷ்ணனுடைய திருவடிகளையென்றபடி. நண்ணும்மனமுடையீர்- சேரவேணுமென்று மநஸ்ஸையுடையஜநங்காள், நண்ணுகை- சேருகை, ஸக்தியோகத்தாலே சேரவேணுமென்றிச்சையுடைய உபாஸகர்காளென்றபடி. திருநாமம்- திருநாமமான, அவனுக்கு ப்ரதாநநாமதேயமானவென்றபடி. நாரணம்- நாராயணஶப்தத்தை, யதா, நாரணமே- நாராயணஶப்தமான அஷ்டாக்ஷரத்தால், ப்ரணவநமஸ்ஸுக்களும் சதுர்த்தியும், வ்யவச்சேதங்கள், அவையில்லாவிட்டாலும் ப்ரபாவத்துக்குக் குறையில்லையென்றுகருத்து. திருநாமம் திருநாமத்தை, மஹாமந்த்ர திருமந்த்ரத்தை யென்றபடி. எண்ணும்- எண்ணுங்கோள், அநுஸந்தியுங்கோளென்றபடி. திண்ணம்- த்ருடம், ஸர்வஜ்ஞ ப்ராப்தியுண்டாகை நிஶ்சிதமென்றபடி.

மூ—நாரணனெம்மான்* பாரணங்காளன்* வாரணந்தொலைத்த* காரணந்தானே* ॥௨॥
தானேயுலகெல்லாம்* தானேபடைத்திடந்து* தானேயுண்டுமிழ்ந்து* தானேயாள்வானே* ॥௩॥

ஆ—ஸர்வலோகரக்ஷகனாய் ஸர்வஜகத்காரணமாய் வாரணந்தொலைத்தவன் க்ருஷ்ணனேயென்கிறார். ॥௨॥
(தானே) நிஜமஹிமையாலே ஸ்ருஷ்டிரக்ஷணாதிகளைப் பண்ணுவானும் அந்த வாரணந்தொலைத்தருளினவன் க்ருஷ்ணனேயென்கிறார். ॥௩॥

இ—க்ருஷ்ணனென்றிங்ஙனே ஸங்கதி கண்டுகொள்வது, எம்மானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வஸ்வாமியென்று) பாரணங்காளனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வலோகைகத்ராதியால்) ஸர்வஜகத்த்ராதிஸ்பஷ்டம். ॥௨॥

✳மூன்றாம்பாட்டு.✳

உலகெல்லாமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிகிலேத்யாதியால்) படைத்தென்கிறதின் அர்த்தத்தைஸங்க்ரஹிக்கிறார் (ஸ்ருஷ்டிரூபத்தாலே) ஆள்வானென்பதின் அர்த்தத்தைஸங்க்ரஹிக்கிறார் (ரக்ஷணரூபத்தாலே) க்ஷிதிரூபத்தாலே இடந்துஉண்டுமிழ்ந்து என்றுசொல்லப்பட்ட ஜகதுத்தரணஸம்ஹரணாதிகள் விவக்ஷிதங்கள், தானேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அந்தவாரணமித்யாதியால்) இத்தால் திருமேனியும் ஜகத்தனுஸ்யூதப்ரக்ருத்யாதிகளான காரணாகாரணங்களைச் சொல்லுகிறதாகையாலே காயாகாரதோஷஸ்ப்ருஷ்டமான அவதாரரூபம் அப்ராக்ருதமாகக்கூடுமோவென்று கீழ்ப்பாட்டின்மேலே ஆக்ஷேபம்பிறக்க ஸ்வஸங்கல்பஸஹாயதயா அவதாரம் ஸர்வகாரணவிசிஷ்டமாகையாலே திருமேனியில் [illegible] ஜகத்தனுப்ரவேசம் ப்ராக்ருதவஸ்து [illegible] அவதாரரூபவிசிஷ்டனான க்ருஷ்ணனேயாகத் தட்டில்லையென்கிறாரென்று ஸங்கதியும்ஸூசிதமே. ॥௩॥

ப—நாரணன்- திருமந்த்ரப்ரதிபாத்யனான நாராயணன், இதுக்கு வாரணந்தொலைத்த காரணந்தானேயென்கிறதோடே அந்வயம். எம்மான்- ஸர்வஸ்வாமியானவன், ஸர்வாதிபதியாகிய ஸர்வவேதவேதாந்தங்களுக்கு ஶேஷியானவனென்றபடி. பாரணங்கு- பூமிப்பிராட்டியை, பார்- பூமி, அணங்கு- பெண், இங்குபூமியைச்சொன்னது ஸ்ரீபூமிநீளாதிகளுக்கெல்லாம் உபலக்ஷணார்த்தம், அதில்பாரென்று பூமியைமாத்ரம்சொல்லாதே பாரணங்கென்று பூம்யபிமாநியான பிராட்டியைச்சொன்னது நித்யவிபூதிக்கெல்லாம் உபலக்ஷணார்த்தம், ஆளன்- ரக்ஷிக்குமவனான, ஸர்வலோகரக்ஷகனானவனென்றபடி. வாரணந்தொலைத்த- மதத்தைவர்த்தனம்பண்ணினவனான, குவலயாபீடத்தை ஸம்ஹரித்தவனானவனென்றபடி. காரணந்தானே- ஜகத்காரணபூதன்தானே க்ருஷ்ணாவதாரம்பண்ணினவன் தானேயென்றபடி. ஸ்வயங்காரணத்தாலிவ்வர்த்தத்தில் ஸம்ஶயமில்லையென்றபடி. ॥௨॥

ப—உலகெல்லாம்- ஸர்வலோகங்களும், இச்சப்தமிங்கே உபாதானத்வபர்யவஸாயகம், தானே- கீழ்ச்சொன்ன க்ருஷ்ணன்தானே, இந்த ஸாமாநாதிகரண்யம் க்ருஷ்ணஜகதோர் ஶரீராத்மபாவநிபந்தனமாகையாலே ஸர்வலோகஶரீரகனான அந்த க்ருஷ்ணன்தானேயென்று பர்யவஸிதார்த்தம், ஸ்வயங்காரணத்தாலவன் ஸ்வஸங்கல்பஸஹாயனாகையாலே இவ்வர்த்தத்தில் ஸம்ஶயமில்லையென்றபடி. தானேபடைத்து- ஸர்வமும் ப்ரளயதஶையிலே அவிபக்தநாமரூபமாய்த் தன்னையபேக்ஷிக்கவுமறியாதேகிடக்க தயமானமனாவாய்க்கொண்டு தான்தானே ஸ்ருஷ்டித்து, இடந்து- இதிலுந்தானேயென்கிறவிது அந்வயிக்கிறது, ப்ரளயார்ணவமக்னமாய்க்கிடக்க அபேக்ஷாநிரபேக்ஷமாகத் தான்தானே வராஹரூபேண ஸமுத்தரித்து, இந்த உலகெல்லாமென்று ஸர்வலோகமும் பஞ்சபூதமாயிருந்தாலும் [illegible] என்கிறவிடத்தில் [illegible] த்திலே அந்வயிக்கிறபடியாலே இடந்தென்கிறது ஸ்ருஷ்டிகாலத்திலே அந்வயிக்கிறது, தானேயுண்டு- எங்களையும் உன்வயிற்றிலேவைத்து ரக்ஷித்தருளவேணுமென்றபேக்ஷிக்கவறியாதிருக்கத் தான்தானே ப்ரளயத்திலே தன்வயிற்றிலேவைத்துக்கொண்டு, உமிழ்ந்து- பின்னையும் ஸ்ருஷ்டிகாலம்வந்தவாறே காரணகார்யாதிஷுநாமரூபவிபாகமுண்டாகும்படி ஸ்ருஷ்டித்து, ஆள்வான்- மற்றுமுள்ள ஸர்வப்ரகாரத்தாலும் ரக்ஷித்தருளுகிறவன், தானே- கீழ்ச்சொன்னக்ருஷ்ணன்தானே, ஸநாதநஸர்வகாரணவிசிஷ்டதயா திருமேனி அப்ராக்ருதமானவன் அந்தக்ருஷ்ணன்தானேயென்று பர்யவஸிதார்த்தம். ॥௩॥

மூ— ஆள்வானாழிநீர்க்* கோள்வாயரவணையான்* தாள்வாய்மலரிட்டு* நாள்வாய்நாடீரே* ॥ச॥
நாடீர்நாடோறும்* வாடாமலர்கொண்டு* பாடீரவர்நாமம்* வீடேபெறலாமே* ॥ரு॥

ஆ— (ஆள்வான்) ஜகத்ரக்ஷணார்த்தமாகத் திருப்பாற்கடலிலேவந்து கண்வளர்ந்தருளுகிற வெம்பெருமான் திருவடிமலர்களிலே திருநாமத்தைக்கொண்டு நாடோறும்மலரிட் டவன்திருவடிகளைப் பெறுங்கோளென்கிறார். ॥ச॥

(நாடீர்) திருநாமத்தைச்சொல்லி யவன்திருவடிமலர்களிலே வாடாமலர்கொண்டு பணிமாறவவன்திருவடிமலர்களைப்பெறலா மிதுநிஸ்சிதமென்கிறார். ॥ரு॥

✳ நாலாம்பாட்டு. ✳

இ— ஆள்வானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஜகதித்யாதியால்) ஆழிநீரித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருப்பாற்கடலிலேயித்யாதியால்) தாள்வாய்மலரிட்டென்றதபித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருநாமத்தையித்யாதியால்) திருநாமத்தைக்கொண்டென்றது- அத்யாஹாரஸ்வாரஸ்யகதநம், இத்தால் முதற்பாட்டிலே ஸக்ரியோபாஸநமான திருநாமஜபத்தையாதல் திருநாமஸங்கீர்த்தநத்தையாதல் அருளிச்செய்தவர் நடுவே அர்த்தஸங்கங்களான ஸம்ஸயங்களை யிரண்டுபாட்டாலே பரிஹரித்து சுநஷ்டமாம் இப்பாட்டில் 'நாடீர்' என்ற ஸக்ரியோபாஸநமாக விதிக்கப்பட்ட புஷ்பஸமர்ப்பணாத்யாராதநத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதிஸூசிதை, நாடீரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனித்யாதியால் ॥ச॥

✳ ஐந்தாம்பாட்டு. ✳

பூர்வார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருநாமத்தையித்யாதியால்) இங்கும் திருநாமத்தையென்றது- அத்யாஹாரஸ்வாரஸ்யகதநம், உத்தரார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவன் திருவடியித்யாதியால்) இதுநிஸ்சிதமென்கிறவித்தால் கீழ்ப்பாட்டிற்சொன்ன புஷ்பஸமர்ப்பண மெம்பெருமானுக்கு மிகவும் ப்ரீதிகரமென் றுபாஸகசயத்தாலே யத்தையே த்ருடீகரிக்கிறாரிப்பாட்டிலென்று ஸங்கதி ஸூசிதை. ॥ரு॥

ப— ஆள்வான்- ஆளுகைக்கிச்சையுடையவனுப், ஆளுகை- ரக்ஷிக்கை, பசுமேய்ப்பொழிப்பானென்னுமாப்போலே ஆள்வானென்றது ஸங்கல்ப்யாதஸ்வம், ரக்ஷிக்கையிச்சைவாய்க்கொண்டு என்றபடி. ஆழிநீர்- க்ஷீரஸமுத்ரஜலத்தில், ஆழி- ஸமுத்ரம், கோள்வாய்- காந்திமாலிகளான முகங்களையுடையவனை, கோள்- காந்தி, ஜ்ஞாநப்ரதர்சநவிரோதிதங்களான ஸஹஸ்ரமுகங்களை யுடையவனையென்றபடி. அரவு- நாமத்தை, திருவனந்தாழ்வானை யென்றபடி. அணையான்- ஸயநமாகவுடையவனுடைய, அணை- ஸயநம், தாள்வாய்- திருவடிகளிலே, தாள்கள்- திருவடிகள், வாயென்பது- இடம், நாள்வாய்- நாளிடத்திலே, திநங்களிலேயென்றபடி. ப்ரதிதிநமுமென்கை. மலரிட்டு- புஷ்பங்களை ஸமர்ப்பித்து, நாடீர்- தேடுங்கோள், அவன் திருவடிகளையடையப் பாருங்கோளென்றபடி. ॥ச॥

ரு— நாடோறும்- நாள்தோறும், க்ஷீரவாஸத்தில்போலே புஷ்பஸமர்ப்பணத்தில் ப்ரீதிவிஸயத்தாலே நாடோறுமென்கிறார், வாடாமலர்கொண்டு- வாடாதபுஷ்பங்களைக்கொண்டு, ப்ரீதிவைஸிகராய் சுநந்தஸாரஹிஸாக்ஷாதாரங்களான புஷ்பங்களை ஸம்பாதித்துக்கொண்டென்றபடி. நாடீர்- தேடுங்கோள், அதி ப்ராவண்யவைஷிகராய்க்கொண்டவனை யாஸ்ரயியுங்கோளென்றபடி. அவர்நாமம்- அந்தக்ருஷ்ணனுடைய திருநாமங்களை, பாடீர்- பாடுங்கோள், 'ஸததம் கீர்த்தயந்தோமாம்' என்று ஜ்ஞாநிகள் ஸங்கீர்த்தநம்பண்ணுமாப்போலே ப்ரீதிவைஸிகராய் ஸங்கீர்த்தநம்பண்ணுங்கோளென்றபடி. வீடு- மோக்ஷத்தை, அவன்திருவடிகளையேயென்றபடி. இவ்விடத்தில் ஏகாரத்தைப்பெறலாமென்கிறத்தோடே யந்வயிப்பது, தாத்பர்யவசாத்த்திலிருக்கிற ஏகாரம் ஸ்ருதிஸ்வபாவத்தால் பாட்டுதோறுமுள்ளதொன்றாகையாலே பதவ்யத்யாஸேநோக்தமிறே, பெறலாமே- நிஸ்ஸம்ஸாரநிவ்ருத்திஸாத்யமாகவுடையலாமே, அவதாரணத்தால் பெறுகையில் ஸம்ஸய மில்லையென்றபடி. ॥ரு॥

மூ— மேயான்வேங்கடம்* காயாமலர்வண்ணன்* பேயார்முலையுண்ட* வாயான்மாதவனே* ॥௬॥
மாதவனென்றென்று* ஓதவல்லீரேல்* தீதொன்றுமடையா* ஏதஞ்சாராவே* ॥௭॥

ஆ— (மேயான்) அதஸீப்ரஸூநஸந்நிபனாய் ஸ்ரீயஃபதியாயிருந்த பேயார்முலையுண்டவாயன் நம்முடைய சக்ஷுராதிகரணங்களுக்கு விஷயமாயிருக்கவிறே யவன்திருவடிகளி லடிமைசெய்யலாவதென்னில்? அவனன்றோ ஸகலமநுஜநயநவிஷயதாம் கதனாய் ஸ்வஸ்வாமிநியைக்கொண்டு திருமலையிலேபுகுந்தருளி நின்றருளுகிறானென்கிறார். ॥௬॥

(மாதவன்) இந்தபக்தியோகத்தி லநதிகாரிகள் மாதவனென்னுந் திருநாமத்தைச் சொல்லுங்கோள், சொல்லுமிடத்தில் பரமைகாந்திகளாய்ச் சொல்லவமையும், சொல்ல ஸமர்த்தரல்லாவிடில் ப்ராம

✳ ஆறும்பாட்டு ✳

இ— பக்தியோகப்ரகாரமொன்றுஞ்சொல்லாத விப்பாட்டு இப்ப்ரகரணத்திலே யன்வயமென்றோவென்னி லவதரிப்பிக்கிறார் (அதஸீ க்ருதியால்) இவ்வவதாரிகையிலே அதஸீக்ருதியாலே த்விதீயபாதமும் ஸ்ரீயஃபதித்வத்தாலே மாதவனென்றதும் வ்யாக்யாதம், இப்பாட்டுக்கு ப்ரயோஜநாந்தரமொன்றுமே யில்லையென்றுகாட்டுகைக்காக கதிதார்த்தத்தையு மிச்சங்காவாக்யத்திலே சேர்த்தருளிற்று, ப்ரம வாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனன்றோவி க்ருதியால்) ॥௬॥

✳ ஏழாம்பாட்டு ✳

பரிகரத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பக்தி க்ருதியால்) ஓதவல்லீரேலென்று திருநாமஸங்கீர்த்தநத்திலுங்கூட ஸாமர்த்யத்தை யஸாதாரணமாய் நிர்தேசிக்கையாலே பக்தியோகத்தி லநதிகாரிகளும் தோற்றுகிறதென்றுகருத்து. இங்கு அநதிகாரிகளென்றது- வர்ணாந்தரபக்தியோகத்தி லநதிகாரிகளென்றபடி. இத்தால் இப்பக்தியோகப்ரகாரங்களை யருளிச்செய்தவிப்பாட்டிலே அதில் வர்ணாதிகாரிகளல்லாதார்க்கு அநுஷ்டாநோபாயத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதியுமிசை. பேச வல்லீரென்னாதே ஓதவல்லீரென்று நிர்தேசித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சொல்லுமிடத்தில் க்ருதியால்) ஓதவென்றது- வாதம்பொருட்டாரண பரிவாப்யநமாகையாலே பரமைகாந்திகஸம்ப்ராப்திதமாகிறது என்றுகருத்து. இங்கு பரமைகாந்திகளாய்ச்சொல்லுகையாவது- ஸ்வாரஸ்யஸாத்யமான ஸாதநங் கூடமக்தி தங்களுக்கில்லாமையாலே தாங்கள் வீதவைராகிகளாய் ஸ்வபதேவசொல்ல ப்ரவ்ருத்தியாதிருக்கத் தயாவிபக்திஜான்கள் சிலர்சொல்லக்கண்டு தங்களுக்கும் அதில் ராகம்பிறந்து தாங்களுமவர்களோடேகூடி யவர்களை யநுகரித்துச்சொல்லுகை. உத்தரார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சொல்லஸமர்த்த

ஸ— காயாமலர்வண்ணன்- அதஸீவர்ணனான, காயாவென்று அதஸீ, மாதவன்- ஸ்ரீயஃபதியான நீலவர்ணநிபமான திருமேனிக்குப் பரபாகமுண்டாம்படி வித்யுத்போலேவளவரோமான லக்ஷ்மியோடே நித்யஸம்ஶ்லிஷ்டயான லக்ஷ்மீபதனானவென்றபடி. லக்ஷ்மணமாத்ரன நிரவதிகஸௌந்தர்யஸம்பன்ன னானவென்கிறது, பேய்- ராக்ஷஸியினுடைய, ஆர்- ராக்ஷஸமான, விஷராக்ஷஸமானவென்றபடி. முலையுண்டவாயான்- ஸ்தநத்தைப்பானம்பண்ணின வாயையுடையவன், ராக்ஷஸியினுடைய விஷராக்ஷ ஸமான ஸ்தநத்தை நிஷ்பாணமாக்கினாப்போலே அக்ரூதிவ்யமெகபான ப்ரக்ருதியை நிஷ்பிரயோஜ னமாக்கவல்ல வாஜ்ஞேயகாலத்தையுடையவனான க்ருஷ்ணனென்றபடி. வேங்கடம்- ஸ்ரீவேங்கடகிரியிலே, மேயான்- மேவி வர்த்திக்கிறவன், மேவுகை- ஆஶ்ரயிக்கை, எல்லாரையும் தன்திருவடிகளை யாஶ்ரயிப்பித்துக்கொள்ளுகைக் காகப் பொருந்திவர்த்தியாநின்றானென்றபடி. இப்படி க்ருஷ்ணன் ப்ரத்யக்ஷவிஷயனுமிருக்கையாலே நிரதிஶய பக்திபரவஶமாக வுங்களுக்கு அவன்திருவடிகளிலே யடிமைசெய்யக் குறையில்லையென்றுகருத்து. ॥௬॥

ஸ— மாதவனென்றென்று- மாதவனென்றென்று நிரந்தரமாக, [illegible] ஓதுகைக்கு, ஓதுகை- ஶ்ரோத்ராநுஸ்வாரண ஸ்வபதேவ சொல்லமாட்டீர்களாகில் பரமைகாந்திகளாயாகிலும் சொல்லுகைக்கு என்றபடி. வல்லீரேல்- வல்லீர்களாகில், யதிஶப்தத்தால் வர்ணா[illegible]பக்தியோகத்தி லுங்களுக்கதிகாரமில்லையாகில் யேயநாமத்தையாகிலும் நிரந்தரமாகச்சொல்ல வல்லீர்களாகிலென்றபடி. தீது- பாவங்கள், வர்ணா ஶ்ரமபக்திவ்யதிக்ரம ராஜஸ்வதோஷாந்தராயத்தில் ப்ரவ்ருத்தங்களான பாவங்களென்றபடி. ஒன்றும்- ஶேஷத்தும், அடையா- உங்களைக்கிட்டமாட்டா, உங்களைவிட்டு நசித்துப்போமென்றபடி. ஏதம்- பாவங்கள்

மூ—சாராவேதங்கள்* நீரார்முகில்வண்ணன்* பேராரோதுவார்* ஆராரமரரே* ॥ அ ॥

ஆ— ஸாத்யஸாதநமான ஸகலபாபங்களும் நசிக்குமென்கிறார். ॥ எ ॥

(சார.) ஸர்வஶ்ரேஷ்டரானநாங்கள் அதிகாரிகளோவென்னில்? யாவர்சிலர் திருநாமஞ்சொல்லவல்லவர், அவர்களிறேயித்திருநாமஞ்சொல்ல அதிகாரிகளான ஸர்வஶ்ரேஷ்டராகிறாரென்கிறார். இத்திருநாமத்தைச்சொல்லுவார் யாவர்சிலர் அவர்கள் நிரவத்யஸ்வப்ரகாஶஸ்வரூபராய் என்னுமவன்திருவடிகளிலே அடிமைசெய்யப் பெறுவாரென்னுமாம். ॥ அ ॥

இ— (கைங்கர்யேத்யாதியால்) கைங்கர்யத்துக்கு ஸாக்ஷாத்தாயும் பரம்பரையாலும் ஹேதுபூதமான கைங்கர்யத்துக்கு விரோதியான ப்ரதிபந்தகங்கள் கைங்கர்யவிரோதியாயென்றது. ராஜஸதாமஸமென்கை விரோதிப்ரதிபந்தகமான மோக்ஷவிரோதியாயென்றபடி. யதா- இங்கு ஸாதநபூதமான விரோதியான கைங்கர்யத்துக்கு ஸாக்ஷாத்தாயும் பரம்பரையாலும் ஹேதுபூதமான கைங்கர்யத்துக்கு விரோதியான ப்ரதிபந்தகமாயும் விரோதியாயென்றபடி. விரோதியான ஸாதநபூதமானாலும் பரம்பரையாலேயென்கை வேதாந்தவேத்யமாகையாலே அதுவும் கைங்கர்யஸ்வரூபமாகக் குறையில்லையிறே, ஸாத்யஸாதநமானதென்றது- விரோதிகளான ஸஞ்சிதப்ராரப்தரூபங்களான ராஜஸதாமஸங்களான வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்திகளாயும் காம்யாதிப்ரவ்ருத்திகளாயுமுள்ளவையான என்றபடி. ॥ எ ॥

✻ எட்டாம்பாட்டு. ✻

பேராரோதுவாரென்றிப்பாட்டிலும் திருநாமஸங்கீர்த்தனவைபவத்தைச் சொல்லுகை ப்ரஸங்கிகமென்னவதரிப்பிக்கிறார் (ஸர்வஶ்ரேஷ்டேத்யாதியால்) திருநாமஞ்சொல்லுகைக்கு எங்களுக்கு யோக்யதையுண்டோவென்கிற ஶங்கையைப் பரிஹரிக்கையிலே இப்பாட்டுக்குத் தாத்பர்யமாகையாலேயிது ப்ரஸக்தியில்லையென்றதாயிற்று. ஆர்பேரோதுவாரென் றதைத்துக்கொண்டு உதாரணத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (யாவர்சிலரித்யாதியால்) இந்தயோஜனையில் ப்ரயோகத்துக்கு ப்ரயோஜநமில்லையென்கிற அஸ்வாரஸ்யத்தாலே யோஜநாந்தரமருளிச்செய்கிறார் (இத்திருநாமத்தையித்யாதியால்) ப்ரயோகத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரவத்யேத்யாதியால்) ப்ரதிபந்தகமும் விரோதியான ப்ரதிபந்தகமான ஜாயமாநகடாக்ஷம் அமரரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுமவனித்யாதியால்) ॥ அ ॥

ஈ— தயாவிஶேஷத்திலிப்போது ப்ரவ்ருத்திகளன்றிக்கே காலாந்தரத்திலே ப்ரவ்ருத்திப்ரதிபந்தகங்களென்றபடி. சாரா- உங்களையணுகமாட்டா, நிஶ்ஶேஷமாக நசித்துப்போமென்றபடி. ॥ எ ॥

ஊ— ஆர்- யாவர், சிலஜநங்கள், நீரார்முகில்வண்ணன்- ஸகலஜந்துக்களுக்கும் ஸேவ்யமான தேவத்தின் ஸ்வபாவமுடைய, வண்ணம்- ஸ்வபாவம், ஜலபூர்ணமேகமானது வர்ஷிக்கும்போலே உத்க்ருஷ்டாபக்ருஷ்டவிபாகமின்றியே ஸகலஜநங்களுக்கும் ஸாதாரணமான பரமபுருஷனுடையவென்றபடி. பேர்- திருநாமத்தை, ஓதுவார்- ஓதவல்லவர்கள், பரமைகாந்திகளாயகிலும் சொல்லவல்லவர்களென்றபடி. ப்ரயோஜனமன்றிக்கே திருநாமஞ்சொல்லும்படி ஸம்ஶ்லேஷ ப்ரவ்ருத்தியுடையராயிருப்பாரென்கை, அவர்களென்னுடைய அவர்களுக்கு ப்ராப்யம். அவர்கள்- அந்ததிருநாமமுச்சரிக்கவல்லஜநங்கள், ஆரார்- எவர்களெவர்களாகிலும், எத்தனையபக்ருஷ்டமான ஜந்மவ்ருத்திகளையுடையவர்களானாலுமென்றபடி. அமரரே- தேவர்களைப்போலே திருநாமஞ்சொல்லுகைக்குப் பூர்ணாதிகாரிகளான ஸர்வஶ்ரேஷ்டரே என்றபடி. ஏதங்கள்- தோஷங்கள், ஒருநாளும் அவர்களையென்றபடி. சாரா- அவர்களைக்கிட்டமாட்டா, அதீதயோஜனைக்கு ஸம்பந்தம். நீரார்முகில்வண்ணன்பேர்- வாசகமான, ஓதுவாராா- பரமைகாந்திகளாகிலும் சொல்லுவாராயவர்சிலர், அவர்களி ப்ராப்யம், ஆரார்- நிரவத்யர், அமரரே- நித்யஸூரிகளே, நித்யஸூரிகளைப்போலே ஸகலவித கைங்கர்யங்களையும் ஸர்வகாலமும்பண்ணப்பெறுவரென்றபடி. ஏதங்கள்- அந்த கைங்கர்யவிரோதிகளான பாபங்கள், சாரா- அவர்களைக்கிட்டமாட்டா, அவர்களுக்கு கைங்கர்யப்ரதிபந்தகங்களெல்லாம் நிஶ்ஶேஷமாய்ப்போமென்றபடி. ॥ அ ॥

மூ— அமரர்க்கரியானைத்* தமர்கட்கெளியானை* அமரத்தொழுவார்கட்* கமரா வினைகளே* ||கூ||
வினைவல்லிருளென்னும்* முனைகள் வெருவிப்போம்* சுனைநன்மலரிட்டு* நினைமின்னெடியானே* ||ய||

ஆ— (அமரர்க்கு) ஸநாஸ்ரிதரான தேவாதிகளுக்குங்கூடவரியனாய் ஆஸ்ரிதர்க்கெளியனாயிருந்தவனை ஸப்ருஹ த்ருஷ்டியோஜநராய்க்கொண்டே ஸம்ஜ்லேஷம் பண்ணவமையும், தெகும்கப்ரதிரோதிகளெல்லாம் போமென்கிறார். ||கூ||

(வினை) திருமேந்த்ரத்தைச்சொல்லி அழகியமலர்களைக்கொண்டு அவன்திருவடிகளிலே பரிமாறி அவனை ஸ்ஹஸயாஸ்தமாகநினையுங்கோளென்று ஸுஹாஸ்தமான ஸக்தியாமத்தைச்சொல்லிமுடிக்கிறார். ||ய||

✳ ஒன்பதாம்பாட்டு. ✳

இ— அமரத்தொழுவார்களுக்குளென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸநரேந்த்ராதியால்) இத்தால் கீழே வரிவர்ணைஸக்தவ்யக்துவாயமாகத் திருநாமஸங்கீர்த்தநத்தை யருளிச்செய்தவிப்பாட்டிலே யநந்த்ருஷ்டியோஜநவர்ணநாதிகளை தத்வஸ்வரூபமாக வருளிச்செய்கிறாரென்று ஸம்மதிஸங்க்ஷேபம். அமராவினைகளென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தெகும்கப்ரத்யாதியால்) இங்கும் வரிவர்ணை ஸக்திப்ரதிபந்தகாராமோக்ஷ ப்ரதிபந்தகங்களான என்றபடி. ஶேஷம்ஸுஸ்பஷ்டம். ||கூ||

✳ பத்தாம்பாட்டு. ✳

சுனைநன்மலரிட்டென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருமேந்த்ரத்தைபித்யாதியால்) திருமேந்த்ரத்தையென்றது- ப்ரகரணஸ்வாரஸ்யமநம், தாத்பர்யார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனை ஸஹஸ்ராதியால்) நாடீரென்கிறபாட்டைக்கொண்டு இப்பாட்டு ஸாதநாந்தபன்றோவென்ன வித்திருவாய்மொழியை நிகமிக்கிறதாகையால் ஸாதநாந்தரதோஷமில்லையென்று காட்டுகிறார் (ஸுஹாஸ்தமானவித்யாதியால்). ||ய||

✳ நிகமனம். ✳

அடியார்க்கருள்பெறேனென்கிறதற்கு சடகோபனருள்கூடும்படியாமெனன்கிற விஶேஷணத்தோடு ஸங்கதி

மூ— அமரர்க்கு- தேவர்களுக்கு, மேலேதமர்களென்கையாலே இங்கு ஸநாஸ்ரிதரான தேவர்களுக்கென்று விவக்ஷிதம், அரியானை- ஸுதுர்லபனை, ஸநாஸ்ரிதராகில் “யஞாயம்ஸமவாந் ப்ரஹ்மாஜநாதிவாரஸ்தேஷாந்தம்” என்கிறபடியே ஸதிஶயிதஜ்ஞாநரான ப்ரஹ்மாதிகளுக்குங்கூட துஷ்ப்ராபனென்றபடி. தமர்களுக்கு- ஸக்தர்க்கு, ஆஸ்ரிதருக்குஎன்றபடி. எளியானை- ஸுலபனை, ஆஸ்ரயிக்குமவர்களாகில் ஸர்வஸமாராணம் தம், ஸௌலப்யஸுஹ்ருதஸாதேஜாம், ஜலௌஸங்காநிஸாத்ருஷ்' என்கிறபடியே உத்கர்ஷாபகர்ஷம்பாராதே யவர்களுக்கு ஸுலபனானவனை, அமர- ப்ரீதிபூர்வகமாக, ப்ரயோஜநாந்தரத்தை வாங்கிக்கொண்டு விட்டுப்போகையன்றிக்கே ஸநாந்ருஷ்டியோஜநமாக என்றபடி. தொழுவார்கட்கு- ப்ரணாமம்பண்ணுவார்க்கு, வினைகள் கர்மங்களானவை, வரிவர்ணைஸக்திவிரோதிகளான பாவங்களென்றபடி. அமரா- நில்லா, ஸதிஸீக்ரமாக நஶித்துப்போமென்றபடி. ||கூ||

ய- வினை- பாபரூபாவாரகஶக்திகள், வல்- ப்ரபலமான, இருள்- அந்தகாரம், அஜ்ஞாநருபமான ஜ்ஞாநவிபரீதஜ்ஞாநங்களென்றபடி. என்னும்- என்றுசொல்லப்படுமவையான, ஶத்ருவிஶேஷங்களைச்சொன்னவிது பாவநாராதிப்ரக்ருதிஸம்பந்தங்களுக்கு முபலக்ஷணம். முனைகள்- கூட்டங்கள், முனையென்று கூட்டம், வெருவிப்போம்- நீங்களாய்ப்போம், நீதரோடிப்போமாய்ப்போலே ஸதிஸீக்ரமாக நிவ்ருத்தங்களாமென்றபடி. இதுஹேதுமந்தம், ஆதலால் நினைமினென்று மேலேயந்வயிக்கிறது, சுனைநன்மலர்- ஸரஸ்ஸுக்களிலுண்டான நல்லபுஷ்பங்களை, சுனை- ஸரஸ்ஸு, ஸரஸிஜஸௌகந்திகாதிகளான கமநீயகுஸுமங்களையென்றபடி. இட்டு- ஸமர்ப்பித்து, நெடியானை- நீவாமப்யாஸானவனை, ஸர்வதோ ஸ்துஸ்ய, நீங்களொருக்கால்நினைத்தால் பின்னை யாவச்சாகுமும்மறவாதே யுங்களை நினைத்தபடியேயிருக்கும் ஸ்வாவனானவனையென்றபடி. நினைமின்- ஸஹஸயாஸ்தமாகநினையுங்கோள், ப்ரீதிபூர்வகமாக த்யானம்பண்ணுங்கோளென்றபடி. ||ய||

மூ—நெடியானருள்சூடும்* படியான்சடகோபன்* நொடியாயிரத்திப்பத்* தடியார்க்கருள்பேறே* ॥கக॥

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ—(நெடியான்) இத்திருவாய்மொழிவல்லா ராழ்வாரைப்போலே நெடியானருள்சூடும்படி யாவரென்கிறார். ॥கக॥

திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

இ— வ்யாஹாரத்தால் ஃபலிதவர்த்தத்தை யருளிச்செய்கிறார் (ஆழ்வாரைப்போலேயித்ப்ரதியால்) ॥கக॥

ஸ்வா— நெடியான்- ஸர்வோத்தமனான ச்ரிய:பதியினுடைய, அருள்சூடும்படியான்- க்ருபையை சிரஸா வஹிக்கும்ஸ்வபாவரான, படி- ஸ்வபாவம், அவனுடையக்ருபையைப்பெற்று அதுதன்னையே ஸர்வோத்தமாதிகளை சிரஸாவஹித்துக்கொண்டு அநுபவிக்குமாப்போலே நிரதிசயபோக்யமாக வநுபவிக்கும் ஸ்வபாவரானவென்றபடி. சடகோபன்- ஆழ்வாருடைய, நொடி- உக்தியான, நொடியென்று உக்திக்குப்பேர், ஆயிரத்து- ஸஹஸ்ரத்தில், இப்பத்து- இத்தசகம், அடியார்க்கு- இதைப்யஸித்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, அருள்பேறு- க்ருபாப்ராப்தி:, இப்பத்தால் பகவத்ப்ரஸாதக்ருபாப்ராப்தி பலமாயிற்றென்று வ்யஞ்ஜிக்கைக்காக 'ஸதாம்ஸதாம்ப்ரஸாதோதேவப்ரஸாதவர்த:, இது ஸம்க்ஷேபகாரம், 'ஸதாம்ஸதாம்ப்ரஸாதேவ ப்ரஸாதம்கேவிலப்யவக்ஷத்' உக்திலக்ஷணாக. ॥கக॥

ஜ்ஞாநவைராக்யநிஷ்டாநிதயே ஸ்ரீசடகோபாநுஜமஹாதேசிகாய நம:

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி:

(கண்ணன்கழலிணை.)

நாமஸங்கீர்த்தநஸ்வவசீப்ருதயாஸநாதாநமேஷம்
ஸம்ஸ்ப்ருத்யாவஷ்டாநாஜ்யநியமநோஸ்தாநஸ்ததாதிக்ருபைத்ர்யை: ।
யமேசேவ்ணார்ப்பணேகேசவஸ்மாஹவிஜநவ்ருத்தி யோதீவப்ரயோயத்தை:
ஸ்ரீமந்நாராயணஸ்ய க்ருபயபாதவிஷ்யாதிபாஷ்யஸ்ஸூக்ஷ்மஸ்ரீ ॥க0அ॥

(நாமஸங்கீர்த்தநமநத்ருஷி) எண்ணுந்திருநாமம்- நாரணமென்னம்மான்- நாமேயுலகேகல்லேன்- தாள்வாய்மலரிட்டு- வாடாமலர்கொண்டுபாடீரவன்னாமம்- பேயார்முலையுண்டவராயான்மாதவனே- மாதவனென்றென்றோதவல்லீரேல்- பேராரோதுவார், அமரத்தொழுவார்கட்கு- சுனைநன்மலரிட்டுநினைமின்- நாராயணாதி திருநாமஸங்கீர்த்தநத்தாலும், ஸர்வேச்வரகேசநஞ்ஜாநத்தாலும், ப்ரதிக்ஷணஸ்மரணத்தாலும், பாதாரவிந்த ஸமர்ப்பணத்தாலும், திருநாமங்களுடைய ஸஞ்ஜபநத்தாலும், ப்ரவசநத்தாலும், ஸ்தோத்ரங்களும் ஸ்துதிகளாதிகளாலும், மற்றும் நித்யநைமித்திகாதி வர்ணாச்ரமதர்மங்களாலும், ஹவ்யதர்மங் களிலே சிலவற்றையருளிச்செய்தது மற்றுமுண்டான தர்மங்களுக்கு முபலக்ஷணமென்று திருவுள்ளம், இவைகளிலே எம்பெருமான்தன்னை பஜிக்கைக்கு பஹுப்ரகாரங்களை யுடையனாயிருக்கிறானென்று "கண்ணன்கழலிணை" என்கிறதசகத்திலே ப்ரதிபாதித்தருளிச்செய்தாரென்கிறார். ॥க0அ॥

ஸ்ரீசடகோபராமாநுஜமஹாதேசிகாய நம:

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பத்தாம்பத்தில் ஐந்தாந்திருவாய்மொழிமுற்றிற்று.

ஆறு ந் திருவாய்மொழி.

மூ— அருள்பெறுவாரடியார்தம்மடியனேற்காழியான்*. அருடருவானமைகின்றான் துநமதுவிதிவகையே*

ஆ—(அருள்பெறுவார்) இனிதன்றிறத்திலெம்பெருமான் செய்தருளுகிறபடியைத் தன்றிருவுள்ளத்தோடேகூட

ஆறுந் திருவாய்மொழி.

இ— இப்படி ஆழ்வார் அஞ்சிறையமடநாரை தொடங்கி ப்ரஸக்தாநுப்ரஸக்தங்களாய்ப்போந்த ஸம்ஶ்லேஷ விஶ்லேஷ ரஸங்களெல்லாம் நீங்கி ஸம்ருத்தராய் தாம் வாஞ்சித்தபடியே ப்ராப்தராய் அவ்வளவிலேயுமில்லாதே முன்புதான் வீடுமின்முற்றிலே பாஹித்துவைத்த ஸக்தியோகத்தினுடைய ப்ரகாரவிஶேஷங்களை ஸஞ்ஜீவநஜீவநாதிகமாக தம்முடைய கைங்கர்யத்தாலே விஸ்தாரமாகவிசாரிப்பதும் செய்தருளின பின்பு மேற்சொல்லவேண்டுவதொன்றுமில்லாமையாலே யிவ்வளவிலே யிப்ப்ரபந்தம் தலைக்கட்டலாயிருக்க; அருள்பெறுவாரித்யாதியாலே பின்னையுஞ்சிலவற்றைப் பேசவுபக்ரமிக்கை யஸமஞ்ஜஸமன்றோவென்னவருளிச்செய்கிறார் (தன்றிறத்திலெம்பெருமான் செய்தருளுகிறபடியையென்றது) தம்மைத்திருநாட்டுக்குக் கொண்டுபோக ஸ்வீகரிக்கிறபடியையு மிப்படிதான் ஸ்வீகரணையிருக்கச்செய்தேயும் 'அஜ்ஞாநேநாத்ம ஹஸ்தோ விநாஶ' என்கிறபடியே யிவர்தாமாக தன்னையாஜ்ஞாபிக்கவேணுமென்று தம்முடைய அஜ்ஞாநப்ரதீக்ஷணாய்க்கொண்டு பராதந்த்ரனாயிருக்கிறபடியையு மென்றபடி. கீழ் ஸக்தியோகப்ரகாரங்களை யநுபவித்துக்கையொழிந்து கைங்கர்யமைத்தீர்ந்தவநந்தர மாழ்வாருக்குத்தம்பக்கல் விடாய்மிஞ்சிவருகிறபடியைக்கண்டு பரமேஶ்வரன் அவர்க்காட்டிலும் தான்விடாயுடையனாப் யிவரையிப்போதே திருநாட்டிலேகொண்டுபோகவேணுமென்றுபதறி யிப்படிதான் ஸ்வீகரணைனும் யிவராகத்தன்னை யாஜ்ஞாபித்தபின்பு தானிவரைக் கண்டுகொண்டு போகவேணுமென்றிங்ஙனே யிவர்பக்கலிலே தனக்கொரு கிங்கரவ்ருத்தத்தை யாசைப்பட்டவஸரப்ரதீக்ஷணாய் நிற்கிறபடியைக்கண்டு மிகவும்ஹ்ருஷ்டராய் இப்படியவன் தன்றிறத்தில்செய்தருளுகிற விஶேஷகாரங்களையெல்லா மந்தரங்கபக்தியுள்ளடங்காமையாலே தந்திருவுள்ளத்தோடேபோ யநுஸந்திக்கிறாரென்றபடி. இத்தாலித்திருவாய்மொழிக்கு பகவதீயவ்யாஜம்போகமென்கிற ஸங்க்ஷேபம் ப்ரதிபாத்யமென்றதாயிற்று. *

ப— அருள்பெறுவார்- க்ருபையைப்பெறுமவர்களான், பரமேஶ்வரனுடைய நிரவதிக்ருபையைப்பெறுகையே தங்களுக்கு நிரூபகமாகவுடையவர்களான வென்றபடி. அடியார்- ஶேஷத்வஜ்ஞாநவிகரான பாகவதர்க்கு, தம்மடியனேர்க்கு- தங்களுடைய ஶேஷபூதனான வெனக்கு, தங்களுக்கே யஸாதாரணஶேஷபூதனான வெனக்குஎன்றபடி. அடியேனென்கிறஸ்வத்துக்கு அடியனேனென்று ரூபமுண்டு, ததீயஶேஷத்வமே நிரூபகமாகவுடையனாயிருக்கிற வெனக்குஎன்றபடி. அருள்தருவானென்று மேல் வக்ஷ்யமாணமானத்துக்கு ஸார்த்தமாக தம்பக்கலுள்ள வைலக்ஷண்யஞ்சொன்னபடி, "நீக்கமிலாவடியார் தம்மடியார் அடியாரடியாரெங்கோக்கள்'' என்றும்,தமர்கள்தமர்கள்தமர்களாஞ்சதிரேவாய்க்க' என்றும் நான்சொன்னவற்றையே நினைத்திருக்கிறனவனென்றுகருத்து. ஆழியான்- திருவாழியாழ்வானை தன்னுக்கு நிரூபகமாகவுடையவன், திருவாழியாழ்வானைக் கைவிடிலன்றோ ஆஶ்ரிதரைநான் கைவிடுவதென்று காட்டுமாப்போலே கையுந்திருவாழியுமாய்நிற்கிற ஸர்வேஶ்வரனான வென்றபடி. அருள்தருவான்- ப்ரஸாதவிஶேஷத்தைத் தரக்கடவனாக, திருநாட்டில் ஸ்வரூபாநுரூபமாகிற கைங்கர்யஸம்பத்தைத் தந்தருளக் கடவனாகவென்று பர்யவஸிதார்த்தம், அமைகின்றான்- பர்யாப்தனாகநின்றான், ஸாவகாஶனாகநின்றானென்றபடி. அருள்பெறுவார் தம்மடியனேர்க்கென்று பாகவதர்களை யருள்பெறுவாராகச்சொல்லி யவர்களுக்கடியேனானவெனக்கு அருள்தருவானமைகின்றானென்கிறவித்தால் என்னுடைய ஸாதிகள்பக்கலவன்செய்தருளினக்ருபை யென்னளவாக வெள்ளமிடாநின்றதென்று கருத்து. அதிலடியாரென்கிற பஹுவசநத்தாலு மவர்களெல்லார்பக்கலும் பண்ணுமருளை யென்னொருவன்பக்கலிலே செய்தருளாநின்றானென்றபடி. அது- அந்தகைங்கர்யத்தைத் தந்தருளுகையானது, நமதுவிதிவகையே- நம்முடையவிதிப்ரகாரமே,

மூ— இருடருமாஞாலத்துள் இனிப்பிறவியான்வேண்டேன் * மருளொழி நீ மடநெஞ்சே வாட்டாற்றானடி வணங்கே ॥ (1)

ஆ— அநுஸந்திக்கிறார், எம்பெருமான்றன் அருள்கூடும்படியான அடியார்க்கடியேனாயிருக்கும் இதுவே படியாயிருந்த எனக்கு ஆழியான் நிரவதிகஸம்ருத்தியைத்தருகையாலே சமைந்திராநின்றான், அதுவும் நான்சொன்னபடியே செய்தருளக்கடவனாயிராநின்றான், ஆனபின்பு இனியிந்தஸம்ஸாரத்தை நான்வேண்டேன், நீயுமிந்தஸம்ஸாரத்தைவிட்டு அவன்நமக்குத்தந்தருளுகிற தன்திருவடிகளாகிற ஸம்ருத்தியைக்கொண்டு அந்தஸம்ருத்தியை அநுபவியென்று தம்முடைய நெஞ்சைக்குறித்தருளிச்செய்கிறார். ॥ க ॥

(வாட்டாற்றான்) வாட்டாற்றானுடைய திருவடிகளை அநுபவித்துக்கொண்டு ப்ரதிபக்ஷத்தைப்போக்

முதற்பாட்டு.

இ— ப்ரதமபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எம்பெருமான்றன்னித்யாதியால்) இங்கு தன்னென்றது ஸ்வகீயம், இதுவேபடியாயிருந்த என்றது- இதுவே ஸ்வபாவமாயிருந்த என்றபடி. அருள்தருவானமைகின்றானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரவதிகேத்யாதியால்) சமைந்திராநின்றானென்றது- ஸர்வஜ்ஞனாயிராநின்றானென்றபடி. அதுநமதுவிதிவகையே என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அதுவுமித்யாதியால்) த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆனபின்பித்யாதியால்) மருளொழிநீயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நீயுமித்யாதியால்) வாட்டாற்றானடிவணங்கு என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவன்நமக்கித்யாதியால்) ॥ க ॥

இரண்டாம்பாட்டு.

வாட்டாற்றானடிவணங்கியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வாட்டாற்றானுடையவித்யாதியால்) மாஞாலப்பிறப்பறுப்பானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரதிபக்ஷத்தையித்யாதியால்)

ப— நமது- ஸ்வகீயம், விதி:- ஆஜ்ஞாவசநம், ஸ்வதந்த்ரனானதான் நினைத்தபடியன்றியே நாமாஜ்ஞாபித்தபடியே செய்தருள்வானாயிராநின்றானென்றபடி. நமதுசொல்வகையே யென்னாதே நமதுவிதிவகையே யென்றதால் "ஐச்வர்யம் நிராக்ருத்ய கிங்கரஸ்வஸ்வாமிகள் । ஆஜ்ஞாப்யோஹம் தவவிஷ்ணோ" என்கிறபடியே நம்பக்கல் பாரதந்த்ர்யத்தைக்கொண்டு ஆஜ்ஞாப்ரதீக்ஷனாயிராநின்றானென்றுகருத்து. இனி- அவனிப்படி நமக்கு ஸ்வவசனானபின்பு, இருள்தரு- அஜ்ஞாநத்தைத் தந்தருளுமதான, இருக்கவிருக்க அஜ்ஞாநத்தையுண்டாக்குமதான வென்றபடி. இது ஹேதுகர்ப்பவிசேஷணம். இது உத்தரோத்தராஜ்ஞாநாவஹமாகையாலே இதில் பிறவிவேண்டேனென்றதுசிக்கிறது, மா- மஹத்தான, ஸமுத்ரங்களுக்கொதுங்கி வஸிக்குமாப்போலே இதில்லாதவிடம் பார்த்தொதுங்கி வஸிக்கவொண்ணாதபடி அநந்தாபாரவிஸ்தாரமானவென்றபடி. ஞாலத்துள்- ஜகத்திலே, ப்ரக்ருதிஸம்பந்தத்திலே யென்றபடி. பிறவி- ஜந்மத்தை, இந்த ஸம்ஸாரத்தில் இருப்பையென்றபடி. யான்- அவனுடையஸ்வரூபத்தையறிந்த நான், வேண்டேன்- அபேக்ஷியேன், 'இழிபட்டோடுமுடலினில்பிறந்து தன்சீரியான்கற்று' என்று ஸ்ரீவைஷ்ணவஸம்பத்தியாலே முன்பிறந்த ஸம்ஸாரத்திலிருப்பை அபேக்ஷித்ததுண்டேயாகிலும் ஸம்ஸாரம் ஸ்ரீவைஷ்ணவஸம்பத்துக்கு உறுப்பாகாதே யாத்ருச்சிகாஜ்ஞாநத்தையும் ஸ்வகார்யஸ்வாதந்த்ர்யத்தையும் உண்டாக்குவதொன்றாகையாலே இனியிதிலிருப்பை அபேக்ஷியேனென்றபடி. மடநெஞ்சே- எனக்குவச்யமானமநஸ்ஸே. மடம்- பவ்யம், நீமருளொழி- நீ அஜ்ஞாநத்தையொழித்துவிடு, மருள்- அஜ்ஞாநம், "தெருளைப்புள்ளத்தின்சார்வல்லவாகித் தெளிவிசும்பேறலுற்றால், திருவாறன்விளையதனை மேவிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலென்று மென்சிந்தனை" என்றுணர்த்தவஸாயாமமாகவுள்ள ஸர்வேச்வரஸம்பத்தியமான அஜ்ஞாநத்தை இனியொழிந்துவிடென்றபடி. ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைப்புங்கு மயங்கப்பண்ணினதாகையாலே ஸ்வஸ்வரூபமான விஸ்வ ஸாரத்திலே ஸர்வேச்வரஸமமடியாகவுமிருக்கிறதைக்கை பலிக்கக்கடவதன்றென்று கருத்து. வாட்டாற்றான்- திருவாட்டாறென்கிற திவ்யதேசத்திலெழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனுடைய, அடி- திருவடிகளை, வணங்கு- ப்ரணமித்துஸேவிக்கப்பார், அதாவது உன்ஸ்வாதந்த்ர்யத்தைவிட்டு அவன்திருவுள்ளத்தை அநுஸரித்தவன்திருவடிகளை அநுபவிக்கப்பாரென்றபடி. நம்மை திருநாட்டிலேகொண்டுபோகைக்காக திருவாட்டாற்றிலே வந்தெழுந்தருளியிருக்கிறவன்திருவடிகளை அநுபவிக்கப்பாரென்றபடி. ॥க॥

மூ — வாட்டாற்றானடிவணங்கிமாஞாலப்பிறப்பறுப்பான்* கேட்டாயேமடநெஞ்சேகேசவனெம்பெருமானைப்*
பாட்டாயபலபாடிப்பழவினைகள்பற்றறுத்து* நாட்டாரோடியல்வொழிந்துநாரணனைநண்ணினமே* ॥உ॥
நண்ணினநாராயணனைநாமங்கள்பலசொல்லி* மண்ணுலகில்வளமிக்கவாட்டாற்றான்வந்தின்று*

ஆ — ருசைக்காக அவனைப்பேக்ஷித்தும் அபேக்ஷித்தபடியே ப்ரதிபந்தகத்தைப்போக்கி அநாதியான ஸம்ஸாரமிருந்த நாட்டாருடைய ஸஹவாஸத்தையொழிந்து ஸர்வகாரணராய் அவனைவந்து ப்ராபிக்கப் பெற்றோமே நெஞ்சே, நமக்குவிளைந்தஸம்ருத்தி கண்டாயேயென்கிறார். ॥உ॥
(நண்ணினம்) நாமங்கள்பலசொல்லிக்கொண்டபேக்ஷித்து நாராயணனை ப்ராபிக்கப்பெற்றோம்

இ — பாட்டாயபலபாடியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனையபேக்ஷித்துஎன்று) பழவினைகள் பற்றறுத்தென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அபேக்ஷித்தபடியேயித்யாதியால்) நாட்டாரோடியல் வொழிந்து என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அநாதிநேத்யாதியால்) நாரணனைநண்ணினமென்கி றதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதியால்) இத்தால் கீழ்ப்பாட்டிலே காஷ்டமென வை காரங்களைச்சொல்லி யநுபவித்தவரிப்பாட்டிலே கீழவன்பிறந்துசெய்தருளின உபகாரபரம்பரை யநுபவிக்கிறாரென்று ஸங்கதியும் ஸூசிதமாயிற்று. ॥உ॥

*** மூன்றாம்பாட்டு. ***

சொல்லியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சொல்லிக்கொண்டபேக்ஷித்தென்று) இன்றுஎன்கிற

ஈ — வாட்டாற்றானடிவணங்கி- திருவாட்டாற்றிலெம்பெருமானுடையதிருவடிகளை ஸேவித்துக்கொண்டு, அவன் திருவடிகளை யநுபவித்துக்கொண்டென்றபடி. மாஞாலப்பிறப்பு- மஹாப்ருதிவியிலே ஜந்மத்தை, ஸம் ஸாரஸம்பந்தத்தில் ஸ்திதியை என்றபடி. அறுப்பான்- சேதிக்கைக்கு ஸ்வபாவமுடையவனை, அறுப்பானென்றது ஸுப்ருத்ப்ரயோகம். இதற்குப்பாடியென்கிறதோடேயந்வயம். கேசவன்- கேசிஹந்தாவான, கேசியை நிரஸித்தாப்போலே நம்முடைய விரோதிகளை நிரஸிக்குமவனென்று கருத்து எம்பெருமானை- ஸுலபஸ்வாமியை, பாட்டாயபலபாடி- பாட்டாயுள்ளவையநேகங்கள்பாடி, வ்ருத்திபேதத்தாலும் ரஸபேதத்தாலும் பேதாவிஷ்டங்களாக ஆநுகாரிகஸ்வரூபஸித்தங்களான பாட்டுகளநேகங்களைப்பாடியென்றபடி, க்ருஷ்ணனை ஸ்தோத்ரம்பண்ணியென்னுமாப்போலே யெம்பெருமானை பாட்டாயபலபாடியென்று இதற்கும் ஸ்துத்யஸாபேக்ஷத்வம், எம்பெருமானை பாட்டுகளாலே ஆராதித்துஎன்றபடி. ரக்ஷணீயங்களானவஸ்துக்களாலே ப்ரயோஜநமுடைய ஸவிலக்ஷணமெல்லாஞ்செய்கையிலே ஸாமர்த்யவேறும்படி பண்ணியென்கை. பழவினைகள்- அநாதிகர்மங்களை, பற்றறுத்து- ஸம்பந்தமறும்படிபண்ணி, பற்று- ஸம்பந்தம், ஸவாஸநமாகப்போக்கியென்றபடி. நாட்டாரோடு- ஸம்ஸாரிகளான லௌகிகரோடு, இயல்பு- ப்ரவ்ருத்தியை. அவர்களோடேகூடத்தானும் ஸம்ஸாரிகளோடுஸஹவாஸமாக வர்த்திக்கையையென்றபடி. ஒழிந்து- மறுவலிடாதபடி கைவிட்டு, நாரணனை- நாரங்களுக்கெல்லாம் நிரதிசயபோக்யமான உபாயமும் உபேயமுமாயிருக்கிற ஸ்ரீயப்பதியை, நண்ணினம்- சேர்ந்தோம். ஸம்ஸாரிகளெல்லாரும் நிற்கத்தக்காதே ஸாக்ஷாத் போலே நிரந்தரமாக அநுபவிக்கப்பெற்றோம், மடநெஞ்சே- எனக்குஸஹாயமான நெஞ்சே, கேட்டாயே- அவன்செய்தருளின இவ்வுபகாரபரம்பரையெல்லாம் இருந்தபடி கேட்டாயோ, நீயும் கேட்டாயேயென்றது கேட்டாயோவென்றபடி. இது தாம்சொல்லுகிற வஸ்துவின் மஹத்த்வத்தை வெளியிடுகைக்காக அருளிச்செய்கிறபடி. ॥உ॥

ரு - நாமங்கள்பலசொல்லி - வாசகமான ஸஹஸ்ரநாமாதிகளுக்கு வாசகங்களான திருநாமங்களநேகங்களைச்சொல்லி, தத்ஸமானப்ரதிபாதக நாமங்களைச் சொல்லியபேக்ஷித்தென்று தாத்பர்யம், நாராயணனை- ஸர்வப்ரகாரநிரதிசயபோக்யனான ஸ்ரீயப்பதியை, நண்ணினம்- சேரப்பெற்றோம் கண்டநுபவிக்கப்பெற்றோமென்றபடி. மண்ணுலகில்- பூலோகத்திலே, வளம்மிக்க- ஸம்பத்துமிக்கிருக்கிற, வளம்- ஸம்பத்து, பூலோகவாஸிகளையாலே திருநாட்டிற்காட்டிலும் ரக்ஷகனானவனுக்கு ரக்ஷ்யஜநஸம்பத்து மிகுந்திருக்குமதானதென்றபடி. வாட்டாற்றான்- திருவாட்டாற்றைத்தனக்கு நிரதிசயபோக்யமாகவுடைய ஸர்வேச்வரன், வந்து- நாம்கடந்துபோகவேண்டும் தேசமெல்லாம் தாம்கடந்துவந்து

மூ—விண்ணுலகந்தருவானாய்விரைகின்றான்விதிவகையே* யெண்ணினவாறாகவிக்கருமங்களென்னெஞ்சே* (ஆ)
என்னெஞ்சத்துள்ளிருந்திங்கிருந்தமிழ்நூலிவைமொழிந்து*

ஆ—அதின்மேலே அவன்தானேவந்து நிர்ஹேதுகமாக நமக்கு திருநாட்டைத்தருகையிலே விரையாநின்றான், நாம் 'இத்தைச்செய்' என்றுசொல்லுமதுவே தாழ்வாகவிருக்கிறனத்தனை, ஆனபின்பு இனியவனை நண்ணினோமேயல்லோமோ நெஞ்சே இங்ஙனேயிருப்பதொரு ஸம்ருத்தி நமக்கு விளையக்கடவதாக ஸங்கல்பத்திலேதான் நினைவுண்டோவென்கிறார். ௩௫

(என்னெஞ்சத்துள்) ஸநகாதிகளாலேயும் அவாங்மநஸகோசரவைபவமான திருநாட்டை நம்முடையசிறுமைபாராதே நமக்குத்தந்தருளுமோவென்னில்? என்னுடைய நிகர்ஷமும் சிறுமையும்பாராதே யென்னெஞ்சுள்

இ— வடித்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிர்ஹேதுகமாகவென்று) ஸக்தியோதிஹாந்தமல்லாவாயமன்றிக்கே யென்றபடி. விரையாநின்றானென்றது- த்வரியாநின்றானென்றபடி. இத்தால் முதற்பாட்டிலே திருநாட்டைத்தருகையிலே வரிவங்கமுடையனானென்றவ ரிப்பாட்டிலேயதற்கு த்வரியாநிற்கிறானென்று ஸூசிதமாகிறதென்று ஸமதிஸம்ப்ரதிபத்தி. விதிவகையேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நாமித்தையித்யாதியால்) இதுக்கு ஸங்கதியருளிச்செய்கிறார் (ஆனபின்பித்யாதியால்) தாத்பர்யவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நெஞ்சேயிங்ஙனேயித்யாதியால்) ௩௬

* நாலாம்பாட்டு. *

நமக்கருடான்செய்வானே என்றிப்பாட்டிலேசொல்லுகிறவிது அருள்தருவானமைகின்றான் என்று முதற்பாட்டிற்சொன்னத்தைக்கொண்டு வாநராக்ஷிபன்றோவென்ன இப்பாட்டுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக அவதாரிப்பிக்கிறார் (ஸநகேத்யாதியால்) என்னெஞ்சத்துள்ளிருந்து என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுடைய இத்யாதியால்) இங்கு என் என்கிறவிடம் ஸ்வநிகர்ஷாநுஸந்தானமென்று கருத்து, நிகர்ஷம்— தோஷாநுரூபகம், சிறுமை— ஸாதநாபாவஸூசகம், இங்கிருந்தமிழ்நூலிவைமொழிந்து

ப—இன்று- இதுக்குமுன்பு நாமொரு ஸாதநாநுஷ்டானம்பண்ணியறியாதிருக்க அஸங்கிதமாக இன்றைக்கு, விண்ணுலகம்- பரமபதத்தை, அங்கேயொரு குடியிருப்புமாத்ரத்தையன்றிக்கே அந்தலோகத்தை யெல்லாமென்றபடி. விதிவகையே- விதிப்ரகாரமாக, நம்முடைய பாக்யப்ரகாரத்திலேயென்றபடி. தருவானாய்- கொடுப்பானாய், விரைகின்றான்- த்வரியாநின்றான், விரைகை- த்வரிக்கை, என்னெஞ்சே- எனக்கநுகூலமாகவுபகரணமானநெஞ்சே, நீயெனக்குபகரணமாயிருந்து அநுகூலிக்கையால்வந்த ஸம்ருத்தியன்றோவித்தெல்லாமென்றுகருத்து. இக்கருமங்கள்- இந்தகார்யங்கள், நாமவனையிங்கே நிரந்தரமாக அநுபவிக்கப்பெறுகையும் நாம்செல்லவேண்டும் தேசமெல்லாமவன்கடந்துவருகையும் திருநாட்டைத்தருகையிலே த்வரிக்கையும் அதுநம்முடைய பாக்யப்ரகாரமாகையுமாகிற விக்கார்யங்களென்றபடி. எண்ணினவாறு- நாமெண்ணினப்ரகாரமாக, ஆறு- ப்ரகாரம், ஆகா- ஆகிறனவல்ல, நாமெண்ணினபடி வருகிறனவல்ல என்கை— இக்கார்யங்களிங்ஙனே ஸித்திப்பனவாக ஸங்கல்பத்திலேதான் நமக்குநினைவுண்டோவென்றுகருத்து. ௩௭

ஸ— என்னெஞ்சத்து- ஸ்வாஹமமவாஸஸமாஸக்தனைப் ஸ்வாஹமவதேஹஸம்பந்நனையிருந்த என்மநஸ்ஸினுடைய, ஸ்வாபாவஸம்பந்தத்தால் ஸமாஜம்போலே என்ஸம்பந்தத்தால் என்னெஞ்சவனுக்கு த்யாஜ்யமென்றுநானிருக்க அவன் என்ஸம்பந்தஹேதுவாக என்னெஞ்சை ஆதரியாநின்றானென்று கருத்து. உள்- உள்ளுக்குள்ளே, விடாய்ப்பட்டவன் சீதளமானஸரஸ்ஸிலே மேல்நீரைநீக்கி ஆழமுழுகிக்கிடக்குமாப்போலே என்னெஞ்சினுள்ளுக்குள்ளே புகுந்தானென்றுகருத்து. இருந்து- ப்ரதிஷ்டிதனாய், ஸ்வஸ்தாநம் கிரியையும்நினையாதே இங்கே ஸ்திரப்ரதிஷ்டியாயிருந்து என்றபடி. இதுக்கு மொழிந்துஎன்கிறதோடேயந்வயம், வாக்யபூர்த்தி ஸர்வாஸ்ம ஸர்வக்ஞனாகிய ஸாக்ஷாத்தானவனாய்போலே அவன் என்னெஞ்சுள்ளிருந்தே என்னைக்கொண்டு தான்கவிபாடுகைக்கு ஹேதுவாய்விட்டதென்றுகருத்து, இங்கு- இந்தலோகத்தில், இதற்கும் மொழிந்துஎன்கிறத்தோடே அந்வயம், திருநாட்டிலும் இல்லாததான திருவாய்மொழியாகிற ஸம்பத்தை இங்குண்டாக்கினானென்று கருத்து. இரும்- விசாலங்களான, கேட்டாரார் வானவர்களென்னும்படி நித்யவிபூதியிலுமடங்காததான ஸாரஸ்யத்தை யுடையனவானவென்றபடி. தமிழ்நூல்- த்ராவிடஶாஸ்த்ரங்களான, நூல்- ஶாஸ்த்ரம், 'பஞ்சலக்ஷணமாயாஸ' மென்கிற

மூ— வன்னெஞ்சத்திரணியனைமார்விடந்தவாட்டாற்றான்* மன்னஞ்சப்பாரதத்துப்பாண்டவர்க்காய்ப்படை தொட்டான்* நன்னெஞ்சேநம்பெருமானமக்கருள்தான்செய்வானே* ॥௪॥

ஆ— புகுந்திருந்து என்னைஉபகரணமாகக்கொண்டு திருவாய்மொழியைச்சொல்லி ஸ்ரீஸூக்திகளான ஹிரண்யவதாத்யபதாநாதிநிரூபணத்தையும் எனக்கு ஸௌஹ்ருதமாகச்செய்தருளின நிரவதிகவாத்ஸல்ய காருண்யஸௌசீல்யாதி குணங்களையுடையவனாயிருந்தவன் இனியிருநாட்டை நமக்குத்தந்தருளுமென்னுமிடம் சொல்லவேணுமோ என்னைக்கொண்டு திருவாய்மொழியைச்சொல்லுவிக்கையாகிற விந்தஸூசியிற்காட்டிலும்

இ— என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னை உபகரணமித்யாதியால்) த்விதீயத்ருதீயபாதத் திற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீஸூக்திகளித்யாதியால்) நம்பெருமானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எனக்குஸௌஹ்ருதமித்யாதியால்) என்னெஞ்சத்துள்ளிருந்து என்கிறதற்கு ஸூசிதார்த்தமருளிச்செய்கிறார் (வாத்ஸல்யஸௌசீல்யத்தாலே) இருந்தமிழ்நூலித்யாதி நம்பெருமானித்யந்தமாக ஸூசிதார்த்தமருளிச்செய்கிறார் (காருண்யேத்யாதியால்) நமக்கருள்தான்செய்வானே என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இனியிருநாட்டையித்யாதியால்) பாட்டுக்கு பாவார்த்தமருளிச்செய்கிறார் (என்னைக்கொண்டித்யாதியால்)

ப— கணக்கிலே பின்புள்ளகவிகளுக்கெல்லாம் இத்தைக்கொண்டு லக்ஷணங்காட்டலாம்படி த்ருஷ்டிவிஷயங்களுக்கு உதாஹரணஸ்தலங்களானவென்றபடி. நானென்றுற்றமையாலே யலற்றுநிற்கத் தானந்தப்ராகாரங்களை ஸர்வலக்ஷணோபேதங்களாம்படி பேசுவிக்கிறானென்றுகருத்து. பனுவல்- தமிழ்நூலென்றது- த்ருஷ்டிவிஷயங்களாய் ஸகலவேததாத்பர்ய நிர்ணாயகப்ரபந்தங்களானவென்றபடி. இவை- இப்பாட்டுக்களை, இவற்றின்ஸௌஹ்ருதகாரணமாயிருக்கையாலே மேல்போகமாட்டாதே தம்மாலும் விசேஷித்துச் சொல்லவொண்ணாதபடியான ஸௌஹ்ருதத்தினுடைய ஸர்வோத்க்ருஷ்டதையும் தோற்றும்படி யிவையென்று பாவநிர்தேசம் பண்ணிக்கொண்டு அநுபவிக்கும்படி, மொழிந்து—தானருளிச்செய்து "பாண்டவாநாம்ப்ரஸாதேந ப்ரஸாதைஸ்ஸுபகார்த்தைஸ் ஸர்வத்ரவிஸ்மயகாரகை: யுக்தாயஸ்யாதிதேவஸ்ய" என்கிறபடியே இப்ரபந்தமருளிச்செய்தவனவனே, நானவனுடைய ஸர்வஜ்ஞத்வத்துக்கு விஷயமாயிருந்தேனத்தனையென்று பாவம். இதில் நம்முடைய வ்யாபாரமும் ஸஹகாரியாயிருக்கிறதேயாகிலும் அதெல்லாம் ப்ரயோஜகனான அவனுடைய காருண்யவாத்ஸல்யாதிகளாலே யென்றுகருத்து. "ஸோபாவ்ருஷஸ்ஸர்வ" மென்கிறவிடத்தில் ஸோபாவ்ருஎன்றது ஸோபாவ்ருதவானென்று வ்யாக்யாதமானாப்போலே இவ்விடத்திலும் மொழிந்துஎன்றது மொழிந்திருக்கிறவனென்றபடி. வல்- வலியதான, வல்லென்றுவலியது, ஸகாரஸ்யநகாரேவஸ்ய நகாராதேசம். ஸ்ரீவைஷ்ணவமில்லாதவளவன்றிக்கே ப்ரஹ்லாதஜ்ஞானாதிஸகலபரமான என்றபடி. நெஞ்சற்று- மனஸ்ஸையுடையவனான், நெஞ்சையுடையவன் நெஞ்சத்தான், நெஞ்சத்திரணியனென்று ஸமாஸபதம், இரணியனை- ஹிரண்யாஸுரனை, மார்விடந்த- வக்ஷஸ்ஸை நகங்களாலே கீண்டவனான அதிகாரபூர்வஸம்ஹாரத்துக்கு ப்ரதானமான, அந்த வன்னெஞ்சுகிடக்கிறவிடமான வக்ஷஸ்ஸ்தலத்தை விதாரணம்பண்ணினவனானவென்றுகருத்து. வாட்டாற்றான்- திருவாட்டாற்றிலேயிருக்கிறவனான, ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு ஸம்பத்தத்திலே ஒளிந்திருந்ததுபோலன்றிக்கே நித்யஸம்ஸாரிகளுமிருந்தெல்லாற்குமாவத்திலே புதவுகைக்காக திருவாட்டாற்றிலே யெழுந்தருளியிருக்கிறவனானவென்றபடி. மன்- க்ஷத்ரஜாதியானது, மன்- க்ஷத்ரஜாதிக்குப்பேர், ஸாரதிஸபராஸத்துர்யோதனாதி ராஜலோகமுமென்றபடி. அஞ்ச- அஞ்சும்படி, ந்ருஸிம்ஹாவதாரம்போலே ஸிம்ஹத்தைக்கண்ட நரிக்கூட்டம் போலே பீதிஸமாம்படியென்கை. இதற்கு தொட்டானென்கிறத்தோடே அந்வயம். பாரதத்து- பாரதத்திலே, பாரதயுத்தத்திலேயென்றபடி. பாண்டவர்க்காய்- பாண்டவர்களுக்காக, படை- ஆயுதத்தை, தொட்டான்- தொட்டவனான, ஆயுதந்தொடேனென்று ப்ரதிஜ்ஞைபண்ணியிருக்கச் செய்தேயும் ஆச்ரிதரான பாண்டவர்களுக்காக தன்ப்ரதிஜ்ஞையைகுலைந்து சக்ரத்தையெடுத்தவனானவென்றபடி. நம்பெருமான்- நம்முடையஸ்வாமியானவன், இந்தசரித்ரங்களையெல்லாம் நமக்கு ஸௌஹ்ருதமாய்ச்செய்தருளின ஸர்வேச்வரனானவனென்றபடி. நல்- நல்லதான், ஸகாரஸ்யநகாரேவஸ்ய நகாராதேசம். ஸமவிஷயமென்றால் ஸர்வஜ்ஞத்வாவாமித்தவமாவனான வென்றபடி. நெஞ்சே- என்மனஸ்ஸே நமக்கு-இப்படி திருவாய்மொழிப்பாடும்படி தான்விஷயீகரித்தருளினநமக்கு, தான்- நம்பக்கலித்தனை பாவஸக்திபண்ணினதான், அருள்செ

மூ — வானேறவழிதந்தவாட்டாற்றான்பணிவகையே* நானேறப்பெறுகின்றேன் நரகத்தை நகு நெஞ்சே* தேனேறு
மலர்த்துளவந்திகழ்பாதஞ்செழும்பறவை* தானேறித்திரிவான்றன்றாளிணையென்றலைமேலே* ॥௫॥
(ன தா)

ஆ — சீரியதோ திருநாடென்கிறார். ॥௪॥
(வானேற) திருநாடுபெறவேணுமென்ற அபேக்ஷையுடையார்க்கெல்லார்க்கும் வானேறுகைக்கீடான உபாயத்தைக்கொடுத்தருளினான், அவனுடைய ப்ரஸாதத்தாலே தேனேறுமலர்துளவத்தினாலே அலங்க்ருதமாயிருந்தவனுடைய தாளிணை பெரியதிருவடிமேலேறும்போலே என்தலைமேலே நானேறப்பெறுகின்றேன், இனியவனைப்பிரிந்திருக்கையாகிற நரகத்தை வென்றிருப்பேனென்கிறார். ।௫।

இ — சீரியதோ என்றது- ஶ்லாக்யமானதோ என்றபடி. ॥௪॥

✳ ஐந்தாம்பாட்டு. ✳

வானேறவழிதந்த என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருநாட்டிசைகாரியால்) வாட்டாற்றான் பணிவகையேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனுடையவிசேஷணியால்) துளவந்திகழ்என்றது தாளிணையென்கிறதற்கு விசேஷணமன்றிக்கே ப்ரஸாதமென்கிறதற்கு விசேஷணமாயிருந்தாலும் உகந்து விசேஷணவிசிஷ்டமான ப்ரஸாதத்தையே அத்தாளிணையென் றநுவதிக்கிறதாகையாலே இவ்விசேஷணத்துக்கு மதிதமென்றுகருத்தாலேயருளிச்செய்கிறார் (தேனேறிசேர்த்தியால்) செழும்பறவைசேர்த்திக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பெரியவிசேஷியால்) தாளிணையென்தலைமேலேற நான்பெறுகின்றேனென்றநன்வயம். நரகத்தைநகுநெஞ்சேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இனியவனைப்பிரிவால்) இத்தால் அன்றும்பாட்டிலே நமக்குத் திருநாட்டைத்தருகையிலே த்வரியாநின்றானென்றவ திப்பாட்டிலே பெரியதிருவடிக்குஸமமாக நம்மை ப்ரஸாதியாநின்றானென்று ஹ்ருஷ்டராகிறாரென்று ஸங்கதியுஞ்சொல்லிற்றாயிற்று. ॥௫॥

ஶ — ய்வான்- க்ருபைசெய்தருளுவான், ஸாதயோமிவாஹீதநஸா ஸரீஷ்யமான திருநாட்டைத்தந்தருளுவன், இத்திருவாய்மொழியிற்காட்டில் அதிகமோ திருநாடென்றுகருத்து. ।௪।

ப—யாரணத்தால் மற்றொரு ஸாதநாந்தரமும்வேண்டா என்றபடி. அப்படியே செய்குறோமென்றெம்பெருமானருளிச்செய்ய ஸ்ரீதராயவனுடைய கல்யாணகுணத்தைத்தாமாக தமக்குள்ளேபேசியநுபவிக்கிறார்மேல், கற்றார்- அப்யஸித்தவர்களான, ஆசார்யஸேவத்தாலே ஸகலசாஸ்த்ரங்களையு மப்யஸித்தவரானவென்றபடி. மறைவாணர்கள்- வேதநிர்வாஹகர்கள், மறை- வேதம், வாணர்- நிர்வாஹகர், ச்ருதங்களான வேதார்த்தங்களையெல்லாம் ஸௌஹ்ருதாத்ருஷ்டிகளில் தகுந்தபடி லக்ஷிதங்களாகத்தபடி நிர்வஹிக்கவல்ல ஸ்ரீவைஷ்ணவர்களென்றபடி. வாழ்- வாழாநிற்கிற, பகவதநுபவத்தாலே ஆநந்தியாநிற்கிற என்றபடி. திருப்பேரார்க்கு திருப்பேரென்கிற திவ்யநகரத்திலிருக்கிற பரமேச்வரனுக்கு, அற்றார்- அற்றவர்களான. ஸ்வசேஷ்டை எனகிறவாதத்தையும் தேவதாந்தரசேஷத்வத்தையும் தவிர்ந்து அவனுக்கே சேஷமென்று தீர்ந்திருக்குமவரான என்றபடி. அடியார்தமக்கு- ஆச்ரிதஜநங்களுக்கு, தம்மென்று ஸ்வார்த்தகம். அல்லல்- து:க்கங்கள் ஸம்ஸாரஜந்யது:க்கங்களென்றபடி. நில்லாவே- நிற்கமாட்டாவே, அவதாரணத்தாலிதில் ஸம்சயமில்லையென்றபடி.

ரூ – அல்லல்- து:க்கங்கள், பரமேச்வரஸமாச்ரயணஅநுபவாநந்தஹேது து:க்கங்களென்றபடி. நில்லா- நிற்கமாட்டா, திருப்பேரான்திருவடிகளை யாச்ரயித்தார்க்கிதிசேஷ:, கீழ்ச்சொன்னதை ஸ்ரீதப்ரபத்தாலே பின்னையுமநுஸந்தித்தபடி. நீள்வயல்- நீண்டவயல்களாலே, அதிவிசாலதயா தர்சநீயங்களான கழனிகளாலேயென்றபடி. சூழ்- பரிவ்ருதமான, திருப்பேர்மேல்- திருப்பேரென்கிற திவ்யநகரத்தின்விஷயமாக, இதற்கு சொல்லென்கிறத்தோடேயந்வயம். நல்லார்- கல்யாணகுணாயிகரான ஸ்ரீவைஷ்ணவர்கள், பலர்- அநேகம்பேர், வாழ்- வாழாநிற்கிற, திருவாய்மொழியைக் கேட்டநுபவித்தாநந்தியாநிற்கிற என்றபடி குருகூர்ச்சடகோபன்- திருநகரியையுடையவரான வாழ்வாருடைய, சொல்- உக்தியான, இது பத்துக்குவிசேஷணம். ஆர்- பூர்ணமான, ரஸவ்ருத்தியையுடைத்தான என்றபடி. தமிழாயிரத்து- த்ராவிடவேதமான

மூ—துளிப்பத்தும்* வல்லார்தொண்டராள்வதுசூழ்பொன்விசும்பே* ॥கக॥

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ—தையே பின்னையுமநுஸந்தித்துத் திருப்பேரை ப்ரதிபாதித்தவித்திருவாய்மொழி வல்லாரிட்டவழக்கு திருநாடென்கிறார். ॥கக॥

திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

இ—சொல்லென்கிறத்தோடேபயமென்று நினைத்தருளுகிறார் (திருப்பேரைப்ரதிபாதித்தவென்று) தாத்பர்ய வாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வல்லாரித்யாதியால்) ॥கக॥

ஸ—ஸந்தர்ப்பத்தில், இப்பத்தும் இந்தப்பத்துப்பாட்டுக்களையும், வல்லார்-அப்யஸிக்கவல்லவர்களான, தொண்டர்-ஸாமவதர்களானவர்கள், ஆள்வது- ப்ரஶாஸநம்பண்ணுமது, சூழ்- வ்யாப்தமான, ஸ்வஸித்தமான என்றபடி. பொன்- சுத்தஜ்வலமான், பொன்ஸ்வபாவமிக்கு நன்மைப்ரத்யுஜ்ஜ்வலம். விசும்பு- ஆகாஶம், பரமவ்யோமஶப்தவாச்யமான பரமபதமென்றபடி. இந்த ப்ரக்ருதிஸம்பந்தத்தை த்ருணீகரித்து பரமபதத்தை ப்ரஶாஸநம்பண்ணும்படி பரமைகாந்திகளுக்கனுகூலராய் ஸ்வதந்த்ரராவாரென்று வடதாத்பர்யம். ॥கக॥

ஜ்ஞாநவைராக்யநிஷ்டாநபோஷகஶ்ரீவேதாந்தராமாநுஜமஹாதேஶிகாய நம:.

ஶ்ரீ:.

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி:,

(திருமாலிருஞ்சோலைமலை.)

ஶ்ரீகாந்தஸ்வப்ரமாதாவிபதிஸவிதாபாதிவ்யதேஶஸக்த:
மோக்ஷக்ஷேத்ரார்த்ததஸ்ஸங்கல்பஸமயதயாஸத்ஸுஸந்நிதாநாத்।
த்ருஷ்ட்யுஸந்நிதாநாதிவிதரணதஸ்ஸ்வஸ்வபாவப்ரகாஶாத்
ஸாத்யோபாயத்வேஷ்டீதஸ்ஸமயநுபவிதஸ்ஸ்ரீவநஶைலேத்ருமாயி ॥கககா॥

(ஶ்ரீகாந்தகவ்யோமாக) திருமால்வந்து- பெரியபிராட்டியாருக்கு வல்லபனாகையாலும், (விபதிஸவிதா) காரேழ்கடலேழ்மலையேழுலகுண்டும்- அபாயரக்ஷகனாகையாலும், (திவ்யதேஶஸக்தா) கொடிக்கோபுரமாடங்கள்சூழ்திருப்பேரான்- கொடிகளாலே மங்கலங்களான மாடப்ராஸாதங்களாலேசூழப்பட்ட திருப்பேரிலே யெழுந்தருளியிருக்கையாலும், (மோக்ஷக்ஷேத்ராக) சேண்விசும்புதருவானே- பரமபதத்தைத்தர வல்லனாயிருக்கையாலும், (தத்ஸங்கல்பஸமயதயா) வானேதருவானெனக்காயென்னோடொட்டி- தப்பித்தாக ஸமயம்பண்ணுமவனாகையாலும், (ஸத்ஸுஸந்நிதாநாத்) திருப்பேர்நகராநின்றாதி- திருப்பேர் திருமாலிருஞ்சோலை குறுங்குடியம் இதுகளிலே ஸந்நிஹிதனாயிருக்கையாலும், (த்ருஷ்ட்யுஸந்நிதாநாத்) கண்ணுள்நின்றகலானே- அவர்களுடைய கண்வட்டத்திலேநின்றும் பேரமாட்டாமையாலும், (அதிவிதரணத:) கருத்தின்கட்பெரியன்- அவர்களுக்குபாஸகமாகத்தன்னை யநுபவிக்கக்கொடுக்குமவனாகையாலும், (ஸ்வஸ்வபாவப்ரகாஶாத்) இன்றென்னைப்பொருளாக்கியித்யாதி- இஸ்ஸம்ஸாரிசேதநனை அநாதிகாலமநுவர்த்தித்து இன்றுதரிக்கைக்குத் தன்னுடைய ஸாதந்த்ர்யகாருண்யங்களொழிய வேறு ப்ரயோஜகமில்லையென்று தன்ஸ்வபாவத்தை ப்ரகாஶிப்பிக்குமவனாகையாலும், (ஸாத்யகாஶ) ஈதேஇன்னும்வேண்டுவதெந்தாய்- ஸர்வருக்கும் நிரபாயிகஸாத்யமாகையாலும், திருப்பேர்நகரானிச் வேதநவிஷயத்திலே ஸௌஶீல்யாலே தானேஸந்துஷ்டனாகிறானென்று "திருமாலிருஞ்சோலைமலை" என்கிறஶப்தத்திலே ஆழ்வாராலே தெளிவிக்கப்பட்டதென்கிறார். ॥கககா॥

ஶ்ரீவேதாந்தராமாநுஜமஹாதேஶிகாய நம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பத்தாம்பத்தில் எட்டாந்திருவாய்மொழிமுற்றிற்று.

ஒன்பதாந்திருவாய்மொழி.

ஆ— (சூழ்விசும்பு) இப்படி நிர்ஹேதுகமாக எம்பெருமானோடே ஸம்ஶ்லிஷ்டரான ஆழ்வார் தாம் திருநாட்டேற எழுந்தருளும்படியையுந் தாமெழுந்தருளும்போது ஸர்வலோகங்களும் தம்மைக்கொண்டாடும்.

ஒன்பதாந்திருவாய்மொழி.

இ— இப்படி யாத்ருச்சிகமாக எம்பெருமான் தம்மோடு கலந்தருளினபடிகளைக்கண்டு பிறந்த நிரவதிகப்ரீதியுள்ளடங்காமையாலே யத்தைப்பேசிக்கொண்டு அநுபவித்த ஆழ்வார் அநந்தரமித்திருவாய்மொழியிலே ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டு தேவதாந்தராதிகளும் ஸர்வலோகங்களும் தேவர்களும் பஹுமாநபுரஸ்ஸரமாக பூஜித்தாரென்றிப்புடைகளிலே விசித்ரமாகச்சிலவற்றை வர்ணிக்கத்தொடங்குகை யஸம்பந்தமன்றோவென்ன அதுக்கு (இப் [illegible]ல்) திருநாட்டேறவிதர்ஹி தாமினிய நந்தரகாலத்திலே திருநாட்டுக்கெழுந்தருளப் புகிறபடியையு மிப்போது ஸர்வலோகங்களும் தம்மைக்கொண்டாடப்புகிறபடியையு மிப்போது தம்முடைய திருவுள்ளத்தாலே ஸாக்ஷாத்கரித்தென்றபடி. இப்படி பவிஷ்யத்துக்களான விஷயங்களை 'தூரியமுழக்கின' என்றும் தொழுதனருலகர்களென்றும் இருப்பிடம்வகுத்தனரென்றும் கீதங்கள்பாடினரென்றும் வியந்தனரென்றும் வந்தினரென்றும் இப்புடைகளிலே ஸித்தவஸ்துக்களாக நிர்தேஶித்தது தமக்கிவைற்றில்ப்பிறந்த ப்ரத்யக்ஷஸாக்ஷாத்கார நைரந்தர்யவைஶத்யத்தாலே யிவையித்தனையுமிப்போதே தாம்பெற்றதாகவே தமக்குத்தோற்றுகையாலே சொன்னதென்றுகருத்து. அந்யாபதேஶத்தாலேயென்றது- தம்மைவிஶேஷித்து நிர்தேஶியாதே நாரணன்தமரையித்யாதியாகச்சொன்ன ஸ்ரீவைஷ்ணவஸாமாந்ய நிர்தேஶத்தாலேயென்றபடி. இத்திருவாய்மொழியிற் சொல்லுகிற கல்யாணஸம்பவங்களித்தற்குக்கீழ் தமக்குநடந்த நாநாகல்யோபநாயநாநுபவிதைகள்போலே தமக்கொருவருக்கே நியதங்களாயிருக்கையன்றிக்கே தம்முடைய ஸம்பந்திகளுக்குங்கூட ஸாதிகளாயிருக்கிறபடியை தாமிப்போது ஸாக்ஷாத்கரிக்கையாலே தம்மையொருவரையே நிர்தேஶியாதே நாரணன்தமரையித்யாதியாலே ஸ்ரீவைஷ்ணவஸாமாந்யத்தை நிர்தேஶித்தருளுகிறாரென்றுகருத்து. செஞ்சொற்கவிகளிலே பேசியல்லது தரிக்கவொண்ணாதபடி தமக்குப்பிறந்த நிரவதிகப்ரீதியாலேயவன் தம்முடைய திருமேனியிலுங்கூட வ்யாமோஹத்தைப்பண்ணிக்கொண்டு கலந்தருளினபடியையும் திருமாலிருஞ்சோலையென்கிற திருவாய்மொழியில் ஸம்பந்திகளுக்கு ஸம்பவிக்குமவையான ஸமஸ்தஸம்பந்தாஸ்ஸ கல்யாணஸம்பவங்கள் தமக்கவனுடைய ஸஹஜகாருண்யாதிஶயத்தாலே ஸுலபங்களாயிருக்கிறபடியையும் பேசி யத்தாலேயபிநந்துநின்ற வாழ்வாரருள்பெறுவாரில்லப்படியே தமக்குத்திருநாட்டைத்தந்தருளுகையிலே த்வரிதனாய் தம்முடைய வாஞ்சாப்ரதீக்ஷனாயிருக்கிறவனுடைய திருவுள்ளத்திற்கநுகுணமாகத் தாமினியிப்போதே திருநாட்டேறப்போகவேணுமென்று [illegible]க்கவத்தாலே ஆஶ்ரிதபக்ஷபாதியான ஸர்வேஶ்வரன் திருநாட்டிலுள்ள ஸம்பாவநைக்கீடாக அவர்க்குமிகவும் விடாய்பிறக்கைக்காக ஶாஸ்த்ரப்ரஸித்திக்கு எழுந்தருளுகிற ஸமயத்துக்கு ப்ரத்யக்ஷமாக வேதாந்தங்களிலே ப்ரஸித்தமாய் அத்யந்தஸாரமான அர்ச்சிராதிமார்க்கத்தையு மங்குள்ள ஆதிவாஹிகஸத்காரப்ரகாரங்களையு மந்தமார்க்கத்தாலே போனார்க்கு ப்ராப்யமாய் 'தஸ்மிந் விரஜாம் ப்ரவாஹஸ்ருதம் பாரமநைத' மென்னும்படியான பரமபதத்தையும் நித்யஸூரிகள் வந்தாதரிக்கும்படியையும் பிராட்டிமாரும் ஸ்ரீவைகுண்டநாயகனுந்தானும் எதிரேவந்தாதரிக்கும்படியையும் "ஆநந்தகாலஸ்ரீமத்பர்யங்கமாஸநஸநாதம்" என்கிற வ்யாக்யானத்திலே அத்யந்தஸாதரமான வந்தஸமயத்திலே ராஜதமிரியின்மேலே பரதகரியிருந்தாப்போலே ஏழுலகுந்தனிக்கோல்செல்ல வீற்றிருந்தருளி யஸம்வ்யவஹிதவரிஜந பரிசுத்ததக்ஷிணாதிவிமலிகளுடைய ஸ்ரீஹஸ்தநீமாதி திவ்யஸமேதராக ஸேவிதனுக்கொண்டு தமக்கு ப்ராப்யனாய்ப் புகிறபடியையும் "அடியார்கள் குழாங்களுடன் கூடுவதென்றுகொலோ" என்று பரமப்ராப்யரான நித்யஸூரிகள்நடுவே தாமாநந்தநிர்பரராயிருக்கப் புகிறபடியையும் தம்முடைய திருவுள்ளத்திலே ப்ரத்யக்ஷமாம்படி ப்ரகாஶிப்பித்தருளக்கண்டு மிகவும்ப்ரீதராய் அந்த ப்ரீதியுள்ளடங்காமையாலே அந்த அர்ச்சிராதிமார்க்கத்திலுள்ள கல்யாணஸம்பவங்களைப்பேசி அநுபவிக்கிறாரென்றுகருத்து. இத்தால் அர்ச்சிராதிகதிப்ரகாஶகமென்கிற ஸமஸ்தமாணமித்திருவாய்மொழிக்கு ப்ரதிபாத்யமாயிற்று.

மூ— சூழ்விசும்பணிமுகில்தூரியமுழக்கின* ஆழ்கடலலைதிரைகையெடுத்தாடின* ஏழ்பொழிலும்வளமேந்தியவென்னப்பன்* வாழ்புகழ்நாரணன்றமரைக்கண்டுகந்தே* ௧

நாரணன்றமரைக்கண்டுகந்துநன்னீர்முகில்* பூரணபொற்குடம்பூரித்ததுயர்விண்ணில்*

ஆ—படியையும் திருவுள்ளத்தாலே ஸாக்ஷாத்கரித்தநுபவஹர்ஷத்தாலே பேசுகிறார், திருநாடேறப்போகையிலே உத்யுக்தரான ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டுகந்து அசேதநமான மேகங்களுங்கூட இவர்கள்போகக்கடவிய ஆகாசத்தையெல்லாம் அலங்கரித்துக்கொண்டுநின்று தத்ப்ரகோஷத்தைப்பண்ணித்தன, கடல்களாகிறவை திரைகளாகிற கைகளையெடுத்தாடின, இப்படி ஸப்தலோகங்களும் ஸமுசிதமானசெயல்களை செய்தனவென்கிறார். ௧

முதற்பாட்டு.

இ—நாரணன்தமரைக்கண்டுவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருநாடேறவிருக்கிறபடியால்) வழியிதுவைகுந்தர்க்கென்று மேலேசொல்லுகையாலே திருநாடேறப்போக உத்யுக்தரென்றவிடமிங்கு விவக்ஷிதமென்றுகருத்து. சூழ்விசும்பணியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவர்களைப்ரீதியால்) தூரியமுழக்கினவென்னத்தையுரைக்கிறார் (த்வநியெழுப்பியால்) ஏழ்பொழிலும்வளமேந்திய என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படியிருக்கையால்) ௧

ஸ—என்னப்பன்- எனக்கு உபகாரகனான, வாழ்புகழ்- வாழ்விக்கும்புகழுடையவனான, ஆச்ரிதரை ஆநந்திப்பிக்கும் கல்யாணகுணங்களையுடையவனானவென்றபடி. நாரணன் தமரைக்கண்டு- நாராயணனுடைய அஸாதாரணசேஷபூதரைக்கண்டு, தமரென்று- ஸ்வகீயர், பரமபதத்திற்குப் போகவுபக்ரமிக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டு என்றபடி. ராஜகுமாரன்புறப்பட்டால் ராஜகீயரெல்லாருமாதரிக்குமாப்போலே இவர்கள் நாராயணனுக்கு அஸாதாரணசேஷபூதராகையாலே இவர்களைக்கண்டால் ஸமஸ்தமான ஸ்தாவரஜங்கமத்திற்குமாதரிக்கப்ராப்தமிறே என்று கருத்து. உகந்து- மிகவும் ஸந்தோஷித்து, இதற்கு முழக்கின என்கிறத்தோடே அந்வயம். ஆதரியாதொழியில் நம்மை ஸர்வேச்வரன் கொல்லுமென்றும் பீதியாலே செய்தனவல்ல, இவர்கள் ஸம்பத்விஷயத்திலே ப்ரீதிகாரிகளென்று மிகவுமுகந்துசெய்தனவென்று கருத்து. சூழ்விசும்பணி- வ்யாப்தமான ஆகாசத்திற்கு ஆபரணங்களான, விசும்பு- ஆகாசம், அணி- ஆபரணம், இந்த ஸம்பந்திகளைக்கண்டுகப்பாலே பக்திவாசமானவாகாசமெங்கும் மேகங்கள் அலங்கரித்துக்கொண்டு நிற்கிறனவென்று கருத்து. முகில்- மேகங்கள், தூரியம்- வாத்யத்தை, இங்கு பதாந்தஸ்யமகாரத்திற்கு ஸம்ஹிதாயாம்லோபம். படஹதுந்துபிப்ரப்ருதிவாத்யங்களையென்றபடி. முழக்கின- த்வநிகரித்தன, முழக்குகை- த்வநிகரிக்கை, படஹதுந்துபிப்ரப்ருதிகோஷத்தைத் தாங்கள்பண்ணித்தனவென்றபடி. ஆழ்- அகாதங்களான, கடல்- ஸமுத்ரங்கள், அலைதிரை- ஹர்ஷப்ரகர்ஷத்தாலேயலையாநிற்கிற தரங்கங்களாகிற, திரை- தரங்கம், அகாதங்களான ஸமுத்ரங்களுமிந்த ஸம்பந்திகளைக்கண்டு ஹர்ஷத்தாலே க்ஷோபித்தங்களாய்நின்றனவென்று கருத்து. கையெடுத்து- ஹஸ்தங்களை ப்ரஸ்தம்மாக ப்ரஸாரித்துக்கொண்டு, ஆடின- நர்த்தநம்பண்ணிற்றின. ஏழ்பொழிலும்- ஸப்தத்வீபங்களும், பொழில்- த்வீபம், வளம்- ஸம்பத்தை, உபஹாரங்களான ஸம்பத்வஸ்துக்களையென்றபடி. ஏந்திய- ஏந்திற்றன, இந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்காக தரித்துக்கொண்டுநின்றன என்றபடி. “ஸநாத்ராஜாநாம்விரஸம் ரஸாஸ்வாதவஹம் வஹவிதம் தஹாவல்கு” என்கிறகணக்கிலே இந்த ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்ட அசேதநங்களுங்கூட ஹர்ஷவிகாரங்களையுடைத்தனவென்று கருத்து. பொழிலென்று த்வீபஸ்தஜநங்களை லக்ஷிக்கிறதாகவுமாம். ௧

ப—நாரணன்தமரைக்கண்டு- நாராயணனுடைய ஸ்வகீயரைக்கண்டு, நிருபாதிகசேஷியான ஸர்வேச்வரனுக்கு அஸாதாரணசேஷபூதரானவர்களைக் கண்டென்றபடி, இங்கும் பரமபதத்துக்கெழுந்தருள உபக்ரமித்தவர்களையென்று விவக்ஷிதம், நல்- நல்லவையான, ஆகாரஸ்ய நகாரமேவமே நகாராதேசம், ச்லாகநீயங்களானவென்றபடி. நீர்முகில்- ஸலிலபூர்ணமேகங்கள், ஸாகவாஹிவேகஸஹோஸ், உகந்து- மிகவும்ஸந்தோஷித்து, இதற்குப் பூரித்ததென்கிறத்தோடே அந்வயம், ஒருகால் தூரியமுழக்கிற்றின்றினவில்லை, உத்தரோத்தரம் ஸந்தோஷியாநின்றனவென்றுகருத்து. உயர்- உந்நதமான, மேகஸஞ்சாரத்திற்கு மேல்பட்டதானவென்றபடி. விண்ணில்- ஆகாசத்திலே, பூரண- பூர்ணங்களான, தீபவாதக

மூ— நீரணிகடல்கள்நின்றார்த்தனநெடுவரைத்* தோரணநிரைத்தெங்குந்தொழுதனருலகே* ॥௨॥
தொழுதனருலகர்கள்தூபநன்மலர்மழைப்* பொழிவனர்பூமியன்றளந்தவன்றமர்முன்னே*

ஆ—(நாரணன்) நாரணன்தமரைக்கண்டு தேவர்களுகந்தன, ஆகாஶவாஸரான தேவாதிகளாகாஶத்திலே பூர்ணகும்பங்களைப் பூரித்தார்கள், நீரணிகடல்கள்நின்றார்த்தன, நெடுவரைப்போலேயிருந்த தோரணநிரைத்தெங்கும் தொழுதனருலகர்களென்கிறார். ॥௨॥

(தொழுதனர்) ப்ருதிவியன்றளந்தவன்தமர்முன்னே தூபநன்மலர்மழைபொழிவனர், ஸ்ரீவைகுண்டத்தேறப்போவார்கு வழியிதுவென்று எதிர்வந்து இங்ஙனேயெழுந்தருளவொண்ணாதோ வென்றிருமருங்கும்

✳ இரண்டாம்பாட்டு. ✳

இ— உகந்துநன்னீர்முகிலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தேவர்களுகந்தனவென்று) த்விதீய பாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆகாஶேத்யாதியால்) இத்தால்கீழ்ப்பாட்டுக்கு ஸ்வர்க்கலோகஸ்த சேதநாசேதநங்கள்செய்யு உபசாரத்தைச்சொல்லுகையிலே தாத்பர்யமென்றுநோக்கா யிப்பாட்டுக்கு அந்தரிக்ஷவாஸிகளான சேதநாசேதநங்கள்செய்யு உபசாரத்தைச்சொல்லுகையிலே தாத்பர்யமென்றுநோக்கென் றுஸங்கதியுமாயிற்று. இத்தாலிப்பாட்டுக்கு ஸங்கதியுஞ்சொல்லிற்றாயிற்று. ஶேஷம்ஸ்பஷ்டம். ॥௨॥

✳ மூன்றாம்பாட்டு. ✳

பொழிவனரென்றது- பொழிவனராய்க்கொண்டென்றபடி. எழுமினென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இங்ஙனேயித்யாதியால்) முனிவர்களித்யாதியாலே கீழ்ப்பாட்டிலே அந்தரிக்ஷவாஸிகள்செய்யும்

ஶ— பூர்ணகும்பங்களானவென்றபடி. பொற்குடம்- கநககும்பங்கள், இங்கு குடமென்கிறவசநம் ஜாத்யேகவசநம், பூரித்தது- பூரிக்கப்பட்டன, எங்கும் நிறைக்கப்பட்டனவென்றபடி, ஆரவெழுநிலைகளிற்போலே ஆகாஶப்ரதேஶத்திலெங்கும் நிபிடங்களாக வைக்கப்பட்டனவென்கை. ஆகாஶவாஸிகளான தேவாதிகளாலென்றுகருத்து. இங்கு பூரித்ததுஎன்கிறக்ரியையை உகந்துஎன்கிறத்தோடு ஸமாநகர்த்ருகத்வமல்லாமையாலே உகந்துஎன்று ஸ்வாரஸ்யமாயிருக்கக்கூடாதாகிலும் த்ராவிடத்தில்விதிப்படி பிந்நகர்த்ருகஸ்தலத்திலும் ஸ்வாரஸ்யப்ரயோகமுண்டாகையாலே இங்குமிந்த ஸ்வாரஸ்யப்ரயோகஸம்பவமுண்டு, 'ஊரெல்லாந்துஞ்சி யுலகெல்லாம்நள்ளிருளாய் நீரெல்லாந்தேறியோர் நீளிரவாய்நீண்டதால்' என்று த்ராவிடத்தில் பிந்நகர்த்ருகஸ்தலத்திலும் ஸ்வாரஸ்யப்ரயோகமுண்டிறே, நீரணி- நீராலேயணியப்பட்டவையான, அணிகை- அலங்கரிக்கை, ஜலஶீகரஸம்பந்தத்தாலே ஸ்வச்சமாக அலங்க்ருதங்களானவென்றபடி, கடல்கள்- ஸமுத்ரங்கள், நின்று- ஸ்திரமாக, அவிச்சிந்நமாகவென்றபடி. ஆர்த்தன- கோஷித்தன, ஆர்த்தல்- கோஷித்தல், உலகு- லோகங்கள்; லக்ஷணயா லோகவாஸ்தவ்யரான தேவர்களென்றபடி. நெடுவரைத்தோரணம்- உத்துங்கபர்வதங்கள்போலிருக்கிற தோரணங்களை, நெடியது- உத்துங்கம், வரை- பர்வதம், உத்துங்கபர்வதங்கள்போலே யதாஸம்ஸ்திதவஸ்த்ரஸம்ஸ்க்ருதங்களான தோரணங்களையென்றபடி. நிரைத்து- ஸங்க்ரமமாகநிபிடித்து, எங்கும்- ஸர்வப்ரதேஶத்திலும், ஊர்த்வலோகங்களெங்குமென்றபடி. தொழுதனர்- ப்ரணாமம்பண்ணினார்கள். ॥௨॥

ஶ— உலகர்கள்- லோகஸ்தஜநங்கள், பூதலாதிவாஸிகலோகங்களிலுள்ள ஜநங்களென்றபடி. தொழுதனர்- தங்களுடைய ஶேஷத்வாநுரூபமாக அஞ்ஜலிபந்தம்பண்ணினார்கள், அன்று- மஹாபலிகாலத்திலே, என்னதென்று ப்ருதிவியை மஹாபலியபஹரித்தவக்காலத்திலேயென்றபடி. பூமி- ப்ருதிவியை, அளந்தவன்றமர்முன்னே- த்ரிவிக்ரமனாயளந்துகொண்டவனுடைய ஸமீபர்முன்னே, ஸ்ரீவாமநவேஷதாரியாய்ப்போய் மஹாபலியைவஞ்சித்து ப்ருதிவியையளந்துகொண்டுவந்த விஷ்ணுவின்பாதத்தாலே வஶீக்ருதசித்தராய்க் கொண்டவனுக்கஸாதாரணஶேஷபூதராயிருந்துவைத்து திருநாட்டுக்குப்போகிற ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸமாகமத்திலே என்றபடி. தூபநன்மலர்மழை- தூபத்தையும் நல்ல புஷ்பங்களுடைய வர்ஷத்தையும், நல் என்கிறவிடத்தில் லகாரஸ்ய ஸம்ஹிதாயாம் ணகாராதேஶ:. நல்ல புஷ்பங்களாவன மந்தாரபாரிஜாதாதி திவ்யபுஷ்பங்கள், பொழிவனர்- வர்ஷியாநின்றவர்களாய்க்கொண்டு, இக்கு எங்கே

மூ—எழுமினென் றிருமருங்கிசைத்தனர் முனிவர்கள்* வழியிது வைகுந்தற்கென்று வந்தெதிரே* ॥௩॥
எதிரெதிரிமையவரிருப்பிடம்வகுத்தனர்* கதிரவரவரவர்கைந்நிரைக்காட்டினர்* அதிர்குரல்முரசங்களலை
கடல்முழக்கொத்த* மதுவிரிதுழாய்முடிமாதவன்றமர்க்கே* ॥௪॥

ஆ—முனிவர்கள்நின்றிசைத்தனரென்கிறார். ॥௩॥
(எதிரெதிர்) மதுவிரிதுழாய்முடிமாதவன் தமர்க்கிவர்களொருக்காலிங்கே ப்ரவேசிக்கப்பெறுவது என்றென்னுமாசையாலே இமையவரெதிரெதிரிருப்பிடம்வகுத்தனர், ஸவித்ராத்யாதிவாஹிககணங்கள் பார்த்

இ—ஸத்காரங்களை யநுஸந்தித்தவிப்பாட்டிலே தத்தாதிவாஹிகலோகங்களிலுள்ளார்செய்யும் ஸத்காரங்களை யநுஸந்திக்கிறாரென்றாரென்று ஸாமதியும்ஸங்கதிகை. ॥௩॥

✳ நாலாம்பாட்டு. ✳

தமர்க்கு என்கிறதற்கு வகுத்தனர் என்கிறதோடே அந்வயம். ப்ரதமபாதத்தில ஸித்தைர்ஸ்வர்ஸம்ருளி ச்செய்கிறார் (இவர்களொருக்காலித்யாதியால்) ப்ரவேசிக்க என்றதும் விஸ்ருதிக்க என்றபடி. த்விதீயபாதத் துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸவித்ரித்யாதியால்) இத்தால்கீழ்ப்பாட்டிலே ஆதிவாஹிகலோகத்திலுள்

ஈ—வந்து என்கிறதோடே அந்வயம். பூர்வத்தைவஷிக்கையாவது வஷம்போலே ஆகாஶாவகாஶமெல் லாமேவ்யாபிக்கும்படி பஹுமாநமாக ப்ரயோகிக்கை. வைகுந்தற்கு- வைகுண்டத்தாற்கு, ஸ்ரீவைகுண்டத்தை பெறப்போகிறவற்கு என்னுதே ஸ்ரீவைகுண்டத்தாற்கு என்றதால் ஸம்ஸாரத்தில் பிறந்துவளர்ந்து பாஹ்யமாயி ருந்த ஸம்ஸாரிகள் ப்ரபந்நர்களாய் பெருமாளநிந்தபின்பு பரமபதந்தாங்கள் நெடுங்காலமிருந்தவிட மானஸாரமும் பரஸ்பரமாய் திருவயோத்யை தங்களுக்கு ஸ்வதேஶமாயிருக்குமாப்போலே யிவர்களுக்கு மநாதிஸம்ஸாரியாயிருந்த விஶ்வாஸங்களும் தாங்கள்வழிதப்பிப்புகுந்துதிரிந்த ஸீஷணாரண்யமாய் ஸ்ரீவை குண்டமேதங்களுக்கு ஸ்வதேஶமாய்போருகிறார்களென்று கருத்து. வழியிதுஎன்று- அர்ச்சிராதிமார்க்கமிதுவாயிருக்கு மென்று, ஸ்ரீவைகுண்டத்தையேறப்போருகைக்கு மார்க்கம் அஸாதாரணமானதாயிருக்கிறவிந்த மார்க்கமன்றோ வென்று உகஸ்ஸிலநுஸந்தித்துக்கொண்டு என்றபடி. ஸாமதவிஷயத்தில் ஸத்காரித்து நாம் க்ருதார்த் தராகவேணுமென்றுமாசையாலே யவர்கள்போம்வழியையிப்படி உகஸ்ஸாலே ஸம்பாவித்துக்கொண்டு என் கை. எதிரேவந்து- தந்தாமுடையவெல்லைகளைக்கடந்து எதிரேவந்து, முனிவர்கள்- மௌநிகளான மஹ ர்ஷிகள், இதற்கு இசைத்தனர் என்கிறதோடேயந்வயம். மௌநிகளாயிருப்பாருமிந்த ஸாமதர்திறத்தில் மௌநவத்தாலேயந்த மௌநவ்ரதத்தை தவிர்ந்தார்களென்றுகருத்து. எழுமினென்று- இங்கனேயெழுந்தரு ளவேணுமென்று, இருமருங்கு- உபயபார்ச்வத்திலும், மருங்கு- பார்ச்வம், இசைத்தனர்- பாடினார்கள், பாடினாப்போலே உபசாரமாகச்சொன்னார்களென்றபடி. ॥௩॥

ஸ—மதுவிரி- உபாவனாது விஸ்ருதமாகாநிற்கிற, மகரந்தஉத்கோத்தாரம் ஸம்பாதிற்கிறவென்றபடி. துழா ய்முடி- திருத்துழாயை முடியிலேயுடையவனை, மாதவன்- ஸ்ரீபதியினுடைய, இவர்களையெதிர்கொள் ளுகைக்காக பெரியபிராட்டியாரோடே திருத்துழாய்முதலான அலங்காரங்களாலே தன்னையலங்கரித் துக்கொண்டிருக்கிறவனுடைய வென்றபடி. தமர்க்கு- ஸம்பந்திகளுக்கு, ஸ்வாராதநஶேஷமான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கென்றபடி. இதற்கு வகுத்தனரென்கிறதோடே யந்வயம், இமையவர்- அநிமிஷரான தேவர் கள், இங்கு அநிமிஷரென்றது ஸ்வாபாவிகபதமன்று, இவர்களை ஸத்கரிக்கையிலுள்ள வைகாக்ர்யத்தைப் பற்றச்சொன்னபடி, எதிரெதிர்- இவர்கள்போகிறவழிக்கு முன்னேமுன்னே, இருப்பிடம்- விடுதிகளை, வகுத்த னர்- தனித்தனியே நிர்மித்தார்கள், கதிரவர்- கிரணவான்களான, கதிர்- கிரணம், கதிருடையவர்- கதிரவர், அவரவர்- அந்தந்ததேவர்கள், கிரணஶாலிகளான ஸூர்யாதித்யவம்ஶ்யாதிதேவர்களென்று பட்டாபிஷேகம், இதுகூ ஆதிவாஹிகதேவங்களுக்கெல்லா முபலக்ஷணம், யதா— கதிரவர்- ஆதித்யாதித்யர்கள், கதிரவரென்று ஆதித் ருக்குப்பேர், அவரவர்- தாங்கள்தாங்கள், தனித்தனியேஎன்றபடி. கை- ஸ்வஹஸ்தங்களை, நிரைகாட்டினர்- பங்க்தியாகக்காட்டினர், பார்த்தெழுந்தருளவேணும் பார்த்தெழுந்தருளவேணுமென்றடைவடைவே வழியிலே கைகாட்டினார்களென்றபடி. அதிர்குரல்- அதிராநிற்கிற குரலையுடையவையான, அதிகம்பீரமாகப்ரதிஸ்வநிக்கிற த்வநியையுடைத்தானவென்றபடி. முரசங்கள்- போர்ஜங்கள், துந்துபிகளென்றபடி. அலைகடல்முழக்கு- அலையெறி ற்கிற ஸமுத்ரத்தினுடைய, கோஷத்திற்கு, முழக்கு- கோஷம், ஒத்த- ஸத்ருஶங்களாயிற்றன, ஸகோஷ

மூ—மாதவன்றமரென்றுவாசலில்வானவர்* போதுமினெமதிடம்புகுதுகவென்றலும்* கீதங்கள்பாடினர்கின்னரர்கருடர்கள்* வேதநல்வாயவர்வேள்வியுள்மடுத்தே*. ॥ ௫ ॥

ஆ—தருளீர்பார்த்தருளீரென்று கைநிரைகாட்டினர், கடலிரைத்தாற்போலே உபஜவணவாதிவாத்யங்கள் ஸர்வலோகங்களுமவ்யாப்திதமாம்படி முழக்கப்பட்டனவென்கிறார். ॥ ௪ ॥

(மாதவன்றமர்) இவர்கள்போகிறவழியில் வஸிக்கும்தேவர்களிவர்கள் மாதவன்றமரென்றுகந்து தந்தாமுடையஸ்தானங்களையும் ஐஶ்வர்யங்களையு மிவர்களுக்கிவைத்தைக்கொள்ளவேணுமென்று ஸமர்ப்பித்தார்கள், கீதங்கள்பாடினர் கின்னரர்கருடர்கள் வேதநல்வாயவர் ஜ்யோதிஷ்டோமாதியாகஸிஷ்மான தங்கள்ஸமர்ப்பீயைக்கொடுத்தார்களென்கிறார். ॥ ௫ ॥

இ—ளார்செய்யும் ஸத்காரங்களையநுபவித்தவ ரிப்பாட்டிலே ஆதிவாஹிகர் தாங்கள்செய்யும்ஸத்காரங்களையநுபவிக்கிறரென்று ஸங்கதியும்ஸ்ரீமிக்கை. ॥ ௪ ॥

✳ஐந்தாம்பாட்டு.✳

வாசலில்வானவரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவர்களித்யாதியால்) 'வைகுந்தே நவதந்த ஸங்ஶ்ருதே' என்கிறபடியே வைகுந்தன் வழிநடத்த வத்தாலே, மேலேபோகிறவிவர்களுடைய ஸஹகாரிகளாய்வருகைக்கு வஸிக்கும் தேவர்களென்றபடி. அவர்களாகிறார் வாமனைஶ்வர்ஜாவங்கள். இத்தால் விஷ்ணுஸங்பார்ஷதரான ஆதிவாஹிகர்செய்யும் ஸத்காரங்களையநுபவித்தவ ரிப்பாட்டிலே யவர்களுக்குமேல்வருகிற வாமனைஶ்வர்ஜாவதிகள்செய்யும் ஸத்காரங்களையநுபவிக்கிறரென்று ஸங்கதியும்ஸ்ரீமிக்கை. எமதிடமென்று ஸ்தானத்தைச்சொன்னது ஐஶ்வர்யத்துக்குமுபலக்ஷணமென்று நினைத்தருளிச்செய்கிறார் (தந்தாமுடையவித்யாதியால்) இவர்களுக்கென்கிறதற்கு ஸமர்ப்பித்தார்களென்கிறத்தோடேயந்வயம். எமதிடம்புகுதுகவென்னலுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவற்றைக்கொள்ளுவித்யாதியால்) ஶேஷம்ஸ்பஷ்டம். ॥ ௫ ॥

ப—அமராவஸ்யங்களாயிற்றனவென்றபடி. க்ஷாஸ்த்ரலக்ஷணபகோபாஸகவஸ்யமாக உபஜங்களுண்டாயிற்றனவென்று ஸ்பஷ்டதாத்பர்யம். ॥ ௪ ॥

ஶ— வாசலில்வானவர்- வழியில்தேவர்கள், வாசல்- வழி, ஸம்ஸாரனுக்குமேல் வைகுந்தன்வழிநடத்தவத்தாலே ஸஹாயராயிவர்கள்போகிறவழியில் தாங்களும் ஸஹகாரிகளாய் வழிநடத்துகைக்குநிற்கிற வாமனைஶ்வர்ஜாவதிகளென்றபடி. இதற்கு என்னலுமென்கிறத்தோடே யந்வயம். மாதவந்தமரென்று- ஶ்ரியவனுக்கு ஸ்வீயரென்று, ஸ்ரீவைகுண்டத்திற்குப்போகிறவிவர்கள் லக்ஷ்மீரமணனுக் கஸாதாரணஶேஷபூதரென்று- மிகவும்வீதாரயென்றபடி. இதற்கும் என்றலுமென்கிறத்தோடே யந்வயம், போதுமின்- வாருங்கோள், இங்கேநீங்கள் எழுந்தருளவேணுமென்றபடி. எமது- ஸ்வகீயமான, இடம்- ஸ்தானத்தை, ஸத்யலோகாதி ஸ்தானத்தையென்றபடி, புகுதுக- தேவர்கள்ப்ரவேஶித்தருள இந்தஸத்யலோகாதிபதத்தை தேவர்களங்கீகரித்தருளவேணுமென்றபடி, என்றலும்- என்றுநிற்குமளவில், இப்படி ப்ரார்த்திக்கச்செய்தே யென்றபடி. இதற்கு மடுத்துப்பாடினரென்கிறத்தோடே யந்வயம், வேதநல்வாயவர்- வேதோச்சாரணத்தாலே நல்லதானவாயையுடையவர்கள், ஸ்வர்க்காதிஸர்வலோகங்களிலே வைதிகராய்க்கொண்டு யாகாதிநிரதரானவென்றபடி, வேள்வி- யாகங்களை, தாங்கள் ததாராதநமாக அநுஷ்டிக்கிற யாகாதிகர்மங்களையென்றபடி. உள்மடுத்து- உள்ளாலேஸமர்ப்பித்து, உள்ளென்று ஸ்வாந்தம், மடுக்கை- ஸமர்ப்பிக்கை, உபநிஷத்ப்ரதிபாத்யமாக ஸமர்ப்பித்துயென்றபடி. ஆதரத்தோடே திருவடிகளிலேஸமர்ப்பித்தென்கை, இவர்கள் நிரபேக்ஷராய்ப்போகச்செய்தேயும் 'வீதக்ஷுந்நிவஸாஸாம்ஸஸ்ததக்ஷஸேதூள' என்கிறகணக்கிலே யிவர்களிவர்பக்கலா னுராகிஸயத்தாலே தமக்குள்ளவித்தை ஸமர்ப்பித்தார்களென்றுகருத்து. இங்கு யாகங்களைஸமர்ப்பிக்கை யாவது- யாகஹவிங்களாக ஹவிகளான தத்தோகைஶ்வர்யங்களை ஸமர்ப்பிக்கை, கின்னரர்கருடர்கள்- கின்னரர்களும்கருடர்களும், கீதங்கள்- கீதங்கள், பாடினர்- பாடினார்கள், மாநவிதேஹ்யில் நிவர்ணராயிருக்கிறவர்களாகையாலேகினரமராஸாதிகள்மாநங்களாலேஇவர்களுக்கு ஸத்காரம்பண்ணினார்களென்றபடி. இங்கு பாடினரென்கிற க்ரியையை விஶேஷ்யமாயிருந்தாலும் உள்மடுத்துஎன்கிறவிடத்தில் க்ரியாபாஸந்யாயமும்

மூ— வேள்விபுள்மடுத்தலும் விரைகமழ் நறும்புகை* காளங்கள் வலம்புரி கலந்தெங்குமிசைத்தனர்* ஆள்மின்கள் வானகம் ஆழியான்தமரென்று* வாளொண்கண் மடந்தையர் வாழ்த்தினர் மகிழ்ந்தே* ॥௬॥
மடந்தையர் வாழ்த்தலும் மருத்தரும் வசுக்களும்* தொடர்ந்தெங்கும் தோத்திரம் சொல்லினர் தொடுகடல்* கிடந்த

ஆ—(வேள்விபுள்) இவர் சிலர் ஸ்வகீயமான பரமபதத்தைக் கொடுக்குமளவில் வேறே சிலர் யஜ்ஞவிபூதிகளாலே பஹுமாநம் பண்ணினார்கள். சிலர் காளங்கள் வலம்புரி கலந்தெங்குமிசைத்தனர், வாளொண்கண் மடந்தையரிவர்களைக் கண்டு ஸ்ரீஸூக்திஸம்பத்தாலே இவர்கள் தாங்கள் பெறப்புகுகிற ஐச்வர்யத்திற்காட்டில் மேற்பட்டதொரு ஐச்வர்யமில்லாமையாலே ஆழியான்தமரானீங்கள் ஆள்மின்கள் வானகமென்று இதுதன்னையே ஆசம்ஸமாக ஸம்பாவித்தார்களென்கிறார். ॥௬॥

✳ ஆறாம்பாட்டு ✳

இ— வேள்விபுள்மடுத்தலுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவர் சிலரித்யாதியால்) விரைகமழ் நறும்புகையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வேறே சிலரித்யாதியால்) ஸ்ரீஸூக்திஸம்பத்தாலேயென்கிறதற்கு ஸம்பாவித்தார்களென்கிறத்தோடே அந்வயம். சேஷம் ஸ்பஷ்டம், வாளொண்கண் மடந்தையரித்யாதியாலே கீழ்ப்பாட்டிலே ஆதிவாஹிகர் செய்யும் ஸத்காரங்களை அநுஸந்தித்தவர் இப்பாட்டிலே ஆதிவாஹிக ஸ்த்ரீகள் செய்யும் ஸத்காரங்களை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதியும் ஸூசிதம். ॥௬॥

ஸ— ஊரெல்லாந்துஞ்சியுலகெல்லாம் நள்ளிருளாயித்யாதியில் போலே ஸ்த்ரீஸ்வபாவமாக்யாநாவஸரம். ॥௫॥

வ்யா- வேள்வி- யாகங்களை, தாங்கள் அநுஷ்டித்த யாகங்களுடைய பலங்களையென்றபடி. உள்மடுத்தலும்- உள்ளாலே ஸ்வீகரிக்குமளவில். ஹவிர்பாகமாக ஸ்ரீயோடே ஸ்வீகரிக்குமளவிலென்றபடி. இதற்கு நறும்புகையென்கிறத்தோடே அந்வயம். விரைகமழ்- பரிமளம் பரிமளிப்பிக்கிற, விரை- பரிமளம், கமழ்கை- பரிமளிக்கை, பரிமளம் ப்ரவஹிப்பிக்கிறவென்றபடி. நறும்புகை- ஸாமயிகமான தூபங்கள், வேள்விபுள்மடுத்தலும் நறும்புகையென்கிற ஸந்தர்ப்பத்தில் ஸ்வரவிசேஷத்தாலே யாகபலங்களை ஸ்வீகரித்தவளவிலே தூபங்களுண்டாயிற்றனவென்று ஸூசிக்கும், ஸ்வீகரித்தவளவிலே வேறே சிலர் தூபவிசேஷங்களைக் கொண்டு பஹுமாநம் பண்ணினார்களென்று தாத்பர்யம். காளங்கள்- காஹளங்களையும், வலம்புரி- சங்கங்களையும்; இதற்கு இசைத்தனரென்கிறத்தோடே அந்வயம். கலந்து- சங்கவாத்யகாநம் காஹளத்வநியும் ஏககாலத்தில் சங்கத்வநியுமாகவிப்படி கலந்து என்றபடி. எங்கும்- ஸர்வதிக்குகளிலும். இசைத்தனர்- த்வநிப்பித்தார்கள், சிலரிதிசேஷ:. வாளொண்கண்- காந்தியையுடையவாய் ஒளியவான கண்களையுடையவர்களான, வாள்- காந்தி, இந்த ஸாமந்தர்களைக் கண்ட ஸ்ரீஸூக்திஸம்பத்தாலே உத்தாராவிர்பூதமுகங்களாய் உஜ்ஜ்வலிதங்களான நேத்ரங்களையுடையவர்களானவென்றபடி, மடந்தையர்- ஸ்த்ரீகள், கீழ்ச்சொன்ன ஆதிவாஹிகர்களுடைய ஸ்த்ரீகளென்றபடி. மகிழ்ந்து- தேசாந்தரம்போயிருந்துவந்த பர்த்தாக்களைக் கண்ட ஜநநிகளைப்போலே மிகவும் ஆநந்திகளாய், இதற்கு வாழ்த்தினரென்கிறத்தோடே அந்வயம். ஆழியான்தமர்- ஸுதர்சநதரனான ஸர்வேச்வரனுக்கு சேஷபூதரானீங்கள், வானகம்- பரமவ்யோமமாகிற க்ருஹத்தை. அகம்- க்ருஹம், க்ருஹம்போலே புங்களுக்கு ஸ்தானமான பரமபதத்தையென்றபடி. ஆள்மின்களென்று- ஆளுங்கோளென்று, ஸ்வதந்த்ரமாக யாவதாத்மபாவி நீங்கள் அநுபவம் பண்ணியருளவேணுமென்று; வாழ்த்தினர்- ஆசம்ஸநம் பண்ணினார்கள். ॥௬॥

வ்யா- தொடுகடல்- ஸமுத்ரமான க்ஷீரஸமுத்ரத்திலே, தொடுஎன்றுதோண்டுதலாய் ஸமுத்ரத்தைக் குறிக்கிறது, கிடந்த- கண்வளர்ந்தருளினவனை, எங்கேசவன்- நம்முடைய கேசவனை, ப்ரசஸ்தகேசத்வமாக கேசியை ஸம்ஹரித்தவனையென்றபடி. கிளரொளி- ஜாஜ்வல்யமான தேஜோரூபமான, மணிமுடி- ரத்நகிரீடத்தையுடையவனை, குடந்தையென்கோவலன்- திருக்குடந்தையில் நம்முடைய கோபாலனுக்கு, க்ஷீரஸமுத்ரத்தளவும் செல்லமாட்டாத நமக்காகத் திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறவனைப் ப்ரஜைக்குக்களோடும் மருவும்படி ப்ரத்யக்ஷஸாமீப்யனானவனுக்கென்றபடி. குடியடியார்க்கு- குடியோடேயடியாயிருக்கிற, நமக்குங்கூட ஸாமீப்யமாம்படி திருக்குடந்தையில் கண்வளர்ந்தருளின ஸௌலப்யகுணத்தால் வசீக்ருதராய்க்கொண்டு, ஸந்ததமாக அடிமையாயிருக்கிற இந்த ஸாமந்தர்களுக்கென்றபடி. இவர்களைக் குறித்து

மூ — வெங்கேசவன்கிளரொளிமணிமுடிக்* குடந்தையெங்கோவலன்குடியடியார்க்கே* ||எ||
குடியடியாரிவர்கோவிந்தன்றனக்கென்று* முடியுடைவானவர்முறைமுறையெதிர்கொள்ள* கொடியணி
நெடுமதிட்கோபுரங்குறுகினர்* வடிவுடைமாதவன்வைகுந்தம்புகவே* ||அ||

ஆ — (மடந்தையர்) ஸ்ரீகௌஸ்துபதாரணமாகத் திருப்பாற்கடல் திருக்குடந்தைதொடக்கமாகவுள்ள தேசங்களிலேவந்து திருவவதாரம்பண்ணியருளின எம்பெருமானுக்குக்குடியடியான இவர்களைமடந்தையர்வாழ்த்துமளவிலே ஸ்தோத்ரங்களும்வஸ்த்ரங்களும் தந்தாமுடையபோகங்களன்றியே போகாந்தரங்களிலுந்தொடர்ந்து தொடர்ந்து ஸ்வீகரித்தார்களென்கிறார். ||எ||

(குடியடியார்) குடியடியாரிவர்கோவிந்தன்றனக்கென்று இவரை பரமபதராஜ்யத்திலே அபிஷேகராயநுக்குமுடி சூடியிருந்தவயர்வருமமரர்கள் முறைமுறையெதிரெதிர்கொள்ள வடிவுடைமாதவன்வைகுந்தம்புகுவதிற்காட்டில் மேற்பட்டதொரு ஸம்பத்தில்லாமையாலே யாழியான்தமரான நீங்களாள்மின்கள்

* ஏழாம்பாட்டு. *

இ — என்கேசவனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீகௌஸ்துபாதியால்) கேசவன்கோவலனென்று க்ருஷ்ணவதாரஞ்சொல்லுகையாலே ஸ்ரீவைகுண்டாதிதேசங்களும் தோற்றுகிறதென்று நினைத்தருளுகிறார் (தொடக்கமாகவுள்ளவித்யாதியால்) எங்குந்தொடர்ந்து என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தந்தாமுடைய வித்யாதியால்) இதுவேயிப்பாட்டுக்கு ஸங்கதியமாகிறது. ||எ||

* எட்டாம்பாட்டு. *

இவரையென்கிறதற்கு எதிர்கொள்ளவென்கிறத்தோடே அந்வயம். முடியுடைவானவரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பரமபதாதியால்) இவர்களென்கிறதற்கு குறுகினார்களென்கிறத்தோடே அந்வயம்.

ப — என்று தாத்பர்யம், மடந்தையர்- ஸ்த்ரீகள், க்ஷேத்ரவாஸிகளுடைய ஸ்த்ரீகளென்றபடி, வாழ்த்தலும்- மங்களாசாஸநம்பண்ணுமளவில், மருதரும்- ஸ்தோத்ரங்களும், வசுக்களும்- க்ஷேத்ரவாஸிகளும், எங்கும்- ஸகலபோகங்களிலும், தங்களெல்லையளவேயன்றிக்கே தத்ஸம்பந்திபோகங்களிலுமென்றபடி, தொடர்ந்து- "கோணபிதென்றான்றுகொலோ" என்று விரோதிகளிராயிருந்தவர்களாகையாலே இவர்கள் நிர்ஹேதுகத்திலே ஸகலபோகங்களை அதிக்ரமித்துப்போவார்களாகையாலே தங்களெல்லைக்குள்ளே ஸ்வீகரித்தவளவால் தங்களுக்கு அபேக்ஷிதம்பிறவாமையாலே உபரிதநபோகங்களிலும் தொடர்ந்துஎன்றபடி, தோத்திரம்- ஸ்தோத்ரங்களை, சொல்லினர்- சொன்னார்கள். ||எ||

ம — இவர்- இந்தஸமயத்திலேயுள்ளவர்கள், கோவிந்தன் தனக்கு- க்ருஷ்ணனாயவதரித்து ரக்ஷகனாயிருந்தருளினவனுக்கு, கோவிந்தனுக்கு என்றுதே கோவிந்தன்தனக்கு என்றது தனக்கேயல்லது மற்றொருவனுக்குமின்றியே யென்றநந்யார்ஹத்வம் தோன்றுகைக்காக, குடியடியாரென்று- காலக்ரமத்தாலே பரம்பரையாயிருக்கிறவர்களென்று மிகவுமுகந்தென்றபடி. இதற்கு எதிர்கொள்ள என்கிறத்தோடே அந்வயம். முடியுடை- கிரீடங்களையுடையவர்களான, பரமபதராஜ்யபட்டாபிஷேகத்திவ்யகிரீடசோபிதராணவென்றபடி. வானவர்- பரமவ்யோமவாஸிகள், நித்யஸூரிகளென்றபடி. முறைமுறை- பர்யாயம்பர்யாயமாக, எதிர்கொள்ள- ஸ்ரீமுகத்தாலே ப்ரத்யுத்தம்பண்ணினவளவிலே, இதற்குகுறுகினர் என்கிறத்தோடே அந்வயம். வடிவுடை- வடிவையுடையவனான, ஸ்ரீஸம்ஸாரம் தேவிப்ரத்யயம். இவர்கள் வருகிறார்களென்கிற ஸந்தோஷத்தாலே ஸமஸ்தபோதகமுஷைஸ்வர்யம் ஸ்ருஷ்டவந்த ஜகத்ஸேவகக்கிளைவாரனை என்றபடி. மாதவன்வைகுந்தம்- ஸர்வேஸ்வரனுடைய ஸ்ரீவைகுண்டத்தை, மூலையிரியமாட்டாத அநுகூலக்காணுமாப்போலே நிரதிசயஸந்தோஷத்தோடே யிவர்களைக்காண்கையில் ஆசைகொண்டுதன்னிற்காட்டிலும் சமானமான ஐஸ்வர்யம்தானுமாயிருக்கிறவனுடைய ஸ்ரீவைகுண்டதிவ்யநகரத்தை யென்றபடி. ஸ்ரீவைகுண்டமென்று திவ்யநகரத்துக்கும் திருநாமமுண்டிறே, புக- ப்ரவேசிக்கைக்காக, இதுக்கும் குறுகினரென்கிறத்தோடே அந்வயம், கொடியணி- கொடிகளாலேயலங்க்ருதமான, இவர்கள்வருகிறார்களென்று முன்னமேயுஜாதிகளாலே அலங்கரிக்கப்பட்டதான வென்றபடி. நெடு- உத்துங்கமான, மதிள்கோபுரம்- ப்ராகாரத்தில் கோபுரத்தை, திவ்யநகரத்வாரகோபுரத்தையென்றபடி. குறுகினர்- கிட்டினார்கள், இது

மூ — வைகுந்தம்புகுதலும்வாசலில்வானவர்* வைகுந்தன்றமரெமதிடம்புகுதென்று* வைகுந்தத்தமரரும்முனிவரும்வியந்தனர்* வைகுந்தம்புகுவதுமண்ணவர்விதியே* ॥௯॥

ஆ — வானகமென்று இதுதன்னையே ஸங்க்ஷேபமாக வ்யாக்யானிக்கைக்காக இவர்கள்முன்னமே ஸ்வஜனதாகாதிக ளாலேயநுகூலமான பெரியதிருமோவாஸத்தைச்சென்று குறுகினார்களென்கிறார். ॥அ॥

(வைகுந்தம்) வைகுந்தம்புகுமளவில் வாசலில்வானவர்வைகுந்தன்தமராகையாலே எங்களுக்கு ஸ்வாமிகளானநீங்கள் எங்களுடைய ஸமஸ்தகைங்கர்யமான ஸம்ப்ரதிபத்தியைக்கொள்ளவேணுமென்று ப்ரார்த்தித்து ஸமஸ்தஸம்ஸாரஜநித நிரதிசயஸ்ரீதிகாரித ஸம்வ்ருத்திகோமரான வமரரும் ஸமஸ்தஸம்ஸாரஜநித நிரதிசயஸ்ரீதியாலே ஸ்வயக்ருதிமேதராய் ஒருஸ்வவ்ருத்திபண்ணுகைக்கு க்ஷமரன்றியேயிருக்கும் முனிவரும் ஸம்ருத்தியுள்ளேயுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் திருநாட்டிலேவருகைக்கு நாமென்னஸாம்யம் பண்ணினோமோவென்று விஸ்மயப்பட்டார்களென்கிறார். ॥௯॥

இ — கொடியணியென்கிறத்தைபுரைக்கிறார் (முன்னமேயித்யாதியால்) இத்தாலிவ்வளவாக ஸ்வக்ருதிஸம்பந்தத்தில் ஆண்டாம் ஸம்ஸாரங்களையருளிச்செய்தவ ரிப்பாட்டிலே ஸ்வக்ருதிஸம்பந்தத்தை யதிக்ரமித்து பரமபதத்திலேபுகுந்தவநந்தரம் நித்யஸூரிகள்செய்தருளும் உபசாரங்களையு மவ்வுபசாரங்களோடே ஸ்ரீவைகுண்டதிவ்யநகரத்தைப்போய்க் கிட்டினபடியையுமருளிச்செய்கிறாரென்று ஸங்கதியும்ஸூசிதை. ॥அ॥

✳ ஒன்பதாம்பாட்டு. ✳

வைகுந்தன்தமரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வைகுந்தன்தமராலேயித்யாதியால்) எமதிடம்புகுதென்றுஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எங்களுடையவித்யாதியால்) ப்ரார்த்தித்தென்கிறதற்கு விஸ்மயப்பட்டார்களென்கிறத்தோடே அந்வயம். இத்தால் கீழ்ப்பாட்டிலே ஸ்ரீவைகுண்டதிவ்யநகரகோபுரத்தில் நடந்தவுபசாரங்களை யநுஸந்தித்தவரிப்பாட்டிலே திவ்யநகரப்ரவேசாநந்தரம் ஆஸ்தானாதிகளான நித்யஸூரிகள்செய்தருளும் உபசாரங்களை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதிஸூசிதை, முனிவருமென்று உபநிஷத்துகளைச்சொல்லுகையாலே ஸமஸ்தஸம்ஸாரிகதாஸிநியால் ததிதரஸேவாநிவ்ருத்தரானவமரர் கைங்கர்யஸ்ரீரஸிகராகை யுசிதமென்று நினைத்தருளுகிறார் (ஸமஸ்தஸம்ஸாரேத்யாதியால்) மண்ணவரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸம்ருத்தியுள்ளேயித்யாதியால்) விதியேயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நாமென்னஸாம்யமித்யாதியால்) ॥௯॥

ஈ — பரமபதகோபுரத்திலருளிச்செய்தநிர்வாஹம், ஸ்ரீவைகுண்டதிவ்யநகரத்தினெல்லையில் திருமோவாஸத்தைக்கிட்டினார்களென்று நிர்வஹிப்பாருமுண்டு. ॥அ॥

ப வைகுந்தம்- ஸ்ரீவைகுண்டதிவ்யநகரத்தை, புகுதலும்- ப்ரவேசித்தவளவிலே, வாசலில்வானவர்- அந்ததிவ்யநகரதாரத்தில் தேவர்கள், தாரபாலகராகவுள்ள நித்யஸூரிகளென்றபடி. இதற்கு வியந்தனரென்கிறத்தோடே அந்வயம், வைகுந்தந்தமர்- வைகுண்டநாதனுடையவஸ்யர், ஸ்ரீவைகுண்டநாதனுக்கநந்யார்ஹசேஷபூதரானவர்களென்றபடி, எமர்- ஸ்வகீயர், நமக்குஸ்வாமிகளென்றபடி, எமது- ஸ்வகீயமான, இடம்- ஸ்தானத்தை, புகுதென்று- தேவர்கள்ப்ரவேசித்தருளவென்று, புகுதுஎன்றது புகுதுகளென்றபடி. எங்களுடையவிந்த ஸ்ரீவைகுண்டதிவ்யநகர தாரபாலகத்வாதிகாரத்தை நீங்களங்கீகரித்தருளவேணுமென்று ப்ரார்த்தித்துஎன்று வாக்யதாத்பர்யம், வியந்தனரென்கிறவதத்தை யிங்கேயநுஷங்கிப்பது, வியந்தனர்- விஸ்மயப்பட்டார்கள், வைகுந்தத்து- ஸ்ரீவைகுண்டதிவ்யநகரத்திலே, அமரரும்- ஸமஸ்தநாயகநாயகஸூரிகளும், கைங்கர்யபரஸநிரதரான ஸூரிகளென்றபடி, முனிவரும்- உபநிஷத்துகளும், ஸமஸ்தகல்யாணகுணாநுபவைகநிரதரான ஸூரிகளுமென்றபடி. இதற்கு வியந்தனரென்று மேலேசொல்லப்புகிறத்தோடே யந்வயம், மண்ணவர்- மண்ணிலேயிருக்குமவர், ஸம்ஸாரலோகத்திலேயுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களென்றபடி. வைகுந்தம்புகுவது- ஸ்ரீவைகுண்டத்தைவந்து ப்ரவேசிப்பது, விதி- ஸாம்யம், என்றானொருருவசப்தார்த்தம், நாம்பண்ணினஸாம்யமேதுஎன்றபடி, வியந்தனர்- விஸ்மயப்பட்டார்கள். ॥௯॥

மூ—விதிவகைபுகுந்தனரென்றுநல்வேதியர்* பதியினிற்பாங்கினிற் பாதங்கள்கழுவினர்* நிதியுநற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும்* மதிமுகமடந்தையரேந்தினர்வந்தே*. ௰

ஆ—(விதிவகை) நம்முடைய ஸாமர்த்யத்தினாலே இங்கே புகுந்தனரென்று ஸர்வஜ்ஞரான வைஷ்ணவருமமரர்கள் தங்கள் திருமாளிகையிலே யதோசிதமாக இவர்களுடைய திருவடிகளை விளக்கினார்கள், விரஜாவிரஹிதவாத்ஸல்யஸம்பந்தத்தினாலே ஜநநீஸ்தந்யதைபோலே இவர்களைக்கண்டு ப்ரீதைகளாய்ந்த ஸ்ரீ ஆஸ்ரயத்தினாலே பரமபதத்தில் வர்த்திக்கும் வதூ ஸஹஸ்ரமான திருச் சேவகங்களையுடையரான பெரியபிராட்டியும் ஸ்ரீபூமிப்பிராட்டியும் நப்பின்னைப்பிராட்டியுந் தன்னுடைய திவ்யபரிவாரிகைகளோடேகூட தங்களுக்கு வரவேண்டிமான ஸ்ரீகோசம் நற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும் மற்றும் மங்களமான ஸத்காரோபகரணங்களையெல்லாமேந்திக்கொண்டுவந்தெதிர்கொண்டார்களென்கிறார். ௰

(வந்தவர்) ஸர்வேஶ்வரனைப் ப்ரியம்வதியாயிருந்த வெம்பெருமான்தானும்வந்தெதிர்கொள்ள திருமாமணி.

✳ பத்தாம்பாட்டு. ✳

இ— நல்லென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வஜ்ஞ ஏதத்யாதியால்) பதியினிலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தங்களித்யாதியால்) இத்தால்கீழ்ப்பாட்டிலே ஸ்ரீவைகுண்டதிவ்யநகர ப்ராகாரத்துக்கு செய்யு உபசாரங்களை யருளிச்செய்தவிப்பாட்டிலே ஸ்ரீவைகுண்டதிவ்யநகர ப்ராகாரத்தைக்கடந்து மாளிகைப்பெருந்தெருவீதி நடுவேசென்றவாறே திவ்யநகரத்திலுள்ளார்செய்யு உபசாரங்களைச்செய்கிறாரென்று ஸங்கதியும்ஸூசிதை, பாங்கினிலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (யதோசிதமாக வென்று) மதிமுகமென்கிற விஶேஷணத்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரகாஶேத்யாதியால்) மடந்தையரென்கிறத்தை விவரிக்கிறார் (பெரியபிராட்டியுமித்யாதியால்) நிதியும் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (தங்களுக்குமித்யாதியால்) ஶேஷம்ஸ்பஷ்டம். ௰

✳ நிகமனம். ✳

அவரென்கிறதுவிவக்ஷிதாஶத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதிநால்). அந்தமில்பே

ஈடு— விதிவகை- ஸாமர்த்யகாரத்தாலே, நம்முடையஸாமர்த்யவைபவத்தாலே யென்றபடி. புகுந்தனரென்று- ஸ்ரீவைஷ்ணவர்களிங்கே வந்துபுகுந்தார்களென்று இருள்தருமாஞாலமாய் விஷயங்கள்நடையாடுகிற ஸம்ஸாரத்திலேயிருந்துவைத்து அநந்யப்ரயோஜநராய் ஸமாஶ்ரயணாநுபவம் பண்ணப்பெற்றவர்களாய் விண்ணுளாரிலும் சீரியரென்கிறவிவர்களிங்கேவந்து புகப்பெற்றது நம்முடையஸாமர்த்யமன்றோவென்று அநுஸந்தித்துக்கொண்டுஎன்றபடி. இதற்குக் கழுவினரென்கிறதோடே யந்வயம். நல்- நல்லவர்களான, ஸர்வஜ்ஞரானவென்றபடி. வேதியர்- வேதப்ரதிபாத்யர், “யத்ர ருஷய: ப்ரதமஜா யே புராணா:, யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:। தத்ராஸௌ விபு: ஸதாவஸ்தித ஸூரய:” இத்யாதிவேதவாக்யப்ரதிபாத்யரான நித்யஸூரிகளென்றபடி. பதியினில்- தங்கள்திருமாளிகையிலே, பதி- வாஸஸ்தாநம், பாங்கினில்- உசிதக்ரமத்திலே, அதாவது:— இவனொருஸம்ஸாரியாய்க்கிடந்த சேதநன் நாமநாதியாக வஸ்த்ராஸம்ஸாரமென்று தாரதம்யம்பாராதே இவனைஸிம்ஹாஸநத்திலே உயரவைத்து தாங்கள்ஶேஷபூதராய்க்கொண்டிப்படி. ஸர்வோசிதமான க்ரமத்திலேயென்றபடி. பாதங்கள்- இவர்களுடைய திருவடிகளை, கழுவினர்- திவ்யதீர்த்தோதகங்களாலே விளக்கினார்கள், மதிமுக- சந்த்ரவதிகளான, மதி- சந்த்ரன், மடந்தையர்- பெரியபிராட்டியார், ஸ்ரீபூமிப்பிராட்டிமுதலான தேவிகளும் தத்பரிவாரிகைகளும், மடந்தை- ஸ்த்ரீ, வந்து- விரஹக்லேஶிதனாயிருந்துவருகிற புத்ரனுக்கெதிர்வருமாப்போலே உகப்பாலேகளாய்க்கொண்டிவர்களுக்கெதிரேவந்து, நிதியும்- நிதியையும், தங்களுக்குவரவேண்டிமான ஸ்ரீகோசத்தையும், நிதியுமென்கிறவிடத்தில் உசாரஸ்யஸமுச்சிதார்த்தம்ரோவ:, நற்சுண்ணமும்- நல்லசூர்ணத்தையும், ஸ்ரீவைகுண்டநாதனுடைய திருமேனியோட்டைஸம்பந்தத்தினாலே நிரதிஶயபோக்யமான திவ்யசூர்ணாலங்காரத்தையுமென்றபடி. நிறைகுடவிளக்கமும்- பூர்ணகும்பங்களோடே கூடின தீபங்களையும், திவ்யாம்ருதபூர்ணங்களான கநககும்பங்களையும், மங்களதீபங்களையுமென்றபடி. ஏந்தினர்- இவர்களுக்கு மங்களோபசாரமாகத்தாங்கள் திருக்கைகளிலேயேந்திநின்றார்கள். ௰

மூ—வந்தவரெதிர்கொள்ளமாமணிமண்டபத்து* அந்தமில்பேரின்பத்தடியரோடிருந்தமை* கொந்தலர்பொழிற்குருகூர்ச்சடகோபன்சொல்* சந்தங்களாயிரத்திவைவல்லார்முனிவரே* ॥௧௧॥

அ—மண்டபத்திலேசென்று அந்தமிலபேரின்பம்விளையும்படியாக அபர்வறுமபாகவதரோடேகூடத் தாமிருந்ததைச்சொன்ன இத்திருவாய்மொழியைவல்லாரந்தமின்பேரின்பத்தடியரோடிருக்கப்பெறுவாரென்கிறார். ॥

ஸ்ரீகுருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

இ—ரின்பத்தடியரோடிருந்தமைக்குத் ஸாக்ஷாத்பலமருளிச்செய்கிறார் (அந்தமில் இத்யாதியால்) ॥௧௧॥

ஸ—அவர்- அந்தஸ்ரீவைகுண்டநாயகன், வந்து- இவர்களைக்காண்கையில் ஔத்ஸுக்யாதிசயத்தாலே ஸ்ரீநாட்டிமார்களோடே தானும்வந்து, எதிர்கொள்ள- இவர்களையெதிர்கொண்டவளவிலே, இதற்கு இருந்தமையென்கிறத்தோடே அந்வயம், மா- மஹத்தான, “தஸ்யானந்தஸ்ய ஸ்தாநஸ்ய பாஜநதாவிஸ்தாரமஹத்வவாஸ” மென்கிறபடியே அபரிச்சேத்யவிஸ்தாராகாரமாயிருப்பான வென்றபடி. மணிமண்டபத்து- ஸஹஸ்ரஸ்தூணாதிவாக்யங்களாலே போதப்படுகிற திருமாமணிமண்டபத்திலே, அந்தமில்- அந்தமில்லாததான, உத்தரோத்தரமழிவில்லாததானவென்றபடி. பேரின்பத்து- பெரியவின்பத்தையுடையவர்களான, “அனந்தஸ்ய பரப்ரஹ்மணே” யென்கிறதற்கு எதிர்த்தட்டாக அநந்தஸம்பந்நானந்தாஸ்ராமிகளான வென்றபடி. அடியரோடு- ஸர்வதாகர்வப்ரதிஷ்டைகசேஷிகளான நித்யஸூரிகளோடு, இருந்தமை- ‘அடியார்கள்குழாங்களுடன் கூடுவதென்றுகொலோ’ வென்று ஆசைப்பட்டபடியே யிருக்கப்பெற்றபடியைக்குறித்து இதற்குச் சொல்லென்கிறத்தோடே அந்வயம், கொந்தலர்- கொத்துக்களலருகிற, புஷ்பஜாதிகள் விகஸியாநிற்கிறவென்றபடி. பொழில்- உத்யானங்களையுடையதான, குருகூர்- குருநகரியையுடையவரான, சடகோபன்சொல்- ஸ்ரீசடகோபனுடைய ஸூக்திகளான, இது இவையென்கிறதற்குவிசேஷணம், சந்தங்கள்- சந்தோரூபங்களான, ஸர்வரூபங்களன்றிக்கே ‘சந்தஸாம்ஸ்வாநாம்’ என்கிறபடியே வேதரூபங்களானவென்றபடி. ஆயிரத்து- ஸஹஸ்ரத்தில், இவை- இந்தபத்துப்பாட்டுக்களையும், வல்லார்- அப்யஸித்தவர்கள், முனிவர்- மநநஸீலர், அந்த நித்யஸூரிகளோடேகூட பரிபூர்ணப்ரஹ்மாநுபவம் பண்ணாநிற்பவர்களாவாரென்றபடி. ॥௧௧॥

ஜ்ஞாநவைராக்ய பூர்ணாய ஸ்ரீமதே வரவரமுநயே நம:.

ஸ்ரீபராங்குசதாஸப்ரணீதாவஸி:.

(சூழ்விசும்பு.)

ஸர்வஸ்ஸ்ரீஸநாராயணஉதிபராவிக்ராந்தவாநா
ஸ்ரீஸ்வாமிஸ்வாஜநப்ரியநாராயணகோவிந்தஹாவாஸ் ।
வைகுண்டவாஸிஹாவதவிவரஜநாத்யஸ்தாதிமத்ய
ஸம்ஸ்ராவபேஸஸ்ரீயதிமதிபாஸ்ரீஸர்வபேஷ்ஷ ॥௧௧௨॥

(ஸர்வஸ்) எப்பொழுதும்வளமேந்தியவென்னப்பன்- ஸகலஸாதிபாகையாலும் (ஸ்ரீஸநாராயண உதிபராஸ) நாரணன்றமரைக்கண்டுகந்து- ஸகலநிர்வாஹகனாகையாலும், (விக்ராந்தவாநா) பூமியன்றளந்தவன்- த்ரிவிக்ரமரூபத்தைக்கொண்டெல்லாலோகங்களையுமளக்கையாலும், (ஸ்ரீஸ்வாமீ) மதுவிரிதுழாய்முடிமாதவன்- மாதவன்றமரென்று ஸ்ரீயப்பதியாகையாலும், (ஸ்வஸ்வாமீ) ஆழியான்தமரென்று திருவாழியை திவ்யாயுதமாகவுடையவனாகையாலும், (ஜநப்ரியநாஸ) தொடுகடல்கிடந்த- கம்பீரமான திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகையாலும், (கோவிந்தஹாவாஸ) கோவிந்தன்றனக்கென்று- எல்லார்க்கும்ஸமாஸநம்படி க்ருஷ்ணனாய்வந்தவதரிக்கையாலும், (வைகுண்டவாஸிஹாவாஸ) வைகுந்தன்றமரெமர்- விதிவகைபுகுந்தனரிதி. பரமபதத்துக்கும் அவற்றிலுள்ள ஸூரிகளுக்கும் நிர்வாஹகனாகையாலும் எம்பெருமானாஸ்ரிதஜநங்களை யர்ச்சிராதிகதியாலே தன்னுடைச்சோதியை யடைவிப்பிக்கிறாரென்று “சூழ்விசும்பணிமுகிலிலே” ஸ்ரீசடகோபரருளிச்செய்தாரென்கிறார். ॥௧௧௨॥

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பத்தாம்பத்தில் ஒன்பதாந்திருவாய்மொழி முற்றிற்று.

பத்தாந்திருவாய்மொழி.

ஆ— (முனியேநான்முகனே) இப்படி அந்தமில்லாப்பேரின்பத்தடியரோடிருந்தவாழ்வார் தாமிந்தப்ரக்ருதியிலேயிருந்தவிருப்பைக் காணுமென்றுநோங்கிக் கூப்பிடுகிறார், நிரவதிகநிர்வேதாதிசயத்தாலே ஸம்ஸாரத்தை

பத்தாந்திருவாய்மொழி.

இ— இப்படிதமக்கு ஸாவிகளாயிருந்த கல்யாணகுணசேஷ்டிதங்களையெல்லா மிப்போது ஸாக்ஷாத்கரித்து மிகவும்வீதராயிருக்கிற வாழ்வார்திருவாய்மொழியிலே மாயஞ்செய்யேலென்னையென்றும் கூவிக்கொள்ளாய் வந்தந்தோவென்றும், உன்னைப்பெற்றினிப்போக்குவனோஎன்றும், உன்னையென்னுள்வந்து கூடுவனோ, என்று மிப்புடைகளிலே மிகவுமார்த்தராய்க்கூப்பிடுகை பரஸமாப்தமன்றோவென்ன வவதரிப்பிக்கிறார் (இப்படியி த்யாதியால்) இப்படி அந்தமில்பேரின்பத்தடியரோடிருந்த வாழ்வாரென்றது– கீழ்த்திருவாய்மொழியின்ப்ர மேயத்தி லநுஸந்தித்த ஸாவிகல்யாணகுணசேஷ்டிதங்களில் தமக்குப்பிறந்த ஸாக்ஷாத்காரவைசத்யாதிசய மெனோஜபத்தாலும் இந்த கல்யாணகுணங்களி லத்யாஸக்தியாலும் 'நவிவேதத்தேநாமாத்ர' மென்கிறக ணக்கிலே தாமிப்ப்ரக்ருதியிலேயிருக்கிற விருப்பைமறந் தவ்வவிச்சாரிமதியாலே யந்தமில்பேரின்பத்தடி யரோடிருந்ததாகவே தம்மையெண்ணியிருந்த வாழ்வாரென்றபடி. கீழ்த்திருவாய்மொழியிலே யதிகோநாஸ ரமான வசிராதிமார்க்கத்தையும் ஆதிவாஹிகஸ்ருதி ஸகலஸாமாநி வசிஷ்டவிஸ்மித விக்ரஹம் சவைஸவாங்களையும் திருமாமணிமண்டப ஸாக்ஷாத்காரத்தை யநுஸந்தித்து ஸ்ரீவைகுண்டஸ்ரமநத்தைக் கிட்டி னவாறே நித்யஸூரிஸம்ப்ரமவைகளெதிர்கொண்டுவந்து செய்தருளுமுபசாரங்களையு மதிஸ்ப ரமாக்ருவைகுண்டமக்குள்ள நித்யஸூரிகளாதரிக்கும்படிகளையும் ஸ்ரீஸூக்திகளும் ஸ்ரீவை குண்டநாதனுமெழுந்தருளி யுபலாலித்தருளும்படிகளையு மத்திருமாமணிமண்டபத்திலே அந்தமில்பேரி ன்பத்தடியரான நித்யஸூரிகளுடைய வழங்காலக்கத்திலே தாமாநந்திஸ்யராயிருக்கும்படியையு மத்ய ந்தவிசதமாக நிரதிசயவீதிராகவாஸ ஸாக்ஷாத்காரத்தாலே யநுபவித்து பரவசராய்த் தாமிந்த ப்ரக்ருதியிலிருக்குமிருப்பைமறந்து நித்யஸூரிகள்நடுவே யிருக்கிறதாகவே தம்மையத்யவஸித்திருந்த வாழ்வார் தாமுமவர்களைப்போலே ஸஹஸ்ரைகங்களிலே ப்ரவ்ருத்தராய்துகைவாராமையாலே லக்ஷித ராய்த்தமைப் பரமபதித்துத் தாம்ப்ரக்ருதிவசராயிருக்கிறபடியைக்கண்டு சோகவிஷயத்திலேயொருவ ன் நிர்ஜீவனாய் ஸர்வோத்தாரணமிருந்துவைத்து உச்ச்வாஸமாய் உல்லாஸமாய் ஓரிடத்திலும்நிலை நில்லாதபடி யத்யுஷ்ணமான ஸம்ஸாரப்ரவ்ருத்தியிலேதள்ளுண்டால் நோவுபடுமாப்போலே மிகவுமவஸந்ராய் பரமேகாந்திஷன்தான் நிரவகாசஸவிபவாயமாய் அநவரதவிசித நிர்விசேஷதஜாதயாபர த்ருணப் ஸவிபவனும் பரமகாருணிகனும் ஆபத்ஸகனும் ஸர்வஜ்ஞனும் நிர்விஜ்ஜஜாதமர ணப்புரிநக்கத்தன் திருவடிகளொழிய வேறுமதியில்லாதநம்மை யிங்ஙனே ப்ரக்ருதிவசமேலைகவைகப்ர க்ருதியின்கையிலே காட்டிக்கொடுத்துவைப்பதேயென்று மிகவுமார்த்தராய் பசியாலும் தாகத்தாலும் வ்ய திதமாய் மாத்ருத்வத்தையும் காணப்பெறாத ஸ்தநந்தயப்ரஜையாதல் கிமயத்தாலே கதறுமாப்போ லே நிவ்ருத்திமாயிருப்பாருடைய ஹ்ருதயங்களுங்கூட விரங்கும்படியாகவு மவனுக்குத்தம்மைரக்ஷித்தல்ல து பரமைத்திருப்ப தரிதாம்படியாகவு மத்யந்தமநீயமாயதின்மேலே முன்பு பலவிடங்களில் தன்னு டைய கல்யாணகுணவிஷயாதிகளாலே இவர்திருவுள்ளத்தைத் தேறப்பண்ணி யநுபவமாக்கி வஞ்சித் தாப்போலே யினியவனுக்குத்தம்மை வஞ்சிக்கவொண்ணாதபடி பெரியபிராட்டியார் திருவாணையிட்டுக் கா ட்டுத்தீயிலகப்பட்டாரைப்போலே போக்கடியற்று 'ஸர்வாத்மாராவணவேதிகாதல ஜநகம் ஸ்ரேயஸம் ஸ்ரணம்வ்ரஜ' என்கிறகணக்கிலே அவன்திருவடிகளைப்பூண்டுகொண்டிப்படி நான்சோர்வுணும் ப்ரக்ருதி யிலிருக்கிற விருப்பைப்பார்த்து பரதேயாஸுவாநீ இனியிப்ப்ரக்ருதிஸம்பந்தத்தை நிச்சேஷமாக நி வர்த்திப்பித்தென்னைத் திருநாட்டிலேகொண்டுபோ யுன்திருவடிகளிலே சேர்த்தருளவேணுமென்றேங்கிக் கூ ப்பிடுகிறாரென்றுகருத்து.

*

முதற்பாட்டு.

கருமாணிக்கமேஎன்னுமளவுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிவேதநாதியால்) அதில் என்பொ

மூ— முனியேநான்முகனேமுக்கண்ணப்பாவென்பொல்லாக்*

ஆ— ஸ்ரீமனாய் நிரவதிகஸௌந்தர்யஸௌகுமார்யலாவண்ய யௌவநாத்யபரிமிதகல்யாணகுணஸாகரனாயிருந்தவுன்னுடைய ஸௌந்தர்யாதிகுணங்களைக்காட்டி என்னைத்தோற்பித்தடிமையாக்கி எனக்கொருவனுக்குமுன்

இ— ல்லாவித்யாதிவிஶேஷணங்களுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரவதிகேத்யாதியால்) என்கள்வா யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னைத்தோற்பித்தித்யாதியால்) தனியேனாருயிரேஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எனக்கொருவனுக்குமித்யாதியால்) என்தலைமிசையாய் வந்திட்டுஎன்கிறதற்குத்

ஸ— முனியே- ஸங்கல்பம்பண்ணுமவனே, "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத், ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத், ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஶாநோ நேமே த்யாவாப்ருதிவீ ந நக்ஷத்ராணி நாபோ நாக்நிர்ந ஸோமோ ந ஸூர்ய:, ஸ ஏகாகீ ந ரமேத தஸ்ய த்யாநாந்தஸ்தஸ்ய ... ஸர்வம் ... ஹிதவாநக:" இத்யாதிகளிற்படியே ஸ்வகார்யாதிகளிலே முன்பு ப்ரளயகாலத்திலே ஸூக்ஷ்மசேதனாசேதனங்களாயிருந்த ப்ரஜைகளையிழந்து முச்சடங்க ப்ரளயத்திலே ஸோமஸூர்யாத்யுபகரணங்களுக்கு ஸம்பந்தமில்லாதபடி கரணகளேபரங்களையுமிழந்து "அஸந்நேவ ஸ ப⁴வதி" என்னும்படியாய்த்தங்களுக்கு விஶேஷித்தொரு பேரிடவொண்ணாதபடி தமஸ்ஸிலே யிரும்புண்டதீர் போலேயிருக்கச்சுவறி யசித்விஶிஷ்டங்களாய்க்கிடக்கிற சேதநரைக்கண்டு தயமாநமநாவாய் இவர்களுக்கு கரணகளேபரப்ரதாநம்பண்ணுகைக்காக "ஸ ஐக்ஷத ஏகோஹம் ப³ஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி" இத்யாதிகளிற்படியே ஏகமேவாத்விதீயம் ... ஸமஷ்டிஸ்ருஷ்டி ப்ரகாரத்தை ஸங்கல்பம்பண்ணுமவனான பரமேஶ்வரனேயென்றபடி. நானுஸங்கமுண்டாய்க்கிடந்தவனைக்குத் திவ்யாஜ்ஞமாகவென்பக்கலிலேயிதமேபண்ணி இவ்வளவாகவரும்படியென்னையுண்டாக்கின நீ இப்போது நானுளனாயுன்னையபேக்ஷித்து நோவுபடாநின்றால் உதவலாகாதோ பிரானே? நீ நினைத்தவன்றேயுதவலாவது நான் நினைத்தவின்று உதவலாகாதோவென்று கருத்து. நான்முகனே- சதுர்முகஶரீரகனாயிருக்கிறவனே, ஸமஷ்டிஸ்ருஷ்டிகளான ஶரீரவிஶேஷங்கள் ஶரீரிபரதந்த்ரங்களாகையாலே இங்கு சதுர்முகஶப்³த்தாலே தச்சரீரியான பரமேஶ்வரனை ஸம்போதிக்கிறது, வ்யஷ்டிஸ்ருஷ்டிபண்ணியுபகரித்தாருமுண்டாயிருக்க ஸமஷ்டிஸ்ருஷ்டிகர்த்தாவானவென்னை கூப்பிடுகிறதென்னென்ன? ஸமஷ்டிஸ்ருஷ்டிமாத்ரத்தாலன்றிக்கே வ்யஷ்டிஸ்ருஷ்டியாலேயுபகரித்தவனும் தச்சரீரகனானநீயேயன்றோ சதுர்முகனும் உனக்கு காரணாதி கார்யகாரணமாத்ரமன்றோ பிரானே என்றுகருத்தாலே இப்படி ஸம்போதித்தது. முக்கண்ணப்பா- த்ரிநேத்ரனான்வுபகாரகனே, இங்கும் ருத்ரஶப்³தத்தாலே தச்சரீரியான ஸர்வேஶ்வரனை ஸம்போதிக்கிறது, அப்பன்- உபகாரகன், ஸ்ருஷ்டிமாத்ரத்தாலன்றிக்கே ஸம்ஹாரத்தைப்பண்ணி யுபகரிப்பவனும் நீயேயல்லையோவென்றுகருத்து. "ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம் ப்³ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம்। ஸ ஸம்ஜ்ஞாம் யாதி ப⁴க³வாநேக ஏவ ஜநார்த³ந:" என்கிறபடியே உத்தரோத்தரவிபரீதவாஸநா ஶாந்திகமாகையாலே ஸ்ருஷ்டியிற்காட்டிலும் உபகாரகமிறே ஸம்ஹாரம், என்- என்னுடைய, எனக்கு நிரதிஶயபோக்யமானவென்று தாத்பர்யம், இதுக்குக் கருமாணிக்கமென்கிறத்தோடே யந்வயம், கீழ் யென் ஶப்³தம் ப்ரயோகியாதே யிங்குப்ரயோகித்தருளினதித்தால் நான்முகனே முக்கண்ணப்பா என்கிறவிடத்தில் விஶேஷணங்களாய்த்தோற்றின ப்³ரஹ்மருத்ரர்கள் தமக்கநபேக்ஷிதரென்றும் கருமாணிக்கமே என்கிறவிடத்தில் விஶேஷணமாய்த்தோற்றுகிற திவ்யமங்கள விக்ரஹமே முனியேயென்றுசொல்லப்பட்ட திவ்யாத்மஸ்வரூபத்திற்காட்டிலும் நிரதிஶயபோக்யமென்றும் தமக்கபேக்ஷிதமென்றும் திருவுள்ளமென்று தோற்றுகிறது, கனிவாய்- கனிபோலிருக்கிற அதரத்தையுடைத்தான, "பக்வபி³ம்பா³த⁴ர:" என்றுசொல்லப்படுகிற தகவும் ஸௌந்தர்யத்தைக்கண்டால் ஸ்ரீயாலே ஸ்தவிதம்பண்ணினிற்கும்படியைச் சொல்லுகிறது, தாமரைக்கண்- தாமரைப்பூபோலேயிருக்கிற கண்களையுடைத்தான, "புண்டரீகதளாமலாயதாக்ஷ:" என்றிருக்குமவர்களை யநவதிகஸௌஹார்த³கடாக்ஷம்பண்ணும் திருக்கண்களைச்சொன்னபடி, கண்கருமாணிக்கமே என்கிறவிடத்தில் ககாரஸ்வகார்ஶப்³த ப்ரயோக³ம், பொல்லாக்கருமாணிக்கமேயென்றநயிப்பது, பொல்லா- பொல்லாததான, பொல்லுதல்- துளைத்தல்

மூ— கனிவாய்த்தாமரைக்கட்கருமாணிக்கமேயென்கள்வா* தனியேனாருயிரேயென்றலைமிசையாய்வந்திட்டு* இனிநான்போகலொட்டேன்

ஆ— னுடையகுணங்களையே யாரகமாக்கி என்னெஞ்சு நிறையப்புகுந்திருந்தவுன்னை இனிநான்போகவொட்டேன்; இனிபண்டுபோலே உன்னுடைய குணசேஷ்டிதாதிகளை யென்னெஞ்சிலேகாட்டி வஞ்சித்தென்னையொன்றும் மறப்பிக்கவொண்ணாது இனிமெய்யேவந்து கலந்தருளவேணுமென்றுகொண்டு தம்முடையவபேக்ஷிதஞ்செய்தல்லது எம்பெருமானுக்குத் திருநாட்டிலுங்கூட இருக்கவொண்ணாதபடி பெரியவார்த்தியோடே.

இ— தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னெஞ்சமித்யாதியால்) ஒன்றும்மாயஞ்செய்யேலென்னையெனகிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இனிபண்டுபோலேயித்யாதியால்) இதுக்குப் ஸாரதாத்பர்யமருளிச்செய்கிறார்

ஈ— துளையாமையாலே யொருவராலும் அவகாஹிக்கப்படாமல் நித்யநூதநமாயிருக்குமதானதென்றபடி. கருமாணிக்கமே- இந்த்ரநீலமணிக்கமே, 'ஸஹஸ்ரஸூர்யதேஜஸம் வரிஷ்டம் மோஹநம்' என்று ஸ்ருதர்க்கு, ஸஹஸ்ரஸூர்ய வரிஷ்டமாயிருக்கிற திருமேனியையுடையவனே யென்றபடி. தாமரைபூத்தாப்போலே வாத்ஸல்யமாயிருப்பதொரு நீலரத்நம் ஸ்நிக்தம்பண்ணினாப்போலே யிருக்கிறது திவ்யமங்கள விக்ரஹமென்று பட்டர் தாத்பர்யம், இங்கு ப்ரஹ்மாதிஸஹவாஸத்தால் 'ஸமஸ்தஜநநீம் ஸர்வஸ்வாமிநீம்' என்கிற விஷ்ணு ஸ்வரூபவிக்ரஹத்தைச்சொன்னபடி, 'ரக்ஷார்த்தம் ஸர்வபூதாநாம் விஷ்ணுத்வமுபஜக்மிவாந்' என்கிறபடியே ரக்ஷணத்துக்கே யிட்டுப்பிறந்திருக்கிறநீ. நிருபாதிகஸம்பந்தமுடையனாகி நின்றுனை யென்னையிங்ஙனே யுபேக்ஷிக்கலாமோபிரானே என்றுகருத்து. த்ரிமூர்த்திஸாம்யமான விவ்வதாரத்தை நான்முகனுக்கும் முக்கண்ணனுக்கும் நடுவேயவஸ்தாபித்தொழிந்தது ப்ரஹ்மாதிமூர்த்திகளில்போலே இந்தமூர்த்தியில், ஜீவஸம்பந்தமில்லாமையாலும் ஸாக்ஷாத்தாகையாலும் சுத்தஸத்வமாகையாலும் ஆதலால் நமக்கு ஸ்ரீநிதிஸ்யமான ப்ராப்யமாகையாலும் என்று கண்டுகொள்வது, என்கள்வா- என்னுடையகள்வனே, உனக்கு நித்யஸமாயிருக்கிற விவ்வாத்மாவை யநாதியாக அபஹரித்தவனாயிருக்கிறவென்னை யபஹரித்தவனேயென்றபடி கருமாணிக்கமேயென்கள்வாயென்கிற ஸந்நிதாநத்தால் 'மநோஹரமூர்த்திர் நிசாசாரிணீ' மென்கிற படியே யுன்வடிவழகைக்காட்டி என்னையபஹரித்தவனே யென்றுகருத்து உனக்கு ஸ்ரீஜநஸ்தானம்போலே நித்யஸமாயிருக்கிறவாத்மாவை 'திருமெய்யுறைவார்ப்பு' தென்கிறபடியே ப்ரமாணபரதந்த்ரத்திலே யொருவருக்குந்தெரியாதபடி யொளித்திருந்தபஹரித்தேன் நான், நீயங்ஙனன்றிக்கே வடிவைக்கொண்டுவந்து காட்டியேயிப்படி ப்ரகாரஞான வென்னையுங்கூட அபஹரித்தாயென்கை, உன்ஸௌந்தர்யாதிகளைக்காட்டி என்னைவசீகரித்துனக் கடிமையாக்கிக்கொண்டவனே யென்று தாத்பர்யம், இப்படி என்னைவசீகரித்தாகிலும் முனக்கடிமையாக்கிக்கொண்டநீ இப்போது நானிப்ப்ரக்ருதியிலேகிடந்து நோவுபடப்பார்த்திருக்கலாமோ வென்றுகருத்து, தனியேனாருயிரே- ஸஹாயனாயிருக்கிற வெனக்கு ப்ராணப்ராணனே, ஆர்- ப்ராணம், உயிர்- ப்ராணன், ஸ்வஜனஸமாநத்தி லொருதுணையன்றியே ஏகாகியாயிருக்கிற வெனக்குன்னுடைய ஸௌந்தர்யஸௌசீல்யாதிகுணங்களைக்காட்டி எனக்கு ப்ராணப்ராணனானவனே யென்றபடி; நாட்டார்க்கஸாதநங்கள்போலே எனக்கொருவனுக்கு முன்னுடையகுணங்களையே யாரகமாக்கினவனேயென்கை, தமக்கு ஸம்ஸாரிகளாவிரோதிகளான ஸம்ஸாரிகள்நடுவேயிருப்பு பிராட்டிக்கசோகவநிகையில் ராக்ஷஸிகள்நடுவிலிருப்புப்போலே துஸ்ஸஹமாயிருக்கையாலே தனியேனென்கிறார், என்னை யறியாதே வஞ்சித்துவசீகரித்துக்கொண்டவளவன்றிக்கே யுன்குணங்களிலே யெனக்கு ஸாதிசயத்தை யுண்டாக்கினநீ இப்போது ஸ்நிதவிக்கிறவென்னை யுபேக்ஷிக்கலாமோ பிரானேயென்றுகருத்து. என்தலைமிசையாய்வந்திட்டு- எனக்குத்தலைமிசையாக வந்துவைத்து, தலை- ஸ்ரேஷ்டம், மிசை- மேல், இங்குநாயிக மென்றபடி. ஸ்ரேஷ்டமான ஸ்வாமிகமாயென்றதாயிற்று, அதாவது:— ஸத்யஸங்கல்பமாயிகமாயென்றபடி. ஸர்வ ப்ராணயாகவென்கை, என்னெஞ்சிலே ஸர்வப்ராணமாக வந்திருந்தருளிவைத்து என்று பட்டர்தாத்பர்யம், இனி- உன்னைக்கிட்டினபோதுமன்றிக்கே ஸ்வாராதிமதியினழகையும் பரமபதத்திலுள்ள ஸாதிசயங்களையு மெனக்குக்காட்டினபின்பு, போகல்- போகைக்கு, நீயென்னை விஸ்லேஷித்துப்போகைக்கு என்றபடி. ஒட்டேன்- ஸ்வாராதிமதிவைபவத்தைக்கண்டநான், ஒட்டேன்- ஸம்மதியேன், 'ஸஞ்ஜாதபாஷ்பவர்ஷாயமாணஸ்

மூ—ஒன்றும்மாயஞ்செய்யேலென்னையே* ||௪||
மாயஞ்செய்யேலென்னை யுன்றிருமார்வத்துமாலைநங்கை* வாசஞ்செய் பூங்குழலாடிருவாணை நின்னாணை கண்டாய்* நேசஞ்செய்துன்னோடென்னை யுயிர்வேறின்றியொன்றாகவே*

ஆ—பெருங்கூப்பாடாகக் கூப்பிடுகிறார். ||௧||
(மாயஞ்செய்யேல்) பண்டுன்னைக் காணவேணுமென்றாசைப்பட்டுக் காணப்பெறாமையாலே நான் வ்யஸனப்படுமளவில் கண்ணுற்கண்டாப்போலே விசதமாம்படியென்னெஞ்சிலேயுன்னைக்காட்டிக் காணவேணுமென்றவெண்ணத்தைப்பிறப்பித் தென்னுடைய வ்யஸனத்தை ஸம்ஸாரம்பண்ணினாப்போலே செய்தருளவொண்ணாது இனியுன்னைக்காட்டாதே வஞ்சித்தொளிக்கிலுனக்கு நிரவதிகஸம்பத்தாய் நிரவதிகஸௌஹ்ருத-

இ—(இனிமெய்யேயித்தியால்) ||௧||

✳ இரண்டாம்பாட்டு. ✳

மாயஞ்செய்யேலென்னை என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பண்டுன்னையித்தியால்) உன்திருமார்வத்திருதியாகூத்திலே சுவிசேஷமானவர்த்தத்தையருளிச்செய்கிறார் (இனியுன்னையித்தியால்) உன் திருவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உனக்கித்தியால்) மார்வத்துமாலை என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரவதிகஸௌஹ்ருதாதிமத்தையாமென்று) நங்கை என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்-

